SOUTHERN LANGUAGES BOOK TRUST

யுனெஸ்கோ உதவியுடன் தென் மொழிகள்
புத்தக டிரஸ்ட் ஆதரவில் பதிப்பிக்கப்பெற்றது

கோயிற் கலையும் சிற்பங்களும்

ரூ. 3-00



கலைஞன் பதிப்பகம்

கோயிற்-கலையும் சிற்பங்களும்

ஆசிரியர் :

பி. ஆர். ஸ்ரீனிவாசன், எம். ஏ.
(கல் வெட்டுத் துறை மேற்பார்வையாளர்,
உதகமண்டலம்)

தமிழாக்கம் :

எஸ். சங்கரன்

கலைஞன் பதிப்பகம்

மாம்பலம் :: சென்னை - 17

FIRST EDITION 5000
APRIL 1965
TAMIL

TEMPLE ART & ARCHITECTURE IN INDIA

BY
P. R. SRINIVASAN, M. A.
Superintendent of Epigraphy, Ootacamund

TRANSLATED BY
S. SANKARAN

Price Rs. 3-00

Published with the assistance of UNESCO
Under the auspices of the
SOUTHERN LANGUAGES BOOK TRUST, MADRAS-34
SECOND SERIES : TAMIL - FORTY

Acknowledgement
Photos Nos. 43, 58 & 59: Courtesy, Government Museum, Madras
Photo No. 40: Courtesy, Ajanta Studio, Trivandrum.
Photo No. 41 : Courtesy, Bharath Studio, Trichur.

Printed at: GENERAL PRINTERS, MADRAS-3.

SAW. GANESAN,
"KARPAKA NILAYAM",
KARAIKUDI-1. S. INDIA.

அணிந்துரை

சி. சுப்பிரமணியம்

மத்திய கனரக அமைச்சர், இந்திய அரசாங்கம்

மொழி, நாகரிகம், கலை முதலியவற்றில் பெரிதும் ஒற்றுமையுடையவர்கள் தென் பகுதி மக்கள். சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இவ்வொருமைப்பாடு வேரூன்றி இருந்தது. ஆனால், சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் இவ் வொற்றுமை உணர்ச்சி குறைந்து போய் விட்டது. காலம் செய்த இவ்விடையூற்றை நீக்கி, தென் பகுதி மக்களிடையே ஒரு பகுதியினரின் கருத்துக்கள் மற்றப் பகுதியினருக்கும் பரவும் வகையில் தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் பாடுபட்டு வருவதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

1955-ல் சென்னையில் நமது நாட்டின் தலைமை அமைச்சர் ஸ்ரீ ஜவகர்லால் நேரு அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட டிரஸ்ட் நாள் தோறும் நல்ல முறையில் முன்னேறி வருவது மிகவும் பாராட்டுக்குரியது. இந்நிறுவனம் குழந்தைகள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை எல்லோருக்கும் பயன்படும் வகையிலே பல புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது. குறிப்பாகத் திருக்குறள் போன்ற நூலை, கன்னடத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

கருத்துப் பரிமாற்றத்தில் தான் மனித இனத்தின் அறிவு வளர்ச்சியும் உலக அமைதியும் அடங்கியிருக்கின்றன. இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டு தென் பகுதியிலே உள்ள சிறந்த நூல்களைக் குறைந்த விலையிலே மற்ற மொழியாளரும் அறிந்துகொள்ளும் வகையிலே ஆக்கப் பணி புரியும் டிரஸ்டின் சேவை மேலும் மேலும் வளர்ந்து பயன்படும் என நினைக்கிறேன். புத்தகங்கள் வெளியிடுவதோடு மட்டுமல்லாது கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்வதிலும், ஆராய்ச்சி வேலைகளில் இப்புத்தக டிரஸ்ட் ஈடுபட்டிருப்பதும் மிகவும் மகிழ்ச்சிக்குரியது. குறிப்பாக, குழந்தைகளின் புத்தகம் படிக்கும் பழக்கத்தைப் பற்றி அவர்கள் ஆராய்ச்சி நடத்தியிருப்பது நாட்டிற்கு மிகவும் நன்மை பயக்கும் என்று எண்ணுகிறேன். புதிதாக அவர்கள் தமிழில் வெளியிட இருக்கும் நூல்கள் தமிழ்ப் பெருமக்களிடையே பெரும் ஆதரவோடு திகழும் என்று எண்ணுகிறேன்.

இத்துறையில் அவர்கள் மேலும் மேலும் சிறந்த நூல்களை எளிய விலையில் வெளியிட்டுத் தென் பகுதி மக்களுக்கும், நாடு முழுமைக்கும் பயன்படும் வகையில் முன்னேற இறைவன் அருள்வானாக!

பொருளடக்கம்

கோயிற் கலையும் சிற்பங்களும்

பிரபஞ்சம் ஓர் உன்னதமான சக்தியால் இயக்கப் படுகிறது என்று இந்திய மக்கள் கால காலமாக நம்பி வருகிறார்கள். கண்களால் காணும் எல்லாவற்றிலும் உள்ளத்தால் உணரும் ஒவ்வொன்றிலும் அந்த சக்தி நீக்கமற நிறைந்திருக்கிறது என்று கருதுபவர்கள் அவர்கள். அதன் உண்மையான தன்மையை உணர்ந்து கொள்ளவும் அவர்கள் முயன்று வந்திருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சியின் விளைவாக அவர்கள் ஒரு முடிவுக்கும் வந்திருக்கிறார்கள். உலகியல் வாழ்வு தற்காலிகமானதுதான்; உலகை இயக்கும் உன்னத சக்தியை உணர்வதே அதனைப் பூரணமானதாகச் செய்ய முடியும் என்பதுதான் அது. அசாதாரண அறிவாற்றல் படைத்தவர்கள் தங்கள் வாழ் நாளுக்குள்ளேயே இதனையடைய முடியும். குறைந்த ஆற்றல் படைத்தவர்கள் இந்த இலட்சியத்தையடையு முன்பு பல பிறவிகளை எடுக்க வேண்டியிருக்கும். ஆற்றல் குறைந்தவர்கள் இந்த மகத்தான இலட்சியத்தையடைவதற்கு உதவும் விதத்தில், ஏற்கெனவே உண்மையை உணர்ந்து தெளிந்த மகான்கள் எளிய வழியொன்றையும் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். தீவிர பக்தியும், பிரபஞ்ச சக்தியிடம் பரிபூரணமாகச் சரணடைவதும்தான் அது. இது பக்தி வழி. இந்த மார்க்கத்தை மேற்கொள்பவர்கள் அவர்கள் விரும்பும் விதத்தில் இச் சக்தியை உருவகப் படுத்திக் கொள்ளலாம். அதனிடம் அவர்கள் மனதை ஒரு நிலைப்படுத்தி ஒன்றி விடவேண்டும். இதில் அவர்கள் பக்குவப்பட்டு விடும் போது பரம்பொருளின் உண்மையை அவர்கள்

உணர்ந்து கொண்டு விட முடியும். பலர் உண்மையறிவு பெற்றுத் தெளிவதற்கு உதவுவதால் இந்த வழி மிகச் சிறந்த ஒன்றாக விளங்குகிறது.

பக்தர்கள் பரம் பொருளைப் பல விதமாக உருவகப் படுத்தியிருக்கிறார்கள். ஒன்றுக்கொன்று மாறான இயற்கை நியதிகளின் அடிப்படையைக் கொண்டவை அவை. ஆண்-பெண், ஒளிவு-இருள், கொடுமை-கருணை, தேவதைகள்-யட்சர்கள் என்பன போன்றவை. இந்த நியதி உலகெங்கணும் காணப்படுவதால் பூமியே புனிதமானதாகவும் பூசைக்குரியதாகவும் கருதப்படுகிறது. ஆயினும் புவியில் ஒரு சில இடங்கள் வியப்பும், கவர்ச்சியும், அளிப்பதாக இருப்பதைக் கண்ட இவர்கள் தெய்வீக சக்தி இங்கு இருக்க வேண்டும் என்று கருதத் தொடங்கினர். பலவாக தம் மனதில் உருவகப் படுத்திக் கொண்டிருக்கும் பரம் பொருளை இந்த விசேஷ தலங்களில் ஒவ்வோர் உருவில் இருத்தி அங்குக் கோயில்களை எழுப்பவும், தல யாத்திரை செய்து வழிபடவும் முற்பட்டனர். இந்தியர்களுக்குரிய விசேஷ இயல்பு இது. நாடெங்கிலும் எண்ணற்ற புனித இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தீர்த்தங்கள் என்று வழங்கலாயினர். மிகப் பழமையான நூல்களில் ஒன்றான பிருகத் சம்ஹிதை கோயில்களைப் பற்றியும் கூறுகிறது.

" வனோபாந்த நதீ சைல நிர்ஜ ரோ பாந்த பூமிஷு
ரமந்தே தேவதா நித்யம் புரேஷு த்யான
வத்ஸு ச:"

"சோலைகள், ஆறுகள், மலைகள், ஊற்றுக்கள் பூங்காக்கள் நிறைந்த நகரங்கள் ஆகிய இடங்களில் தேவதைகள் உறைகிறார்கள்" என்று இது குறிப்பிடுகிறது. மக்கள் தெய்வீகத்தை உணரும் பல்வேறு இடங்களை எடுத்துக் காட்டுவதே இது. தெய்வீகம் குடிகொண்டிருக்கும் இடம் சிறந்த

தாகவும், அமைதியும் அழகும் நிரம்பியதாகவும் இருப்பது அவசியம். இவை இருக்கும் இடங்களெல்லாம் தேவதைகளின் வாழுமிடங்களாகக் கருதப்படுகின்றன. குன்றுகள், மலையடிவாரங்கள், காடுகள், சோலைகள், பொழில்கள், தபோவனங்கள், கிராமங்கள், நகர்கள், குகைகள் எல்லாமே தலங்களாயின.

தேவதைகளின் பல்வேறு உருவங்களை அமைத்துக் கோயில் எழுப்ப இத்தகைய இடங்களே தேர்தெடுக்கப் படுகின்றன. இந்த இடங்களிலெல்லாம் ஆலயங்களுக் கருகே இயற்கையிலேயோ அல்லது செயற்கையாகவோ ஏற்படுத்தப்பட்ட தண்ணீர் வசதி இருக்க வேண்டும். பக்தி நெறியும், கடவுளை வழிபடுவதும் புராதனமானவை. அது போலவே தேவதைகளுக்குக் கோயில் கட்டுவதும் மிகப் பழங்காலந் தொட்டே இருந்து வருகிறது. வேத காலத்தின் இறுதிக் கட்டத்திலேயே இது ஏற்பட்டிருக்கக் கூடும். வேதங்களில் கூறப்பட்டுள்ள யாகபீடங்களின் நில வரைவினையும் விமான உயரத்தின் தன்மையினையும் அடியொற்றியே பிற்காலக் கோயில்கள் அமைக்கப் பட்டன. பூசையின் நோக்கமும் முக்கியத்துவமும் யக்ஞத்தினுடையதைப் போன்றதுதான்.

2

மதத்தைப் பரப்பக் கோயில்கள்

பரம் பொருளை உணர்வதற்கான வழியாகப் பக்தி நெறியைப் பரப்புவதற்குக் கோவில்கள் மிக முக்கிய இடங்களாயின. இந்தியாவின் பிரதானமான மூன்று மதங்களும் தங்கள் கொள்கையைப் பரப்ப இச் சாதனத்தைப் பயன்படுத்துவதில் ஒன்றுக்கொன்று சளைக்கவில்லை. ஆயினும் பரவலான முறையிலும், பெருமளவிலும் முதலில் இச் சாதனத்தைப் பயன்படுத்தியது புத்த மதம் தான். புனிதத் தலங்களில் பௌத்தர்கள் ஸ்தூபங்களையும், தூண்களையும் எழுப்பினர். காலப் போக்கில் இவை அற்புதமான சிற்பங்கள் அமைந்த அருமையான கலைக் கோயில்களாக வளர்ந்தன. இதற்கு எடுத்துக் காட்டாக சாஞ்சி, பார்ஹுத், அமராவதி ஸ்தூபங்களையும், சாரநாத், ராம்பூர்வா தூண்களையும் கூறலாம். பின்னர், பௌத்த பிட்சுக்கள் தங்களுக்கெனப் பாறைகளைக் குடைந்து இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர். அதற்குள்ளேயே சைத்ய முற்றங்களை அமைத்து அவை ஒவ்வொன்றிலும் தாங்கள் வழிபடும் பிரதான சின்னமான ஸ்தூபத்தையும் ஏற்படுத்தினர். புத்தப் பிட்சுக்களின் வாழிடங்களான விஹாரைகளும், சைத்ய முற்றங்களும் கி. மு. இரண்டாவது நூற்ருண்டிலிருந்து கி. பி. ஏழு அல்லது எட்டாவது நூற்ருண்டுக்குள் ஏற்பட்டவை. மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள பாஜா, பேட்ஸா, பிடல் கோரா, கொண்டேனே, நாசிக், கார்லே, கனேரி, அஜந்தா, எல்லோரா, அவுரங்காபாத் குகைகளும், கிழக்குத்

தொடர்ச்சி மலையிலுள்ள குண்டுபள்ளி, சங்கராம் குகைகளும் இக்காலத்தில் ஏற்பட்டவைகளே. இந்தக் குகைக் கோயில்கள் சிற்பத்திறமைக்குச் சான்றாக விளங்காத போதிலும் ஒவ்வொன்றிலும் பலவிதமான சிற்பங்கள் உள்ளன. இவற்றின் முக்கியமான அம்சம் தூண்களும், முகப்பு அலங்காரங்களுமாகும். நீண்ட கால இடைவெளியில் அடுத்தடுத்து இக்குகைகள் ஏற்பட்டவை. ஆரம்ப காலத்திலிருந்து சமீப காலம் வரை படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்துள்ள மாறுதல்களை இவைகளில் காண முடியும்.

இத்துறையில் ஜைனர்களும், பௌத்தர்களைப் பின்பற்றியுள்ளனர். அவர்களும் ஸ்தூபங்களை எழுப்பினர் என்று கருத இடமிருக்கிறது. மதுரா போன்ற இடங்களில் இவற்றின் இடிபாடுகளைக் காணலாம். குகைக் கோயில்களையும் அவர்கள் அமைத்தனர். இவற்றுள் மிகவும் முக்கியமானது கி. மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரிஸ்ஸாவிலுள்ள கண்டகிரி, உதயகிரி குன்றுகளிலுள்ள கோவில்களாகும். கி. பி. இரண்டாவது நூற்றாண்டுக்குப் பின்னர், சில நூறு வருடங்களுக்கு ஜைனமதம் புத்த மதத்தைப் போல் பிரசித்தி பெற்றிருக்கவில்லை. இந்தியா முழுவதும் இந்து மதம் பிரபலப் படுத்தப்பட்டதும் இந்தக் கால கட்டத்தில்தான். எனவே, இக்காலத்தில் அமைந்த ஒரு சில ஜைன மதச் சின்னங்களே அழியாது நிலை பெற்றிருக்கின்றன. ஆனால், கி. பி. பத்தாவது நூற்றாண்டுக்குப் பிறகு ஜைன மதம் மக்களிடம் செல்வாக்கைத் திரும்பப் பெற்றது. குறிப்பாக, மேற்கிந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் இதன் பிடிப்பு வளர்ந்தது. அங்கெல்லாம் ஜைன மதத்தினரின் மிக அழகிய கோவில்கள் கட்டப்படலாயின.

இந்தியாவில், இந்து மதக் கோயில்கள்தான் அதிகமாக உள்ளன. ஆயினும் கி. பி. நான்காவது நூற்றாண்டு


வரை பக்தி நெறியைப் பரப்பும் சாதனமாகக் கோவில்களை அவர்கள் பயன்படுத்தவில்லை என்றே தோன்றுகிறது. ஆரம்ப கால இந்துக்கள் யாகம் செய்யும் வேத மதத்தையே பிரதானமாகக் கொண்டிருந்த போதிலும், பாமர மக்கள் சிறிய அளவில் பக்தி நெறியைப் பின் பற்றினர் என்று தோன்றுகிறது. கோயில்கள் கட்டுவது, சிலையமைப்பது, விழா நடத்துவது போன்ற பணிகளிலும் அவர்கள் கவனம் செலுத்தியிருக்கின்றனர். பதஞ்சலி மகா பாஷ்யத்தில் ஸ்கந்தர், விஸாகன் ஆகியோரது உருவச்சிலைகளைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப் படுகிறது. பாகவத மதத்தைக் கைக்கொண்ட ஹெலியோடோரஸ் என்ற யவனர் கருடத்வஜம் ஒன்றை எழுப்பிய செய்தி பேஸ்நகர் கல்வெட்டுக்களில் பொறிக்கப் பட்டுள்ளது. (இது கி. மு. 100 வது ஆண்டைச் சேர்ந்தது) சங்கர்ஷனர், வசுதேவர் ஆகியவர்களுக்குக் கற்கோயில்கள் கட்டப்பட்டது குறித்து நகரி கல் வெட்டிலிருந்து அறிகிறோம். இதுவும் கி. மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததுதான். இந்துக்களிடையே ஆலய வழிபாட்டு முறை அப்போதே இருந்ததற்குச் சான்று கூறும் இதர தடயங்களில் முக்கியமானது ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நாகார்ஜுனகொண்டாவில் கண்டு பிடிக்கப் பட்டுள்ள கல்வெட்டுக்களும், இடிபாடுகளுமாகும். இந்தக் கல்வெட்டுக்களிலிருந்து இக்ஷ்வாகு குலத்தினர் (கி. பி. 3-4 வது நூற்றாண்டு) மகாசேனர் போன்ற இந்து தேவதைகளுக்கு கோயில்கள் கட்ட ஆதரவு கொடுத்தனர் என்பதை அறியலாம். பல்வேறு அமைப்பிலும், கணிசமான அளவிலும் கட்டப்பட்ட கோயில்களின் இடிபாடுகளாக இன்று நமக்குக் கிடைக்கும் பொருள்களினுள்தான் இக்கல் வெட்டுக்கள் காணப் படுகின்றன. பார்ஹூத், சாஞ்சி, அமராவதி ஆகிய இடங்களிலுள்ள தாழ்வரைச் சிற்பங்களில் பல்வேறு பௌத்த ஆலயங்களின் சிறிய வடிவங்கள் இடம் பெற்றிருப்பதைக்

காண்கிறோம். இவற்றைக் காணும் போது வெவ்வேறு விதங்களில் அமைந்த ஆலயங்களின் அமைப்பை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

இக் கோயில்கள் இந்து மதத்தின் ஏதாவது ஒரு அம்சத்தைக் கொண்டதாகவும் இருக்கலாம். கோயில் வழிபாட்டின் புராதனத்தைக் காட்டும் சான்றுகள் இவை உள்ளன என்பதில் சந்தேகம் இல்லை. கிறிஸ்தவ சகாப்தத் தொடக்கத்திலிருந்த அவுதூம்பரர்கள், யௌதேயர்கள் குடியரசுகள் வெளியிட்ட நாணயங்களில் லிங்க உருவமும், எளிய ஆலயங்களின் உருவமும் காணப்படுகிறது. கிறிஸ்தவ சகாப்தத்துக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆலய வழிபாட்டு முறை இருந்ததற்கு இவையனைத்தும் சான்று கூறுகின்றன. ஆயினும். குப்தர்கள் காலத்துக்குப் பின்னர்தான், பௌத்தம், ஜைனம் ஆகிய மதங்களின் செல்வாக்குக்கு முன்னர் மங்கிக் கிடந்த இந்து மதத்துக்குப் புத்துயிரளிக்கும் முயற்சியில் இத்துறையில் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதிலிருந்து இந்துக்கள், தங்கள் மதத்தையும் வேதங்களில் கூறப்பட்டுள்ள இந்து கலாசாரத்தையும் பரப்புவதற்கு ஆலயங்களைப் பரிபூரணமாகப் பயன்படுத்த எல்லா விதமான முயற்சிகளையும் மேற் கொண்டனர். இதன் மூலம் தங்கள் மதத்தை நன்கு ஸ்திரப்படுத்தியது மட்டுமல்ல, அழகிலும், கவர்ச்சியிலும், கம்பீரத்திலும் இதர மதத்தார்களுடைய கோயில்களை மிஞ்சக் கூடிய அருமையான ஆலயங்களை அமைத்தனர்.


தேவர்களுக்கும், தேவியர்களுக்கும் ஆலயங்கள் அமைக்க இந்துக்களும் குகைகளைப் பயன்படுத்த முயன்றனர். பௌத்தர்கள் காட்டிய வழியில் இதனைச் செய்த இந்துக்கள் பாதாமி, எலிபெண்டா, எல்லோரா, மகாபலிபுரம், ஆகிய இடங்களில் அற்புதமான குகைக் கோயில்

களை அமைத்தனர். கி. பி. ஆறிலிருந்து எட்டாவது நூற்றுண்டுக்குள் ஏற்பட்டவை இவை. மகாபலிபுரத்திலுள்ள ஏழு இரதங்கள், எல்லோராவிலுள்ள கைலாசநாதர் ஆலயம் திருநெல்வேலி மாவட்ட கழுகு மலையிலுள்ள சிவன் கோயில் போன்ற ஒரே கல்லில் செதுக்கப்பட்ட அருமையான ஆலயங்களையும் அமைத்தனர். அதே காலத்தில் இந்துக்கள் வேறு ஆலயங்களையும் கட்டி இருக்கின்றனர் என்று தெரிகிறது. இவை சிறிய அளவிலும் எளிய அலங்காரத்துடனும் இருந்தன. இதற்கு எடுத்துக் காட்டாக, மத்திய இந்தியாவிலுள்ள குப்தர்கள் காலக் கோயில்களையும், ஐஹொளே, மகாகூடேஸ்வரம் ஆகிய இடங்களிலுள்ள முற்காலச் சாளுக்கியர் காலக் கோயில்களையும், காஞ்சீபுரத்திலும், மகாபலிபுரத்திலும் உள்ள பல்லவர் காலக் கோயில்களையும், புவனேஸ்வரத்திலுள்ள மிகப் பழைய கோயில்களையும், குறிப்பிடலாம். ஒன்பதாவது நூற்றுண்டிலிருந்து கட்டப்பட்ட இந்து ஆலயங்கள் வானளாவி நின்றன. பதினோராவது நூற்றுண்டில் இந்தியா முழுவதும் இது உச்ச கட்டத்தையடைந்தது. ஒரிஸ்ஸா, புவனேஸ்வரத்திலுள்ள லிங்கராஜ், ராஜா - ராணி ஆலயங்கள், தஞ்சாவூரிலுள்ள பிரகதீசுவரர் ஆலயம், கஜுராஹோவிலுள்ள கண்தரிய மகாதேவ் ஆலயம், உதயபுரியிலுள்ள நீலகண்டேஸ்வரர் ஆலயம், ஆகியவை இதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. 12 லிருந்து 16 வது நூற்றுண்டு வரையிலுள்ள காலத்தில் இத்துறையில் மேலும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பாக தென்னிந்தியாவில் காண முடிகிறது. சிதம்பரம் நடராஜர் கோயில், திருவண்ணாமலை கோயில், ஹம்பியிலுள்ள பம்பாபதி, இராமசாமி கோயில்கள் பேலூர், ஹளேபீடு ஆலயங்கள், கொனராக்கிலுள்ள அற்புதமான சூரிய தேவன் கோயில் ஆகியவை இதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.



படம் 1 புத்தகயை மகாபோதி ஆலயம்

அத்தி 14 பார்க்க




படம் 2 ஆலம்பூர் வீர பிரம்மா கோயில்

அத்தி 15 பார்க்க



படம் 3 மார்த்தாண்ட் சூரியன் கோயில்

அத்தி 17 பார்க்க



படம் 4 சாஞ்சி ஸ்தூபம் எண். 1 பொதுத் தோற்றம்

அத்தி 22 பார்க்க




படம் 5 சாஞ்சி குப்தர் காலக் கோயில்

அத்தி 22 பார்க்க




படம் 6 அஜந்தா குகை எண் -1

அத்தி 23 பார்க்க



படம் 7 ஒரிஸ்ஸா, உதயகிரி குகை எண் - 1

அத்தி 23 பார்க்க



படம் 8 எலிபெண்டா குகைக் கோயில்

அத்தி 23 பார்க்க

இந்தப் பிற்காலக் கோயில்களில் இந்திய இயல்பின் பூரணத்துவத்தையும், ஒப்பற்ற உன்னதப்பெருமையையும் காண முடிகிறது. படிப்படியாகப் பக்தர்களுடைய பார்வையையும், சிந்தனையையும் இவை பூவுலகத்திலிருந்து மேலுலகத்துக்கு இட்டுச் செல்கின்றன. குறிப்பிட்ட ஒரு அமைப்பில், பரந்த அடித்தளத்தின் மீது இக் கோயில்கள் உயர்த்திக் கட்டப் பட்டுள்ளன. கோயில்களின் அமைப்பிலும் பல்வேறு பாணிகள் உள்ளன. தென்னிந்தியக் கோயில்கள் படிப்படியாகக் குறுகிக் கொண்டே போகும் கோபுரங்களைக் கொண்டவை. இவை 'பிரமிட்' போல் இருக்கும். வட இந்தியக் கோயில்கள் பக்கவாட்டில் வளைவான அமைப்பினைக் கொண்டு வர வரக் குறுகிக் கொண்டே போய் உச்சியில் முடியும்.

3

சிற்ப நூல்களும், விதிகளும்

தேவர்களையும், தேவியரையும் கோயிலில் இருத்திக் கும்பிடுவது புராதனமான வழக்கம். அது போலவே கோயில்களைக் கட்டும் கலையும் கிறிஸ்தவ சகாப்தத்துக்கு முன்பே இருந்து வருகிறது. எளிய முறையில் கட்டுவதற்கான அமைப்பு, அளவு போன்றவை சுல்ப சூத்திரங்களில் கூறப்படுகின்றன. வேதங்கள் கூறும் யாகபீடம் அமைப்பது பற்றி இவை விளக்குகின்றன. ஸ்திாபத்திய சாஸ்திர வேதம் என்றழைக்கப்படும் வாஸ்து சாஸ்திரம் அதர்வண வேதத்தின் ஓர் உப வேதம் என்று கூறப்படுகிறது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். காலப் போக்கில் ஆலயங்களின் அமைப்புப் பற்றிய பல நூல்கள் எழுதப்படிருக்க வேண்டும். வராஹமிஹிரர் எழுதிய பிருகத் சம்ஹிதை கி. பி. ஆறுவது நூற்றாண்டின் நடுப் பகுதியை சேர்ந்ததாகும். சிற்ப சாஸ்திரம், பிரம்மாவிடமிருந்து பெற்று கர்க்கர் போன்ற முனிவர்களால் வழி வழியாக வழங்கப்பட்டது என்று அந்நூல் கூறுகிறது. பௌத்த தர்ம நூல்களிலும், வேறு சில நூல்களிலும் பல்வேறு விதமான கோயில் அமைப்புக்களைப் பற்றிய சில குறிப்புகள் உள்ளன. இவற்றின் சிறிய அளவு அமைப்பைத்தான் பார்ஹுத், சாஞ்சி, அமராவதி, தாழ்வரைச் சிற்பங்களில் காண்கிறோம். அக்னிபுராணம், மத்ஸ்ய புராணம், கருட புராணம் போன்ற நூல்களிலும் கோயில் சிற்பங்களைப் பற்றிக் கூறும் பகுதிகள் உள்ளன. இவை எழுதப் பட்ட காலத்தைத் திட்டமாகக் கூற முடியவில்லை; மத்திய காலத்தைச் சேர்ந்

தவையாக இருக்கலாம். விஷ்ணு தர்மோத்தரம், ஹயசீர்ஷ பஞ்சராத்ரம், மாரீச்சி இயற்றிய வைகாநஸாகமம் ஆகியவை கி. பி. ஏழு முதல் ஒன்பது நூற்றுண்டுக்கு உட்பட்ட காலத்தில் இயற்றப் பட்ட நூல்களில் சில ஆகும். இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங் களும், சைத்ய பிராசாதம் போன்ற அமைப்புகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆயினும் இதன் பகுதிகளைப் பற்றிய தெளிவான விவரம் எதுவும் அவற்றில் இல்லை.

பத்தாவது நூற்றுண்டுக்குப் பின்னர் சிற்ப சாஸ்திரம் பற்றி ஏராளமான நூல்கள் எழுதப்பட்டன. மிகவும் விரிவாக ஆராய்ந்து எழுதப் பட்ட நூல்கள் இவை. சைவ ஆகமங்களையும், வைஷ்ணவ ஆகமங்களையும் கொண்ட தாந்திரீக நூல்கள் பலவும் இந்தக் கால கட்டத்தில் எழுதப் பட்டவை தாம். இவையும் கோயில் கட்டும் கலை, சிலையமைப்பு, சடங்குகள் பற்றிக் கூறுகின்றன. முதலில் சொன்ன வகையைச் சேர்ந்த சில முக்கிய நூல்கள் வருமாறு :

போஜராஜன் இயற்றிய சமராங்கண சூத்ர சாரம்–*11* வது நூற்றுண்டு.

அபராஜித பரிக்ஷா – இதுவும் போஜனுல் இயற்றப் பட்டது என்று கூறப்படுகிறது. சாரதா திலகம், பிருஹத் சில்ப சாஸ்திரம், வாஸ்து வித்யா, மனுஷ்யாலய சந்த்ரிகா, அரசன் சோமேஸ்வரன் இயற்றிய மனஸோல்லாஸம் *11* வது நூற்றுண்டு.

*15*ஆம் நூற்றுண்டில் இராஜஸ்தானத்தில் சிற்பக் கலைஞராகத் திகழ்ந்த மண்டனர் இயற்றிய வாஸ்து ராஜ வல்லபா, மாய மதம்.

ஈஸான சிவகுருதேவபத்ததி – *11*வது நூற்றுண்டு.

காஸ்யப சில்பம் – 15-வது நூற்றாண்டுக்கு முற்பட்டது.

16-வது நூற்றாண்டில் கேரளத்தில் இருந்த ஸ்ரீ குமரர் இயற்றிய **சில்பரத்னம்.**

15-வது நூற்றாண்டுக்கு முற்பட்ட **பிரயோக மஞ்சரி**

மானஸாரம் - 15-வது நூற்றாண்டுக்கு முற்பட்டது.

ஆகமங்களில் மிகவும் முக்கியமானது **காமிகம், காரணம்** ஆகியவையாகும்.

இந்நூல்கள் ஒவ்வொன்றிலும் கோயில்கள் கட்டும் கலை சம்பந்தப்பட்ட விதிகளும் முறைகளும் நிறையத் தரப்பட்டுள்ளன. அர்ச்சகர்கள், சிற்பிகளுடைய தகுதிகளிலிருந்து, இடத்தைத் தேர்ந்தெடுப்பது, கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்வது வரை எல்லா விதிகளும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு விஷயத்தின் கீழும் கட்டுபவர், இடம், நோக்கம் ஆகிய வற்றுக்கேற்ப பல மாறுதல்களும் கூறப்படுகின்றன. ஆலயங்களின் இயல்பையும், வகைகளையும், பற்றிக் கவனிப்பதற்கு முன்பு ஆலய அமைப்பிக்கான அடிப்படை அம்சங்கள் பற்றியும் சுருக்கமாக அறிவது அவசியம்.

4

ஆலயம் அமைப்பதற்கான இடங்கள்

ஆலயம் கட்டுவது ஓர் புனிதமான செயல். வேதங்கள், சோதிடம் போன்ற வேதாங்கங்கள், ஆகமங்கள் ஆகியவற்றைப் பற்றிய பரிபூரணமான அறிவு இதற்கு அவசியம். ஆலயங்களைக் கட்டுவதற்கு ஆலோசனைகள் கூறி வழி காட்டத் தேர்ந்தெடுக்கப்படுபவர் இவற்றையெல்லாம் நன்கு கற்றிருப்பதுடன் ஒரு தபஸ்வியாகவும், சிற்ப சாஸ்திரங்களை அறிந்தவராகவும் இருக்க வேண்டும். இந்த ஆசாரியர் சிற்பிகளின் நான்கு பிரிவினரின் தலைவரான **ஸ்தபதி**க்கு எப்படி செய்ய வேண்டும் என்று கூறி வழிகாட்ட வேண்டும். மற்ற மூன்று வகை சிற்பிகள் வருமாறு. 1. **சூத்ரக்ராஹி** அல்லது **சூத்ரதாரன்** – அதாவது நூலினால் அளவுகளைத் தெரிந்து கொண்டிருப்பவர். 2. **தக்ஷகன்** – வெட்டிச் செதுக்குபவர். 3. **வர்த்தகி**-வண்ணம் தீட்டுபவர். இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் துறையில் தேர்ந்த திறமையுள்ளவர்களாக இருக்க வேண்டும்; ஸ்தபதியின் உத்தரவுப்படி நடக்க வேண்டும். ஆலயம் கட்டுவதற்கு இக்கலைஞர்களின் சேவை அத்தியாவசியமானது; எனவே வேலை முடிந்ததும் அவர்களுக்கு தகுந்த வெகுமதி அளிக்க வேண்டும்.

அடுத்து, ஆலயம் கட்டுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பது. ஏற்கனவே கூறியுள்ளது போல் தேவர்களும், தேவியர்களும் இயற்கையழகு நிரம்பிய இடங்களிலும், அழகான நகரங்களிலும், கிராமங்களிலும் இருப்பதாகக் கருதப்படுவதால், இத்தகைய இடத்தில் பொருத்

தமான ஓரிடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆலயம் கட்டுவதாக இருந்தால் திறந்த வெளியில் இந்த இடம் இருக்க வேண்டும். பாறைகளைக் குடைந்து அமைப்பதாயி னும் அப்படித்தான். பொருத்தமான இடத்தைத் தேர்ந் தெடுத்தால் தான் அங்கு கட்டப்படும் கோயில் என்றும் நிலைத்திருக்கும் என்று சிற்ப நூல்கள் கூறுகின்றன. இந்தியா வெங்கும் இன்றளவும் நிலைபெற்றிருக்கும் கோயில்களைக் காணும் போது இந்த விதி கண்டிப்புடன் கடைப்பிடிக்கப் பட்டிருக்கிறது என்பது புலனாகிறது. புவனேஸ்வரத்திலுள்ள பரசுராமேஸ்வரர் கோயில், காஞ்சி கைலாஸநாதர் கோயில், பட்டதக்கல் விருபாக்ஷர் கோயில், எலிபெண்டா, எல்லோராவிலுள்ள இந்துக் கோயில்கள், எழில் மிக்க அஜந்தா குடவரைக்கோயில் கள் ஆகியவை இதை உறுதிப்படுத்துகின்றன.

கற்களைக் கொண்டு கோயில் கட்டத் தேர்ந்தெடுக் கப்படும் இடம் கெட்டியான தரையைக் கொண்டதாக இருக்க வேண்டும். கரி, எலும்பு போன்ற பொருள்கள் மண்ணில் இருக்கக் கூடாது. அடுத்து, அது சமதளமா யிருக்க வேண்டும். இந்த இடத்தில் வாஸ்து புருஷ மண்ட லம் எனப்படும் வரைச் சித்திரம் எழுதப்படும். கட்டப்பட விருக்கும் கோயிலின் உண்மையான தரை அமைப்பாக இல்லாத போதிலும் அதற்கான பிரதேசத்தின் அடிப் படை, எல்லைக் கோடுகள் ஆகும். அதன் மீது ஒரேயொரு கோயில் கட்டப்படலாம்; அல்லது பல சிறு கோயில் களைக் கொண்டதாகவும், பிராகாரம் அமைந்ததாகவும் இருக்கலாம். இந்த வாஸ்து புருஷ மண்டலம் ஒன்று 64 அங்கங்களைக் கொண்ட சதுரமாக இருக்க வேண்டும்; அல்லது 81 அங்கங்களைக் கொண்ட சதுரமாக இருக்க வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. வாஸ்து புருஷமண்டலம் வட்டமாகவும் இருக்கலாம். ஆயினும் சதுரம் தான் அடிப்படை வட்டத்தை அதற்குள் வரைந்து

கொள்ளலாம். சதுரம், வட்டம் ஆகிய இரு உருவங்களும் முறையே **ஆஹவனீயம், கார்ஹபத்தியம்** எனப்படும் வேதச் சடங்குகளில் அமைக்கப்படும் யாக குண்டத்தின் உருவத்தை அடிப்படையாகக் கொண்டவை என்று கூறப்படுகிறது. ஆனால், முறையான உருவமாக சதுரமே இருப்பதால் அதுவே புனிதமானதாகக் கருதப் படுகிறது. வட்டத்தைவிட சதுரம் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.

ஆலயம் கட்டுவதற்கு முன்பு வாஸ்து புருஷ மண்ட லத்தின் சதுர வரைக் கோட்டை எழுதுவது அவசியம். அதன் உட்பொருளும், வரையும் முறையும் கட்டிடக் கலைஞ ருக்குத் தெரிந்திருக்க வேண்டிய முதல் அம்சமாகும். இதனைப் பற்றிச் சொல்லாத இந்தியக் கட்டிடக்கலை நூல் எதுவுமே கிடையாது. அது எல்லோருக்கும் தெரிந்திருக் கும் என்று கூற வேண்டியதில்லை. கோயில் கட்டும் கலை உன்னத நிலையில் இருந்த காலத்தில் (கி. பி 1000 ஆண் டில்) சில சிறந்த பிரம்மாண்டமான பிராசாதங்கள் கட்டப்பட்டபோது கோயில் கட்டப்படவிருக்கும் இடத் தில் தரையில் வரைக் கோட்டுச் சித்திரம் வரையும் விதி இருந்திருக்கிறது. நூல் பிடித்து அளப்பது, மண்டலக் கோடுகளை வரைவது போன்ற ஒவ்வொரு செயலும் சடங் காக இருந்தது. அஸ்திவாரம் கட்டிடத்தின் பாரத்தைத் தாங்குவது போல் இவை ஒவ்வொன்றும் அவைகளுக் குரிய சக்திப்படி புனிதமான கட்டிடத்துக்கு ஆதாரமாக இருக்கின்றன. இந்த செயல்கள், சடங்குகள், அவற்றின் உட்பொருள் ஆகியவை வெறும் உபகாரியங்களோ அல்லது கட்டிடத்தின் பகுதிகளோ அல்ல. இந்துக் கோயில்களின் உருவம், அளவு, ஒவ்வொரு உருவத்தை யும் பற்றிய விவரம், அததற்குரிய இடங்கள், ஆகிய வற்றை வகுப்பதே இது தான்.

5

ஆலயங்களின் பெயர்கள்

சாஸ்திர நூல்களில் கோயில்களைக் குறிப்பிட உபயோகப் படுத்தப் பட்டிருக்கும் இரண்டு முக்கியமான பெயர்கள் **விமானம், பிராசாதம்** என்பதாகும். விமானம் என்பது சாஸ்திர விதிப்படி கட்டப்பட்ட கோயிலின் பெயராகும். பொதுவாக விமானம் கடவுளின் ரதம் போல் இருக்கும். பௌத்த நூல்களில் இதற்கு கடவுளின் அரண்மனை என்று பொருள். இதிகாசங்களில் இது ஏழடுக்குக் கட்டிடத்தைக் குறிக்கிறது. பிராசாதம் என்ற மற்றொரு பெயர் வாழுமிடம், கடவுளின் இருப்பிடம் என்ற பொருளைத் தருவதாகும். பிராசாதங்கள் தங்கள் அழகின் மூலம் தேவதைகள், மனிதர்களுடைய உள்ளத்தைக் களிப்பிக்கின்றன என்று சில்பரத்னம் போன்ற நூல்களில் வருணிக்கப்படுகிறது. பிராசாதம் என்பது தேவதைகள், அரசர்கள் இருப்பிடத்தைக் குறிக்கும் என்று **அமரகோஸம்** கூறுகிறது. இச்சொல் புனிதமான சின்னம் அல்லது புனிதமான கட்டிடம் என்ற பொருளில் பதஞ்சலி மகாபாஷ்யம் போன்ற புராதன நூல்களில் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. இதிகாசங்களில் இந்த சொல் மூன்றடுக்கு கட்டிடத்தைக் குறிப்பிடுகிறது. மூன்றடுக்குகள் ஒரு வேளை மூவுலகங்களைக் குறிப்பதாக இருக்கக் கூடும். வேறு பல புராதன கல்வெட்டுக்களும் ஒரு புனிதமான கட்டிடத்தை பிராசாதம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றன. ஹெலியோடோரஸின் கருடத்வஜக் கல்வெட்டு (கி. மு. 2வது நூற்றாண்டு) விஷ்ணுவின் உத்தம பிராசாதம்

என்றும், பார்ஹுத் கல்வெட்டு (கி. மு. முதல் நூற்றாண்டு) **வைஜயந்த பிராஸாதம்** என்றும், யசோவர்ம தேவன் காலத்திய (சுமார் கி. பி. 530) நாளந்தா கல்வெட்டு **பிராசாத தேவாலயம்** என்றும், ஸிர்பூர் லக்ஷ்மணர் கோயில் கல்வெட்டு (சுமார் கி பி. 700) கோயிலைப் பிராசாதம் என்றும் குறிப்பிடுவது இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். தென்னிந்தியாவின் மத்திய கால நூல் களின்படி **சபா, சாலா, பிராகா, ரங்க மண்டபம், மந் திரம்** ஆகியவற்றையும் கொண்டது பிராசாதம். ஆயினும் இச்சொல் " கர்ப்பக்கிருகத்தின் மேலும் கீழும், சுற்றிலும் உள்ள பகுதியையே சிறப்பாகக் குறிப்பதாகும்."

கோயிலைக் குறிப்பிடப் பயன்படும் இதர சொற்கள் **தேவகிரகம், தேவகரம், தேவாயதனம், தேவாலயம், தேவகுளம்,, மந்திரம், பவனம். ஸ்தானம் வேஸ்மன், கீர்த்தனம்,** (எடுத்துக்காட்டு-யசோவர்ம தேவனின் (கி, பி. 530) நாளந்தா கல்வெட்டு, லக்க மண்டல் கல் வெட்டு (கி, பி. 500) எல்லோரா கைலாச நாதர் கோயிலைக் குறிப்பிடும் செப்பேடு (சுமார் 8 – வது நூற்றாண்டு) வங்காளத்திலுள்ள மாஸ்தாவில் கிடைத்த காலிம்பூர் செப்பேடு (9-வது நூற்றாண்டு) **ஹர்மியம், விஹாரை,** (விசேஷமாக பௌத்த, ஜைன ஆலயங்கள்) **சௌதஸத னம்** (உதாரணம் : குவாலியரிலுள்ள ஸாஷ்பாகு ஆலயம் மஹிபால கல்வெட்டுக்களில் (கி. பி. 1093) ஹரிஸதனம் எனக்குறிப்பிடப்படுவது) ஆகியவை.

6

ஆலயங்களில் உபயோகிக்கும் பொருள்கள்

கோயில்கள் கட்டுவதற்கு மரம், செங்கல், கருங்கல், ஆகியவற்றை உபயோகப்படுத்தலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவற்றைத் தனியாகவும், பயன்படுத்தலாம்; அல்லது மற்றவற்றுடன் சேர்த்தும் உபயோகிக்கலாம். வேத பீடங்கள் அமைப்பதற்குக் கருங்கல் எப்போதுமே உபயோகிக்கப்பட்டதில்லை. பல்வேறு அளவுகளிலும், உருவங்களிலும் உள்ள செங்கற்கள்தான் பயன்படுத்தப்பட்டது. இவை ஒன்று வெயிலில் காய்ந்ததாக இருக்கும்; அல்லது காளவாயில் சுட்டதாக இருக்கும். பின்னல் கட்டப்பட்ட கோயில்களும் பெரும்பாலும் வேத மரபையொட்டியே அமைந்திருந்ததால் அவை அநேகமாகச் செங்கற்களைக் கொண்டு மட்டுமே கட்டப்பட்டன. வரலாற்றுக் காலத்திய பௌத்த ஸ்தூபங்கள் செங்கற்களைக் கொண்டுதான் எழுப்பப்பட்டன. இவற்றுள் ஒரு சிலவற்றில் கருங்கல் பயன்பட்டிருக்கலாம். ஹர்மிகா, வேதிகை, ஆயக-கம்பம் போன்ற பகுதிகள் ஒருவகை கல்லால் அமைந்திருக்கலாம். ஆயினும், அதன் பிரதான அமைப்பு செங்கற்களால் ஆனதாகவே இருக்கும். சாஞ்சி, சாரநாத், அமராவதி, நாகார்ஜுனகொண்டா ஸ்தூபங்கள் இவ்வகைக்கு எடுத்துக் காட்டாகும். ஆரம்ப காலத்தில் செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட ஆலயங்களுக்கு உதாரணங்கள் சில: பைராட்டிலுள்ள புத்தர் கோயில்

(கி. மு. 3 - ஆம் நூற்றூண்டு) இதன் வெளிச் சுற்று செங்கற் சுவரால் ஆனது ; உள் சுற்று மரத் தூண்களைக் கொண்டது. லௌரியா - நந்தன்கட் மூன்றடுக்கு ஸ்தூபம், (கி. மு. 3-2-ஆம் நூற்றூண்டு) உத்திரப் பிரதேசம் பித்ரகாமிலுள்ள கோயில்-இது குப்தர் காலத்தியது கி. பி. 5-ஆம் நூற்றூண்டு ஆந்திரப் பிரதேசத்தில் டேரிலுள்ள உத்தரேஸ்வரர், கபோதீஸ்வரர் கோயில்கள் (7-ஆம் நூற்றூண்டு) - இதன் கதவுகளும், விட்டங்களும், கூரையும் மரத்திஞலானவை. மத்திய பிரதேசம் ஸிர்பூரிலுள்ள லக்ஷ்மணர் ஆலயம் (7-ஆம் நூற்றூண்டு) தமிழ் நாட்டிலுள்ள ஆரம்பகால சோழர்களின் சில கோயில்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் சில கோயில்களில் மரம் அல்லது கருங்கல்லும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் கோயிலின் சுவர்கள் பொதுவாகக் கருங்கல்லால் ஆனவையாக இருக்கும். கர்ப்பக்கிருகத்தின் விதானம் மரத்திஞலும் மேல் அடுக்குகள் செங்கற்களிஞலும் கட்டப்பட்டிருக்கும். கி. பி. 1100 - ஆம் ஆண்டுக்குப் பிறப்பட்ட கோயில்களில் இம்முறைதான் கையாளப் பட்டது.

புராதன கால மரக் கட்டிடங்கள் எதுவும் நிலைக்கவில்லை. மரத்தின் அழிந்து போகும் தன்மைதான் இதற்குக் காரணம் என்பது தெளிவு. மரங்களைக் கொண்டு கட்டிய கோயில்களின் பாணியை கற்களைக் கொண்டு கட்டிய போதும் பின்பற்றியிருக்கிறுர்கள். உதாரணமாக, பௌத்த ஸ்தூபங்களைச் சுற்றியுள்ள கருங்கல் கிராதிகள், பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட சைத்ய கூடங்களின் வாயில் வளைவுகளின் விளிம்புகள், ஆகியவற்றைக் கூறலாம். பெரும்பாலும் மரத்தைக் கொண்டே கட்டப்பட்ட சில கோயில்கள் இன்றும் உள்ளன. சம்பா பிரஹ்மோரிலுள்ள கோயில் (8-ஆம் நூற்றூண்டு) கேரளத்திலுள்ள மரக் கோயில்கள் (14-ஆம் நூற்றூண்டு) ஆகியவை

இதற்கு எடுத்துக் காட்டுகள். கேரளக் கோயில்கள் அவர்களுக்கே உரிய பாணியில் கட்டப்பட்டவை.

ஆயினும் இந்தியாவிலுள்ள மிகப் பெரும்பாலான கோயில்களில் கருங்கல்தான் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. மரத்தையும், செங்கல்லையும் கட்டிடப் பொருள்களாக உபயோகிப்பதை அது படிப்படியாக வழக்கொழியச் செய்து விட்டது. எப்போதும் இருக்கக் கூடியது என்ற காரணத்தால் மூன்று பிரதான மதத்தினரும் கருங்கல்லுக்கு முதலிடம் கொடுக்கத் தொடங்கினர். பாறைகளைக் குடைந்து கோயில்கள் அமைக்கலாயினர். கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் தொடங்கி (பீஹாரிலுள்ள நாகார்ஜுன மலையிலிருக்கும் சிறிய குகைகள்) கி. மு. ஒன்பது-பத்தாவது நூற்றாண்டு வரை (எல்லோராவிலுள்ள இந்திர சபா, ஜகன்னாத சபா ஆகிய ஜைனர் குகைகள்) இருந்திருக்கிறது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே கருங்கற்களால் ஆன கோயில்களும், செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களும் இருந்திருக்கின்றன என்பதற்குக் கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. விதிஸா என்ற இடத்தில் கற்கோயிலொன்றின் பகுதி கண்டு பிடிக்கப்பட்டது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் கல்வெட்டு ஒன்று இதனை வாசுதேவனின் உத்தம பிராசாதம் என்கிறது. தக்ஷசிலத்தைச் சேர்ந்த ஹெலியோடோரஸ் எழுப்பிய கல்லாலான கருடத்வஜமும் இக் கோயிலில் ஒரு பகுதியாகும். மதுராவைச் சேர்ந்த மகாக்ஷேத்ரப சோடாஸனுடைய (கி. மு. முதல் நூற்றாண்டு) கல்வெட்டு, விருஷ்ணிகளின் ஐந்து மாவீரர்களின் உருவச்சிலைகளைக் கொண்ட ஒரு புனிதமான கற்கோயிலைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இராஜஸ்தான் உதயபுரியைச் சேர்ந்த நகரி கல்வெட்டு ஒன்று (கி. மு. முதல் நூற்றாண்டு) வழிபடும் சிலையைச் சுற்றி அமைந்துள்ள கற்சுவற்றைப் பற்றிக் கூறுகிறது. நாகார்ஜுனகொண்டாவில் சமீபத்தில் அகழ்ந்தெடுத்த

தில் சில கற்றூண்கள் கிடைத்துள்ளன. இவை புஷ்ப பத்ரஸ்வாமி, விருபாக்ஷபதி, மகாசேனன், அஷ்ட புஜஸ்வாமி போன்ற தெய்வங்களின் கோயில்களைக் கட்டப்பயன் பட்டவை. இத்தூண்கள். இவை பற்றிக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி. பி. மூன்று நான்காவது நூற்ருண்டிலிருந்த இக்ஷ்வாகு குல மன்னர்களின் கல்வெட்டுக்களும் இந்த இடத்தில் கிடைத்துள்ளன. கற்றளிகளைப் பற்றிக் குறிப்பிடும் வேறு சில கல்வெட்டுக்கள் தோரமானர் காலத்திய (கி. பி. 5-ஆம் நூற்ருண்டு) கல்வெட்டு, முதலாம் மகேந்திரவர்ம பல்லவனின் (கி. பி. 600-630) மண்டகப்பட்டு கல்வெட்டு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் மண்டகப்பட்டு கல்வெட்டு குகைக் கோயில் ஒன்றின் முகப்பில் பொறிக்கப்பட்டுள்ளது. இது இக்குகையில் மரம், உலோகம், சுண்ணும்புச் சாந்து ஆகியவை தவிர்க்கப்பட்டிருப்பதை இது விசேஷமாகக் குறிப்பிடுகிறது. இந்த மன்னர் காலத்துக்கு முன்பு கோயில்கள் இப்பொருள்களைக் கொண்டே கட்டப்பட்டன என்ற உண்மைக்குச் சான்று கூறுகிறது இது.

இன்றும் நிலைத்திருக்கும் ஆரம்பகாலக் கற்கோயில்களில் சில கி.பி. 400—ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. பெருங் கற்களால் கட்டப்பட்டு காட்சியளிக்கும் இவை, மத்தியப் பிரதேசத்தில் நிறையக் காணப்படுகின்றன. அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்படாத அவற்றின் சுவர்கள் பெரும் கற்களை ஒன்றன் மேலொன்ருக அடுக்கி அமைக்கப்பட்டுள்ளன. கற்களுக்கிடையே சாந்து கிடையாது. கல்லாலான கூரையும் சமதளமாக உள்ளது பீஜப்பூர் மாவட்டத்தில் ஐஹொளே என்னுமிடத்திலுள்ள லாட் கான் கோவிலும் (கி. பி. 5ஆம் நூற்ருண்டு) இவ்வகைக்கு எடுத்துக் காட்டாகும். தமிழ் நாட்டில் கி. பி. 700 லிருந்து 1050க்குள் கட்டப்பட்டு, இன்றும் நிலைத்திருக்கும் பெரும் பாலான கோயில்கள் முற்றிலும் கற்களால் கட்டப்பட்

டவை. இந்தக் காலத்தில் இந்தியாவின் இதர பகுதிகளில் கட்டப்பட்ட மிகப் பெரும் பாலான கோயில்களும் இவ்வாறு தான் கட்டப்பட்டன என்று தோன்றுகிறது.

கோயில்கள் கட்டுவதற்குச் செங்கல், மரம், கல் ஆகிய எந்தப் பொருளை உபயோகித்த போதிலும் அது புத்தம் புதியதாக இருக்க வேண்டும் என்று கட்டிடக் கலை நூல்கள் கூறுகின்றன. "செங்கற்கள் புதிதாகத் தயார் செய்யப் பட்டதாக இருக்க வேண்டும்; இதர பொருள்களும் உரிய காலத்தில் சேகரிக்கப்பட்டு, அவை எந்தக் கட்டிட வேலைக்காகச் சேகரிக்கப் பட்டனவோ அதற்கு மட்டுமே உபயோகிக்கப்பட வேண்டும்; மரம், செங்கல், கல் ஆகியவை அங்கிகரிக்கப்பட்ட முறையில் சேகரிக்கப்பட வேண்டும்; வேறு ஒரு கட்டிடத்தின் எஞ்சிய பொருள்களையும், பாழடைந்த கட்டிடங்களிலிருந்து பெயர்த்தெடுக்கப் பட்ட பொருள்களையும் உபயோகப்படுத்துவதை ஆன்றோர்கள் கண்டித்துள்ளனர் என்று மயமதம் கூறுகிறது.

கோயில்கள் கட்டுவதற்கான மேற் சொன்ன அடிப்படைப் பொருள்களுடன் சுண்ணும்புச்சாந்து, வண்ணப் பொடிகள் போன்ற பொருள்களும் பயன்படுகின்றன. செங்கற்களால் கட்டப்படும் கோயில்களில் சுண்ணும்புச் சாந்து கற்களை இணைக்கும் பொருளாகப் பயன்படுத்தப் படுகிறது. செங்கல், கற் கட்டிடங்களின் சுவர்களுக்கு மேற் பூச்சாகவும் இது உபயோகப்படுகிறது. வண்ணப் பொருள்கள் சுண்ணும்புப் பூச்சு மீது ஓவியங்கள் தீட்டத் தேவைப்படுகின்றன. பொதுவாகக் கற்றளிகளில் இணைப்புப் பொருளாகச் சாந்து உபயோகப்படுத்தாமலே கற்கள் அதனதன் இடத்தில் பொருத்தப்பட்டுள்ளன. பெரிய கற்களை மட்டமாகச் செதுக்கி காறை பூசாமல் பொருத்திக் கட்டப்படும் இவ்வகைக் கலையைக் குப்தர்கள் காலத்தில் மத்திய இந்தியாவில் கட்டப்பட்ட கோயில்களிலும், முற்

காலச் சாளுக்கியர் காலத் தக்காணக் கோயில்களிலும், ஆரம்பகாலச் சோழர்களின் தென்னிந்தியக் கோயில்களிலும் காண முடிகிறது. கஜுராஹோவிலுள்ள சில கோயில்களில் முகப்புக் கற்களைப் பதிக்க அரக்கும், உட்பகுதிக் கற்களை இணைக்கச் சுண்ணும்பினாலான ஒரு வகைக் காங்கிரீட்டும் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. விதிஷாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட விஷ்ணு கோவிலின் செங்கல்தளம் (கி. பி. 2ஆம் நூற்றுண்டு) அப்போதே கற்களை இணைக்க சுண்ணும்புச்சாந்து பயன்படுத்தப் பட்டிருப்பதை உணர்த்துகிறது.

கோயில்களில் பூச்சுக்குப் பயன்படும் சாந்து விசேஷமாகத் தயாரிக்கப்படுவது. இதற்கு **வஜ்ரலேபம்** என்று பெயர். வெண்ணெய் போன்று வெண்மையாகவும், தந்தத்தைப் போன்று பளபளப்பாகவும் உள்ள சாந்து பூசப்பட்டதும் கோயில்கள் அற்புதமாகவும், கவர்ச்சியாகவும் தோற்றமளிக்கும். இமயமலையின் பனி மூடிய சிகரம் போல் இருக்கும். புதிதாகப் பூச்சுப் பூசப்பட்டதால் அருமையாகக் காட்சியளிக்கும் கோயிலைப் புகழ்ந்து கூறும் புராதனக் கல் வெட்டுக்கள் பல உள்ளன. கோயில்களின் கீழ்ப்பகுதி கற்களாலும், மேற்பகுதி செங்கற்களினாலும் பொதுவாகக் கட்டப்பட்டிருக்கும் பல கோயில்களில், குறிப்பாகத் தென்னிந்தியாவிலும், தக்காணத்திலும் உள்ள கோயில்களில் மேற்புரத்திலுள்ள சிற்பங்கள் முற்றிலும் காரையால் ஆனவையாக இருக்கும்; அல்லது காரை அவற்றில் பிரதானப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும். மத்தியகாலக் கோயில்கள் சிலவற்றின் சிற்பங்களின் மீது காரையும் பூசப்பட்டுள்ளது.

பல் வேறு விதமான சாந்துகளைத் தயாரிக்கும் முறை சில்ப சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. மேலே ஓவியம் தீட்டுவதற்கு ஏற்றதென சில விசேஷ வகைச் சாந்துகள்

சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. புராதனக் கோயில்களி லெல்லாம் காறை பூசப்பட்டதா அப்பூச்சின் மீது வண்ண வேலைப்பாடுகள் செய்யப்பட்டனவா என்பது குறித்துக் கூறுவது எளிதல்ல. ஆயினும் அவ்வாறு செய்யப்பட்ட தைக் காண முடிகிற பல புராதனக் கோயில்கள் இன்றும் உள்ளன. தக்காணத்திலுள்ள குகைக் கோயில்கள் இதற்கு உதாரணமாகும். எல்லோரா, பாதாமி, அஜந்தா, சித்தன்னவாசல், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களில் வண்ண ஓவியங்கள் தீட்டிய காறைப் பூச்சு இன்றும் உள்ளது.

இரும்பு, வெண்கலம், செம்பு, போன்ற பொருள் களும் சிறு அளவில் கோயில் கட்டுவதற்குப் பயன்படுத் தப்பட்டுள்ளன. மௌரியர் காலத் தூண்களில் (கி.மு. 3ஆம் நூற்றாண்டு) வெண்கல ஆணிகள் அல்லது செம்புப் பிடிப்பு வளையங்கள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. மரத் துண்டுகளை இணைப்பதற்கு இரும்புப் பிடிகள் பயன்படுத் தப்பட்டுள்ளன. நன்கு செதுக்கப்பட்ட கற்கள் அதனதன் இடத்தில் நன்கு பொருந்தியிருக்கும்படி செய்ய இரும்புப் பிடிப்புகள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. கி. பி. ஆறும் நூற்றாண்டைச் சேர்ந்த தேவ்காட் கோயிலில் இதனைக் காணலாம். பெருமளவில் இரும்பு உபயோகப்படுத்தப் பட்டுள்ள புராதனக் கட்டிடம் ஒரிஸ்ஸா கொனாரக்கி லுள்ள மண்டபம் ஆகும் (13 வது நூற்றாண்டு) கற்கட்டி டத்துக்கு இங்கு இரும்பு விட்டங்கள் போடப்பட்டுள்ளன.

7

ஆலய வகைகள்

கட்டிடக்கலை நூல்களின்படி ஆலய வகைகள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவை முதலில் 20 வகை களைக் கொண்ட ஒரு பிரதான பிரிவின் கீழ் பாகுபடுத்தப் பட்டுள்ளன. இந்த இருபது வகைகளில் ஐந்திலிருந்து உருவான 45 கோயில்கள். அடுத்தது, மூன்றுவது பிரிவு 64 கோயில்களைக் கொண்டது. இவை முதல் பிரிவான 20 வகையில் மேலும் ஐந்திலிருந்து உருவானவை. இந்தப் பிரிவுகளின் கீழ் வரும் கோயில்களின் பெயர்கள் வருமாறு;

முதல் பிரிவைச் சேர்ந்த 20 கோயில்களின் பெயர் கள் மேரு, மந்தரம், கைலாஸம், விமானச்சந்தம், நந்தனம் சமுத்ரம், பத்மம், கருடம், (இது இரு வகையானது) நந்திவர்த்தன் (அல்லது நந்தி) கஜ, (அல்லது குஞ்சரம்) கிருஹர்ராஜ (அல்லது குகராஜ) விருஷ, ஹம்ஸ, கும்ப (கட) சர்வதோபத்ர, மிருகராஜ (அல்லது சிம்ஹ) வர்த்துல (அல்லது விருத்த) சதுரஸ்ர (அல்லது வவ்ரிக்ஷ, சதுஷ் கோண) ஷோடஸாஸ்ர, அஷ்டாஸ்ர.

இவற்றுள் மேரு, மந்தரம், கைலாஸம் ஆகிய முதல் மூன்றும் மிகப் பெரிய கோயில்களைக் குறிப்பவை. ஒவ் வொன்றும் பல கருத்துகளை (அல்லது பூமிகளை) கொண்ட தாக இருக்கும். நந்தனம் எனப்படும் நான்காவது வகை யும் உயரமானதுதான். ஆனால், குறைவான அடுக்குகளைக் கொண்டது. இவற்றுடன் விமானச் சந்தமும் சேர்ந்தது மிக முக்கியமான பிரிவாகும். இவையெல்லாம் ஆறு

கோணங்கள் கொண்ட ஒரே உருவில் இருக்கும். இவற்றின் தரைத்தளம் சதுரமாக இருக்கும். இதர வகைகளுக்கும் தனித்தனிப் பெயர்கள் உள்ளன. அவை வட்டமாகவோ அல்லது எட்டு அல்லது பதினாறு உட்குழிவானச் சுவர்களைக் கொண்டதாகவோ இருக்கும். குஞ்சர அல்லது கஜ (தூங்கானைமாடம்) என்ற பெயர் இவ்வகை வளைவான, உருவில் இருக்கும் என்பதையுணர்த்துகிறது. இதனை **ஹஸ்தி பிரிஷ்டம்** என்றும் கூறுவர். கடைசி நாள்கு வகைகளும் வட்டம், சதுரம், பதினாறு பக்கங்கள் கொண்டது, எட்டு பக்கங்கள் கொண்டது என்று எளிய முறையில் கூறப்படுகிறது. இடையில் இருண்ட இடைவழியைக் கொண்ட இரு சுவர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று இவை விவரிக்கப்படுகிறது. வெளிச்சுவர் பிரதானக் கட்டிடத்தின் உயரத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு வரை இருக்க வேண்டும். இரண்டையும் இணைப்பதாக ஒரு சாய்ந்த விதானம் இருக்க வேண்டும். இந்த விவரப்படி அமைந்தவை கத்தியவாரிலுள்ள கோப் ஆலயம், (குப்தர் காலம்) மத்திய பிரதேசத்தில் பூமர நாச்ன குடார ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள், பாதாமி கோயில்கள் (சாளுக்கியர் காலம்) ஆகியவைகளாகும். இந்த இருபது கோயில்களில் மற்றவை ஓரடுக்கைக் கொண்டதாகவோ அல்லது 5 முதல் 12 அடுக்கு வரை ஏதாவது ஒன்றைக் கொண்டதாகவோ இருக்கும்.

இந்த இருபது வகைக் கோயில்கள் நாகர பிராசாதம் எனப்படுகின்றன. அதாவது, இவை கட்டிடக்கலையில் நாகர பாணியின் பல்வேறு வகையில் அமைந்தவை. பல உருவில் கட்டிட அமைப்பு இதற்கு உண்டு. இவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த அடிப்படையான ஐந்து உருவங்கள் மத்திய கால கட்டிடக் கலையில் 45 மாறுதல்களையும், 64 மாறுதல்களையும் ஏற்படுத்தின.

தேவதைகளின் இரதங்களான வைராஜ, புஷ்பக, கைலாஸ, மானிக, திரிவிஷ்டப ஆகிய ஐந்து விமானங்களிலிருந்து பிரிந்த கிளைகளான 45 கோயில்கள் வருமாறு;

வைராஜ; (பிரம்மாவின் இரதம் - சதுரம்) மேரு, மந்தர, விமான, பத்ரக, சர்வதோபத்ர, சருக அல்லது ருசக, நந்தி வர்த்தன, ஸ்ரீவத்ஸ.

புஷ்பக: (குபேரனுடைய இரதம் - நீண்ட சதுரம்) வலபி, கிரஹராஜ, சதகிரக, மந்தர விசால, பிரம்ம மந்திர, புவன, பிரபவ (அல்லது உத்தம்பா) சிபிகா வேஸ்ம.

கைலாஸ: (இவனுடைய இரதம் – வட்டம்) வலய, துந்துபி, பத்ம, மகா பத்ம, உஷ்ணீஷி, சங்க, கலஸ, கவரிக்ஷ (அல்லது குவா விரிக்க்ஷ) வர்த்தனி.

மானிக: (வருணனுடைய இரதம் - முட்டை வடிவம்) கஜ, விருஷப, ஹம்ஸ, கருட சிம்ஹ, பூஷண (பூமக, பூதர) ஸ்ரீ ஜய, பிருத்விதர, ரிக்ஷநாயக.

திரிவிஷ்டப: (இந்திரனுடைய இரதம் - எண் கோணீ வடிவம்) வஜ்ர, சக்ர, முஷ்டிக, (பப்ரு, வக்ர) ஸ்வஸ்திகா, கட்க, கதா, ஸ்ரீகண்ட (ஸ்ரீவிரிக்க்ஷ, ஸ்வேஷ) விஜய, சித்ர, வஜ்ர ஸ்வஸ்திகா.

இக் கோயில்களுக்கு உரித்தான சிகாரம், கண்டம், ஆமலசாரகம் ஆகியவை உள்ளன. கட்டிடக் கலையில் சில நாகர பாணியைச் சேர்ந்தவை இவை. குஜராத்தின் சில பகுதிகளில் இது பிரபலமாக இருந்தது. அங்கு தான் நாகர பாணியின் தனி முறை உருவாக்கப்பட்டது.

மேற் சொன்ன ஐந்து தேவரதங்களிலிருந்தே உருப் பெற்ற மூன்றாவது பிரிவைச் சேர்ந்த 64 வகைக் கோயில்களின் பெயர்கள் வருமாறு:

வைராஜ: (சதுரம் - 24 வகை) ருசக, சிம்ஹ பஞ்சர, சித்திரகூட, பத்ர, ஸ்ரீகுட, உஷ்ணீஷ, சாலிக்கிரக, கஜயூதப, நந்த்யாவர்த்த, அவதம்ஸக, ஸ்வஸ்திக, க்ஷிதிபூஷண, பூஜய, விஜய, நந்தி, ஸ்ரீதரு, பிரமதப்பிரிய, வியாமிஸ்ர, ஹஸ்தி ஜாதீய, குபேர, வசுதாதர, சர்வதோ பத்ர், விமான, விமுக்த கோண.

கைலாஸ: (வட்டம் - 10 வகை) வலய, துந்துபி, பிராந்த பத்ம, காந்த, சதுர்முக, மண்டூக, கூர்ம, தலி கிரஹ, உலூபி.

புஷ்பக: (நீண்ட சதுரம் - 10 வகை) பாவ, விஸால, சாம்முக்கிய, பிரபவ, ஸிபிரக்ரஹ, முகசாலா, த்விசாலா, கிரஹராஜ, அமல, விபு.

மனிக: (முட்டை வடிவம் - 10 வகை) ஆமோத ரைதிக, துங்க, ச்சரு, பூதி, நிஷேவக, நிஷேத, சிம்ஹ, ஸுப்ரபா, லோசநோத்ஸவ.

திரிவிஷ்டப: (எண் கோணம் - 10 வகை) வஜ்ரக, நந்தன, சங்கு, மேகலா, வாமன, லய, மகா பத்ம, ஹம்ஸ, வ்யோம, சந்திரோதய.

இந்த 64 வகைக் கோயில்களைப் பற்றிய வர்ணனை, இவை உயரக் குறைவான கட்டிடங்கள் - தூண்களைக் கொண்ட பகுதிகள் பிரதானமாக இருக்கும் என்பதைப் புலப்படுத்துகிறது.

இவ் வகையில் முதன்மையான ருசகம் சதுர வடிவம் மூன்று கூரைகளும் கொண்டது; இதுதான் அடிப்படையான வகை. இவை ஒன்று, இரண்டு அல்லது மூன்று கூரைகளைக் கொண்ட மண்டபக் கோயில்கள்; மேலே கோபுரம் எதுவும் இல்லாதவை. ஐஹொளேயிலுள்ள லாட்கான் கோயில் (கி. பி. 6ஆம் நூற்றாண்டு) பைராட்டி

லுள்ள வட்ட வடிவான கோயில் (கி.மு. 3-ஆம் நூற்றூண்டு) இவ்வகைக் கோயில்களுக்கு எடுத்துக் காட்டாகும். இச் சந்தர்ப்பத்தில் பார்ஹூத், அமராவதிச் சிற்பங்களில் காணப்படும் பல வகையான மண்டபக் கோயில்களையும் கவனிக்க வேண்டும்.

தென்னிந்தியாவின் கட்டிடக் கலை நூல்களான வைகாநஸாகமம் (கி. பி. 8ஆம் நூற்றூண்டு) ஈசான சிவ குருதேவபத்ததி (கி. பி. 11ஆம் நூற்றூண்டு) மயமதம் போன்ற நூல்களில் வேறு விதமான ஆலய வகைகளும் கூறப்பட்டுள்ளன. இந் நூல்களின்படி ஆலயங்களை வகைப் படுத்துவதற்குக் கோயிலின் அளவைக் கருத்தில் கொள்ள வேண்டும். பல்வேறு வகையான கோயில்கள் அதன் அளவைக் கொண்டு பாகுபடுத்தப் பட்டுள்ளன. எளிமை யும், சிக்கலான அமைப்பும் கூட கவனத்தில் எடுத்துக் கொள்ளப் படுகிறது. ஜாதி விமானம், ஜாதீதர விமானம் என்றிவ்விதமாகக் கோயில்கள் வகைப் படுத்தப் பட்டுள்ளன. ஜாதி விமானங்களில் முதன்மையானவை சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகியவர்களுக்கான 20 முக்கிய கோயில்களாகும். இதர தேவதைகளுக்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ள 36 ஜாதீதர பிராசாதங்கள் உள்ளன. மற்றொரு வகை 44 கோயில்களைக் கொண்டது. மக்களில் பல்வேறு வகுப்பினர் வழிபட ஏற்பட்டவை.

ஆலய வகைகள் நான்கினுள் முதலாவது ஜாதி விமானம். சந்த, விகல்ப, ஆபாச ஆகியவை மற்ற மூன்று வகைகளாகும். சாந்திக, பௌஷ்டிக, ஜயத, சர்வகாமிக, அற்புத, அபிசார என்று ஆறு வகையாகக் கூறும் மற்றொரு பிரிவும் உண்டு. கோயில்களின் உபாயத்தை அடிப்படை யாகக் கொண்டு வகைப்படுத்தப் பட்ட பிரிவுகள் இவை. சுற்றிலும் பல சிறிய கோயில்களைக் கொண்டு அமைந்தவை தாம் ஜாதி விமானங்கள். தென்னிந்தியக் கோயில்களின்

கோபுரங்கள், கோயில்களை வகைப்படுத்துவதில் முக்கியப் பங்கு பெறுகின்றன. ஆலயத்தின் இந்தப் பகுதியைப் பற்றித் தென்னிந்திய கட்டிடக் கலை நூல்கள், விரிவாக வர்ணிக்கின்றன. இந் நூல்களின்படி எட்டு விதமான சிகரங்கள் உள்ளன. ஒவ்வொன்றினுடைய **சிரஸ் சந்தம்** அல்லது அமைப்பை அடிப்படையாக கொண்டது இப்பிரிவு. **சதுரஸ்ர** (சதுரம்) ஆயதாஸ்ர (நீள் சதுரம்) விருத்த (வட்டம்) வருத்தாயத (முட்டை வடிவம்) சாலாகார (சால உருவம்) ஷடஸ்ர (ஆறு கோணம்) ஆகியவை யாகும். உயரத்திற்கேற்ப மேலும் ஏழு வெவ்வேறு பிரிவுகளாக இவை வகைப்படுத்தப் பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

மேலே சொன்ன பல்வேறு வகைக் கோயில்களும் ஒரு குறிப்பிட்ட அளவுகளைக் கொண்டவை, இதிலிருந்து பல உப பிரிவுகள் ஏற்பட்டுள்ளன. அத்தகைய கோயில்களைக் கட்டுவது குறித்து விரிவான விவரங்கள் இந் நூல்களில் தரப்படுகின்றன.

8

கோயில் கட்டும் கலையில் பிரதான பாணிகள்

'பிருகத் சம்ஹிதை, விஸ்வகர்ம பிரகாஸிகா, அக்னி புராணம், மத்ஸய புராணம் போன்ற நூல்கள் எந்த ஒரு பிரதான பாணியைப் பற்றியும் விளக்க வில்லை. அவர்கள் காலத்தில் இருந்த இருபது முக்கியக் கோயில்களை இவை வர்ணிக்கின்றன. சமராங்கண சூத்ரதாரம், ஈசான சிவகுரு தேவபத்ததி ஆகிய நூல்கள் கோயில்களை மூன்று பிரதான பாணிகளாகப் பிரிக்கின்றன. 1. நாகரம் 2. திராவிடம் 3. வேஸரம் அல்லது வாராடம். பிற்காலச் சாளுக்கியர் கல்வெட்டு ஒன்று நாகரம், காலிங்கம், திராவிடம், வேஸரம் என்று நான்கு பாணிகளைக் குறிப்பிடுகிறது. காமிகாகமத்தில் நாகரம், திராவிடம், வேஸரம் ஆகிய மூன்றுக்கும் விளக்கம் தரப்பட்டுள்ளன. இமாலயத்துக்கும், விந்திய மலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவை நாகர பாணிக் கோயில்கள். விந்திய மலைக்கும், கிருஷ்ணா நதிக்கும் இடையிலுள்ள பிரதேசத்தைச் சேர்ந்தவை வேஸரக் கோயில்கள். கிருஷ்ணா நதிக்கும், கன்னியாகுமரிக்கும் இடையிலுள்ள பிரதேசத்தைச் சேர்ந்தவை திராவிடக் கோயில்கள். அதே ஆகம நூல் கோயில்களை வேறு மூன்று பிரிவுகளாகவும் கூறுகிறது. 1. சார்வதேசிக (எல்லா இடங்களுக்கும் பொருந்தும்) 2. காலிங்க (ஒரிஸ்ஸா) 3. வாராட.

ஆரம்ப கால நூல்களில் மேற்சொன்ன 20 கோயில் களும் இன்னின்ன பாணியைச் சேர்ந்தவை என்று திட்ட

மாகக் கூறப்படவில்லை. சமராங்கண சூத்ரதாரம் என்ற நூல், நாகர பிராசாதங்கள் என்ற தலைப்பில் இக்கோயில்களைக் குறிப்பிடுகிறது. எனவே, இந்த நூல் ஏற்பட்ட காலத்தில் (11 வது நூற்றுண்டு) கட்டிடக் கலையில் அந்தந்தப் பிரதேசத்துக்குரிய பல்வேறு பாணிகள் உருவாகி நிலை பெற்று விட்டன என்பது தெளிவு. இவை ஒவ்வொன்றும் கட்டிடக் கலையில் ஒரு குறிப்பிட்ட பாணியில் தேர்ச்சி பெற்று விளங்கின. நாகர பாணி என்று குறிப்பிடுவது, மத்திய தேசத்தில் உருவானது என்று தோன்றுகிறது. அங்கு ஆண்ட அரசர்களின் ஆதரவில் இது வளர்ந்து பல கோயில்கள் உருப் பெற்றன. கலிங்கத்திலும், மேற்கு குஜாரத்திலும் அப் பிரதேசங்களுக்குரிய சில மாறுதல்களுடன் இது இடம் பெற்றது. திராவிடப் பிராசாதம் என்பவை தென்னிந்தியாவுக்குள் அடங்கியவை. வாராட பாணி பேராரைச் சேர்ந்ததாக இருக்கக் கூடும். கலிங்க பாணி என்ற பெயரே அது கலிங்கத்துக்குரியது என்பதை தெளிவு படுத்துகிறது. இந்த இரு பிரதேச பாணிகளும் நாகரத்துடன் தொடர்பு உள்ளவை. வேஸர பாணிக் கோயில்கள் குறிப்பிட்ட எந்த ஒரு பிரதேசக் கோயில்களையும் சேர்ந்ததல்ல. விந்திய மலைக்கும் கிருஷ்ண நதிக்கும் இடையிலுள்ள பகுதியில் இவ் வகைக் கோயில்கள் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது. வேஸர என்ற சொல் கழுதைக்கும் குதிரைக்கும் பிறந்த விலங்கைக் குறிக்கும். அது கலப்படம் என்பதை இது உணர்த்துகிறது. எனவே, இப் பாணிக் கோயில்கள் நாகர, திராவிட பாணி கட்டிடக் கலையின் அம்சங்கள் கலந்து காணப்படும். கன்னட நாட்டில் பிற்காலச் சாளுக்கியர்களும், மைசூரில் ஹோய்ஸலர்களும் கட்டிய கோயில்கள் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

இவை ஒவ்வொன்றும் ஒரு பிரதேசத்துக்கு உரியன வாக கருதப்பட்ட போதிலும் நாடெங்கிலும் பரவி யுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். நாகர பாணியிலமைந்த கோயில்களைத் தெற்கே கர்நூல் வரைக் காண முடிகிறது. திராவிட பாணி கோயில்களை வடக்கே எல்லோரா வரை பார்க்க முடிகிறது. உண்மையில் இந்த இரு விரிவான பாணியின் கீழ் இந்தியா முழுவதும் உள்ள கோயில்களைப் பாகுபடுத்திக் கூறிவிடலாம். நாகர பாணிக் கோயில்கள் வளைவான மேற் பகுதிகளைக் கொண்டதாக இருக்கும்; திராவிட பாணிக் கோயில்களின் மேற் பகுதிகள் 'பிரமிட்' போலிருக்கும்.

சிவகுருதேவபத்ததியில், திராவிட பாணிக் கோயில் களை ஒரு ரசமான முறையில் வகைப் படுத்திக் கூறப் பட்டுள்ளது. நாகரம், திராவிடம், வேஸரம் ஆகிய மூன்று வெவ்வேறான பாணிகள் ஒவ்வொன்றும் ஒரு வகை திராவிடக் கோயிலில் அமைந்திருப்பதாக அது கூறு கிறது. கோயில்களின் சிகரத்தினுடைய உருவத்தைக் கொண்டே பாகுபடுத்த முடியும். சிகரம், அல்ப அல்லது க்ஷுத்ர விமான என்றும் அழைக்கப்படுகிறது. இதன் உருவம் சதுரமாக அல்லது நீள் சதுரமாக இருந்தால், அது நாகர பாணி எனப்படுகிறது. அது கோணமாகவோ, எண் கோணமாகவோ இருந்தால் அது திராவிட பாணி எனப்படுகிறது. வட்டமாகவோ, முட்டை வடிவிலோ இருந்தால் அது வேஸர பாணி. எனவே, இந்த பாடு பாட்டின்படி தென்னந்தியாவிலுள்ள ஜாதி விமானங்களை நாகர, திராவிட, வேஸர பாணி என்று பிரித்துக் காண முடியும். இதன்படி, திருச்சி மாவட்டம் கொடும் பாளூரிலுள்ள மூவர் கோயிலும், சீனிவாசநல்லூரி லுள்ள கொரங்கநாதர் கோயிலும் சதுர சிகரங்களைக் கொண்டிருப்பதால் நாகர பாணியாகும். மகாபலிபுரம்

கடற்கரைக் கோயில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் ஆகியவை எண் கோண சிகரங்களைக் கொண்டவை. இவை திராவிட பாணிக் கோயில்கள். கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள வட்ட வடிவச் சிகரத்தைக் கொண்ட பிரகதீஸ்வரர் கோயில் வேஸர பாணி.

9

ஆலயங்களின் கட்டிட நில வரைவு

எந்த ஒரு கட்டிடத்துக்கும் முக்கியமான அம்சங்களில் ஒன்று அதன் கட்டிட நில வரைவு ஆகும். ஆலயங்கள் விஷயத்தில் கட்டிட நில வரைவு பிரதானமானது. பழங்காலக் கோயில்களில் இன்று நிலைத்திருப்பவை இரு விதமான நில வரைவு முறையில் கட்டப்பட்டுள்ளன என்பதைக் காணமுடிகிறது. ஒன்று சதுரம். மற்றொன்று வட்டம். வாஸ்து புருஷ மண்டலத்தின் வரைகோடுகளைப் போல் அமைப்பிலும் சதுரத்துக்குள் வட்டத்தை அடக்கலாம். வட்டமான அமைப்பின் மீது கட்டப்பட்ட கோயில்களும் உள்ளன. கேரளத்திலுள்ள வைக்கம், திருக்கோடிதானம், பெரும்பலுதார் கோயில்களை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இந்த நில வரைவு முறையில் கட்டப்பட்ட கோயில்கள் புராதன காலத்திலிருந்தே உள்ளன. வட இந்தியாவில் இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள கோயில்களில் மிகப் பழமையானது ஜெய்பூரைச் சேர்ந்த விராட் உன்னுமிடத்திலுள்ள வட்ட வடிவான கோயிலாகும். இக்கோயிலில் 26 எண்கோண மரத்தூண்களைக் கொண்ட உள்வட்டம் ஒன்று இருந்தது; இதைச் சுற்றி வட்டமாகச் செங்கற் சுவர் ஒன்று கட்டப்பட்டிருந்தது. இது கி. மு. 3—2 வது நூற்றாண்டைச் சேர்ந்தது. வட்ட வடிவப் பிராசாதம், கர்ப்பக்கிருகம், சதுர பிராசாதம், ஆகியவற்றுக்கான மூல வேரை வேதச் சடங்குகளிலும், பழங்குடி மக்களின் வழக்கிலும்

காண முடிகிறது. பௌத்த ஸ்தாபனங்களுடைய நில வரைவும் சில பழங்கால ஜைன ஆலயங்களின் நில வரைவும் வட்ட வடிவமாக உள்ளன. ஆயினும் மிகப் பெரும்பாலான இந்தியக் கோயில்கள் சதுர நில வரைவு முறையில் கட்டப்பட்டவை.

நீண்ட சதுரம் அல்லது முட்டை வடிவ அமைப்பிலும் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இவை முறையே சதுரம், வட்டம் ஆகியவற்றின் மாறுபட்ட உருவங்கள் தான். நீண்ட சதுர வடிவில் கட்டப்படும் கோயில்கள் படுத்த நிலையில் இருக்கும் சிலைகளை அல்லது பல சிலைகளை சேர்ந்தாற்போல் வைப்பதற்கும், தேவியர்களுக்கும் கட்டப்படுகின்றன. மகாபலிபுரம் கடற்கரைக் கோயிலிலுள்ள அரங்கநாதர் சிலை முன்னதற்கு உதாரணமாகும். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் பல சிலைகள் சேர்ந்தாற்போலிருப்பது இரண்டாவது வகைக்கு எடுத்துக் காட்டு. இந்தியா முழுவதும் குறிப்பாகத் தென்னிந்தியாவில் உள்ள எல்லா தேவி ஆலயங்களும் மூன்றாவது வகைக்கு சான்றாகும். முட்டைவடிவில் அமைந்த கோயில்கள் மிகவும் அபூர்வம். படுத்த நிலையில் இருக்கும் சிலைகள் வைப்பதற்கு இவ்வடிவில் கட்டுவார்கள். ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயில் இதற்கு உதாரணமாகும்.

எண்கோண, பதினறு கோண அமைப்பில் கட்டப்பட்ட கோயில்களும் உண்டு. இவை சதுர அமைப்பிலிருந்து உருவானவையேயாகும். பலகோண அமைப்பில் கட்டப்பட்ட கோயில்கள் தக்காணத்திலும், பேலூர், ஹளேபீடிலும் உள்ளன. கி.பி. 634 இல் கட்டப்பட்ட ஆராவிலுள்ள முந்தேஸ்வரி கோயில், எட்டாவது நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீநகர் சங்கராசாரியர் கோயில் ஆகியவை எண்கோண அமைப்பில் உள்ளவை. அறுகோண வடிவக்

கோயில்களைப் பற்றியும் கட்டிடக்கலை நூல்கள் கூறு கின்றன. கோதாவரியருகே டோகா என்ற இடத்திலுள்ள ஒரு சிறு கோயிலைத் தவிர இவ்வகையைச் சேர்ந்த வேறு கோயில் ஏதுவும் இன்று நிலைத்திருக்கவில்லை. அதிக மான கோணங்களைக் கொண்ட நில வரைவின் மீது கட்டப்பட்ட கோயிலுக்கு சிருங்கேரி வித்யாசங்கரர் ஆல யம் அருமையான எடுத்துக் காட்டு.

ஆரம்பகாலக் கோயில்கள் கட்ட கையாளப்பட்ட மற்றொன்று, பின் வளைவான நில வரைவாகும். **ஹஸ்தி பிருஷ்ட**, அல்லது **கஜ பிருஷ்ட** என்ற பெயர் இதற்குத் தரப்பட்டுள்ளது. இதற்கு யானையின் பின்புறம் என்று அர்த்தம். அரைவட்ட வடிவமான பின் பகுதியையும், நீள ச்துர வடிவிலமைந்த முன் பகுதியையும் கொண்டது இந்த நில வரைவாகும் என்று கூறலாம். இரண்டு பிர தான நில வரைவுகளான சதுரம், வட்டம் ஆகிய இரண் டையும் இணைக்கச் செய்யப்பட்ட முயற்சி இது. யாக குண்டங்களில் மூன்ருவதான தக்ஷிணக்னியின் அரைவட்ட வடிவத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் இது இருக்கக்கூடும். பௌத்தர்கள் இந்த நில வரைவினை பாறைகளைக் குடைந்து கட்டிய சைத்திய முற்றங்களில் கையாண்டனர். பின்புறம் வட்டமாக அமைந்த பகுதியில் அவர்கள் வழிபடும் பொருளான ஸ்தூபம் செதுக்கப் பட்டது. கற்களைக் கொண்டு அவர்கள் ஆலயங்கள் கட்டிய போதும் இதே அமைப்பில் தான் கட்டினர். இவ் வகையைச் சேர்ந்த பாறையில் செதுக்கப்பட்ட சைத்ய முற்றங்களுக்கு உதாரணமாக பாஜா, நாஸிக், அஜந்தா, எல்லோரா சைத்திய முற்றங்களைக் கூறலாம். கற் களைக் கொண்டு இவ்வகையில் கட்டப்பட்ட சைத்திய முற்றங்கள் நாகார்ஜுனகொண்டாவில் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இவை கி. பி. 3 — 1 நூற்றுண்டைச்

சேர்ந்தவை. தேர், சேசர்லா, ஆகிய இடங்களிலுள்ள கோயில்களும் இந்த நில வரைவில் உள்ளவை தாம். இவை முதலில் பௌத்த ஆலயங்களாக இருந்தன வென்றும், பின்னர் இந்துக் கோயில்களாயின என்றும் கூறப்படு கிறது. இவ்வகைக்கு பிரபலமான வேறு சில எடுத்துக் காட்டுக்கள்—ஐஹொளேயிலுள்ள துர்க்கை ஆலயம்(கி.பி. 6-ஆம் நூற்றுண்டு) மகாபலிபுரத்திலுள்ள ஒரே கல்லிலான சகாதேவ இரதம் (7-ஆம் நூற்றுண்டு) ஆகியவை. இதைத் தொடர்ந்து குறிப்பாக 8 முதல் 11 வது நூற்றுண் டுக்கு இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டிலும், கேரளத் திலும் பல கோயில்கள் கட்டுவதற்கு இந்த நில வரைவு கையாளப்பட்டது.

10

உயரத்தின் முக்கியத்துவம்


யாக குண்டங்களின் உருவத்தை அடிப்படையாகக் கொண்ட நில வரைவின் மீதே இந்தியக் கோயில்கள் கட்டப்பட்டன என்பதைப் பார்த்தோம். இது போலவே கோயிலின் இதர பல்வேறு பகுதிகளும் யாக சாலையின் நில வரைவினைப் பின்பற்றியே அமைந்துள்ளன. உதாரணமாகக் கோயிலில் அடித்தளம் அதிஷ்டானம் எனப்படுகிறது; இதன் கீழே உபபீடம் இருந்தாலும் இருக்கும்; இல்லாமலும் இருக்கலாம். தென்னிந்தியக் கட்டிடக்கலை நூல்களில் இப்பகுதி மசூரகம், ஆத்யங்கம், குட்டிமம், வஸ்த்வாதாரம் என்றெல்லாம் கூறப்படுகிறது. சமராங்கணசூத்ரதாரம் இப்பகுதியைப் பீடம் என்கிறது. அதிஷ்டானத்தினுடைய கீழ்பகுதி வேதி அல்லது வேதிகை எனப்படுவதாகும். இந்த அதிஷ்டானமும், வேதியும் வைதீக யாகச் சடங்குகளில் காணப்படும் சிதி ஆகியவற்றை நினைவூட்டுகின்றன. சிதி என்பது அடுக்கியமைக்கப்பட்ட யாக பீடம். வங்காளத்தில் பஹார்பூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கோயிலிலும் (8ஆம் நூற்றுண்டு) உத்தரப் பிரதேசம் ராம்பூர் அருகிலுள்ள அஹிச்சத்திரா ஆலயத்திலும் இம்முறை நன்கு பின் பற்றப் பட்டிருப்பதைக் காண்கிறோம். இந்த பெரிய. பரவலான செங்கற் கட்டிடத்தில் மூன்றுக்கு மேற்பட்ட அடுக்குகள் உள்ளன இவை 'பிரமிட்' உருவில் அமைந்திருக்கின்றன. சில கோயில்களில் அதிஷ்டானத்தின் கீழேயுள்ள உபபீடம் கணிசமான உயரம் கொண்டதாக இருக்கிறது. வேறு

சில கோயில்களில் அடித்தளத்துக்குக் கீழே ஜகதி, அல்லது பீடிகா அல்லது கடி எனப்படும் அகன்ற மேடை உள்ளது. ஒரு மேடையின் மீதே ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடங்களும் இருப்பதுண்டு. இதற்கு மைசூர் சோம நாதபூரிலுள்ள கோயில் (13ஆம் நூற்றூண்டு) எடுத்துக் காட்டாகும். ஒரிஸ்ஸா கோயில்களில் அதிஷ்டானமே கிடையாது என்பதும் கவனிக்க வேண்டிய விஷயமாகும். சில பெரிய கோயில்களில் பல வரிமானங்கள் உள்ளன. திராவிட பாணியிலும், நாகரபாணியிலும் இவை வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுவதுடன், வேலைப்பாடுகளும் மாருக உள்ளன. திராவிடபாணியில் கட்டப்பட்ட கோயில் களில் இவை கீழிருந்து மேலாக ஜகதி, குமுதம், பட்டி, பத்மம், வியாளவரி எனப்படுகின்றன. நாகரபாணி கோயில்களில் கீர்த்திமுகம், யானை, சிங்கம், குதிரை, மனிதன் ஆகிய உருவங்கள் முறையே ஒன்றின்மேல் ஒன்ருக உள்ள வரிமானங்களில் செதுக்கப் பட்டிருக்கும். இதற்கு உதாரணம், முன்னுள் கோடா சமஸ்தானத்து ராம்காரிலுள்ள கோயில். சில சமயம் மேற் சொன்ன உருவங்களின் தலை மட்டுமே பொறிக்கப் பட்டிருக்கும். முழு உருவமும் பொறிக்கப் பட்டிருந்தால் அவை இயங்கும் நிலையில் தோன்றுவது போலிருக்கும். வட குஜராத்திலுள்ள கோயிலில் கீர்த்திமுக உருவம் பல இடங்களில் பொறிக்கப் பட்டுள்ளது. கஜதரம், அஸ்வ தரம், நாதர உருவங்கள் சில இடங்களில் உள்ளன தோடாவிலுள்ள ஒரு கோயிலில் எல்லா வரிமானங் களுக்கும் மேலாக ஹம்ஸங்களுடைய உருவங்கள் பொறிக்கப்பட்ட வரிமானம் ஒன்றுள்ளது. இம்முறை ஹோய்ஸலர்கள் கட்டிய கோயில்களிலும் பின்பற்றப் பட்டிருக்கிறது. அவற்றில் வரிசையாக ஹம்ஸங்களும், மகரங்களும் இடம் பெற்றுள்ளன. கர்ப்பக்கிருகத்தின்




படம் 9 கொனாரக் சூரியன் கோயில்

அத்தி 27 பார்க்க




படம் 10 புவனேஸ்வரம் லிங்கராஜர் கோயில்

அத்தி 27 பார்க்க




படம் 11 புவனேஸ்வரம் முத்தேஸ்வரர் கோயில்

அத்தி 27 பார்க்க




படம் 14 ஆஸியான் சூரியின் கோயில்

அத்தி 29 பார்க்க



படம் 15 மாதேரா சூரியன் கோயில்

அத்தி 29 பார்க்க



படம் 16

கோப் ஆலயம்

அத்தி 29 பார்க்க

சுவர்களையும். மேலேயுள்ள பாகத்தையும் கொண்ட கோயில் முழுவதையும் தூரத்திலிருந்து பார்க்கும் போது எரியும் தீ ஜுவாலையின் உருவில் காட்சியளிக்கும் இது அக்னியுடன் கூடிய யாக குண்டத்தை நினைவு படுத்தும்.

கோயில்களும் இருந்தன என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். கம்ஸாவிலுள்ள மகா தேவர் ஆலயம் மூன்று வாயில்களைக் கொண்டது.

கோயிலின் ஒரு பகுதியை உள்ளடக்கி யிருக்கும் இந்த கர்ப்பக்கிருகம் கட்டிடக் கலை நூல்களில் ஜங்கா எனப்படுகிறது. இதன் மேலுள்ள, அடுத்த அடுக்குக்கு அதிஸ்டானமாக உள்ள பகுதி **பிரஸ்தரம்** எனப்படு கிறது. இதன் மீது திராவிடக் கோயிலின் அடுக்குகளும் (பூமிகள்) நாகரக் கோயிலின் சிகரமும் எழுப்பப் படுகின்றன. திராவிடக் கோயில்களிலும் சிகரம் என் றழைக்கப்படும் ஒரு பகுதி உண்டு என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். உச்சியில் கும்பம் போல் அமைந்த பகுதி இது. **அல்ப விமானம்** என்றும் இதற்குப் பெயர். நாகரக் கோயிலின் உச்சிப் பகுதிக்கு **ஆமலகம்** அல்லது **ஆமல சாரகம்** என்று பெயர். இதற்குக் கீழ் க்ரீவ, கள, கண்டம் என்ற பகுதிகள் இரு வகைக் கோயில்களிலும் உள்ளன. ஆனால் நாகர பாணியில் இந்த **கண்டம், ஸ்கந்த** (தோள்) எனப்படும் பகுதியின் மீது வைக்கப்படுகிறது. **அல்ப விமானம்** அல்லது **ஆமலகம்** ஒரு தாமரை போன்ற அமைப்பின் மீது வைக்கப்பட்டிருக்கலாம். இதன் மீது ஸ்தூபி அல்லது கலசம் இருக்கும். மொட்டுப் போல் உருவமைந்த இது கட்டிட வேலை முடிந்து விட்டதைக் குறிப்பதாகும். இப்படிப் பல்வேறு பகுதிகளையும் கொண்ட கோயில் நிர்மாணம் பற்றி கட்டிடக்கலை நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

12

கோபுரம் அமைக்கும் முயற்சி

கி. பி. ஆறும் நூற்றுண்டிலிருந்து வந்துள்ள கோயில்களைப் பார்த்தால் இவற்றின் மேல் தள அமைப்பு இரண்டு விதமாக இருப்பதைக் காணலாம். ஒன்று வளைவு கோட்டு வடிவமானது, மற்றென்று, 'பிரமிட்' உருவில் அமைந்தது. காலப் போக்கில் பல் வேறு பிரதேசங்களிலும் இவை அபிவிருத்தி யடைந்துள்ள விதத்தை இப்போது காண்போம். இந்த இரு வகையும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்படுவதற்கு முன்பு ஆரம்ப கால கட்டிடக் கலை நிபுணர்கள் பல் சோதனைகளைச் செய்து பார்த்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. குப்தர்களுக்கு முற்பட்ட காலத்தில் இத்துறையில் செய்து பார்க்கப்பட்ட சோதனைகளுக்கு ஆதாரத்தை மேல் தளங்கள் கொண்ட ஆலயங்களின் சிற்பங்களில் தான் காண முடிகிறது. ஔதும்பரர்களுடைய செப்பு நாணயத்தின் பின் புறம் இரண்டு அடுக்குகளைக் கொண்ட ஒரு புராதனக் கோயிலின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. இதன் கீழ்ப் பகுதி சாய்வான கூரையைக் கொண்டதாக இருக்கின்றது; அதன் மீது ஒரு சிறிய கட்டிடம் உள்ளது; இதுவும் சாய்வான கூரை அமைந்தது தான். இத்தகைய சிவன் கோயில் ஒன்று பஞ்சாபில் உள்ளது. இது கி. மு. முதல் நூற்றுண்டை சேர்ந்தது. இன்று வங்காளத்திலும், ஒரிஸ்ஸாவிலும் இத்தகைய கோயில்கள் உள்ளன. இவற்றின் கூரைகள் சாய்வாகவும், விளிம்பில் வளைவாகவும் இருக்கும். மற்றொரு புராதனக்

கோயில் வகையை பார்ஹூத்திலும் (கி, மு. 100) மதுரா விலும் (கி. பி. 200) காண்கிறோம்.

அடுத்து, கோயில்களை உயரமாகக் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்றும் நிலைத்திருக்கும் கோயில் களில் ஐஹொளேயிலுள்ள லாட்கான் கோயில், நச்னு குடாரராவிலுள்ள பார்வதி கோயில் ஆகியவற்றில் கர்ப்பக்கி ருகத்தின் மீது தட்டையான கூரையமைந்த சிறிய கோயில் ஒன்றும் இருப்பதைக் காண்கிறோம். திகாவாரி லுள்ள கற்றளியும், பித்ரகாமிலுள்ள செங்கற் கோயிலும் கி. பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகும். இவை வளைவு கோட்டு வடிவான மேல் பாகத்தைக் கொண்டவை. கத்தியவார் கோப் என்ற இடத்திலுள்ள ஆலயம் (கி. பி. 6-ஆம் நூற்றாண்டு) பிரமிட் உருவில் அமைந்த மேல் பாகத்தைக் கொண்டது. இதே பகுதியில் விஸவதாவி லுள்ள கோயிலும், இம் முறையிலேயே உள்ளது. புத்த கயையிலுள்ள மகாபோதி ஆலயமும் பிரமிட் உருவிலுள்ள மேல் பகுதியைக் கொண்டது. இக்கோயில்களெல்லாம் கட்டப்படும் காலம் வரை கோயிலின் மேல் பாகம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நிர்ணயம் ஏற்படவில்லை என்பதையே இவை காட்டுகின்றன. செங்குத்தான சுவர்கள் கொண்ட கர்ப்பக்கிருகத்தின் மீது பிரமிட் உருவில் மேல் கட்டு அமைக்கும் முறை தென்னிந்தியாவில் ஏழாம் நூற்றாண்டிலேயே நிலைபெற்று விட்டது.

கேரளம், காஷ்மீரம், நேபாளம் ஆகிய இடங்களி லுள்ள கோயில்களின் கூரைகள் மற்றொரு வகையானவை. சதுர் வடிவக் கோயில்கள் மீது ஒரு விதமாகவும், வட்ட வடிவக் கோயில்கள் மீது ஒரு விதமாகவும் இது இருக்கும். இவை மேற் கொண்டு வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது.

13

கோயில் மேல் கட்டின் வகைகள்

உயர்த்தப்பட்ட அடித்தளத்தின் மீது கர்ப்பக்கிருகம் கட்டப்படுகிறது. இதன் சுவற்றின் மீது அக்கோயிலின் அமைப்புப்படி பிரமிட் உருவம், வளைந்த கோட்டு வடிவம், பீப்பாய் வடிவம், வண்டிக் கூடு உருவில் மேல் தளம் எழுப்பப்படுகிறது. இவற்றுள் முதலில் சொன்ன இரு உருவங்களும் கி. பி. 5–ஆம் நூற்றுண்டிலிருந்து பிரபல மாக இருந்து வருகிறது. இந்த இரு வகைகளைப் பற்றிய விவரத்தை காணு முன்பு மற்ற இரு வகைக்கு எடுத்துக் காட்டுகளைப் பார்ப்போம். பீப்பாய் வடிவிலமைந்த கோயிலுக்கு உதாரணம் சேசர்லாவிலுள்ள கபோதீஸ்வரர் ஆலயம் (கி. பி. 5–6–ஆம் நூற்றுண்டு) ஆகும்: தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் இது போல் பலவற்றைக் காண லாம். செங்கற்பட்டு மாவட்ட ஓரகடத்திலுள்ள வடமல் லீஸ்வரர் கோயில் (11–ஆம் நூற்றுண்டு) கேரளா திருர் அருகிலுள்ள திரிப்ரங்கோடு சிவன் கோயில் ஆகியவை இவ்வகையைச் சேர்ந்தவை. வளைந்த கூரையமைந்த கோயிலுக்கு எடுத்துக் காட்டு மகாபலிபுரத்திலுள்ள ஒரே கல்லிலான பீமரதம் (7–ஆம் நூற்றுண்டு) அல்மோரா, யாகேஸ்வரத்திலுள்ள நவதேவி ஆலயம் (8–9–ஆம் நூற் றுண்டு) புவனேஸ்வரம் கபாலினி கோயில் (9–ஆம் நூற் றுண்டு) குவாலியர் தேலிகா மந்திர் (11–ஆம் நூற்றுண்டு) ஆகியவை. மேலும் வட்ட வடிவக் கோயில்களுக்கு உருண்டையான கும்பங்கள் இருந்தன.

இப்போது பிரதான வகை இரண்டுக்கு வருவோம். கட்டிடக்கலை நூல்கள் இவை இரண்டுக்கும் திட்ட வட்ட மான பெயர் கொடுக்கவில்லை. வட இந்தியக் கோயில் களைப் பற்றிக் கூறும் நூல்களில் வளைவான விளிம்புகள் கொண்ட மேல் தள அமைப்பு முழுவதும் சிகரம் என்ற பெயரால் குறிப்பிடப்படுகிறது. தென்னிந்திய நூல்கள் மேல் கட்டின் அடுக்குகளின் எண்ணிக்கைக்கேற்ப ஏகதளம், தவிதளம் என்றிவ்விதமாகத் தனித் தனியே குறிப்பிடுகின்றன. இந்த அடுக்குகளின் மீதுள்ள அல்ப விமானத்தை சிகரம் என்று குறிப்பிடுகின்றன. சிகரத் துக்குக் கட்டிடக் கலை ரீதியான முக்கியத்துவம் எதுவு மில்லை.

14
பிரமிட் உருவ மேல்தளம்

இவ்வகை மேல்தளங்களைக் கொண்ட கோயில்கள் இந்தியாவின் ஐந்தில் ஒரு பகுதியான தென்னிந்தியாவில் மட்டுமே உள்ளன. இதற்கு சில உப வகைகளும் உண்டு. நாடெங்கிலுமுள்ள நந்தி மண்டபங்கள் இவ்வகைகளுள் ஒன்று. வரவர அளவில் சிறியதான கல் அடுக்குகளை ஒன்றின் மீதொன்ருக வைத்து பிரமிட் உருவில் இது அமைக்கப்பட்டிருக்கும். புவனேஸ்வரத்திலுள்ள வைதாலதேவி, கோயில் மண்டபம், கஜுராஹோ விஸ்வநாதர் ஆலயத்திலுள்ள நந்தி மண்டபம், வங்காளம் பாங்குராவிலுள்ள ஏகதேஸ்வரர் கோயில் நந்தி மண்டபம், காங்க்ராவிலுள்ள பைஜ்நாத் ஆலய மண்டபம் ஆகியவை இதற்கு உதாரணங்களாகும்

இரண்டாவது வகை பிரமிட் வடிவ மேல் தளத்தில் வரவர அளவில் சிறியதான கல் அடுக்குகளின் விளிம்புகள் உருட்டி விடப்பட்டிருக்கும். இவற்றின் மீது ஆமலகம் வைக்கப்பட்டிருக்கும். இதனை பட்டதக்கல்லிலுள்ள பழைய ஜைனர் கோயிலில் காணலாம். மேல் தளத்தின் மேடைகளின் எண்ணிக்கை 16 வரை இருக்கிறது. ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு அடுக்கிலும் ஒரு மேடைதான் இருந்தது. நாளடைவில் 6 மேடைகள் கொண்டது ஓர் அடுக்கு என்ருகி விட்டது. எனவே 16 பூமிகளைக் கொண்ட ஒரு மேல்தளத்தில் 96 மேடைகள் இருக்கும்.

மூன்ருவது வகை வரவர அளவில் சிறியதான அடுக்குகளைக் கொண்டதாகவும், அதன் விளிம்புகள் பல வகை

கூறையின் உருவங்கள் கொண்டனவாகவும் இருக்கும். கத்தியவாத் விஸ்வதாவிலுள்ள கோயில், பிலேஸ்வரர் ஆலயங்கள் ஒரிஸ்ஸா கோயில்களின் மண்டபங்கள், மயூர் பஞ்சிலுள்ள சில கோயில்கள், மேற்குக் கடற்கரையிலுள்ள கதம்பாணி கோயில்கள், ஐஹொளேயிலுள்ள களக நாதர் கோயில்ஆகியவை இவ்வகைக்கு உதாரணமாகும்.

நாலாவது வகை வரவர அளவில் சிறியதான அடுக்கு களை ஒன்றன் மேலொன்ருகக் கட்டி உச்சியில் ஆமலகம் கொண்டதாக இருக்கும். இவ்வகையில் கட்டப்பட்ட கோயில்களில் இன்று நிலைத்திருப்பவை வெகு சிலதான். புத்த கயையிலுள்ள மகாபோதி கோயில் இதற்கு உதாரணம்.

நான்காவது வகையின் ஒரு உப பிரிவுக்கு எடுத்துக் காட்டு திராவிட பாணி அல்ப விமானம் அல்லது சிகரத் தைக் கொண்ட கோயில்களாகும். இவ்வகையில் கட்டப் பட்ட ஆரம்ப காலக் கோயில் சாஞ்சி ஸ்தூபத்தில் பொறிக்கப்பட்டுள்ள நாகர் கோயிலின் உருவமாகும். (இது கி. மு. முதல் நூற்ருண்டை சேர்ந்தது) மகாபலிபுரத்தி லுள்ள ஒரே கல்லிலான திரௌபதி இரதமும், இங்குள்ள கங்காவதார சிற்பத்திலுள்ள சிறிய கோயிலும், பிற்காலப் பல்லவர்களும், சோழர்களும் கட்டிய ஓரடுக்கு கோயில் களும இவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றிலெல்லாம் மதில் எதுவும இராது.

ஐந்தாவது வகைக்கு எடுத்துக் காட்டு பல அடுக்கு மேல் தளங்களைக் கொண்ட திராவிட கோயில்களாகும். இவற்றில் ஒவ்வொரு அடுக்கிலும் மத்திய கட்டிடம் ஒன்றிருக்கும். மத்தியக் கட்டிடத்தின் சுவர்களைச் சுற்றி பல சிறிய கட்டிடங்கள் இருக்கும். வரிசையாக சுவர் போல் அமைந்திருக்கும் சிறிய ஓரடுக்குச் கட்டிடங்கள் பிரதான கட்டிடத்தின் சுவற்றிலிருந்து ஒரு குறிப்பிட்ட

தூரத்தில் அமைந்திருக்கும். இவை ஒரு விதமான அரண் போல் அமைக்கப்பட்டுள்ள இந்த மாடங்கள் ஒன்றிற்கொன்று வேறுன உருவத்தில் இருக்கும். ஒரு வகை சதுர அமைப்பின் மீது கும்பம் போன்றும், இன்னென்றுமேற் பகுதியில் வளைந்த அமைப்புடன் இருக்கும். மற்றது தூங்கானை வடிவான அமைப்பின் மீது பீப்பாய் உருவில் இருக்கும். முதல் வகைக்கு கூடம் என்று பெயர். ஒவ்வோர் அடுக்கின் மூலையிலும் இது தவறுமல் அமைக்கப்படும். இரண்டாவது வகைக்கு கோஷ்டம் என்று பெயர். அரணின் நடுப் பகுதியில் இது இருக்கும். பெரிய கோயில்களில் பல தடவை இது இடம் பெறுகிறது. மூன்ருவது வகைக்கு நீடம் அல்லது பஞ்சரம் என்று பெயர். இரண்டு கோஷ்டங்களுக்கிடையே அமைக்கப்படுவது இது. அதன் உருண்ட முனை பின்புறம் மறைந்திருக்கும். ஒவ்வொரு அடுக்கைச் சுற்றியும் அரண் அமைத்துக் கட்டிய ஆரம்ப காலக் கோயில் அஹிச்சத்ர கோயிலாகும்.

புனிதமான இடத்தைச் சுற்றிச் சுவர் எழுப்பும் வழக்கமே பழமையானது. சுற்றுச் சுவர் அதாவது பிரகாரம் தென்னிந்தியக் கோயில்களில் ஒரு விசேஷ அம்சமாகும். ஆரம்ப காலக் கோயில்களான காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும், மகாபலிபுரம் கடற்கரைக் கோயிலிலும் இதைக் காண முடிகிறது. பிற்காலத்தில் கட்டப்பட்ட பெரிய கோயில்கள் அதிகமான பிரகாரங்களைக் கொண்டவைகளாக இருந்தன. ஏழு பிரகாரங்களைக்கொண்ட ஸ்ரீரங்கம் கோயில், ஐந்து பிரகாரங்களைக் கொண்ட திருவானைக்கா கோயில், மூன்று பிரகாரங்களைக் கொண்ட மதுரைக் கோயில் ஆகியவை இதற்குச் சான்ருகும். இக் கோயில்களில் ஒவ்வொரு பிரகாரத்திலும் நான்கு வாயில்கள் உள்ளன. வாயில்களின் மீது கணிசமான அளவில்

கோபுரம் இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட பிரகாரங்களைக் கொண்ட நாகர பாணிக் கோயில் பூரி ஜகந்நாதர் கோயில் ஒன்றுதான். இது இரண்டு பிரகாரங்களைக் கொண்டது. இதர ஒரிஸ்ஸா கோயில்களிலெல்லாம் ஒரு பிரகாரம்தான் இருக்கிறது. பெரும்பாலான வட இந்தியக் கோயில்கள் பிரகாரமே இல்லாமல் இருக்கின்றன.

15

வளைகோட்டு விமான அமைப்பு

மேலே நாம் விரிவாகப் பார்த்த பிரமிட் உருவ அமைப்பு ஒரு தனி வகையாகும். இம் முறையில் கட்டப் பட்ட கோயில்கள் தென்னிந்தியாவுக்கே உரியவை. அதாவது, நாட்டின் பரப்பில் ஐந்தில் ஒரு பகுதிக்கு உரியவை. பிரிசம், பிரமிட் உருவில் புனிதமான கட்டிடங் களை அமைக்கும் முறை இந்தியாவுக்கு மட்டுமின்றி உலகின் வேறு பல பகுதிகளுக்கும் உரியதாகும். வளை கோடுகளாலான பக்கங்களைக் கொண்ட சிகர அமைப்பு இந்தியாவின் 5-இல் 4 பகுதியில் காணப்படுகிறது. இவ் வகைக் கட்டிட அமைப்புப் பெரும்பாலும் இந்தியாவுக்கே உரியது என்று கூறலாம். மிக எளிய நிலையிலிருந்து இவ்வகைக் கோயில்கள் வளர்ச்சி பெற்றன என்பதை தேவ்கார், ஐஹொளே ஆகிய இடங்களிலுள்ள (கி. பி. 6 – 7 - ஆம் நூற்றாண்டு) ஆரம்ப காலக் கோயில்களி லிருந்து காணலாம். இதிலிருந்து பலவிதமான வளர்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது. வளைவான பக்க அமைப்புடன் கூடிய சிகரங்களைக் கொண்ட கோயில்கள் கி. பி. ஆறும் நூற்றாண்டிலிருந்து இருந்து வருகின்றன. துங்கபத்திரா வரை இவ்வகை பரவியுள்ளது. மஹ்பூப் நகர் மாவட்டத் திலுள்ள ஆலம்பூர் கோயில்கள் (7 – 8 ஆம் நூற்றாண்டு) கர்னூல் மாவட்டத்திலுள்ள இராமலிங்கேஸ்வரர் கோயில் ஆகியவை இதற்கு எடுத்துக் காட்டாகும்.

இவ்வகைக் கட்டிடத்தில் முக்கிய அம்சங்கள் வருமாறு: ஒன்று அல்லது பல தட்டுகளைக் கொண்ட

அடுக்குகள் **பூமிகள்** எனப்படும். ஆமலக உருவில் அமைந்த ஒரு பகுதியால் இவை பிரிக்கப்பட்டிருக்கும். **கவாக்ஷ** பாணியில் அலங்காரம் செய்யப்பட்ட இத்தட்டுக் கள், வேலைப்பாடமைந்த விதானம் போல் தோன்றும். ஆரம்ப காலக் கோயில்களில் இவற்றின் அடித்தளம் பிரமிட் உருவில் இருந்தது — உதாரணம்: சூத்ரபதத்தி லுள்ள சூரியன் கோயில், ஐஹொளேயிலுள்ள 10ஆம் எண் கோயில். இக் கோயில்களில் பக்கங்கள் சிறிதளவே துருத்திக் கொண்டிருக்கும். பின்னர் ஒரிஸ்ஸா, புவனேஸ் வரத்தில் கட்டப்பட்ட கோயில்களில் பக்க வாட்டக் கோடுகள் தோள் பகுதி வரை செங்குத்தாகவும் அதன் பின் வளைந்தும் இருக்கும். இவ்வகைக் கட்டிட அமைப் பின் இரண்டாவது சிறப்பு அம்சம் உச்சியில் வைக்கப் படும் ஆமலகம். இது ஒரே கல்லால் ஆனது. கட்டிடத் தின் சாய்வான சுவர்களை ஒன்றாக இணைப்பது இது. மூன்றாவது அம்சம் ஒவ்வொரு பக்கமும் மத்தியில் அணை சுவர் நீட்டிக் கொண்டிருப்பது. ஆரம்ப காலத்திலிருந்தே இம்முறை காணப்படுகிறது. கர்ப்பக்கிருகச் சுவர்களில் துருத்திக் கொண்டிருக்கும் பகுதியின் தொடர்ச்சியே இது. இதற்கு கட்டிடக்கலை ரீதியான முக்கியத்துவம் எதுவும் கிடையாது. ஆனால், இவ்வகைக் கோயில்களின் அத்தியாவசியமான அம்சமாக அது விளங்குகிறது. நாளடைவில் இவற்றின் எண்ணிக்கையும், ஆழமும் அதிகரித்தன. துருத்திக் கொண்டிருக்கும் மத்திய பகுதிக்கு **பத்ரா** என்றும், பக்கவாட்டில் உள்ளவற்றுக்கு **இரதங்கள்** என்றும் பெயர். பொதுவாக இந்த மத்திய அணை சுவர் விமானத்தின் தோள் பகுதி வரை தொடர்ந்து இருக்கும். ஆனால், பிற்காலக் கோயில்கள் பலவற்றில் இது தோள் பகுதிக்கும் அப்பால் நீண்டு கிரீவ பகுதி வரை நீட்டிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இங்கு நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய

விஷயம், பிராசாதங்களுக்கு மட்டுமே ஏற்பட்ட கட்டட வகையில் இது மிகவும் புனிதமானது என்பதாகும். கோயிலினுடைய மண்டபத்திலோ, அல்லது வேறு உப கட்டடங்களிலோ இவ்வகை அமைப்பு கையாளப்பட வில்லை. இவ்வகைக்கு இரண்டு, மூன்று உப பிரிவுகளும் உள்ளன.

உப பிரிவுகளில் மிகவும் முக்கியமானது **சிருங்கம்** எனப்படும் மத்திய சிகரத்தைக் கொண்டது. சிகரத்தின் அமைப்பிலுள்ள சிறு உருவங்கள் மத்திய பகுதியில் இரு புறமும் இருக்கும். இவற்றுக்கு உரோ - மஞ்சரிகள் என்று பெயர். சிருங்கத்தின் அளவில் முக்கால் பாகம் உள்ள அமைப்புகள் சிகரத்தின் கீழ்ப் பகுதியில் வரிசை யாக அமைந்திருக்கும். பிராசாதத்தினுடைய செங்குத் தான சுவர்களின் தொடர்ச்சியே இது. மூல சிகரத்தைப் போலவே அவற்றின் உருவில் சிறிய அளவில் உள்ள உரோ மஞ்சரிகளுக்கும் கிரீவம். ஆமலகம், ஆகியவை உண்டு. இவ்வகைக் கோயில் அமைப்புக்கு கஜுராஹோவி லுள்ள கோயில்கள் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். வட குஜராத், இராஜபுதனம் ஆகிய இடங்களிலும் இவ் வகைக் கோயில்களைக் காண முடிகிறது. ஒரிஸ்ஸாவிலும் உள்ளன. உதாரணம்:- புவனேஸ்வரர் ராஜா - ராணி ஆலயம். ஆனால், இவை கட்டப்பட்டிருக்கும் விதம் அந்த பிராந்திய பாணியில் உள்ளது. இவ்வகைக் கோயில்கள் பெரும்பாலும் 10-வது நூற்றாண்டையும் அதற்கு பிற்பட்ட காலத்தையும் சேர்ந்தவை. இக்காலத்துக்கு முற்பட்ட இவ்வகைக் கோயில்கள் எதுவும் இன்று நிலைத்திருக்க வில்லை. ஆயினும், இது ஒரு தூய வகையாகும். பின்னர் இவ்வகை மேலும் வளர்ச்சி பெற்று இதழ் விரிக்கும் மொட்டுப் போன்ற அமைப்பில் உருப் பெற்றது.

இவ்வகை சிகரத்தின் இரண்டாவது பிரிவு செங்குத்தான சுவர்களின் மீது சம தளத்தைக் கொண்டது. மத்திய பகுதியிலும், மூலைகளிலும் சற்றுத் துருத்திக்கொண்டிருக்கும். ஒன்று அல்லது இரண்டு பூமிகளைக் கொண்ட ஒவ்வொரு துருத்திக் கொண்டிருக்கும் கல்லிலும் ஒரு ஆமலகம் இருக்கும். ஏற்கனவே கூறியது போல் ஒவ்வொரு பூமியிலும் கவாக்ஷ சித்திரங்கள் செதுக்கப் பட்டிருக்கும். பிற்காலக் கோயில்களில் இந்த சித்திர வேலைப்பாடுகள் அதிகமாயின. அதைப் பார்க்கும்போது சிகரத்தை வலையைப் போட்டு மூடினாற் போல் தோற்ற மளிக்கும் இத்தகைய வேலைப்பாடுகளைக் கொண்ட கோயில்களை கட்டிடக்கலை நூல்கள் லதின வகுப்பு எனக் கூறுகின்றன. இவ்வகைக் கோயில்கள் தக்காணத்தில் ஐஹொளே, அஞ்சநேரியிலும், இராஜபுதனம், மத்திய பிரதேசத்திலும், வடமேற்கே இமாலயம் வரையிலும் காணப்படுகின்றன. ஒரிஸ்ஸாவில்தான் இம்முறை பரிபூரணமாக கையாளப்பட்டிருக்கிறது என்பதை புவனேஸ்வரத்திலும் இதர இடங்களிலும் உள்ள கோயில்களிலிருந்து காண முடிகிறது. இக் கோயில்களின் விசேஷ அம்சம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மண்டபங்களாகும். பிரமிட் உருவில் அமைந்த இவை பீட தேவுள் என்றழைக்கப்படுகின்றன. பிரதானக் கோயிலுக்கு முன்னால் இவை அமைந்திருக்கும். சிகரங்களின் இரண்டு முக்கிய வகைகளையும் இணைப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சி இது. பிரதானக் கோயிலின் சிகரத்தினுடைய முன் புறம் துருத்திக் கொண்டிருக்கும் சுக நாச என்ற பகுதியின் உயரத்துக்கு மேல் போகாமல் இந்தப் பீட தேவுளின் உயரம் இருக்கும். இவ்வகைக் கோயிலுக்கு எடுத்துக் காட்டு புவனேஸ்வரக் கோயில்களும், இராஜ புதனத்து ரீமாடேராபிலுள்ள சூரியன் கோயிலுமாகும்.

மற்றொரு வகை, இரண்டு அல்லது மூன்று சிறிய அளவு சிகரங்களையுடைய பல தட்டுக்களைக் கொண்டதாகும். இத்தட்டுக்கள் ஒன்றன் மீதொன்ருக அமைந்திருக்கும். இவ்வகைக் கோயில்களை தக்காணத்தின் வட பகுதியிலும், மத்திய இந்தியாவிலும் காணலாம். உதாரணம்: உதயபுரியிலுள்ள நீலகண்டேஸ்வரர் கோயில் (11-ஆம் நூற்ருண்டு) நாஸிக்கிலுள்ள ஜோட்கா ஆலயம் சிறிங்கங்களைக் கொண்ட இத் தட்டுக்கள் படி போலத் தோற்றமளிப்பதுடன் சிகரத்தின் கிரீவத்தை நோக்கி சாத்தப்பட்டுள்ள பிரமாண்டமான உருத்திராட்ச மணிகளைப் போலவும் காணப்படும். இவ்வகைச் சிகரத்தின் விசேஷ அம்சம் அதன் கோடுகள் நேராக இருப்பதாகும். தக்காணத்திலுள்ள எல்லா சிகரக் கோயில்களிலும் இதனைக் காணலாம். ஸின்னரிலுள்ள பஞ்சாய தள வகை கோண்டேஸ்வரர் ஆலயம் இதற்கு எடுத்துக் காட்டு.

16

பொருத்தமற்ற மேல்கட்டுள்ள கோயில்கள்

இரண்டு வகை மேல் தள அமைப்பு பெற்ற கோயில்களைப் பற்றி இதுவரை பார்த்தோம். இவை இரண்டும் தனித் தனியானவை. இந்த இரு வகையையும் சேராத வேறு சில வகை மேல்தள அமைப்புகளும் உள்ளன. இத்துறையில் புதிய முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்ற அவாவினுல் மேற் கொள்ளப்பட்ட முறைகளே அவை. கர்ப்பகிருகத்தின் மீது முற்றிலும் மாருன ஒருருவில் விமானம் எழுப்ப அவர்கள் முயன்றிருக்கிருர்கள். உதாரணமாக தட்டையான கூரை கொண்ட ஐஹொளே துர்க்கைக் கோயிலே (கி. பி. ஆரும் நூற்ருண்டு) கூறலாம். இக்கோயிலின் மீது பிற்காலத்தின் தூண், சிகரம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இதே போல் இவ்விடத்திலுள்ள ஹுச்சிமல்லிகுடி கோயிலுக்கும் (கி. பி. 5-ஆம் நூற்ருண்டு) சிகரம் ஆரும் நூற்ருண்டில்தான் கட்டப்பட்டிருக்கிறது. இதைவிட சுவாரஸ்யமானது மத்திய பிரதேசத்திலுள்ள குரஜபீர் கோயில் (9-ஆம் நூற்ருண்டு) இக்கோயிலில் கர்ப்பக்கிருகத்தின் மீது மற்ருேர் அறை கட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது அறை மீது சிகரம் அமைந்துள்ளது. முதல் அடுக்கிலுள்ள சிகரத்துடன் கூடிய இந்த அறை நாகர பாணியில் உள்ள கோயில் போன்றது. தட்டையான கூரை அமைந்த கோயிலின் மீது இது இடம் பெற்றிருக்கிறது. வங்காளத்

தின் மத்திய காலக் கோயில்களில் இன்னொரு வகையைக் காணலாம். இக்காலத்தைச் சேர்ந்த வங்கக் கோயில் களுக்கு வளைந்த கூரை இருக்கும். வங்கக் கிராமங் களிலுள்ள குடிசைகளின் பாணியில் செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டது இது. இதன் மீது நாகர பாணியில் சிகரம் அமைந்த கோயில் கட்டப்பட்டுள்ளது. வங்காளத்தின் கோயில்களைப் பற்றிய ஓவியங்களைப் பார்க்கும் போது (11-ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு) பல் வேறு வகையான கூரை மீது சிகரம் வைத்துக் கட்டப் பட்டிருப்பதைக் காண்கிறேம். இவ்வகையில் சிகரம் இருப்பது தான் சிறந்தது, முக்கியமானது என்று கருதப் பட்டது என்பதையே இது தெளிவாகக் காட்டுகிறது. பீகார் ராஜ்யம், மாங்கீர் மாவட்டத்திலிள்ள சினேரியாவி லுள்ள கோயிலில் ஒரு விசித்திரமான சிகரத்தைக் காண் கிறேம். இங்கு விமானம் பிரமிட் உருவில் உள்ளது. அதன் மீது முக்கோண வடிவில் உரோ - மஞ்சரிகள் அமைக்கப் பட்டுள்ளன.

17

சில விசேஷ வகைக் கோயில்கள்

இன்றும் நிலைத்திருக்கும் பழங்காலக் கோயில்களில் பல விசேஷமான அமைப்புக்களைக் கொண்டதாக உள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம்.

சௌஸட் - யோகினி வகை

சுற்றுச் சுவரில் வரிசையான பல அறைகளைக் கொண்ட கோயில்கள் ரசமானவை. பௌத்த மதக் கோயில் களின் அமைப்பிலிருந்து இது தோன்றியது. பௌத்த ஆலயங்களில் பிரதானமான ஸ்தூபத்தைச் சுற்றி பல்வேறு உருவில் அமைந்த மாடங்கள் இருக்கும். இவ்வகையை காந்தாரம் (இப்போது பாகிஸ்தானில் உள்ளது) தக்த்-இ - பஹாய் ஜாமலாகாரி ஆகிய இடங்களில் காணலாம். வெட்ட வெளியில் கற்களைக் கொண்டு கட்டப்பட்டவை இவை. முற்றத்தின் நடுவிலுள்ள வழிப்பாட்டுக்குரிய பொருளுக்கு இந்த அறைகள் அரண் போல் அமைந் துள்ளன. பின்புறச் சுவற்றில் வழிபாட்டு அறையுடன் கூடிய பௌத்தர்களின் குகையில் செதுக்கப்பட்ட விஹாரங்கள் இவ்வகைக் கட்டிக் கலைக்கு மேலும் ஓர் எடுத்துக் காட்டாகும். இவ் விஹாரங்களின் மாடங்களில் சிறப்பான அம்சம் எதுவும் இல்லை. வழிபடும் பொருள் உள்ள அறை இக் குகை விஹாரங்களில் பின்புறச் சுவற்றில் அமைந்திருப்பதானது இதனை அறைகளுக் கிடையே பொருத்தமான இடத்தில் அமைக்க முடியும் என்பதைக் காட்டுகிறது, இச் சந்தர்ப்பத்தில், மேலே

குறிப்பிட்ட தக்தி - பஹாய் மடத்தில் ஸ்தூபம் முற்றத்தின் நடுவே இல்லை; அதன் வட - தெற்கு மூலையில் அமைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

இந்துக் கோயில்களிலே சௌஸட் - யோகினி (64 தேவதைகள்) ஆலயங்கள் மேற் சொன்ன எடுத்துக் காட்டுகளைப் போலவே பெரும்பாலும் உள்ளன. கருப்பன், காளி போன்ற கிராம தேவதைகளின் ஆலயங்கள் பொது வாக மேற்புறம் மூடப்படாமல் இருக்கும். ஆனால், ஒரு சௌஸட்-யோகினி ஆலயத்தில் முற்றத்தைச் சுற்றி வரிசையாக மாடங்கள் இருக்கும். இவை ஒவ்வொன்றி லும் 64 யோகினியரில் ஒருவருடைய உருவம் இடம் பெற்றிருக்கும். முற்றம் காலியாக இருக்கும் அல்லது மத்தியில் மண்டபம் அமைந்ததாக இருக்கும். ஒன்பதா வது நூற்றாண்டுக்கு முற்பட்ட இவ்வகைக் கோயில் எது வும் இன்று நிலைத்திருக்கவில்லை. இவற்றுள் கஜுராஹோ விலுள்ள கோயில் நீண்ட சதுர முற்றத்தைக் கொண்ட தாக உள்ளது. பேராகாட்டிலுள்ள கோயிலில் 81 மாடங் கள் உள்ளன. 64 யோகினியர் தவிர வேறு சில உபதேவ தைகளும் இங்கு இடம் பெற்றுள்ளன. ராணிபூரிலுள்ள கோயில் வட்டமான சுற்றுச் சுவர் கொண்டதாக இருக் கிறது. இதன் மத்தியில் அமைந்த மண்டபத்தில் சிவன் சிலை உள்ளது. யோகினியரின் முகம் மண்டபத்தை நோக் கியபடி அமைந்துள்ளது. புவனேஸ்வரத்திலிருந்து ஏழு மைல் தூரத்திலிருக்கும் ஹீரா பூரிலுள்ள மற்றொரு சௌ ஸட்-யோகினி ஆலயம் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட் டுள்ளது. ஜான்ஸி மாவட்டம் தூதாயில் இவ்வகைக் கோயில் ஒன்று உள்ளது. ஆனால், அதற்கு மத்தியில் மண் டபம் எதுவும் இல்லை. இதேபோல் 108 மாடங்களைக் கொண்ட சிவன் கோயில்கள் இரண்டு சுமார் 160 ஆண்டு களுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளன. ஒன்று கல்னாவிலும்

மற்றது பர்த்வானிலும் இருக்கிறது. முன்னது வட்டவடிவ மானது. பின்னது நீண்ட சதுரம். இரண்டிலுமே முற்றத்தின் மத்தியில் எதுவும் கட்டப்பட வில்லை. இவ்வகைக்கு மற்றொரு உதாரணம் கோவை ஜில்லா ஆனைமலையிலுள்ள திரிமூர்த்தி ஆலயமாகும். இங்கு சுற்றிலும் அமைந்துள்ள உருவங்கள் உள் பக்கம் பார்த்து அமைந்துள்ளன. இவ்வகைக் கோயில் அமைப்பை ஜைனர்களும் புனிதமாகக் கருதினார்கள் என்பதை அவர்களது 'பெட்டா' வில் காணலாம்.

தென்னிந்தியக் கோயில்களின் அமைப்பிலும் இந்த முறை இடம் பெற்றிப்பதைக் காணலாம். மூல விக்ரகத்தைச் சுற்றி பல அறைகள் கொண்ட சுவர் அமைந்திருப்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு காஞ்சிபுரத்திலுள்ள கைலாச நாதர் கோயிலாகும். பல மாடங்களைக் கொண்ட இவ்வகைப் பிராகாரம் அமைந்த கோயில்களை இந்தியாவின் வேறு சில பகுதிகளிலும் காணலாம். உதாரணம்: பட்டதக்கல் விருபாக்ஷர் ஆலயம் (8-ஆம் நூற்றாண்டு) குக்கனூர் நவலிங்கர் ஆலயம் (11-ஆம் நூற்றாண்டு) மைசூர் சோமநாதபுரம் கேசவர் கோயில் (கி. பி. 1268) மார்த்தாண்டிலுள்ள சூரியன் கோயில், காஷ்மீரம், அவந்திபுரத்திலுள்ள அவந்திஸ்வாசுமி கோயில் (8-9- ஆம் நூற்றாண்டு) மவுண்ட் அபுவிலுள்ள ஜைனர் கோயில் (கி. பி. 1031) ஜோத்புரி, ராணுபுரியிலுள்ள சௌர்முகி கோயில் (கி. பி. 1440) குஜராத் கிர்னாரிலுள்ள நேமிநாதர் ஆலயம்.

18

அஷ்ட பரிவார வகை

கோயிலைச் சுற்றி வரிசையாக மாடங்கள் அமைப்பதற்குப் பதிலாக பிரதான கோயிலைச் சுற்றி பல சிறு ஆலயங்களை அமைக்கும் முறையும் மேற் கொள்ளப் பட்டிருக்கிறது. இதற்கு எடுத்துக் காட்டான கோயில்களை இந்தியா முழுவதும் காணலாம். இவற்றுள் ஒரு வகை பிரதான கோயிலைச் சுற்றி சிறிய உபகோயில்களைக் கொண்டதாக இருக்கும். எல்லோரா கைலாஸநாதர் கோயில் (8-ஆம் நூற்றுண்டு) ஸிர்பூர் ஆலயம் (8-ஆம் நூற்றுண்டு) புதுக்கோட்டைக் கருகில் மேலமலையிலுள்ள விஜயாலய சோழீஸ்வரர் கோயில் (9-ஆம் நூற்றுண்டு) உதயபுரி நீலகண்டேஸ்வரர் கோயில் (11-ஆம் நூற்றுண்டு) பதரியிலுள்ள கோடேஸ்வரர் ஆலயம் (9-ஆம் நூற்றுண்டு) இராஜஸ்தான் தம்னூரிலுள்ள ஒரே கல்லிலான கோயில் ஆகியவை இவ்வகையைச் சேர்ந்தவை.

மற்றொரு வகையில் பிரதான கோயிலைச் சுற்றி நான்கு மூலையிலும் நான்கு சிறு கோயில்கள் கொண்டது. இவ்வகைக் கோயில்களுக்கு பஞ்சாயதனம் என்று பெயர். ஜோத்பூரிலுள்ள இரு ஹரிஹரர் ஆலயங்களும், சூரியன் கோயிலும், நாஸிக்அருகே ஸிந்நாரிலுள்ள கோண்டேஸ்வரர் கோயிலும், கஜுராகோவிலுள்ள விஸ்வநாதர் லக்ஷ்மணர் கோயில்களும், புவனேஸ்வரத்திலுள்ள பிரம்மேஸ்வரர் கோயிலும், கஞ்சம் மாவட்டம் முகலிங்கத்திலுள்ள முகலிங்கேஸ்வரர் கோயிலும் பஞ்சாயதன வகைக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

மேலும் ஒரு வகையில் மூன்று ஆலயங்கள் இருக்கும். இதற்கு திரிகூடாசலம் என்று பெயர். இவற்றில் எல்லா கோயில்களுமே பொதுவாக சம அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை. கொடும்பாளூர் மூவர் கோயிலும், சேரமநாதபுரம் கேசவர் கோயிலும் இதற்கு உதாரணம்.

19

அஷ்டாங்க விமானங்கள்

ஒன்றுக்கு மேற்பட்ட கர்ப்பக்கிருகங்களைக் கொண்ட கோயில்கள் பழங்காலத்திலிருந்தே உள்ளன. ஐஹொளே யிலுள்ள லாட்கான் ஆலயத்திலும், நாச்னகுடாரா ஆலயத்தின் முதல் அடுக்கிலும் கர்ப்பக்கிருகம் அமைந்த கோயில்களுக்கு உதாரணமாகும். தென் கன்னடம் வேணூரினுள்ள பார்ஸ்வநாதர் கோயிலும் இவ்வகையைச் சேர்ந்தது தான். ஆனல், மூன்று கர்ப்பக்கிருகங்களைக் கொண்ட கோயில்கள் தான் அதிகமாக உள்ளன. இவ் வகைக் கோயில்களைத் தமிழ் நாட்டில் நிறையக் காண லாம். இவற்றுள் காலத்தால் முற்பட்டது மகாபலிபுரம் தர்மராஜா ரதம் (7-ஆம் நூற்ருண்டு) மேல் அடுக்கிலுள்ள கருவறையின் பின்புறச் சுவற்றில் சோமாஸ்கந்தர் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. இக்கோயில் பூர்த்தி செய்யப் பட்டிருந்தால் இவனுக்குத் தான் அர்ப்பணிக்கப்பட்டிருக் கும் என்பதை இது உணர்த்துகிறது. ஆயினும், சுவர்களின் புரைகளில் செதுக்கப் பட்டிருக்கும் பெரும்பாலான சிற்பங்கள் வைஷ்ணவ மதத்தைச் சார்ந்தவை. எட்டாவது நூற்ருண்டு முதல் இவ்வகைக் கோயில்கள் படுத்த நிலை, உட்கார்ந்த நிலை, நின்ற நிலை ஆகிய நிலைகளில் விஷ்ணு வின் சிலைகளை பிரதிஷ்டை செய்யவே முழுவதும் பயன் பட்டன என்று தோன்றுகிறது. இதற்கான எடுத்துக் காட்டை காஞ்சிபுரம் வைகுண்டநாத பெருமாள் கோயி லில் காண முடிகிறது. திருச்சி மாவட்டம் திருவெள்ளறை

யிலுள்ள கோயிலும் இராமநாதபுரம் மாவட்டம் திருக்கோஷ்டியூரில் உள்ள கோயிலும் மேலும் இரு உதாரணங்களாகும். இத்தகைய கோயில்கள் அஷ்டாங்க விமானங்கள் என்றழைக்கப் படுகின்றன.

20

சாந்தார - நிரந்தார வகை

பரந்த அடித்தளத்தின் மீது கோயிலை உயரமாகக் கட்ட ஆரம்பகாலம் முதலே ஒரு வழி கையாளப்பட்டு வருகிறது. இது இரண்டு சுவர்களைக் கொண்டதாகும். ஒன்று கர்ப்பக்கிருகத்தைச் சுற்றியிருக்கும். மற்றொன்று இந்தச் சுவற்றைச் சுற்றி அமைந்திருக்கும். இடையில் பிரதட்சணம் சுற்றி வருவதற்கு இடைவெளி இருக்கும். இந்த இடம் ப்ரமந்தி, ரமணி, அந்தகாரிகா, அந்தாரிகா, அல்லது பிரதக்ஷிணம் என்றெல்லாம் பலவகையாக அழைக்கப் படுகிறது. இவ்வகைக் கோயில்கள் சாந்தார எனப்படுகின்றன. ஒரே ஒரு சுற்றுச்சுவர் கொண்ட கோயில்கள் நிரந்தார எனப்படுகின்றன. சாந்தார வகைக் கோயில்களை குப்தர் காலத்திலிருந்தே காண முடிகிறது. குஜராத்கோப் என்ற இடத்திலுள்ள ஆலயம் (6–7-ஆம் நூற்றாண்டு) நாச்னகுடாராவிலுள்ள பார்வதி கோயில் (6-ஆம் நூற்றாண்டு) பூமராவிலுள்ள சிவன் கோயில் (6-ஆம் நூற்றாண்டு) காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் (8-ஆம் நூற்றாண்டு) நார்த்தாமலையிலுள்ள விஜயால்ய சோழீஸ்வர ஆலயம் (9-ஆம் நூற்றாண்டு) தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில் (11-ஆம் நூற்றாண்டு) ஆகியவை இதற்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

விமானத்தின் மேல்தளத்தை கணிசமான அளவில் கட்டுவதற்காக இரண்டு சுவர்களை அமைக்கும் முறை கையாளப்பட்டது போலவே கி. பி. 1000-ஆம் ஆண்டைச்

சுற்றிக் கட்டப்பட்ட சில பெரிய கோயில்களில் மற்றொரு சிறப்பான கட்டிட முறை கையாளப் பட்டிருக்கிறது. சாந்தார வகைக் கோயிலாக இருந்தால் வெளிப்புறச் சுவற்றின் உயரத்தை இரட்டிப்பதும் நிரந்தாரவகைக் கோயிலாக இருந்தால் கர்ப்பக்கிருகத்தின் சுவற்றின் உயரத்தை இரட்டிப்பாக்குவதும் இந்த முறையாகும். இவ்வழியில் கோயிலின் கூரையின் உயரம் அதிகரிக்கும். அதன் மீது விமானம் எழுப்பும் போது கம்பீரமாக உயர்ந்து நிற்கும். புவனேஸ்வரம் ராஜா—ராணி கோயிலும், தஞ்சாவூா பிரகதீஸ்வரர் ஆலயமும் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டுகள். திருச்சி மாவட்டம் சீனிவாச நல்லூர் கொரங்கநாதர் ஆலயமும் (10-ஆம் நூற்றுண்டு) கிழக்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள திராக்ஷராமம் சிவன் கோயிலும் இதற்கு மற்றும் இரு உதாரணங்களாகும்.

21

ஆலய நிர்மாணக் கலை--ஆரம்ப காலம்

இந்தியாவினுடைய உலகியல் கலாசாரத்தை அறிந்து கொள்ள நமக்குக் கிடைக்கும் புராதன சான்றுகள் இப்போது பாகிஸ்தானிலுள்ள மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களும், இந்தியாவிலுள்ள லோதால், ரூபர், காளிபங்கன் ஆகிய இடங்களில் கிடைத்த பொருள்களும் தான். கி. மு. 2500 லிருந்து 1000 வரையுள்ள காலத்தைச் சேர்ந்தவை இவை. நமது கலாசாரம் நன்கு அப்போதே வளர்ச்சி பெற்றிருந்ததை இவை புலப்படுத்துகின்றன. கட்டிடங்கள் பயன்படும் வகையில் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் கருத்தில் கொண்டு நடந்தனர் என்பதையும் காண முடிகிறது. இங்கு கட்டிடங்களின் எஞ்சிய பகுதிகளைப் பார்த்து இவற்றில் எதுவும் மத சம்பந்தமுடையதாக இருக்க முடியும் என்று கூறக் கூடிய விதத்தில் இல்லை. இது குழப்பமளிப்பதாக இருக்கிறது. ஏனெனில் இங்கு கிடைத்துள்ள எண்ணற்ற முத்திரைகளில் உள்ள உருவங்களைப் பார்த்தால் அவை மாதத் தொடர்புடையவை போல் தோன்றுகின்றன.

கி. மு. 1000 முதல் 300 வரையுள்ள காலத்தில் நிலவிய கலாசாரத்துக்கான நிதரிசன சான்றுகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், வேதங்களும் அவற்றுடன் தொடர்புடைய வேறு பல சாஸ்திரங்களும்

கட்டப்பட்ட யாக சாலைகள், மண்டபங்கள் ஆகிய மதக் கட்டிடங்களை பற்றிய குறிப்புகள் உள்ளன. இவை இந்தக் காலத்தைச் சேர்ந்தவை என்று கூறப்படுகிறது. இவற்றில் செங்கல், மரம், ஓலை போன்றவற்றைச் கொண்டு அழிந்து போகக் கூடிய இயல்பு கொண்டவை யாதலால் வேத காலக் கட்டிடங்களில் எதுவும் இன்று நிலைத் திருக்கவில்லை. இக்காலத்தைச் சேர்ந்த மக்கள் கட்டட வேலைக்குக் கற்களைப் பயன்படுத்தவில்லை.


மௌரிய சந்திர குப்தன் காலத்திலிருந்து (கி. மு. நான்காம் நூற்றாண்டின் இறுதி) கட்டடங்களின் எஞ்சிய பகுதிகள் கிடைக்கின்றன. இவற்றுள் பாட்னா அருகே புராதன பாடலிபுத்திரம் இருந்த இடத்தில் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ள ஒரு மண்டபம் முக்கியமானது. இது மரத்தினலான தூண்களும், தளமும் கொண்டது. ஆயினும், மதத் தொடர்புடைய கட்டடங்களின் இடிபாடு கள் அவனுக்குப் பின் வந்தவர்களின் காலத்திலிருந்தே குறிப்பாக அசோகன் காலத்திலிருந்தே கிடைத்துள்ளன. அசோகன் பௌத்த மதத்தை தழுவியதும் அதன் கொள்கைகளைப் பரப்புவதற்காகப் பெரிதும் பாடு பட்டான். அவன் கையாண்ட வழிகளில் ஒன்று பௌத்தர்களுக்குப் புனிதமான இடங்களில் ஸ்தூபம் போன்ற கட்டடங்களை அமைப்பதும், விசேஷ சித்திர வேலைப்பாடமைந்த கற்றூண்களை நிலை நாட்டுவதும் ஆகும். தூண்கள் தனியாகவும் இருக்கும்; ஸ்தூபங்க ளோடு சேர்ந்தும் இருக்கும். அவனுடைய ஆட்சியின் இறுதிக் காலத்திலும், அவனுடைய பேரனுடைய காலத் திலும் பாறைகளைக் குடைந்து குகைகள் அமைக்கப் பட்டன. இவை ஆஜீவகர்கள் வாழுமிடங்களாக இருந் தன. அசோகனும் அவன் வழி வந்தவர்களும் கோயில் கட்டுவதிலும், பாறைகளைக் குடைந்து குகைகளை அமைப்

பதிலும் மேற் கொண்ட இம் முயற்சிகள் மதத்துறை கட்டிடக் கலையில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தின. மேலே சொன்ன உதாரணங்கள் பௌத்தர்களுக்குரியவை களாக இருந்த போதிலும் அதன் பல்வேறு அம்சங்கள் இந்து, ஜைன மதங்களின் கட்டிடக் கலையில் இடம் பெற்றிருக்கின்றன. ஜைன ஸ்தூபங்களுடைய இடிபாடு கள் மதுராவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காணும் போது பௌத்த ஸ்தூபங்களிலிருந்து இவை அதிகமாக மாறுபட்டிருப்பதாகத் தோன்றவில்லை. இந்தக் காலத்தைச் சேர்ந்த இந்து மதக் கட்டிடங்களின் சின்னங் கள் எதுவும் கிடைக்கவில்லை.

22

ஸ்தூப நிர்மாணக் கலை

பௌத்தர்கள், ஜைனர்கள் ஆகிய இரு மதத்தினருக்கும் முக்கியமானது ஸ்தூபம். இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேதி எனப்படும் பீடங்களைக் கொண்டது. அதன் மீது அண்டம் என்ற அரைக் கோண வடிவக் கட்டடம் இருக்கும். அண்டத்தின் மீது குடைத் தூணை (சத்ராயஷ்டி) சுற்றி வேலியிட்ட (வேதிகா) ஒரு மண்டபம் (ஹர்மிகா) இருக்கும். இதில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதட்சிணப் பாதை அமைந்திருக்கும். ஆரம்ப கால ஸ்தூபங்கள் அரைக் கோள வடிவில் அமைந்தவை. நாளடைவில் இது உருளை வடிவமாயிற்று. அதற்கேற்ப கீழேயுள்ள மேதியும் அபிவிருத்தியடைந்தது. சற்று பிற்பட்ட காலத்தில் கட்டப்பட்டவற்றுள் கீழ்பகுதி பல அடுக்குகளைக் கொண்டதாக உள்ளது. உச்சியில் வரியாகக் குடைகள் (சத்ராவளி) அமைந்த ஒரு தூண் இருக்கும். வேறு சிலவற்றில் தனித்து ஒரு தூண் நிற்கும். மேற் சொன்ன ஸ்தூபத்தின் அங்கங்களான சத்ராவளி, ஹர்மிகா, அண்டம், மேதி, வேதிகா. ஸ்தம்பம் ஆகியவை அடுத்து வந்த காலங்களில் கோயில் கட்டடக் கலையில் அததற்குரிய இடத்தைப் பெற்றன. சத்ராவளியுடன் கூடிய ஹர்மிகாவின் இடத்தை நாகரபாணிக் கோயிலின் கலசத்துடன் கூடிய ஆமலகம்எடுத்துக் கொண்டது; திராவிடபாணி கோயில்களில் கலசத்துடன் கூடிய அல்ப விமானம் எடுத்துக்கொண்டது. அந்தத்துடன் கூடிய மேதியின் இடத்தை பிற்காலக் கோயில்களின் பிரதானக் கட்டடம்



படம் 17 பட்டதக்கல் விருபாக்ஷர் ஆலயம்

அத்தி 30 பார்க்க




படம் 18 குவாலியர் தேலிகா மந்திர்

அத்தி 30 பார்க்க



படம் 19 குவாலியர் சஷ்படான் கோயில்

அத்தி 30 பார்க்க




படம் 20 பிருந்தாவன் கோவிந்த தார் ஆலயம்

அத்தி 30 பார்க்க




படம் 21 பிருந்தாவன் ஜகத்கிஷோர் ஆலயம்

அத்தி 30 பார்க்க




படம் 22 ஐஹொளே தேவிகா கோயில்

அத்தி 30 பார்க்க



படம் 23 ஸின்னர் கோண்டேஸ்வரர் கோயில்

அத்தி 30 பார்க்க



படம் 24 உதயபுரி நீலகண்டேஸ்வரர் கோயில்

அந்தி 30 பார்க்க

எடுத்துக்கொண்டது. வேதிகையின் இடத்தில் பிராகாரமும் ஸ்தம்பத்தினுடைய இடத்தில் த்வஜஸ்தம்பமும் ஏற்பட்டன. இவற்றுக்கான எடுத்துக் காட்டுகளை எல்லா பிரதேசத்திலும் காணலாம். ஹெலியோடோரஸ் என்ற யவனரால் விதிஸாவிலுள்ள விஷ்ணு கோயிலுக்கு அமைக்கப்பட்ட கருடத்வஜஸ்தம்பம் (கி. மு. 2-ஆம் நூற்றாண்டின் இறுதி) கைலாஸ நாதர் கோயிலுள்ள த்வஜஸ்தம்பம் (கி. பி. எட்டாம் நூற்றாண்டு) எல்லோராவிலுள்ள கைலாச நாதர் கோயில் (கி பி. எட்டாம் நூற்றாண்டு) ஜைன இந்திரசபா குகை (9-ஆம் நூற்றாண்டு) த்வஜஸ்தம்பங்கள் ஆகியவை சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். இவ்வகைக் கட்டடங்களின் வட்ட வடிவ அமைப்பும் பிற்கால கோயில்களில் இடம் பெற்றிருக்கிறது. சாஞ்சி பார்ஹூத், அமராவதி, நாகார்ஜூனகொண்டா ஆகிய இடங்களிலுள்ள ஸ்தூபங்களில் பௌத்த நூல்களிலிருந்து பல சம்பவங்கள் சித்திர உருவில் பொறிக்கப்பட்டுள்ளன. இந்துக் கோயில்களிலும் புராண நிகழ்ச்சிகளை சித்தரிப்பதற்கு முன் மாதிரியாக அமைந்தது இதுதான் என்றும் கூறலாம்.

அசோகன் கட்டிய பல ஸ்தூபங்களில் சாஞ்சியிலும். சாரநாத்திலும் உள்ளவை விசேஷமானவை. தக்ஷசீலத்திலுள்ள தர்மராஜிக ஸ்தூபமும் அசோகனால் கட்டப்பட்டது என்று கூறப்படுகிறது. இவற்றுள் சாஞ்சியில் முன்பிருந்த ஸ்தூபம் உயரக் குறைவான கட்டடம். பெரிய கற்களைக் கொண்டு கட்டப்பட்டது; அரைக் கோள வடிவமுள்ளது; உயர்ந்த மேடை மீது அமைந்தது; உச்சியில் கல் குடையும், சுற்றிலும் மரக்கிராதியும் கொண்டது; தெற்கு வாயிலில் ஒரு ஸ்தம்பம் இருக்கிறது. நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இது கற் பாளங்களால் மூடப்பட்டு மேடையும் உயர்த்தப்பட்டது; தென் பகுதி

யில் படிகள் அமைக்கப்பட்டன. மற்றொரு பாதை தரை மட்டத்தில் சுற்றிலும் பெரிய கற்களால் வேலி அமைத்துப் போடப்பட்டது; ஸ்தூபத்தின் உச்சியில் மூன்று குடைகளைக் கொண்ட கம்பம் பொருத்தப்பட்டது; வேலிக்கு நான்கு திசைகளிலும் நான்கு வாயில்கள் அமைக்கப் பட்டன; இவை அழகான சித்திர வேலைப்பாடுகளுடன் இருக்கின்றன; பௌத்த ஜாதகக் கதைகளின் நிகழ்ச்சிகள் சித்திர உருவில் பொறிக்கப்பட்டன; ஒவ்வொன்றின் உச்சியிலும் ஒரு தர்ம சக்கரம் இடம் பெற்றது.

அசோகன் காலத்தைச் சேர்ந்த மற்றொரு சிறப்பான ஸ்தூபம் ஜெய்ப்பூர் ராஜ்யத்தில் பைராட்டில் உள்ளதாகும். இதன் இடி பாடுகளைப் பார்க்கும் போது இதனைச் சுற்றிலும் வட்ட வடிவமான ஆலயம் இருப்பது தெரிகிறது. செங்கற்களால் கட்டப்பட்டு சுண்ணாம்புக் காறை பூசப் பட்டது இது. இடையிடையே 26 எண் கோண மரத் தூண்கள் உள்ளன. கிழக்குப் பகுதியில் தலை வாயில் உள்ளது. இது இரு மரத் தூண்களால் தாங்கப் பெறுவது; சுற்றிலும் 7 அடி அகலத்துக்கு நடை பாதை உள்ளது; இவையனைத்தும் பிற்காலத்தில் ஒரு நீண்ட சதுர வேலிக்குள் அடக்கப்பட்டன; இந்த அமைப்பை ஜுன்னாரிலுள்ள துலஜா–லேனு பிரிவைச் சேர்ந்த சைத்ய குகையிலும் (கி. மு. முதல் நூற்றாண்டு) காண லாம். இதன் அமைப்பும், வடிவமும் பிற் காலக் கோயில் களில் கையாளப்பட்டுள்ளன. குறிப்பாகக் கேரளாவில் இத்தகைய வட்ட வடிவக் கோயில்கள் பல இருக் கின்றன.

பார்ஹுத் ஸ்தூபம் (கி. மு. முதல் நூற்றாண்டு) சாஞ்சி பாணிக்கு மற்றொரு உதாரணமாகும். வாயில்களில் மட்டுமின்றி வேலிகளிலும் அழகான சிற்ப வேலைப்பாடுகள் இருப்பது இதன் விசேஷச் சிறப்பாகும். அடுத்து வந்த

கோயில்களின் தூண்களில் அருமையான சித்திர வேலைப் பாடுகள் நிறைந்திருப்பதற்கு இது முன் மாதிரியாக இருந்திருக்கலாம்.

பீகார், நந்தன்கரிலுள்ள ஸ்தூபம் (கி. மு. முதல் நூற்ருண்டு) ஒரு வகை செங்கற்களாலான ஸ்தூபம் பல கோண அமைப்பிலுள்ள மேடை மீது கட்டப்பட்டுள்ளது. பல அடுக்குகள் மீது ஸ்தூபம் அமைப்பதற்குஇது வழி காட்டியாக இருந்திருக்கக் கூடும்.

தென்னிந்தியாவிலும் ஆலய நிர்மாணக் கலைக்கு எடுத்துக் காட்டாக இன்று கிடைக்கும் பழங்கால சின்னங்கள் பௌத்த மதத் தொடர்புடையனவாகவே உள்ளன. பல ஸ்தூபங்களுடைய எஞ்சிய பகுதிகள் பல இடங்களில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. ஆந்திரப் பிர தேசத்தில் கடலோரமாக கிருஷ்ண கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இவை நிறைய கிடைத்துள்ளன. கி. மு. 200 முதல் கி. பி. 300 வரையுள்ள காலத்தைச் சேர்ந்தவை இவை. இப் பகுதியிலுள்ள புகழ் பெற்ற ஸ்தூபங்கள் அமராவதியிலும், நாகார்ஜுனகொண்டா விலும் கிடைத்தவையாகும், ஜக்கய்யா பேட்டா? கண்ட சாலா, குடிவாடா, பட்டிப்ரோலு ஆகிய இடங்களிலும் ஸ்தூபங்கள் இருந்தன. உயரக் குறைவான மேடை மீது அரைக் கோள வடிவில் செங்கற்களால் கட்டப்பட்டவை. இவை, நான்கு திசைகளிலும் சற்று நீண்டிருக்கும். இந்த நீண்ட பகுதிகள் ஒவ்வொன்றிலும் நீண்ட, அழகாகச் செதுக்கப்பட்ட 5 தூண்கள் வரிசையாக இடம்பெற்றிருக் கும். இவற்றை ஆயக தூண்கள் என்பர். ஆந்திரப் பிர தேச ஸ்தூபங்களுக்கு மட்டுமே உரிய சிறப்பு இயல்பு இது. மேலும், இந்த ஸ்தூபங்களின் உட்புறக் கட்டிட அமைப்பும் கவனித்தற்குரியது. படிப்ரோலு, குடி வாடாவிலுள்ள ஸ்தூபங்கள் முழுவதும் செங்கற்களால்

கட்டப்பட்டது. ஆனால், அமராவதியிலும், கண்டசாலா விலும் உள்ளவை இரு கல் வரிசைகளுக்கிடையே மண் நிரப்பிக் கட்டப்பட்டவை. இந்த ஸ்தூபங்கள் பல நாகார்ஜுனகொண்டாவிலும் காணப்படுகின்றன. சிக்கனத்தை உத்தேசித்தே இம்முறை கையாளப் பட்டது என்பது தெளிவு. அமராவதியிலும் நாகார்ஜுன கொண்டாவிலும் உள்ள ஸ்தூபங்களுடைய வேதிகைகள் அற்புதமான செதுக்குச் சித்திரங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளன. அடித் தளத்திலும், அரைக் கோளப் பகுதி யிலும் சிற்பம் பொறித்த கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

ஆந்திரப் பிரதேச ஸ்தூபங்களில் சில விசேஷ அம்சங் கள் இருப்பது போலவே வடமேற்குப் பகுதியிலுள்ள ஸ்தூபங்களிலும் சில சிறப்பான அம்சங்கள், அப்பிராந்திய சிற்பக் கலைஞர்களின் திறமையைப் புலப்படுத்தும் விதத்தில் உள்ளன. ராவல்பிண்டி மாவட்ட தக்ஷசீலம், மணிக்யாலாவிலும் மர்டாம் அருகே தக்த் - இ - பாஹி ஸாஹ்ரி - பஹ்லோல், ஜமால் - காரியிலும், பெஷாவர் மாவட்டத்தில் சார்ஸதாவிலும் பல ஸ்தூபங்கள் காணப் படுகின்றன. கற்களால் கட்டப்பட்டு மேலே சுண்ணாம்பு காறை அல்லது சுண்ணாம்பு, மணல், சலவைக் கல் ஆகிய மூன்றையும் சேர்த்து அரைத்த காரை பூசப்பட்டுள்ளது. காந்தார பாணிக் கலையில் அமைந்த சிற்பங்களும், புத்தர் சிலைகளும் ஸ்தூபங்களை அலங்கரிக்கின்றன. மணிக் யாலாவில் உள்ளதும், தக்ஷசீலத்திலுள்ள தர்மராஜிக ஸ்தூபமும் அரைக் கோள வடிவில் இருப்பதால், ஆரம்ப கால இந்திய பாணியைச் சேர்ந்தவை. ஆனால், இப்பகுதி யிலுள்ள இதர ஸ்தூபங்கள் உயரமான சதுர மேடை மீது எழுப்பப்பட்ட உயரக் கட்டிடங்கள் போகப் போக அளவில் சிறியதான பல அடுக்குகளைக் கொண்டது. அதன் கோளப் பகுதி உச்சியில் பல குடைகள் இருந்தன.

சதுரமான மேடை மீது ஏறிச் செல்லப் படிகள் உள்ளன. அதில் சுற்றிலும் பிரதட்சிணப் பாதை அமைந்திருக்கிறது. பிரதான ஸ்தூபத்தை சுற்றிலும் பல சிறிய ஸ்தூபங்கள் உள்ளன; இவை பிரார்த்தனை செய்து கொண்டவர்களால் கட்டப்பட்டவை. பிற்காலத்தில் பெரிய ஸ்தூபங்கள் கட்டப்பட்ட போதும் இவ்வழக்கம் இருந்து வந்திருக்கிறது. புவனேஸ்வரத்திலும், தமிழ் நாட்டிலும் உள்ள கோயில்கள் இதற்கு உதாரணமாகும். தக்த் - இ - பாஹியிலுள்ள ஸ்தூபம் இந்தப் பிரதேச பாணிக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். இவ்வகை கட்டிடக்கலை ரீதியான எல்லா அம்சங்களும் இதில் காணப்படுகின்றன. சுற்றிலும் மாடங்கள் அமைந்த முற்றத்தின் நடுவே இருப்பது விசேஷ முக்கியத்துவம் உள்ள அம்சமாகும். ஏனெனில் பிற்காலக் கோயில்களுக்கு இது முன் மாதிரியாக இருந்திருக்கிறது. பல மாடங்களைக் கொண்ட பிரகாரம் அமைந்த காஞ்சி கைலாஸ நாதர் கோயில் தக்த் - இ - பாஹி ஸ்தூபத்தைப் போலவே பெரும்பாலும் அமைந்திருக்கிறது. பெஷாவர் அருகே ஷாஜி-கி-தேரியிலுள்ள தனிப்பட்ட அமைப்பும் அளவும் (விட்டம் 286 அடி) கொண்டது. இதில் புகழ் பெற்ற கனிஷ்கனுடைய அஸ்தி கலசம் இருக்கிறது. மேலும் நான்கு திசைகளிலும் வளைவு கோட்டு அமைப்பைக் கொண்ட மேல் பகுதியும் சிலுவை வடிவிலுள்ள அதன் மேடையும் குறிப்பிடத் தக்கதாகும். ஏனெனில், பிற்கால பஞ்சாயதன கோயில்களுக்கு அடிப்படையாக இது இருந்திருக்கக்கூடும்.

சிந்து சமவெளியிலுள்ள குப்தர் கால—அதற்குப் பிற்பட்ட கால ஸ்தூபங்களும் செங்கற்களால் கட்டப்பட்டிருப்பதால் நம் கவனத்துக்குரியவை ஆகின்றன. மிர்பூர்காஸிலுள்ள ஒரு ஸ்தூபம் விசேஷமானது. குப்தர்கள் பாணியிலமைந்த சுட்ட மண்ணாலான சிற்பங்கள் இதில் உள்ளன. அத்துடன் அடித் தளத்தில் மூன்று

வளைவான மேற்புறம் அமைந்த மாடங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஒரு புத்தர் சிலை உள்ளது. இவை ஒவ்வொன்றும் புனிதமான பகுதியாகக் கருதப்படுகிறது. பிற்காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கர்ப்பக்கிருகங்கள் அமைக்கப் பட்டதற்கு இக் கோயில் வழிகாட்டியாக இருந்திருக்க லாம்.

வட இந்தியாவின் சமவெளிப் பகுதிகளிலும் 12–ஆம் நூற்றாண்டு வரை வெகு காலத்துக்கு ஸ்தூபங்கள் செங்கற்களால் கட்டப்பட்டு வந்தன. இன்றும் நிலை பெற்றிருக்கும் பழங்காலக் கோயில்களில் பெரும் பாலானவை குப்தர் காலத்திலிருந்து தொடங்குபவை. ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்குகளைக் கொண்ட உயர்ந்த மேடை மீது உருளை வடிவில் அமைக்கப்பட்டவை இவை. இவ்வகைக்கு சாரநாத்திலுள்ள தாமேக் ஸ்தூபம் சிறந்த எடுத்துக் காட்டு. இதன் அடித்தளம் எட்டு துருத்திக் கொண்டிருக்கும் முகப்புகளைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் சிலைகளுக்கான மாடங்கள் உள்ளன. மூன்று மாடங்களைக் கொண்ட ஸ்தூப அமைப்பிலிருந்து ஏற்பட்ட வளர்ச்சி ஆகும் இது. பிற்கால ஸ்தூபங்கள் உருளை வடிவில் இருந்தபோதிலும் பல அடுக்குகளையும் குடைகளையும் கொண்டதாக அமைந்தன.

23

குகைக் கோயில்கள்

ஆலய நிர்மாணக் கலையின் வளர்ச்சிக்கு பௌத்த ஸ்தூபங்கள் ஆற்றியுள்ள பங்கு குறித்து இதுவரை பொதுவாகப் பார்த்தோம். நாடெங்கிலும் பல பாறைகளில் குடைந்து அமைக்கப்பட்டுள்ள கோயில்கள் உள்ளன. மேற்கு தொடர்ச்சி மலையில் இவை நிறையக் காணப்படுகின்றன. இவை கட்டிடக்கலைக்கான எடுத்துக் காட்டுகள் என்று பூரணமாகச் சொல்ல முடியா விட்டாலும் அவற்றின் அமைப்பு, வடிவம், வேலைப் பாடு ஆகியவற்றில் திறந்த வெளியில் கட்டப்படும் கோயில்களுக்குப் பொதுவான பல அம்சங்கள் இருப் பதைக் காண்கிறோம். எனவே, மிக முக்கியமான குகைக் கோயில்களின் விசேஷ சிறப்பியல்புகளைப் பற்றிய சுருக்க மான விவரத்தை இங்கு காண்போம். இத்துறையிலும் பௌத்தர்கள் பெரும் பணியாற்றியிருப்பதுடன் இதர மதத்தினருக்கு வழிகாட்டியாகவும் இருந்திருக்கிறார்கள், இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ள 1200 குகைக் கோயில்களில் 900 பௌத்தத்தையும் 200 ஜைனத்தையும் 100 இந்து மதத்தையும் சேர்ந்தவை. பௌத்த குகைக் கோயில்களிலே அஜந்தா, அவுரங்காபாத், கார்லே. நாசிக், எல்லோரா ஆகிய இடங்களில் உள்ளவை சிறப் பானவை; ஜைனர்களுடைய குகைக் கோயில்களில் ஒரிஸ்ஸா உதயகிரி கண்டகிரி, குன்றுகளிலும், எல்லோரா விலும் உள்ளது ரஸமானவை. இந்து மதக் குகைக் கோயில்களுள் எல்லோரா, எலிபெண்டா, பாதாமி, மகா

பலிபுரம் ஆகிய இடங்களில் உள்ளவை முக்கியமானவை. இந்துக் கோயில்களில் எல்லோரா, கைலாஸ் நாதர் ஆலயமும், மகாபலிபுர இரதங்களும் இணையற்றவை.

பாறைகளைக் குடைந்து கோயில் அமைக்கும் கலையின் கால கட்டத்தை மூன்று விதமாகப் பிரித்துக் கூறலாம்.

1. கி. மு 2-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு வரை.

2. கி. பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு வரை.

3. கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு வரை.

மகாராஷ்டிரா ராஜ்யத்தில் மேற்குத்தொடர்ச்சிமலைப் பகுதியில்தான் இவை நிறைய உள்ளன. இவற்றுள் முக்கியமான இடங்கள் பூனா மாவட்டத்திலுள்ள பாஜா, பேட்ஸா, ஜுன்னர், கார்லே, பம்பாய்க் கருகேயுள்ள எலிபெண்டா, கனேரி, ஆந்திர பிரதேசம் அவுரங்காபாத் மாவட்டத்திலுள்ள அவுரங்காபாத், அஜந்தா, எல்லோரா ஆகியவை. அஜந்தாவில் 30 குகைகள் உள்ளன. எல்லாம் பௌத்த மதத்தினருடையவை. கி. மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 7-ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள காலத்தவை. எல்லோராவில் 34 குகைகள் உள்ளன. எல்லாம் கி. பி. 5 முதல் 10-வது நூற்றாண்டு வரையுள்ள காலத்தைச் சேர்ந்தவை. இவற்றில் காலத்தால் முற்பட்டவை பௌத்தர்களுடையவை. அடுத்து இந்து மதத்தினரும், பின்னர் ஜைன மதத்தினரும் அமைந்தவை உள்ளன. இவ்வகைக் கோயில்கள் இந்திய ஆலய நிர்மாணக் கலையின் சிறப்புக்கு எந்த அளவுக்கு உதவியுள்ளன என்பதைப் பார்ப்போம்.

ஸ்தூபங்களைப் போலவே குகைக் கோயில்களிலும் இன்றும் நிலைத்துள்ள பழங்காலச் சின்னங்கள் அசோகன் காலத்திலிருந்துதான் தொடங்குகின்றன. அசோகன் காலத்திய ஏழு குகைக் கோயில்கள் பீகாரைச் சேர்ந்த கயா மாவட்டத்திலுள்ள நாகார்ஜுன், பராபர் குன்றுகளில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. ஆஜிவிகப் பிரிவு துறவிகளுக்கென ஏற்பட்டவை இவை. இவற்றுள் அசோகன் ஆட்சிக்கு வந்து 12 ஆண்டுகளுக்குப் பின் கட்டப்பட்ட சுதாமா குகையும், லோமாஸ் ரிஷி குகையும் சிறப்பானவை. உட்புறம் குறிப்பாக மேல் விதானத்தில் அற்புதமான வேலைப்பாடுகள் உள்ளன. அரைக் கோளப் பகுதி இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முன்னால் மண்டபமும் வட்ட வடிமான கர்ப்பக்கிருகமும் அமைந்த பிற்காலக் கோயில்களுக்கு இது முன் மாதிரியாகும். லோமாஸ் ரிஷி குகையில் முகப்பு வாயிலில் மரத்தில் செதுக்குவது போன்ற அலங்காரமான சித்திர வேலைப் பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

ஆரம்பகால கட்டத்தைச் சேர்ந்த குகைகள் எல்லாமே பௌத்த மதத்திலருடையவை. தொடக்கத்திலிருந்தே இவை இரு வேறு பிரிவுகளாக இருப்பதைக் காணமுடிகிறது. 1. ஸ்தூபத்தைக் கொண்ட சைத்ய-முற்றங்கள் 2. துறவிகளுக்கான மடங்கள்—விஹாரங்கள். முதலாவதில், வளைவான கூரையுடன் அமைந்த ஒரே மண்டபம் இருக்கும். இதற்குள் ஸ்தூபம் இடம் பெற்றிருக்கும். மண்டபம், நடுப்பகுதியும் சுற்றுமாளிகைகளுமாக இரு வரிசைத் தூண்கள் பிரிந்து நிற்கும். ஸ்தூபத்தைச் சுற்றிப் பிரதட்சிணம் வருவதற்காக ஒரு பாதை இருக்கும். மேலே குறிப்பிட்ட அசோகன் காலத்திய சுதாமா குகையின் அமைப்பையொட்டிக் கட்டப் பட்டவைதான் பிற்காலச் சைத்ய முற்றங்கள். ஆரம்ப கால சைத்ய முற்றங்கள் கல்லினால் ஆனதாக இருந்

தாலும் மரத்தினல் ஆனதாக இருந்தாலும் ஒரேமாதிரி அமைப்பில் ஒரே விதமான வேலைப்பாடுகளுடன் இருப்பதைக் காண்கிறோம். மரத்தில் செய்யக்கூடிய விசேஷமான சித்திர வேலைப்பாடுகளையெல்லாம் கல்லிலும் செய்திருக்கிறார்கள். இவற்றின் முகப்புகள் அற்புதமாக அலங்காரம் செய்யப்பட்டுள்ளன. இதில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாயிற்படிகளும் மேலிருந்து வெளிச்சம் உள்ளே வருவதற்கு வளைந்த ஜன்னல்களும் இருக்கும். சில சமயங்களில் முகப்பில் தலை வாயில் ஒன்றும் இருக்கும். சிலவகைக் கோயில்கள் ஆலய நிர்மாணக் கலைக்கு தமது அமைப்பைத் தந்து உதவியுள்ளன. இந்த அமைப்பை கட்டடக் கலை நூல்கள் குஞ்சரம், கஜபிருஷ்டம், ஹஸ்தி பிரிஷ்டம் என்று கூறுகின்றன. பிற்காலக் கோயில்களில் மிகப்பல இந்த அமைப்பில் கட்டப்பட்டவையே யாகும். இதற்கு ஐஹொளோயிலுள்ள துர்க்கைக் கோயிலும், மகாபலிபுரம் சகாதேவ இரதமும் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். மேலும், வளைந்த ஜன்னல் பிற்காலக் கோயில்களில் குறிப்பாக தென்னிந்தியாவில் முக்கியத்துவம் வாய்ந்த அலங்கார அமைப்பாகி விட்டது. இது கூடு எனபபட்டது. கபோதத்தில் பிரதானமாக அமைக்கப்பட்டது சில சைத்ய முற்றங்களில் தலைவாயிலும் அமைந்திருப்பது பிற்காலக் கோயில்களின் முன்புற மண்டபங்களுக்கு வழிகாட்டியாகும். ஆரம்பக் கால சைத்ய முற்றங்களின் மற்றொரு சிறப்பான அம்சம் - பல வகையான தூண்களாகும். இதன் அமைப்பு பல மாறுதல்களுடன் பிற்காலக் கோயில்களில் இடம் பெற்றிருக்கிறது.

புராதனமான சைத்ய முற்றங்களில் ஒன்று பாஜாவில் உள்ளதாகும். (கி.மு. 200) இதில் மரத்தினலான கூரை உத்திரங்கள் உள்ளன. இதர பகுதிகளிலும் மரம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு காலத்தால் பிற்பட்டதான கொண்டனே சைத்ய முற்றத்தில் மரத்திற்குப்

பதிலாக கல்லாலான தூண்களைக்கொண்ட முகப்பு வாயில் உள்ளது. பிதால் கோராவிலும், அஜந்தாவில் 10-ஆம் எண் குகையிலும் உள்ள சைத்ய முற்றங்களின் கூரை உத்திரங்கள் கல்லில் செதுக்கப்பட்டவை: மரத்தினால் ஆனவை அல்ல. அஜந்தா 10-ஆம் எண் குகையில் உள்ள ஸ்தூபம் அடித்தளத்தில் இரண்டு அடுக்குகளைக் கொண்டதாகவும், நீண்ட கோள உருப்பெற்ற மேல் பகுதியைக் கொண்டதாகவும் இருக்கிறது. இதே போல் பேட்ஸா, அஜந்தா (9-ஆம் எண்குகை) நாசிக்கிலுள்ள பாண்டுலேனு ஆகிய சைத்ய முற்றங்களிலும் முகப்பு தூண்கள் போன்றவை மேலும் சில அபிவிருத்திகளுடன் காணப்படுகின்றன.

இப்பிரிவைச் சேர்ந்த மிகப் பெரிய சைத்ய முற்றம் கார்லேயில் உள்ளதாகும். இதன் காலம் கி. மு. முதல் நூற்றாண்டு. இதன் ஸ்தூபம் உருளை வடிவில் இரண்டு வேதிகைகளைக் கொண்டதாக இருக்கிறது. இந்த ஸ்தூபத்தின் உச்சியில் பழைய மரக்குடை இன்றும் அழியாமல் அப்படியே உள்ளது. முன்புரம் இரண்டு தூண்களைக் காண்கிறோம். வெளி வாயில் அடுக்குகளில் அமைந்துள்ளது. கீழ் அடுக்கில் வரிசையாக அழகிய யானைகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தூண்களில் உயிர்த் துடிப்புள்ள சிற்பங்கள் நிறைந்துள்ளன. முதலில் சொன்ன இரு அம்சங்களும் எல்லோரா, கைலாசநாதர் கோயிலில் இடம் பெற்றிருக்கும் அம்சங்களுக்கு அடிப்படை என்பது நிச்சயம்.

இதே கால கட்டத்தைச் சேர்ந்தவைகளாக ஒரிஸ்ஸாவிலுள்ள உதயகிரி மலையில் 34 குகைகளும், கந்தகிரி மலையில் ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் ஜைன மதத்தாருடையவை என்று கூறப்படுகிறது. இவற்றில் சில அபிவிருத்தியடைந்த அம்சங்

களைக் காண்கிறோம். அழகான தூண் பிடிப்புகள் (ராணி கும்பா) அரை வட்ட வளைவுகள் ஆகியவை. ஆரம்ப காலக் குகைக் கோயில்களில் சிறப்பான அம்சம் கொண்டதான ராணி கும்பா கவனத்துக்குரிய ஒன்றாகும். இரண்டு அடுக்குகளைக் கொண்டது இது. மேல் அடுக்கின் சுவர்களில் அருமையான சிற்பங்கள் உள்ளன.

இரண்டாவது கால கட்டத்தைச் சேர்ந்த (கி. பி. 5-7–ஆம் நூற்றாண்டு) பௌத்த சைத்ய முற்றங்களில் மரங்கள் உபயோகப்படுத்தப்படவில்லை. இவற்றில் ஸ்தூபத்தின் மீது புத்தர் சிலை அமைந்திருக்கும். மகாயானப் பிரிவினர் கொள்கையின் செல்வாக்கே இது என்பது தெளிவு. அஜந்தா குகையின் 19–லும் 26–லும் உள்ள சைத்ய முற்றங்கள் இக் காலத்தைச் சேர்ந்தவை. இதற்குக் காலத்தால் முற்பட்டதான குகை எண் 10–லுள்ள அமைப்பில் இவை இருந்தபோதிலும் அலங்கார வேலைப் பாடுகளமைந்த முகப்பு வாயிலும் ஆமலகத்துடன் கூடிய தூண்களும் கொண்டதாக இவை உள்ளன. இவற்றின் உள்ளே இருக்கும் ஸ்தூபங்களில் கொற்றக் குடையின் கீழ் உட்கார்ந்த நிலையில் அல்லது நின்ற நிலையில் உள்ள புத்தர் உருவச் சிலை இருக்கும். சைத்ய முற்றங்களில் கடைசியானது எல்ரோவிலுள்ள விஸ்வ கர்மா சைத்ய முற்றமாகும் (7–ஆம் நூற்றாண்டு) இதன் சிறப்பான அம்சம் வளைந்த ஜன்னல், வட்ட வடிவான திறப்பாக இருப்பது.

பிற் காலத்தில் ஆலய நிர்மாணக் கலையில் எடுத்தாளப் பட்ட எண்ணற்ற அம்சங்களைத் தம்மிடத்தே கொண்டதாக சைத்ய முற்றங்கள் இருந்தன. இது போலவே விஹாரங்களும் பல அம்சங்களில் பிற் காலக் கோயில்களுக்கு முன் மாதிரியாக இருந்திருக்கின்றன. முதல் கால கட்டத்தைச் சேர்ந்த விஹாரங்களில் நடுவில்

முற்றமும், பக்க வாட்டச் சுவர்களில் துறவிகள் வசிப்பதற்கான வரிசையான அறைகளும் இருந்தன. ஆனால் இரண்டாவது கட்டத்தைச் சேர்ந்த விஹாரங்கள் பொதுவாக ஓரடுக்கு அமைப்புகள். குகையின் பின் புறச் சுவற்றில் ஓரிடத்தில் குடைந்து அறை போல் அமைத்து, அதற்குள் புத்தர் உருவச் சிலை வைக்கப்பட்டிருக்கும். இதர சுவர்களில் சாதாரண அறைகள் இருக்கும். இதுவும் மகாயானப் பிரிவினரின் செல்வாக்கினால் ஏற்பட்ட அபிவிருத்தியேயாகும். இக் கால கட்டத்தில் விஹாரங்கள் கோயிலாகவும் - துறவிகள் வாழுமிடமாகவும் இருந்தன என்பதை இது புலப்படுத்துகிறது. இவற்றுள் சிலவற்றில் சுவர்களில் பௌத்த மத தேவதைகளின் உருவத்தைக் கொண்ட பல புரைகள் அலங்காரமாக அமைந்துள்ளன. இவ்வகை விஹாரங்களுக்கு உதாரணம் - அஜந்தா (குகை எண் 8-10, 12-13 தவிர) அவுரங்காபாத், எல்லோரா ஆகிய இடங்களில் உள்ளவயாகும். இவற்றுள் சில பிரமாண்டமான மூன்றடுக்கு அமைப்புகள் திறந்த வெளியில் கட்டப்பட்ட கோயில்களுக்கு, இன்று நிலைத்திருக்கும் பழங்கால எடுத்துக் காட்டுக்களைப் பார்த்தால் அவை குகைக் கோயில் அமைப்புக் கலையின் இரண்டாவது கால கட்டத்தைச் சேர்ந்ததாக இருப்பதைக் காணலாம். இருவகை கட்டிடக் கலையிலும் ஒன்றின் செல்வாக்கு மற்றதில் புலப்படுவதையும் அறியலாம்.

குகைக் கோயில் நிர்மாணக் கலையின் இறுதிக் கால கட்டம் கி. பி. 7 முதல் 10-வது நூற்றாண்டு வரையுள்ள காலமாகும். இதற்கான எடுத்துக் காட்டுகளை எல்லோரா, எலிபெண்டா, பம்பாய் அருகிலுள்ள ஸால்ஸெட் தீவு, மகாபலிபுரம் ஆகிய இடங்களிலுள்ள இந்து, ஜைன மதக் கோயில்களில் காணலாம். இவற்றுள் சில தெளிவான பிரிவுகளும் உள்ளன. உதாரணமாக

எல்லோராவிலுள்ள தசாவதாரக் குகை இப்பகுதியிலுள்ள ஒரே இரண்டடுக்கு இந்து ஆலயமாகும். இதன் முன் புறத்திலுள்ள ஒரு நந்தி மண்டபம் இருக்கிறது. இரு அடுக்குகளிலும் தூண்களமைந்த விஸ்தாரமான மண்ட பங்கள் உள்ளன. பின்புறச் சுவற்றில் இரு தூண்களைக் கொண்ட தோரண வாயில் இருக்கிறது. அதன் உட்புறம் சதுரமான அறைக்குள் லிங்கம் இருக்கிறது. மேல் அடுக்கின் சுவர்களில் சைவ, வைஷ்ணவ சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நந்தி மண்டபம், தூண்களமைந்த மண்டபம், அர்த்த மண்டபம் (தோரண வாயில்) சுவற்றில் சிற்ப வேலைப்பாடுகள் போன்ற இங்கு காணும் அம்சங்கள் திறந்த வெளியில் கட்டப்படும் கோயில்களின் அம்சங்களாகும் (உதாரணம் — ஐஹொளேயிலுள்ள லாட் கான், துர்க்கை ஆலயங்கள்) என்பதை நாம் கவனிக்க வேண்டும். தசாவதாரக் குகையில் இடம் பெறாத ஒரே ஒரு முக்கிய அம்சம் கோயில் மேல்தள அமைப்பு தான். குடவரைக் கோயிலில் இதை ஒருபோதும் அமைக்க முடியாது. மேற்சொன்ன இந்த அமைப்பை எல்லோரா விலுள்ள இராவண - கி - காயி, ராமேஸ்வரக் குகைகளிலும் காண்கிறோம். ஆனால், ஒரு மாறுதல். கர்ப்பக்கிருகம் பின் புறச் சுவற்றில் இல்லாமல் தனியே உள்ளது. சுற்றிலும் பிரதட்சிணப் பாதை இருக்கிறது. தூண்களில் அமைந்துள்ள அழகிய சிற்பங்களும், சுவர்களில் பொறித் துள்ள கார்த்திகேயன் ஜனனம், நடராஜர், கைலாசத்தை பெயர்த்தெடுக்க முயலும் இராவணன், கங்கை, யமுனை ஆகிய சிற்பங்களும், கும்பலதா பாணி தூண்களும், இராமேஸ்வர குகையிலுள்ள கவனத்துக்குரிய அம்சங் களாகும்.

இந்து மதக் குகைக் கோயில்களின் மூன்றாவது பிரிவுக்கு எடுத்துக் காட்டு எல்லோராவிலுள்ள துமா

லேனுவும், எலிபெண்டா குகைகளும், ஸால்ஸெட்டிலுள்ள ஜோகேஸ்வரி ஆலயமும் ஆகும். இந்த மூன்றும் பெரிய சிலுவை வடிவிலமைந்த மண்டபங்களாகும். இவை மூன்று வாயில்களைக் கொண்டவை. ஒன்று முன்புறத்திலும் மற்ற இரண்டும் பக்கத்துக் கொன்ருகவும் அமைந்தவை. நான்கு வாயில்களைக் கொண்ட லிங்க கர்ப்பக்கிருகம் மத்தியில் இருக்கும் சுவர்களில் அழகான சிற்பங்கள் பொறிக்கப் பட்டிருக்கும். கர்ப்பக்கிருகத்தின் வாயிலில் துவார பாலகர்கள் காவல் காத்து நிற்பார்கள். இவ்வகைக் கோயில் அமைப்பை பிற்கால இந்துக் கோயில்களில் காண்பது அரிது. ஆனல், ஜைன மதக் கோயில்கள் பல உள்ளன. தென் கன்னடத்திலுள்ள கர்க்கல் கோயில் இதற்கு உதாரணமாகும். இக் கோயில்களின் மற்ெருரு கண்ணைக் கவரும் அம்சம் ஆமலகத்துடன் அமைந்த அற்புதமான வேலைப்பாடுகள் கொண்ட தூண்களாகும். குடவரைக் கோயில் கலையின் கடைசி கால கட்டத்துக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாக எல்லோரா ஜைனர் குகைகள் இருக்கின்றன. இவற்றுள் ஜகன்னுத சபாவும், இந்திர சபாவும் சிறப்பானவை. இவை இரண்டு அடுக்கு கள் கொண்டவை. இவற்றின் பக்கவாட்டில் இரண்டு அடுக்குகள் கொண்ட சிறிய குகைகள் உண்டு. இந்திர சபா உன்னதமான வேலைப்பாடு நிரம்பியது. இதன் அடுக்குகளில் முகப்பு வாசல், தூண் மண்டபம், கர்ப்பக் கிருகத்தில் தீர்த்தங்கரருடைய சிலை ஆகிய எல்லாம் உள்ளன. அழகான வேலைப்பாடுடைய தூண்களுக்கும், சுவர் சிற்பங்களுக்கும் புகழ் பெற்றவை இவை.

இது போன்ற ஆனல் அடக்கமான குடவரைக் கோயில்கள் மைசூர் ஆந்திரா, தமிழ் நாடு, கேரளம், ஆகிய இராஜ்யங்களில் பல இடங்களில் உள்ளன. பீஜப்பூர் மாவட்டம் பாதாமிலுள்ளவை (கி. பி. 6–ஆம் நூற்ருண்டு)

அதன் தூண்களுக்கும், சுவர் சிற்பங்களுக்கும் புகழ் பெற்றவை. ஆந்திரப் புரதேசத்திலுள்ள அடவிசோமன பள்ளி, உந்தவல்லி, மொகல்ராஜபுரம் குகைக் கோயில் களின் தூண்கள் விசேஷ அமைப்பைக் கொண்டவை. கேரளத்தில் இருப்பவை மிகவும் எளியவை. தமிழ் நாட்டி லுள்ளவை 7-8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஆரம்ப கால பல்லவர்களும், பாண்டியர்களும் அமைத்தவை. இவை எளிய முறையில் இருந்த போதிலும் சிறப்பான சில கட்டிடக் கலையம்சங்களைக் கொண்டவை. இவை பிற்காலக் கோயில்களில் தொடர்ந்து உபயோகிக்கப் பட்டன. இவற்றில் எளிய தூண்களைக் கொண்ட மண்ட பங்கள் சுவற்றில் ஒன்று அல்லது மேற்பட்ட அறைகள் இருக்கும். இவற்றுள் பல மகாபலிபுரத்தில் உள்ளன. இவற்றுள் காலத்தால் முற்பட்டது முதலாம் மகேந்திர வர்மபல்லவன் அமைத்தது. இது எளிய ஆனல் பிரமாண்ட மான தூண்களைக் கொண்டது. ஒன்று, மூன்று அல்லது ஐந்து கர்ப்பக்கிருகங்களைக் கொண்டது. கூடு வேலைப் பாடு கொண்ட ஒரு எளிய **கபோதம்** அமைந்தது. தளவானூர் குகையில் கர்ப்பக்கிருகம் அவற்றிலிருந்து சற்று முன்புறம் நீட்டிக் கொண்டிருக்கிறது. மகாபலி புரத்திலுள்ள பெரும்பாலான குகைகள் முதலாம் நரசிம்ம வர்மன் காலத்தவை. மெல்லிய பிரம்பு வேலைப்பாடு அமைந்த தூண்களைக் கொண்டவை. உச்சியில் **பலகை** அமைப்பும் அடிப்புறத்தில் உட்கார்ந்திருக்கும் சிங்க உருவமும் இருக்கும். மகிஷ மர்த்தனி மண்டபத்தில் கர்ப்பக்கிருகம் சற்று முன்புறம் துருத்திக் கொண்டிருக் கிறது; பின்புறச் சுவற்றிலும், பக்கச் சுவர்களிலும் சிற்பங்கள் உள்ளன. இதற்குப் பிற்பட்ட காலக் குகை களில் தூண்களில் கம்பீரமான சிங்க உருவங்கள் உள்ளன. **கபோதத்தின்** மேல் வரிசையாக சிறிய அளவு கோயில் உருவங்கள் உள்ளன. பாண்டிய நாட்டுக் குடவரை

களின் தூண்கள் பருமனாகவும் சதுரமாகவும் உள்ளன. வேறு சிறப்பு அம்சம் எதுவும் இவற்றில் இல்லை.

மேற் சொன்ன குடைவரைக் கோயிலின் எடுத்துக் காட்டுகளைத் தவிர வேறொரு விசேஷ வகை கோயில்களும் உண்டு. பாறைகளையே செதுக்கி அமைக்கப்பட்ட இக் கோயில்கள் எல்லா வகையிலும் தனிக் கற்களைக் கொண்டு கட்டிய கோயில்களைப் போலவே இருக்கின்றன. இவை ஒரே கல்லிலானவை என்பதுதான் வேறுபாடு. ஒரே கல்லிலாலான ஸ்தூபங்களைப் பின்பற்றி இவை அமைக்கப்பட்டவை என்பதில் சந்தேகம் இல்லை. சைத்ய முற்றங்களில் வைக்கப்படாத இது போன்ற ஸ்தூபங்கள் ஆந்திராவிலுள்ள சங்காராமில் இருக்கின்றன. ஒரிஸ்ஸா உதயகிரியிலுள்ள தாவாவிலும் இத்தகைய ஒரே கல்லி லாலான கோயில் இருக்கிறது. இந்த விசேஷ வகை கட்டிடக் கலைக்கு சிறப்பான எடுத்துக் காட்டுகள் மகா பலிபுரத்திலும், எல்லோராவிலும் உள்ளவையாகும். இவற்றுள் எல்லோரா கைலாஸ நாதர் கோயில் மிகவும் விசேஷமானது.

மகாபலிபுரத்திலுள்ள ஒன்பது உதாரணக் கோயில் களும் 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. முதலாம் நரசிம்ம வர்ம பல்லவனின் மகத்தான காணிக்கை இவை. ஒரே கல்லிலான இவை தனித்து நிற்கும் உறுதியான பாறைகளைச் செதுக்கி அமைக்கப்பட்டவை. இவற்றுள் கிராமத்தின் தென்புறம் இருக்கும் திரௌபதி, அர்ச்சுனன், பீமன், தர்மராஜ, நகுல-சகாதேவ இரதங்கள் ஆகிய ஒவ்வொன்றும் அதன் தனி உருவ அமைப்புக்கும், இதர வேலைப்பாடுகளுக்கும் புகழ் பெற்றவை. இக் கோயில்களில் எல்லாம் சிற்ப வேலைப்பாடுகள் நிறைய உள்ளன ஸ்தூபிகள், ஆலய கும்பாபிஷேகத்தின் போது தான் பொருத்தப்பட வேண்டுமாதலால் அவை தனியே

செய்யப்பட்டு பின்னர் சிகரத்தில் அமைக்கப்படுகின்றன. இதர இரதங்களில் **கணேச இரதம்** கிராமத்திலேயே உள்ளது. மற்ற இரு பிடாரி இரதங்களும் வலயன் குட்டை இரதமும், கிராமத்தின் மேற்குப் பகுதியில் உள்ளவை. திரௌபதி இரதம் எளிய சதுர அமைப்புக் கொண்டது. குடிசையினுடையதைப் போன்ற மேற் கூரை அமைந்தது. அடிதளத்திலிருந்து உச்சி வரை சதுர அமைப்பைக் கொண்ட கூட வகைக்கு இது எடுத்துக் காட்டு. வலயன் குட்டை இரதம் இரண்டடுக்கு விமானத்தைக் கொண்டது. இதுவும் சிகரம் வரை சதுர அமைப்பு கொண்டது. தூணுக்கு மேலுள்ள பகுதியில் சிறிய அளவில் கோவில் உருவங்கள் உள்ளன. இவை **கோஷ்டம், சால கூடம்** என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. தெற்கே யுள்ள பிடாரி இரதமும் அர்ஜுன இரதமும் இரண்டடுக்கு கள் கொண்டவை. அடித்தளத்திலிருந்து **ஸ்கந்தம்** வரை – **கிரீவத்தின்** கீழ்ப்பகுதி வரை சதுர அமைப்பில் உள்ளது: கிரீவமும், சிகரமும் எண்கோண வடிவில் அமைந்திருப்பது ஒரு மாறுதலாகும். மேலும், இவை இரண்டிலும் ஒவ்வொரு அடுக்கின் மீதும் சுற்றுச் சுவர் உள்ளது. தர்மராஜ ரதம் மூன்றடுக்குகள் கொண்டது. கீழே சதுரமாகவும், கிரீவமும் எண்கோண வடிவிலும் அமைந்தது. இக் கோயிலின் மூன்று அடுக்குகளும் உபயோகப்படுபவை. ஒவ்வொரு அடுக்கிலும் கருவறை யும், வழிபாட்டுக்குரிய உருவச் சிலையும் உள்ளன. அத்துடன் ஒவ்வொன்றிலும் சிறிய அளவு கோயில்களைக் கொண்ட சுற்றுச் சுவரும் உள்ளது. கீழ் அடுக்கு பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது. அது செதுக்கப்பட்டிருக் கும் முறையிலிருந்து, இங்குள்ள கருவறையைச் சுற்றி தூண்களமைந்த மண்டபம் அமைக்கத் திட்டமிடப் பட்டிருந்தது என்பதை நம்மால் யூகிக்க முடிகிறது. ஓரடுக்கு பீமரதமும், இரண்டடுக்கு கணேச இரதமும்

நீண்ட சதுர அமைப்புக் கொண்டவை. வண்டியின் மேற்புரம் போல் கூரை அமைந்தவை. இதர கோயில்களில் ஒரேயொரு கலசம் இருப்பதற்கு மாறாக இவற்றில் பல உள்ளன. நகுல – சகாதேவ இரதம் தூங்காணை போன்ற அமைப்பு கொண்டது. இவ்வகையை கட்டடக்கலை நூல்கள் கஜபிருஷ்டம் அல்லது குஞ்சரம் என்று குறிப்பிடுகின்றன. வடபகுதியிலுள்ள பிடாரி இரதம், அடுத்துள்ள மற்றொரு இரதத்தைப்போலவே இருந்தபோதிலும் இதன் இரண்டாவது அடுக்கில் சுற்றுச் சுவர் இல்லாமல் இருப்பது கவனிக்க வேண்டிய அம்சம். காலத்தால் இது பிற்பட்டது என்பதை இம்மாறுதல் உணர்த்துகிறது. மேலும், கி. பி. 700–க்கு பின்னர் கட்டப்பட்ட கோயில்களுக்கு இது ஒரு முன் மாதிரியாக இருக்கிறது. தர்மராஜ இரதம், நகுல-சகாதேவ இரதம் ஆகியவற்றின் கைப்பிடிச் சுவற்றில் கோஷ்டங்கள், கூடங்கள் தவிர சிறிய அளவில் தூங்காணை அமைப்பில் நீடம் அல்லது பஞ்சரம் எனப்படும் ஒரு சிறிய கோயில் உருவமும் இருக்கிறது. இந்த மூன்று சிறிய அளவு கோயில்களும் சேர்ந்த அமைப்பு பிற்காலக் கோயில்களில் பூமிகளில் அலங்காரப் பொருள்களாக இடம் பெற்றன.

மேலே குறிப்பிட்ட ஒரே கல்லிலான கோயில்கள் சிலவற்றில் – உதாரணமாக தர்மராஜ, அர்ஜுன இரதங்களின் சுவர்களில் அழகான சிற்பங்கள் கொண்ட புரைகள் உள்ளன. மரபு வழிப்படி வந்த வகை இது. பழங்கால குகைக் கோயில்களிலும், ஸ்தூபங்களிலும் இத்தகைய வேலைப்பாடுகள் இடம் பெற்றிருப்பதை ஏற்கனவே பார்த்தோம். இந்த இரதங்களின் இதர அலங்கார வேலைப்பாடுகளில், தரங்க பொதிகைக்கட்டை வியாலம், கஜம் பெற்ற பீடம், மகா தோரணம் ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

தனித் தனியே நிற்கும் பெரும் பாறைகளில் செதுக்கப்பட்டவை மகாபலிபுரம் இரதங்கள். இவ்வகைக் கோயில்களில் மிகப் பெரியதும், மகத்தானதும் எல்லோரா கைலாஸ நாதர் கோயிலாகும். ராஷ்டிரகூட கிருஷ்ணன் (கி. பி. 757 - 783) அமைத்தது இது. நாற்புறமும் குன்றைக் குடைந்து அரண் போல் அமைத்து நடுவில் 60 மீட்டர் நீளமும் 30 மீட்டர் அகலமும் உள்ள பாறையில் செதுக்கப்பட்டது இக் கோயில். இதில், விமானம், மண்டபங்கள், நந்தி மண்டபம், பாறைச் சுவற்றில் சிறு தேவதைகளுக்கென வரிசையாக அமைந்த மாடங்கள், தனித்து நிற்கும் இரு தூண்கள், பிரதட்சிணப் பாதை, முன் புறம் உள்ள பாறையில் செதுக்கியமைத்த இரண்டடுக்கு கோபுர வாயில் ஆகிய எல்லாம் உள்ளன. கோபுரத்தின் மேல் அடுக்கு நந்தி மண்டபத்துடன் ஒரே கல் பாலத்தில் இணைக்கப் பட்டுள்ளது. பிரதான கட்டத்தில் சர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மூடப்பட்ட மகா மண்டபம், ஆகியவை உள்ளன. கோயிலின் இந்த பல்வேறு பகுதிகளும் உயர்ந்த பீடத்தின் மீது அமைக்கப் பட்டுள்ளன போல் தோன்றுகின்றன. பீடத்தில் யானைகள், சிங்கங்களின் உருவம் பொறித்த சிற்பங்கள் உள்ளன. மகா மண்டபத்தின் மூன்று வாயில்களின் மேலும் சாலா உருவில் மேற்கட்டு உள்ளது. அதன் இரு பின்புற மூலைகளில் கூட வகையிலமைந்த ஈரடுக்குக் கோயில் இருக்கின்றன. இந்த மண்டபத்துக்கு அப்பால் பிரதட்சிணப் பாதையுடன் கூடிய பிரதான விமானம் உள்ளது. அதைச் சுற்றி ஐந்து உப கோயில்கள் உள்ளன. இவற்றுள் மூன்று பக்கங்களின் மத்தியிலும் அமைந்துள்ளவை சாலா வகையில் இருப்பவை. இரு மூலைகளில் இருப்பவை கூட வகையைச் சேர்ந்தவை. இந்த ஐந்து கோயில்களும், மகா மண்டபமும், நந்தி மண்டபமும் சேர்ந்து அஷ்ட பரிவார வகையைச் சேர்ந்த கோயில் ஆகிறது. பிரதான விமானத்

தின் கிரீவமும், சிகரமும் எண்கோண வடிவில் அமைந் தவை. அமைப்பு அலங்கார வேலைப்பாடு ஆகிய எல்லாமே திராவிட பாணியில் உள்ளன. திராவிட பாணிக் கோயிலுக்கு சிறந்த எடுத்துக் காட்டுக்களில் ஒன்றான பட்டதக்கல் விருபாக்ஷர் கோயிலை முன் மாதிரியாகக் கொண்டு இக்கோயில் அமைக்கப் பெற்றது என்றும் கூறப்படுகிறது. இவ்வகை அமைப்பில் சுற்றுச் சுவற்றில் அரண்போல பல சிறு கோயில்கள் இருக்கும். ஒவ்வொன்றிலும் முழு ஆள் உயரச் சிற்பங்கள் இருக்கும். இவை பெரும்பாலும் இதிகாச, புராணக் கதைகளை சித்திரிப்பதாக இருக்கும். காஞ்சி கைலாசநாதர் கோயில் பிராகாரத்தில் வரிசையாக அமைந்துள்ள சிறு கோயில்களை இதற்கு இணை கூறலாம்.

எல்லோரா 33-வது எண் குகை முற்றத்திலுள்ள சிறு-கைலாசம், கைலாசநாத ஆலயத்தின் சிறு அளவு பிரதியாகும். இது மூன்றடுக்குகள் கொண்ட விமானம். கிரீவம் வரை சதுர அமைப்பு கொண்டது. கிரீவமும், சிகரமும் எண் கோணவடிவில் உள்ளவை. முன்புற முள்ள பாறைச்சுவர் கோபுரம் போல் செதுக்கப் பட் டுள்ளது. முற்றத்தில் தனித்து ஒரு கம்பம் உள்ளது.

குன்றைக் குடைந்து அரண்போல் அமைத்து நடுவில் செதுக்கப் பட்டுள்ள பாறைக் கோயிலுக்கு மற்றொரு உதாரணம் திருநெல்வேலி மாவட்டம் கழுகு மலையிலுள்ள வேட்டுவன் கோயிலாகும். இது 10.5 மீட்டர் ஆழமும், 25 மீட்டர் நீளமும், 13 மீட்டர் அகலமும் கொண்டது. ஈரடுக்கு விமானமும், அர்த்த மண்டபமும் பூர்த்தி செய்யப் படாமல் உள்ளன. பீடம் சதுரமாக 8-5 மீட்டர் பங்கங்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் கிரீவமும், சிகரமும் எண்கோண வடிவில் உள்ளது. முழுவதும் பூர்த்தியாகாமல் இருந்த போதிலும், பூர்த்தியாகியுள்ள

மேற்பகுதி உயர்ந்த கலைத்திறமையைப் புலப்படுத்து கின்றது. ஸ்கந்தத்தின் நான்கு மூலைகளிலும் உள்ள நந்தி சிற்பங்களும், பிரம்மா, விஷ்ணு, தக்ஷிணாமூர்த்தி சிற்பங்களும் அற்புதமானவைகளாக உள்ளன.

திராவிட பாணியிலமைந்த மேற்சொன்ன ஒரே கல்லா லான கோயில்களைப் போலவே நாகர பாணியிலமைந்த சில கோயில்களும் உள்ளன. இவ்வகையைச் சேர்ந்த 8-9ஆம் நூற்றாண்டுக் கோயிலொன்று மத்தியப் பிரதேசம் மண்டஸோர் மாவட்டத்தில் தம்னாரில் உள்ளது. சரளைக் கல் குன்றில் செதுக்கப்பட்டுள்ள இக்கோயில் வைஷ்ணவ மதத்தைச் சார்ந்தது. முன்புறம் மண்டபத்துடன் அமைந்த பிரதான விமானத்தைச் சுற்றி இதே போன்ற ஒரே கல்லாலான 7 உபகோயில்களைக் கொண்டிருக் கிறது இது. பிரதான கர்ப்பக்கிருகம் பஞ்சரத வகை, மேற்கட்டில் நுண்ணிய கவாக்ஷ வேலைப்பாடுகள் செதுக் கப்பட்டுள்ளன. லதின சிகரத்துக்கு மாதிரியாக இது அமைந்துள்ளது. உச்சியில் பெரிய ஆமலகம் உள்ளது. மண்டபத்தின் முன்புறம் சாலா கூரையமைந்த முகப்பு வாயில் இருக்கிறது. அதன் நான்கு மூலைகளிலும் சிறிய அளவில் சதுர விமானங்கள் உள்ளன. உப கோயில்களில் உயர்ந்த சிகரங்கள் உள்ளன. இவை கவாக்ஷ வேலைப் பாடுகள் நிரம்பியவை.

காங்க்ரா மாவட்டம் மஸ்ரூரிலுள்ள ஒரே கல்லாலான நாகர பாணிக் கோயில், ஒரு குன்றின் உச்சியிலுள்ள மணற் கல்லில் செதுக்கப் பட்டது. இமாலயப் பகுதி யிலுள்ள இவ்வகைக் கோயில் இது ஒன்று தான். ஒன்ப தாவது நூற்றாண்டைச் சேர்ந்தது. இது பல்லவர் கோயிலைப் போலவே தனித்து நிற்கும் பாறையில் குடையப் பட்டதாகும். மேலே சொன்ன தம்னார், எல்லோரா, வேட்டுவன் கோயில்களைப் போன்று குன்றைக் குடைந்து

அமைக்கப் பட்டதல்ல. இது பூர்த்தி செய்யப் பட்டிருந்தால் அஷ்டபரிவார வகைக் கோயிலாக இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. பிரதான கர்ப்பக்கிருகத்தின் மேலே, இப்போது சிதிலமாகி விட்ட மண்டபத்தின் கூரைக்கு சம மட்டத்தில் பாறை தட்டையான கூரை போல செதுக்கப் பட்டுள்ளது. பிரதான சிகரமும்; உப கோயில்களின் சிகரங்களும் இதில் உள்ளன. மத்திய விமானத்தின் கேற்கட்டு உயரமாகவும், உபகோயில்களின் மேற்கட்டு சிறியதாகவும் இருக்கிறது. முகப்பு வாயிலையும், மண்டபத்தையும் தாண்டி பிரதான கர்ப்பக்கிருகத்துக்குப் போக வேண்டும். மண்டமத்தின் இரு புறமும் மேலே செல்வதற்கான பாறையில் செதுக்கிய படிகள் உள்ளன. முகப்பு வாயிலின் இரு புறத்திலும் ஒரே கல்லாலான உபகோயில்கள் உள்ளன. இக்கோயிலின் முன்புறம், சதுரமான அடிப்பகுதியும் 16 கோண சிகரங்களும் கொண்ட இரண்டு சதுர்முக விமானங்கள் உள்ளன. இவற்றின் மேற்கட்டுகள் எல்லாவற்றிலும் கவாக்ஷ வேலைப்பாடுகள் இருப்பதால் இது லதிண வகைக் கோயிலாகும்.

பீகார், பகல்பூர் மாவட்டத்து கோல்காங்கிலுள்ள ஒரே கல்லாலான கோயில் இவ்வகைக்கோயிலுக்கு கடைநிலை எடுத்துக் காட்டாக இருக்கலாம். இது ஒரு வகையில் விசேஷமானது. கங்கையிலுள்ள பாறைத் தீவொன்றில் தனித்து நிற்கும் உறுதியான பாறையில் செதுக்கப் பட்ட கோயில் இது. வழக்கத்துக்கு மாறான 'உருவில் இது உள்ளது. விமானத்தின் உருவம் மட்டுமே செதுக்கப் பட்டுள்ளது. மற்ற பகுதிகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. 3-6 மீட்டர் பக்கங்கள் கொண்ட சதுர அமைப்பு இது. 6 மீட்டர் உயரமுள்ளது. மேற்கட்டு, கிரீவமும், பிரஸ்தரமும் இல்லாத சாலா வகையைச் சேர்ந்தது. தென்புறம் நோக்கியுள்ள இதன் முன்புறத்தில் முகப்பு வாயில்

உள்ளது. மேற்கட்டின் கிழக்கு, மேற்குப் புறச் சுவர்களில் ஒரிஸ்ஸா கோயில்களில் உள்ளது போன்ற சிற்பங்கள் உள்ளன.

இதுவரை நாம் பார்த்த ஒருகல் கோயில்கள், கற்களைக் கொண்டு அக்காலத்தில் கட்டப்பட்ட கோயில்களின் பாணியிலேயே பாறைகளில் செதுக்கப்பட்ட போதிலும் அவை அந்தந்த மதத்தின் தீவிர, பக்தி கொண்டவர்களின் அற்புதமான கலைப்பணியாகும். தனித் தனிக்கற்களை அடுக்கிக் கோயில் அமைப்பதில் திருப்தியடையாத இவர்கள் தங்கள் தெய்வங்களுக்கு பாறைகளைச் செதுக்கி நிரந்தர ஆலயங்களை அமைக்க முயன்றதையே இவை காட்டுகின்றன.

24

ஆலய நிர்மாணக் கலை : பழங்கால் எடுத்துக் காட்டுகள்

மதத்தைப் பரப்புவதற்கு கலையையும், ஆலய நிர்மாணத்தையும் சாதனமாக பயன்படுத்தியதற்கு பௌத்தர்கள், ஜைனர்களுடைய பக்திதான் காரணம் என்பதை இதுவரை பார்த்தோம். இதன் விளைவாக ஸ்தூபங்கள் சைத்ய முற்றங்கள் போன்ற மகத்தான கலைப்பொருள்கள் உருவாயின. இந்து மதத்தாரும் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்தவர்கள்தான். கிறிஸ்தவ சகாப்தத்துக்கு முன்பே சிலையமைத்து வழிபடும் வழக்கம் அவர்களிடம் இருந்திருக்கிறது. பதஞ்சலி மகாபாஷ்யத்தில் (கி மு. 2-ஆம் நூற்றாண்டு) ஸ்கந்தன், விசாகன் சிலைகளைப் பற்றிக் குறிக்கப்பட்டிருக்கிறது. வேதங்களிலும் சில இறைவடிவங்கள் பற்றிக் கூறப்படுகின்றது. ஆயினும், தங்கள் தேவதைகளுக்கு அவர்கள் பெரிய அளவில் கோயில் எழுப்ப முற்படவில்லையென்று தோன்றுகிறது. இந்து தேவைகளுக்குரிய புராதனக் கோயில்களின் இடிபாடுகள் சில உள்ளன. ஆனால், அவற்றின் அமைப்பையும் அலங்கார வேலைப்பாடுகளையும் அறிந்து கொள்ளப் போதுமானதாக அவை இல்லை. இக் கோயில்களில் பல அழிந்து போகக் கூடிய பொருளான மரம் போன்றவற்றைக் கொண்டு கட்டப்பட்டவை. அசோகன் காலத்தில் காஞ்சியிலுள்ள 40-ஆம் எண் கோயிலின் அடித்தளம் இதற்கு எடுத்துக் காட்டாகும். கல்லாலான இது பின் புறம் வளைந்த நீண்ட

சதுர நில வரை கொண்டது. இது பௌத்த கோயிலான போதிலும், காலகாலமாக கோயில்கள் கட்டக் கையாளப் படும் மூன்று அல்லது நான்கு வகை தரைப் படங்களில் ஒன்றினை வைத்துக் கட்டப்பட்டது. இது சங்கர்ஷணர் வாசுதேவர் ஆகியோருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கோயிலின் எஞ்சிய பகுதிகள். இராஜஸ்தான், உதய புரியிலுள்ள நகரி என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட் டுள்ளன மற்றொரு வைஷ்ணவக் கோயில் மத்தியப் பிரதேசம் விதிசையில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் கி.மு. 2-ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை. விதிசைக் கோயிலில் மேலே கருட உருவம் பொறித்த கல்லினாலான த்வஜஸ்தம்பம் காணப்படுகிறது. இது ஒன்றைத் தவிர, கோயிலின் எஞ்சிய இடிபாடுகளில் அதன் பூரண அமைப்பைப் புலப்படுத்தக்கூடியதாக எதுவும் இல்லை.

தக்ஷசிலம் செண்டியாலிலுள்ள கோயில் ரசமானது. கி.மு. 100-ஆம் ஆண்டைச் சேர்ந்த இது கிரேக்க பாணிக் கோயிலுக்கு உதாரணமாகும். தலைவாயில், முகப்பு, கர்ப்பக்கிருகம், பின்புற வாசல் ஆகியவைகளைக் கொண் டது. பின்புற வாயிலுக்கும் கர்ப்பகிருகத்துக்கும் இடையே ஒருவேளை கோபுரம் இருந்திருக்கலாம். ஜாரதுஷ்டிர மதக் கோயில் இது என்று கருதப்படுகிறது. தக்ஷசிலத்தில் தூங்கானைமாட வகை இரு கோயில்களும் உள்ளன. ஒன்று சிர்காப்பிலும் கி.பி. முதலாம் நூற் றாண்டு) மற்றொன்று தர்மராஜிக ஸ்தூபஸ்தலத்திலும் (கி.பி. 3-ஆம் நூற்றாண்டு) இருக்கின்றன.

இவை தவிர, கிறிஸ்தவ சகாப்தத்துக்கு முந்திய சில நூற்றாண்டுகளிலும் வேறு பலவகையான கோயில்கள் இருந்திருக்கின்றன என்பதை சாஞ்சி, பர்ஹூத், அமரா வதி சிற்பங்களில் சிறிய அளவில் பொறிக்கப்பட்டுள்ள

தைக் கண்டு அறிய முடிகிறது. இக்கோயில்கள் பெரும்பாலும் தூண்கள் கொண்டவை. சதுரம், வட்டவடிவம், நீண்ட சதுரம் ஆகிய நிலப்பட உருவில் ஒன்று அல்லது இரண்டடுக்கு கூரைகளைக் கொண்டவை. சாஞ்சியிலுள்ள நாகர் கோயில், பர்ஹூத்திலுள்ள சுதர்ம தேவ சபா, ஜக்கய்ய பேட்டாவிலுள்ள நீண்ட சதுர வடிவ புண்ணிய சாலை அமராவதியிலுள்ள வட்டவடிவக் கோயில் ஆகியவற்றை இதற்கு எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

தென்னிந்தியாவில் நாகார்ஜுனகொண்டாவிலுள்ள (கி.பி. 3–4–ஆம் நூற்றுண்டு) இக்ஷ்வாகு ஸ்தலத்தில் பல கோயில்களின் இடிபாடுகள் கிடைத்துள்ளன. ஆனல் துரதிர்ஷடவசமாக இவை சிதறுண்ட பகுதிகளாக இருப்பதால் அக்கோயில்களின் அமைப்பு. அலங்கார வேலைப்பாடுகள் குறித்து எதுவும் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும், இவை செங்கல்லால் கட்டப்பட்டு சுற்றிலும் பெரிய தூண்களைக் கொண்ட மண்டபங்கள் அமைந்ததாக இருந்தன என்பதை ஏராளமான ஒருவகை சுண்ணும்புக் கல் தூண்களின் பகுதிகள் கிடைப்பதிலிருந்து யூகிக்க முடிகிறது. இப்பகுதியில் குறிப்பிடத்தக்கவை புஷ்பபத்ரஸ்வாமி, விருபாக்ஷபதி, மகாசேனர், அஷ்டபுஜஸ்வாமி கோயில்களாகும்.

25

4-7 நூற்ருண்டுகளுக்கிடையே கோயில் கலை

ஆலய நிர்மாணத்தை ஒரு கலையாகப் பாவித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை கி. பி. நான்காவது நூற்ருண்டிலிருந்து காணமுடிகிறது. வடக்கே குப்தர் காலம் இந்த மலர்ச்சிக்குக் காரணமாகும். தக்காணத்தில் முற்கால சாளுக்கியர்களும் அவர்கள் காலத்திலிருந்த இதரர்களும் இக்கலைக்கு ஆதரவளித்தனர். தென்ஞட்டில் முற்காலப் பல்லவர்கள் ஆதரவாளர்களாக இருந்தனர். இக்காலத்திய கல்வெட்டுக்கள், அப்போதிருந்த மகத்தான கோயில்களைப் பற்றி பெரிதும் புகழ்ந்து கூறுகின்றன. யுவான் சுவாங் கூறியுள்ள விவரங்களில் பலவகையான கட்டிடங்கள் அந்த நூற்ருண்டில் இருந்ததற்கான ஆதாரம் காணக் கிடைக்கிறது. இந்தக் கோயில்களில் பல இப்போது நிலைத்திராத போதிலும், இன்றுள்ள ஒரு சில கோயில்கள், ஆலய நிர்மாணக் கலை பற்றிய ஆராய்ச்சிக்கு மிகவும் மதிப்புள்ளதாகும். இந்தக் கால கட்டத்தில் கற்களைக் கொண்டு கோயில்கள் கட்டப்பட்டன. இந்து மதத்தினர் இதில் பெரும்பங்கு வகித்தனர். பல சோதனைகளைச்செய்து பார்த்தகாலமாக இது இருந்ததால் அமைப்பு, வகை, வேலைப்பாடு, அலங்காரம் ஆகியவை வெவ்வேருக உள்ளன. ஆயினும், அடுத்து வந்த காலங்களில் கட்டிடக்கலை ரீதியான திட்டவட்டமான அமைப்புகள் ஏற்படுவதற்கு இது உதவியது. இக்காலத்தைச்

சேர்ந்த ஆலயங்களுக்கான எடுத்துக் காட்டுக்கள் பெரும் பாலும் மத்திய இந்தியாவிலேயே உள்ளன. இந்தக் காலத்தின் இறுதியாண்டுகளில் ஒரு சில அழகிய கோயில்கள் தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் கட்டப்பட்டன.

சதுரம், வட்டம், வளைந்த பின்புறமுள்ள நீண்ட சதுரம் ஆகிய தரைப்பட அடிப்படையில் செங்கல், சுண்ணும்புக்காறை, மரம் போன்ற பொருள்களைப் பயன்படுத்திக் கட்டிய இந்தக் காலத்தைச் சேர்ந்த கோயில்கள் பல இன்றும் உள்ளன. கட்டிடத்தில் கையாளப்பட்டுள்ள கலை நுணுக்கம் அதன் அமைப்புக்கான பல்வேறு பகுதிகள், சிற்பங்களின் அமைப்பு முறை ஆகியவை நாம் கவனிக்க வேண்டிய அம்சங்களாகும்.

இன்றுள்ள பழைய கோயில்களில் இரண்டு தூங்கானை மாடம் போன்று அமைந்த செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களைக் குறிப்பிடலாம். ஷோலாப்பூர் மாவட்டம் தேர் அல்லது தகரத்தில் உள்ளது ஒன்று; மற்றது கிருஷ்ணு மாவட்டம் சேசர்லாவில் உள்ளது. இவை இரண்டும் கி.பி. ௫–ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவை. ஆரம்பத்தில் இவை சாஞ்சியிலும் தக்ஷசீலத்திலும் உள்ளவை போன்ற பௌத்த சைத்யங்களாக இருந்தன. பின்னரே, இந்துக் கோயில்களாக மாற்றப்பட்டன என்று கருதப்படுகிறது. இவற்றின் அமைப்பு, கூரை. முகப்புச் சித்திரங்கள் ஆகியவை கவனத்தைக் கவரும் அம்சங்கள். விதானம் உச்சியில் மிக அழகாக உருட்டி விடப்பட்டுள்ளது. யானையின் பின்புறம் போன்ற தோற்றமளிப்பதால் இதற்கு கட்டிடக்கலை நூல்கள் குஞ்சரம், கஜப்பிருஷ்டம் என்ற பொருத்தமான பெயரை அளித்துள்ளன. சேசர்லா கோயிலின் முகப்பு அலங்காரங்கள் பின்னுல் புதுப்பிக்கப் பட்டபோது மாறுதல் செய்யப்பட்டிருந்த போதிலும், கவர்ச்சியான சில அம்சங்களை இன்றும் பெற்றுள்ளன.


இதைத் தவிர இக்கோயில்களில் வேறு விசேஷம் எதுவும் இல்லை.

வட்ட வடிவ அமைப்பில் கட்டப்பட்ட இக்காலக் கோயில்கள் சில இருந்தன. ஆனால், பழைய நகரமான இராஜக்கிருகத்திலுள்ள மணியார் மடம் எனப்படும் ஒன்றைத் தவிர, இவ்வகைக் கோயில்கள் எதுவும் இன்று நிலைத்திருக்கவில்லை. இதற்கு முன் நாம் பார்த்த ஆந்திரப் பிரதேச ஸ்தூபங்கள் கட்டுவதற்கு கையாளப் பட்ட அமைப்பே இது. சுற்றுச் சுவர் முழுவதும் சிற்ப உருவங்கள் அமைப்பதற்கான புரைகள் உள்ளன. இவற்றுள் நாகினி சிற்பம் சிறப்பானது. வழிபடும் தேவதை உருவங்களாகவோ, கலைப் பொருள்களாகவோ சுவர்களில் இவ்வாறு சிற்பங்கள் இருப்பது கோயில்களின் அழகுக்கு மேலும் அழகு செய்கிறது. பிற்காலத்தில் இத்தகைய சிற்பங்கள் வழி பாட்டுக்குரிய தேவதைகளின் உருவங்களாகத்தான் இருந்தன. அவற்றின் வேலைப்பாடு எப்போதும் உன்னதமானதாக இருக்கும். ஆலய அமைப்பில் இவைகளுக்கு அளித்துள்ள இடம் கட்டிடத்துக்கு கலை மதிப்பளித்தது.

இக்காலத்தைச் சேர்ந்த இதர கோயில்கள் பெரும் பாலும் மத்திய இந்தியாவில் உள்ளன. இவை மிகச் சிறிய கோயில்கள். ஆயினும், பிற்காலத்தில் இந்திய கட்டிடக் கலையில் ஏற்பட்ட உணர்ச்சிகளுக்கான வித்துக்கள் இவற்றில் இருந்தன. இவற்றுள் இரண்டு, மூன்று தெளி வான பிரிவுகளைக் காண முடிகிறது. 1. தட்டையான கூரை யமைந்த சதுர அமைப்புக் கோயில்கள் (முண்டப் பிராசாதங்கள்) 2. தூண் மண்டபம் சூழ்ந்த சதுர அமைப்பு கோயில்கள்; முதல் அடுக்கிலும் கர்ப்பக்கிருகம் கொண்டவை. 3. மேடை மீது கட்டப்பட்ட தாழ்ந்த சிகரமுடைய சதுர அமைப்புக் கோயில்கள்.


முதல் பிரிவைச் சேர்ந்த கோயிலின் கட்டிடக் கலை நுணுக்கங்கள்தான் அடிப்படையானவை; இதன் மீது பல அபிவிருத்தி செய்யப்பட்டுத்தான் ஆலய நிர்மாணக் கலை உன்னத நிலைக்கு உயர்ந்தது. சாஞ்சியிலுள்ள 17–ஆம் எண் கோயில் முண்டப் பிரசாத வகைக்கு சரியான எடுத்துக் காட்டு. சதுர வடிவ கர்ப்பக்கிருகம் கொண்டது இது. முன்புறம் வழிபட வருபவர்களுக்கு இடமளிக்கும் தூண்களமைந்த முகப்பு மண்டபம் இருக்கும். தூண்களின் மேற் பகுதி கவிந்த தாமரை மலர் உருவில் அமைந்திருக்கிறது. இக் கோயிலின் சுவர்கள் தெளிவாக உள்ளன. இவ்வகைக் கோயிலுக்கு வேறு உதாரணங்கள் ஜபல்பூர் மாவட்டம் டிகாவாவிலுள்ள கோயிலும், சாகர் மாவட்டம் ஏணிலுள்ள கோயிலும் ஆகும். இவற்றுள், பின்னதில் சுவர்கள் ஒவ்வொன்றிலும் அதன் மத்திய பகுதியில் அணை சுவர் போன்ற நீட்டிக் கொண்டிருக்கும் பகுதி உள்ளது. பொதுவில் அடக்க மான இக் கோயில்கள் ஒழுங்கான அமைப்புக்கும் பொருத்தமான அளவுக்கும் கவனிக்கப்பட வேண்டியவை. இவை 4–5–ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவை. இவற்றில் தான் முறையான ஒரு கோயிலின் அத்தியாவசியமான பகுதிகளான சதுர வடிவ கர்ப்பக்கிருகம், சந்து போன்ற வாயில், முன்புற மண்டபம் ஆகிய அம்சங்கள் பிரதான மாக இடம் பெற்றுள்ளன. இரண்டாவது சந்திர குப்தன் காலத்தைச் சேர்ந்த, உதயகிரியிலுள்ள இரு கோயில்களும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவை தாம். இவற்றின் கர்ப்பக் கிருகம் பாறையில் செதுக்கப்பட்டுள்ளது; முகப்பு வாயில் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது என்ற அம்சம் நமது கவனத்தைக் கவர்வதாகும். இப்படி இரண்டும் சேர்ந்திருப்பது ஆலய நிர்மாணக் கலை. அதன் ஆரம்ப கட்டத்தில் அப்போது இருந்ததையே தெளிவாகக் காட்டுகின்றது.

நாச்னுகுடாராவிலுள்ள பார்வதி கோயில், பூமாரவி லுள்ள சிவன் கோயில் (இரண்டும் மத்திய இந்தியாவில் உள்ளவை. காலம் 5-6 – ஆம் நூற்றுண்டு) ஐஹொளேயி லுள்ள லாட்கான், கோண்ட் குடி, மேகுடி ஆலயங்கள் (தக்காணம் 5-7 – ஆம் நூற்றுண்டு) ஆகியவை இரண்டா வது பிரிவுக்கு எடுத்துக் காட்டுகளாகும். இவற்றில் கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி மற்ருெரு சுவர் உள்ளது. உட் புறம் வெளிச்சம் வருவதற்காக சுவற்றில் சாளரங்கள் உள்ளன. நாச்னுகுடாரா கோயிலின் காப்பக்கிருக சுவற்றிலும் சாளரங்கள் உள்ளன. எனவே, இக்கோயில் கள் கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி மேலே மூடப்பட்ட பிரதட்சிணப் பாதையமைந்த சாந்தார வகைக் கோயில் களுக்கு எடுத்துக் காட்டுகளாகும். இவ்வகையைச் சேர்ந்த மகத்தான கோயில்கள் பின்னர் கட்டப்பட்டன. இதற்கு தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயமும், கஜூராஹோ கந்தரிய மகா தேவர் ஆலயமும் சிறந்த உதாரணங் களாகும். இந்த விசேஷ அம்சம் தவிர, நாச்னுகுடாரா பார்வதி கோயிலிலும் ஐஹொளே லாட்கான் ஆலயத் தின் மேல் அடுக்கிலும் ஒரு கர்ப்பக்கிருகம் உள்ளது. ஒரு கர்ப்பக்கிருகத்தின் மீது இன்னொன்றை அமைக்கும் இந்த ஏற்பாடு திராவிட பாணியில் பல அடுக்குகள் கொண்டதர்க கோயில்கள் கட்டுவதற்கு வழி வகுத்தது என்று கூறலாம். பூமரா ஆலயத்தில் மற்ருெரு முக்கிய மாறுதலைக் காண்கிறோம். படிக்கட்டின் இரு புறத்திலும் சிறிய உப கோயில்கள் அமைந்திருப்பதே அது. பஞ்சாயதன, அஷ்டபரிவார வகைக் கோயில்களுக்கு இது வழி காட்டியது என்று சொல்லலாம். பஞ்சாயதன வகைக்கு ஆரம்ப கால எடுத்துக் காட்டுகள் நாளந்தா, எல்லோரா – கைலாஸம் (8–ஆம் நூற்றுண்டு) காங்க்ரா விலுள்ள மஸ்ரூர் (9–ஆம் நூற்றுண்டு) ஆகியவையாகும்.




படம் 25 தில்வாரா கோயில் விதானம்

அத்தி 30 பார்க்க



படம் 26 தில்வாரா தேஜாதிபதி கோயில்

அத்தி 30 பார்க்க




படம் 27 விஷ்ணுபூர் ஜோர் பங்களா

அத்தி 31 பார்க்க




படம் 28 லக்குண்டி காசி விஸ்வேஸ்வரர் கோயில்

அத்தி 35 பார்க்க




படம் 29 பலம்பேட் கோயில்

அத்தி 35 பார்க்க



படம் 30 சோம்நாத்பூர் கேசவர் ஆலயம்

அத்தி 35 பார்க்க



படம் 31 மகாபலிபுரம் வராக மண்டபம்

அத்தி 37 பார்க்க



படம் 32 மகாபலிபுரம் ஒற்றைக்கல் இரதம்

அத்தி 37 பார்க்க

மேலமலேயிலுள்ள விஜயாலயசோழீஸ்வரம் அஷ்டபரிவார வகைக்கு எடுத்துக் காட்டு.

ஐஹொளேயிலுள்ள, லாட்கான், கோண்ட்குடி கோயில்களில் தூண் மண்டபமும் உள்ளது. தூண்களின் பிரும்மாண்டமான அளவும், அவை அமைந்திருக்கும் எளிய முறையும் கவனத்தைக் கவர்பவை. லாட்கான் கோயிலில் பின்புறச் சுவற்றுடன் ஒட்டினுற் போல் கர்ப்பக் கிருகம் இருப்பது குகை விஹாரங்களில் கருவறையை பின்புறச் சுவற்றில் அமைக்கும் வழக்கத்தை நினேவு படுத்துவதாகும். இந்த அம்சங்கள் தவிர, இக்கோயில் களில் தூண்களின் உச்சியிலும் இதர பகுதிகளிலும் அழகான சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கணங்கள் கீர்த்திமுகங்கள் இவற்றில் இடம் பெற்றுள்ளன.

ஐஹொளேயிலுள்ள மேகுடி ஜைன ஆலயம், (கி. பி, 634) முற்கால சாளுக்ய மன்னன் இரண்டாவது புலிகேசியின் காலத்தைச் சேர்ந்தது. இந்தக் கால கட்டிடக் கலேக்கு சிறந்த உதாரணமாக இது விளங்கு கிறது. இக்கோயிலின் கட்டிடக் கலே நுணுக்கம் வளர்ச்சி பெற்றதாகவும், அலங்கார வேலேப்பாடுகள் பண்பட்ட தாகவும் உள்ளன. இதில் கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி பிரதட்சிணப் பாதையும், முகப்பு வாயிலும் உள்ளன. இரண்டும் அந்தரனத்தினுல் இணேக்கப்புட்டுள்ளது. சுவர்களில் ஒழுங்கான இடைவெளியில் துருத்திக் கொண்டிருக்கும் சதுர அறை தூண்கள் அமைந்துள்ளன. சுவர்களில் அலங்கார வேலேப்பாடுகள் உள்ளன. மகாபலி புரத்திலுள்ள பல்லவர் காலக் கோயில்களும் இதே காலத்தைச் சேர்ந்தவைதாம்.

மூன்ருவது பிரிவுக் கோயில்களின் கூரையில் சிகரம் அல்லது வளேகோடுகளான மேற்கட்டு இருக்கும். பிற் காலக் கோயில்களில், அற்புதமான வேலேப்

பாடுகள் செய்யப் பட்டன. நாகர பாணிக் கோயில் களுக்கு இவை ஆரம்ப கால எடுத்துக் காட்டுக்களாகும். இவைகளுக்கு சிகரக் கோயில்கள் என்ற பெயரும் உண்டு. ஜான்ஸி மாவட்டம் தேவ்காரிலுள்ள (கி. பி. 6-நூற்றுண்டு) தசாவதாரக் கோயில் இவ்வகைக்கு ஆரம்ப கால எடுத்துக் காட்டுகளில் ஒன்றுகும். நாச்ண குடாரா மகாதேவர், பதரி ஆலயம், கான்பூர் மாவட்டம் பித்ரகாமிலுள்ள கோயில். புத்தகயையிலுள்ள மகாபோதி ஆலயத்தின் மூல அமைப்பு ஆகியவை இவ்வகைக்கு இதர உதாரணங்களாகும்.

ஏற்கெனவே, கூறியிருப்பது போல் இவ்வகைக் கோயில்களின் விசேஷ அம்சம் அவை கட்டப்பட்டிருக்கும் மேடையாகும். கற்களால் கட்டப்பட்ட தசாவதாரக் கோயிலில் இத்தகைய மேடை உள்ளது. இதன் மத்தி யில் கர்ப்பக்கிருகம் அமைந்துள்ளது. மேடையின் நான்கு புறத்திலும் நான்கு படிகள் உள்ளன. இதில் ஏறி கர்ப்பக் கிருகத்துக்குச் செல்லவேண்டும். இராமாயணம், பாகவதம் ஆகியவற்றிலிருந்து காட்சிகள் அழகிய சிற்ப வடிவில் மேடையில் இடம் பெற்றுள்ளன. கர்ப்பக்கிருகத்துக்கு ஒரு புறம் வாயில் உள்ளது. வாயில் கால்களில் சாகா வேலைப்பாடுகளும், சிற்பங்களும் அமைந்திருக்கின்றன. மற்ற மூன்று சுவர்களில் ஒவ்வொன்றிலும் அழகிய சிற்பங் கள் கொண்ட மாடமும், அதன் இரு புறமும் பெரிய அழகிய வேலைப்பாடுடன் கூடிய சிற்பம் அமைந்த, துருத்திக் கொண்டிருக்கும் சதுர அரைத் தூண்களும் உள்ளன. உச்சியில் லதிை வகை மேற்கட்டு இருந்தது. இப்போது மேற்கட்டு முழுவதுப் பாழடைந்து விட்டது. மேடை மீது செங்கற்களால் கட்டப்பட்ட பித்ரகாம் கோயில் இவ்வகைக்கு மற்றெரு ரசமான உதாரணம். கும்பம் போன்ற கூரையமைந்த கர்ப்பக்கிருகம், அந்த

ராளம், முகப்பு வாயில் ஆகியவை இதில் உள்ளன. இதிலும் ஒரு கர்ப்பக்கிருகம் இருக்கிறது. தரைப்படம் சதுரமானது; ஒவ்வொரு பக்கத்தின் நடுப் பகுதியிலும் சிறிது நீட்டிக்கொண்டிருக்கும் சுவர்களில் சுட்ட மண்ணிலான வேலைப்பாடுகள் உள்ளன. இடையிடையே அலங்காரமான, துருத்திக்கொண்டிருக்கும் அரைத் தூண்கள் உள்ளன. பக்கங்களில் நீட்டிக் கொண்டிருக்கும் பகுதி கர்ப்பக்கிருகத்தின் முழு உயரத்துக்கு உள்ளது. இது கோயிலுக்கு திரி - ரத வடிவைத் தருவதாக இருக்கலாம். புத்தகயையிலுள்ள மகாபோதி ஆலயத்தின் மூல அமைப்பு அதன் செங்கற் கட்டிட முறையிலும், இதர அம்சங்களிலும் பித்ரகாம் கோயிலைப் பெருமளவு ஒத்திருக்கிறது. ஒரு வேளை இது சம காலத்ததாக இருக்கக் கூடும். இன்றும் நல்ல முறையில் நிலைபெற்றிருக்கும் படாரியிலுள்ள கோயிலில் (கி. பி. 6–ஆம் நூற்றாண்டு) சிறிது உட்புறம் வளைந்த உச்சியுள்ள சிகரம் உள்ளது. இதுவும் ஸிர்பூரிலுள்ள இலக்ஷ்மணர் கோயிலும், நாச்ன குடாரா மகாதேவர் கோயிலும், இவ்வகைக்கு வேறு சில உதாரணங்களாகும். மகாதேவர் கோயிலில் மூலையிலுள்ள ஆமலகங்களுடன் உச்சியில் பூரணமான அமலகமும் இருக்கிறது.

கற்களைக் கொண்டு ஆலயங்களை அமைக்கும் கலையின் அம்சங்கள் தோன்றி உருப் பெற்ற காலத்தைச் சேர்ந்த மேற்சொன்ன கோயில்கள் இரண்டு தெளிவான பாணிகள் உருவாயின என்பதைப் புலப்படுத்துகின்றன. ஒன்று சிலுவை நிலவறை அமைப்புச் சிகரம் அல்லது ரேகை கோபுரத்தைக் கொண்டது. (உதாரணம்– பித்ரகாம், தேவ்கார் கோயில்கள்) மற்றது சதுர நிலவறை அமைப்பும் பிரமிட் உருவ விமானமும் கொண்டது. (உதாரணம்–ஐஹொளேயிலுள்ள லாட்க்கான், கோண்ட்

குடி, மேகுடி ஆலயங்கள்) முன்னதற்கு நாகர பணி யென்றும், பின்னதற்கு திராவிட பாணி என்றும் பெயரிடப் பட்டுள்ளது. இந்த இரு பாணிகளும் பிராந்திய வாரியாக வளர்ச்சியடைந்துள்ள விதம் பற்றி இனி பார்ப்போம்.

26

நாகர பாணி கோயில்கள்

இந்தியக் கட்டிடக்கலை கி. பி. 6–7 நூற்றுண்டு களில் ஒரு திரும்பு முனையில் இருந்தது. ஏதாவது சில திட்டவட்டமான பாணிகளை உருவாக்கப் போராடிக் கொண்டிருந்தது. இந்தக்கால கட்டத்தைச் சேர்ந்த இன்றும் நிலைத்திருக்கும் கோயில்களைப் பற்றிப் பார்த் தோம். தீர்மானமான ஒரு முடிவுக்கு வருவதற்கு பல பரிசோதனைகள் மேற் கொள்ளப் பட்டன என்பதை இவைகளில் கண்டோம். அப்போது தான் சதுர அமைப்பு கர்ப்பக்கிருகத்தின் மீது பிரமிட் உருவ விமானம், அல்லது வளை கோடுகளால் ஆன விமானம் அமைக்கும் மரபு உருவாகத் தொடங்கியது. சோதனைகளை மேற் கொண்டதன் விளைவாக இந்த இருவகைக் கோயில்களும் அருகருகே கட்டப் படலாயின. பீஜப்பூர் மாவட்டத்தி லுள்ள ஐஹொளே, பாதாமி, பட்டதக்கல் ஆகிய இடங் களில் இதனைக் காண்கிறோம். ஆயினும், அடுத்த கால கட்டத்தில் பிரமிட் உருவ விமான அமைப்புக் கொண்ட கோயில்கள் கிருஷ்ணாநதிக்கு தெற்கேயும், வளை கோடு களாலான விமான அமைப்புக் கோயில்கள் இந்தியாவின் இதர எல்லா பகுதிகளிலும் கட்டப்பட்டன. முன்னது ஒரு குறுகிய பிரதேசத்துக்குள் வளர்ச்சி பெற்ற காரணத் தால், அதன் பரிணாம வளர்ச்சி நிதானமாக இருந்திருக் கிறது. மற்றது, இந்தியாவின் பரந்த நிலப்பரப்பில் வழக்கத்தில் இருந்ததால் பல பிராந்திய வாரியான அபி விருத்திகள் அதில் ஏற்பட்டன. ஒவ்வொரு பிராந்தியத்

திலும் அடிப்படையான அமைப்பின் மீது பல ரசமான மாறுதல்கள் செய்யப் பட்டுள்ளன. பிராந்திய ரீதியில் பல அபிவிருத்திகள் இவ்வகையில் ஏற்பட்டிருப்பதன் காரணமாக இவற்றைப் பற்றி தொடர்ச்சியான விவரங்களைத் தருவது சாத்தியமல்ல. எனவே, பிராந்தியவாரியாகத் தான் இவற்றை பார்க்க வேண்டும்.

27

ஒரிஸ்ஸா கோயில்கள்

நாகர பாணியில் கட்டப்பட்ட கோயில்கள் அதிகமாகக் காணப்படுவது ஒரிஸ்ஸாவில் தான். 8 முதல் 13 வது நூற்றுண்டுக்குள் கட்டப்பட்டவை இவை. ஒரிஸ்ஸாவில் ஆலய நிர்மாணக்கலை வளர்ச்சி பெற்றுள்ள வரலாற்றை எளிதில் அறிய முடிகிறது. அக்கோயில்கள் அவ்வப் போது ஆண்ட கலிங்க அரசர்களின் ஆதரவுடன் கட்டப் பட்டன என்பது தெளிவு. இவற்றின் வேலைப்பாடுகள் மேலும் குப்தர் காலத்தில் உருவான பாணியைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. ஆனல், இதர பிராந்தியங் களில் சில மாறுதல்கள் செய்யப் பட்டிருப்பதைக் காண் கிறோம். எனவே நாகர பாணிக் கோயிலமைப்பின் சுத்த மான மரபுகளை ஒரிஸ்ஸா கோயில்கள் தம் அகத்தே கொண்டுள்ளன என்று கூறலாம். உண்மையில் ஒரிஸ்ஸா வுக்கே உரிய கட்டிடக்கலை பாணி ஒன்றும் இருந்தது. இன்று வரை அது நிலைத்திருக்கிறது.

இந்தப் பிராந்தியத்திலுள்ள கோயில்களின் பரிணாம வளர்ச்சியை ஆராயப் புகுமுன், ஒரு கோயில் அமைப்பின் பல்வேறு பகுதிகளின் பெயர்களையும், நினைவு படுத்திக் கொள்வது நலம். இப்பிரதேசத்தின் பழங்காலக் கோயில் கள்-குப்தர் காலத்தவை போலவே ஒரே கர்ப்பக்கிரகம் கொண்டதாக இருந்தன, முன்புறம் மண்டபமோ, முகப்பு வாயிலோ இராது. பரசுராமேஸ்வரர் கோயிலில் பின்னல் சேர்த்துக் கட்டப்பட்ட மண்டபத்திலிருந்து இதை அறியலாம். சிகரத்துடன் கூடிய சர்ப்பக்கிருகத்

துக்கு பாத அல்லது ரேக்கா தெவுள் என்று பெயர். பிரமிட் உருவில் உள்ள மூடமண்டபம் அல்லது ஜகமோகனம், பத்ர அல்லது பீட தேவுள் எனப்படுகிறது. பிற்காலக் கோயில்களில் போகமந்திர், நடமந்திர் எனப்படும் இரண்டு மண்டபங்கள் ஜகமோகனத்தின் முன்னுக, ஒன்றின் முன் னென்ருக அமைக்கப் பட்டன. இவை யனைத்தையும் சுற்றி அப்போது பிராகாரம் இருந்தது. இதர இடங்களில் செய்தது போலவே இங்கும் நாளடைவில் பிராகாரத்தில் உப கர்ப்பக்கிருகங்கள் அமைக்கப் படலாயின.

கர்ப்பக்கிருகம், செங்குத்து அமைப்பில் நான்கு பிரதான பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. பிஷ்மும் இவற்றுள் முதலாவதாகும். ஒரிஸ்ஸாவிலுள்ள பல கோயில்களில் இந்தப் பகுதி காணப்படவில்லை என்பதை ஏற்கனவே பார்த்தோம். பாத அல்லது கர்ப்பக்கிருகத்தின் சுவர்ப்பகுதி அல்லது மண்டபம் இரண்டாவதாகும். ஒரிஸ்ஸாவிலுள்ள பெரும்பாலான கோயில்கள், உதாரணமாக புவனேஸ்வரக் கோயில்கள் இப்பகுதியிலிருந்து தான் எழுப்பப் பட்டுள்ளன. கண்டி அல்லது சிகரம் அல்லது மேற்கட்டு மூன்ருவது பகுதியாகும். மஸ்தகம் அல்லது உச்சி பகுதி நான்காவதாகும்.

இந்த பிரதான பிரிவுகள் தவிர இவை ஒவ்வொன்றும் மேலும் பல பகுதிகளாகப் பகுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் மிகவும் முக்கியமானது பரம்தா. இது பாதம், கண்டியுடன் சேர்ந்துள்ள எல்லைக் கோட்டில் அமைந்தது. கண்டி, பல பூமிகள் எனப்படும் அடுக்குகளை கொண்டது. ஒவ்வொரு அடுக்கிலும் அதன் மூலைகளாக அமைந்த அமலகம் இருக்கும். இந்த அமலகங்களுக்கு பூமியமலா என்று பெயர். இந்த இரு உருவத்தில் அமைந்த பெரிய கல் கண்டியின் உச்சியில் இருக்கும். இந்த அமலகத்தின் கீழுள்ள பகுதிக்கு பேகி அல்லது கிரீவம் என்று பெயர்.

நுனி வெட்டப்பட்ட கண்டியின் மேடையிலிருந்து இது எழும்பி நிற்கிறது. மேடைக்கு பிஸம அல்லது வேதி அல்லது ஸ்கந்தம் அல்லது தோள்பகுதி என்று பெயர். இதன் மீது கபுரி எனப்படும் சமதளமான இடம் உள்ளது. அமலகசீலத்தில் கலசம் இருக்கும். இதற்குமேல் துவஜம் அல்லது ஆயுதம் அதாவது அக்கோயிலுக்குரிய தேவதை யின் சின்னம் இடம் பெற்றிருக்கும். சிகரத்துடன் கூடிய கர்ப்பக்கிருகத்தின் (ரேக்கா) கண்டியின் அமைப்பு உச்சிக் கருகே உட்புறம் வளைந்ததாக இருக்கும். பத்ர வகை கோயிலின் கண்டி பல அடுக்குகளாக அமைந்தது. இவை ஒவ்வொன்ருகவோ, மூன்று மூன்று சேர்ந்ததாகவோ பிரமிட் அமைப்பில் இடம் பெற்றிருக்கும். பேகியின் மீது பெரிய மணி உருவிலமைந்த பகுதியும் அதன் உச்சியில் ஆமலகசீலமும் இருக்கும். ஏற்கெனவே கூறியிருப்பது போல் இந்த மண்டபத்தின் மிக உயரமான பகுதி பிர தான மண்டபத்தின் சுகநாசத்தின் உயரத்துக்கு மேல் எப்போதுமே இராது.

இக்கோயில்களின் கர்பபக்கிருகம், மண்டபம் ஆகிய இரண்டினுடைய உட்பகுதியும் சதுர வடிவமாக இருந்த போதிலும் அவற்றின் வெளிப்புறத்தில் துருத்திக் கொண் டிருக்கும் பகுதிகள் பல உள்ளன என்பது நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சமாகும். ஆரம்ப காலக் கோயில்களின் கர்ப்பக்கிருகங்களில் ஒவ்வொரு பக்கத் திலும் நடுப்பகுதியில் நீட்டிக் கொண்டிருக்கும் அமைப்பு ஒன்று மட்டுமே இருக்கக் காண்கிறோம். கர்ப்பக்கிருகத் தின் அமைப்புக்கு சிலுவை வடிவம் அளிப்பதற்கு இது தான் காரணமாகும். பிற்காலக் கோயில்கள் துருத்திக் கொண்டிருக்கும் பிரதான பகுதிக்கு இரு புறமும் ஒன்றுக்கு மேற்பட்ட வளைவுகள் உள்ளன. நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு பகுதியுடனும், இரண்டு வளைவு

களுடனும் உள்ள[கர்ப்பக்கிருகத்துக்கு திரிரதம் என்றும், நான்கு வளைவுகளுடன் அமைந்ததற்கு பஞ்சரதம் என்றும் ஆறு வளைவுகளுடன் உள்ளவற்றிற்கு சப்தரதம் என்றும் எட்டு வளைவுகள் கொண்டதற்கு நவரதம் என்றும் பெயர். பாதத்தின் இந்த செங்குத்துப் பிரிவுகள் கண்டியின் முழு அமைப்பு வரை உள்ளன. கண்டியின் பிரிவுகளுக்கு பாகங்கள் என்று பெயர்.

காலத்தால் முற்பட்ட கோயில்களில் பாதம், பாபாகம் அல்லது அடித்தளப் பகுதி, ஜங்கம் அல்லது சுவர்ப் பகுதி, பாதத்துக்கும் கண்டிக்கும் இடையிலுள்ள பரந்தம் என்று பிரிக்கப்பட்டுள்ளது.

புவனேஸ்வரத்திலுள்ள சத்ருக்னேஸ்வர கோயில் இப்பிரதேசத்தில் நாகர பாணியிலமைந்த காலத்தால் முற்பட்ட கோயிலாகும். இது 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இக் கோயிலின் சிகரம் நேரான முனைகளைக் கொண்ட உருவமுள்ளது. எளிய முறையில் செய்யப்பட்டுள்ளது. இந்த அம்சங்களில் இக் கோயில் நாம் ஏற்கெனவே பார்த்த தியோகார் தசாவதாரக் கோயிலைப் பெரும்பாலும் ஒத்திருப்பது போலத் தோன்றுகிறது. விந்து சரோவரத்தின் அருகிலுள்ள சிறு கோயில் சற்று காலத்தால் பிற்பட்டதாக இருக்கக் கூடும். பரசுராமேஸ்சுவரர் கோயிலுக்கு முன் மாதிரியாக இது இருக்கவும் கூடும். பரசுராமேஸ்வரர் கோயில் இன்றும் நல்ல நிலையில் உள்ளது. நேர்த்தியாகப் பூர்த்தி செய்யப் பட்டுள்ள இக் கோயில் ஆரம்ப கால ஒரிஸ்ஸா கோயில்களுக்கு சரியான எடுத்துக் காட்டாகும். இது எட்டாம் நூற்றாண்டை சேர்ந்தது என்பர். 20 அடி பக்கங்களைக்கொண்ட கர்ப்பக்கிருகம் அமைந்த ஒரு சிறிய திரிரத கோயில் இது. உயரம் 40 அடி. மண்டபத்துடன் சேர்ந்து 48 அடி நீளமுள்ளது. பெரும் கருங்கற்களை அடுக்கி காறை

உபயோகப் படுத்தப்படாமல் கட்டப்பட்டது. கற்கள் ஒன்றையொன்று பற்றிக் கொண்டிருக்கும் படியாகப் பிடிப்புகளுடன் அமைந்துள்ளன, பாபாகத்தில் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கத்தின் ஜங்க பகுதியிலும் மூன்று மாடங்கள் உள்ளன. பரந்தத்தில் மிதுன உருவங்களும் 'செஸ்' விளையாட்டுக் கட்ட அமைப்பில் வேலைப்பாடுகளும் கொண்ட போதிகை இருக்கிறது. சிகரம் படிப்படியாக வளையும் உருவம் கொண்டது. ராக பாகம், அநுராக பாகம், கோணக பாகம் ஆகியவை கவனமாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோணக பாகத்திலும் ஐந்து பூமி அமலங்கள் இருப்ப தானது கண்டி ஐந்து அடுக்குகள் கொண்டது என்பதைக் காட்டுகிறது. கண்டி ஒரு சதுர பிஸமத்தில் முடிகிறது. அதன் ஒவ்வொரு மூலையிலும் உட்கார்ந்த நிலையிலுள்ள சிங்க உருவங்கள் இருக்கின்றன. மேலே இருக்கும் அமலகம் இந்த சிங்கங்களின் ஆதரவில் இருப்பது போல் தோன்றுகிறது. இக்கோயிலின் முன்புறமுள்ள ஜக மோகனம் பிற்காலத்தில் சேர்க்கப் பட்டது போல் இருக்கிறது. இது ஒரு நீண்ட சதுர மண்டபம். இரட்டைக் கூரை கொண்டது. த்வி சாத்ய கட்டிட வகைக்கு இது ஓர் எடுத்துக் காட்டு. உட்புறம் ஒவ்வொன்றிலும் மூன்று தூண்களைக் கொண்ட இரு வரிசைகளால் கூரைகள் தாங்கப்படுகின்றன. நாளடைவில் ஒரிஸ்ஸா கோயில்களில் தூண்கள் தவிர்க்கப்படலாயின என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். மண்டபத்துக்கு மூன்று வாயில்களும் நீண்ட சுவர்களில் கிராதிகளுடன் கூடிய ஜன்னல்களும், ஜன்னல்களில் சிற்ப வேலைப்பாடுகளும் அமைந்துள்ளன. இம்மண்டபத்தினுடையவும், கர்ப்பக்கிருகத்தினுடையவும் சிற்ப வேலைப் பாடுகள், அவற்றின் கவர்ச்சியான பாவங்களுக்கும்,

நேர்த்தியான அமைப்புக்கும், அளவுடன் அமைந்த அலங்காரத்துக்கும் குறிப்பிடத்தக்கவை.

அடுத்த முக்கியமான கோயில் பரசுராமேஸ்வரத்வரத்துக்கு அருகிலுள்ள முத்தேஸ்வரர் கோயிலாகும். புவனேஸ்வரத்திலுள்ள சிறிய கோயில்களில் இது ஒன்று. 35 அடி உயரமுள்ளது. கர்ப்பக்கிருகத்தின் உட்பகுதி $7\frac{1}{2}$ அடி சதுரமாகும். இது ஒன்பதாவது நூற்றுண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தது என்பர். கர்ப்பக்கிருகம், பரசுராமேஸ்வரத்தில் உள்ளது போலவே இருக்கிறது. ஆனுல், இது பஞ்ச ரத வகைக்கு எடுத்துக் காட்டாகும். கண்டி இக்கோயிலில் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இரத பாகங்களின் கரடு முரடான விளிம்புகள் நன்கு உருட்டி விடப்பட்டுள்ளன. இவ்வாறு செய்திருப்பதால் வெளியமைப்பு நளினமாகவும் நயமாகவும் இருக்கிறது. மேலும் கோயிலின் எல்லாப் பகுதிகளும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து உள்ளன. இடையிடையே காவாக்ஷ வேலைப்பாடு நம்மை கவர்வதாக இருக்கிறது. ஒவ்வொரு இரத பாகத்திலும் பெரிய அலங்காரமான காவாக்ஷமும், அதன் மீது கீர்த்தி முகமும், அதன் இரு புறமும் கட்டை குட்டையான குள்ளன் உருவமும் அமைந்துள்ளன. இதர சிற்ப வேலைப்பாடுகளும் சுத்தமாகவும் அழகாகவும் செய்யப்பட்டிருக்கின்றன. ஜகமோகனம் வழக்கமான ஒரிஸ்ஸா பாணியில் இருக்கிறது. உச்சியில் கலசத்துடன் கூடிய பிரமிட் உருவ மேற்கட்டு அமைந்துள்ளது. இதன் மீது உள்ள சிங்கங்கள் கம்பீரமாக உள்ளன. நீண்ட சதுர முற்றத்தில் இருக்கும் கோயிலைச் சுற்றிலும் பிராகாரம் உள்ளது. மகா தோரண வாயிலும் இருக்கிறது. இதன் நேர்த்தியும் பருமனும் நமது கவனத்தைக் கவர்பவை. இந்த ஒட்டுக் கட்டிடம் ஒரிஸ்ஸாவிலுள்ள வேறு எந்தக் கோயிலிலும் காணப்படவில்லை. எனவே, இப்பிராந்தியத்தின் ஆலய நிர்மாணக்

கலையில் இது தனித் தன்மை வாய்ந்ததாகும். இதனாலும் இதர நன்கு அமைக்கப்பட்டுள்ள பகுதிகளாலும், அழகாகச் செய்யப்பட்டுள்ள சிற்ப வேலைப்பாடுகளின் காரணமாகவும் இக் கோயில் "ஒரிஸ்ஸா கட்டிடக் கலையின் இரத்தினம்" என்று கருதப்படுகிறது.

அடுத்து வந்த கால கட்டிடத்தில் இப்பிராந்தியத்தில் கட்டிடக்கலையின் பரிணாம வளர்ச்சியில் நேர்த்தியும், எளிய அமைப்பும் அதிக உயரமும், மண்டபங்கள் அதிகரித்ததும் ஏற்பட்டன. விமானத்தின் முன் புறம் அணைச்சுவர் போன்று நீட்டிக் கொண்டிருக்கும் பகுதிகள் அதிகரித்ததற் கேற்ப ஒவ்வொன்றின் செங்குத்துப் பகுதிகளும், உப பிரிவுகளும் பல ஏற்பட்டன. உதாரணமாக, பிற்கால ஒரிஸ்ஸா கோயில்களில் பாதத்தில் ஜங்கத்தை, தாலஜங்கம், உபரஜங்கம் என்று பிரித்ததின் மூலம் ஐந்து பகுதிகளாகச் செய்யப்பட்டுள்ளது, பாந்தனம் அல்லது கட்டு என்ற ஒரு புதிய அம்சம் இதில் புகுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே, கூறியது போல் சுவர்ப் பகுதியை செங்குத்தாக்கிப் இரட்டிப்பாக்கியது உயரமும் கம்பீரமும் மிகுந்த சிகரத்துக்கு இடமளிப்பதற்கு அவசியமாக இருந்தது. இதே போல் பாபாகம், பரந்தம் ஆகியவற்றிலுள்ள சிற்பங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. கண்டியின் பூமிகளும் எண்ணிக்கையில் அதிகமாகின்றன. இத்துடன், பாதத்தின் வெளிப் புறத்தில் செய்யப்படும் சிற்ப வேலைப்பாடுகளும் பெருமளவுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. புவனேஸ்வரம் ராஜா ராணி கோயில் போன்ற சில ஆலயங்களில் கண்டியின் கீழ்ப் பகுதியைச் சுற்றி சிறிய அளவு ரேகாக்கள் செதுக்கப்பட்டுள்ளன. வேறு சிலவற்றில் கண்டியின் இத்தகைய அலங்கார வேலைப்பாடு அனுராக பாகங்களில் மட்டும் செய்யப்பட்டுள்ளது. முன் புறத்திலுள்ள ராக

பாகத்துக்கு பெயரளவுக்குச் செய்வதும் உண்டு. நன்கு வளர்ச்சியடைந்த ஒரிஸ்ஸா கோயில்களில் காணப்படும் இதர மாறுதல்கள், கண்டியின் இரு பக்கத்திலும் உள்ள கஜ-சிம்ம (யானை மீது சிங்கம்) உருவங்கள் பிஸமத்தின் மேல், ஆமலக சீலத்துக்கு கீழே தூல் சாரணி எனப்படும் பெண்ணுருவம் இருப்பது, ஜக மோகனத்தின் முன்பு மேலும் இரு மண்டபங்கள் இருப்பது ஆகியவையாகும். பின்னதின் பாதமும் பிரதான விமானத்தினுடையதைப் போல ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

புவனேஸ்வரத்திலுள்ள சித்தேஸ்வரர். கேதாரீஸ்வரர் கோயில்கள் (10 நூற்றுண்டு) இந்த வளர்ச்சிக் கட்டத்தின் ஆரம்ப கால எடுத்துக் காட்டுகளாகும். இக் கோயில்களில் நமது கவனத்தைச் கவரும் முக்கிய மாறுதல் ஐம்ப சிம்மம் (உக்ரமான சிங்கம்) கண்டியின் இரு பக்கத்திலும் இருப்பதும் ஆமலக சீலத்தைத் தாங்கிக் கொண்டு பிஸமத்தில் அமர்ந்திருக்கும் கிரிக்கும் உருவங்களுமாகும். மேலும், கண்டியின் கீழ்ப் புறம் சுற்றிலும் சிறிய அளவு ரேகாக்கள் உள்ளன. ஆயினும் இக் கோயில்கள் நன்கு கட்டி முடிக்கப்படவில்லை. பழைமையாக இவை காணப்படுகின்றன. பிரம்மேஸ்வரர் கோயிலும் மேற் சொன்ன இரு கோயில்களைப் போன்றதேயாகும். ஆனுல், அது பஞ்சாயதன வகைக் கோயிலுக்கு எடுத்துக் காட்டாகும். பிராகாரத்தின் நான்கு மூலைகளிலும் நான்கு உப கோயில்களைக் கொண்டது இது. இக் கோயிலின் அங்க சிகரங்களுக்கு, மற்ற இரு கோயில்களைப் போல இல்லாமல் படிப்படியான உயரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அம்சம் கண்ணுக்கு இனிய தோற்றம் தருகிறது. இக் கோயிலின் பிதாதால் ஒரிஸ்ஸா கோயில்களுக்கே உரிய பாணியில் அமைந்துள்ளது.

மேலே குறிப்பிட்ட கோயில்களின் விசேஷ அம்சமாக கண்டியின் மீது அங்க சிகரம் இருப்பது. புவனேஸ்வரம் ராஜா - ராணி கோயிலும் நேர்த்தியான முறையில் காணப்படுவதால் அதையும் இங்கு பார்க்கலாம். பதினோராம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்தது இது. இக் கோயிலில் கண்டியின் ராக பாகங்கள் மீது ஒன்றன் மீதொன்றாக இரண்டு அங்க சிகரங்கள் காணப்படுகின்றன. மற்றவை பீடத்தைச் சுற்றி உள்ளன. கஜுராஹோ ஆலயங்களின் அங்க சிகரங்களைப் போலவே, இக் கோயிலுடையனவும் இரண்டு ஆமலகங்களைப் கொண்டிருக்கின்றன. இக் கோயிலின் சுவற்றில் பல இடை வெளிகள் இருப்பதால் வெளிச்சமும் நிழலும் விழும் காட்சி அற்புதமாக உள்ளது. மேலும், தரை அமைப்பு அநேகமாக வட்ட வடிவில் இருப்பதால் மேற்கட்டு உருளை வடிவம் ஏற்பட்டுள்ளது. இக் கோயிலின் சதுர கர்ப்பக்கிருகத்தின் சிறப்பான அம்சம், அது கோயிலின் இதர கட்டிடங்களுக்கு மூலை விட்டத்தில் அமைக்கப்பட்டிருப்பதாகும். சுவற்றில் உள்ள செதுக்கு வேலைப்பாடுகள் அருமையாக உள்ளன. அங்க சிகரத்தைப் பெற்றிருப்பதில் இக் கோயில் மத்திய இந்திய கோயில்களுடன் தொடர்புள்ளதாக இருந்த போதிலும், ஒரிஸ்ஸா கட்டிடக் கலைஞர்களின் ஒரே ஒரு பணி இது. இவ்வகையான சிகரத்தைக் கொண்ட கோயில்கள் பிற் காலத்தில் கட்டப்படவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். இக் கோயிலின் ஜக மோகனம் பூர்த்தி செய்யப்படவில்லை.

ஒரிஸ்ஸாவிலுள்ள கோயில்களிலெல்லாம் லிங்க ராஜர் கோயில் தான் மிகச் சிறந்ததும் அருமையான எடுத்துக் காட்டுக் கோயிலுமாகும். இதன் காலம் கி. பி. 1100, சுமார் 100 அடி உயரமுள்ளது. கனமான சுவர்களுடன் கூடிய பிராகாரத்தைக் கொண்ட நீண்ட சதுர

முற்றத்தில் அமைந்தது. வாயில் கிழக்குப் புறம் உள்ளது. முற்றத்தில் வேறு பல சிறு கட்டிடங்கள் உள்ளன. ஒவ்வொரு நேர்த்தியான வேலைப்பாட்டுக்கும், அழகுக்கும் புகழ் பெற்றவை. பிரதான விமானத்தின் முன்பு ஜக்மோகனமும், அதற்கு போக மந்திர் ஆகியவையும் உள்ளன. இவை இரண்டும் பின்னால் கட்டப்பட்டவையாகும். அடுத்து வந்த காலங்களில் ஒரிஸ்ஸாவில் கட்டப்பட்ட கோயில்களின் முக்கிய கட்டிடங்கள் இவைதான். கர்ப்பக்கிருகம், மண்டபம் ஆகியவை வழக்கம் போல் சதுரமாக இருக்கும்; காப்பக்கிருகத்துக்கு உயரமான வளை கோடுகளாலான சிகரம் இருக்கும்; மண்டபங்களுக்கு பிரமிட் உரு மேற்கட்டு இருக்கும்: இவை உயரத்துக்கும், பருமனுக்கும் பிரசித்தி பெற்றவை. ஜக மோகனம், கர்ப்பக்கிருகம் ஆகிய இரண்டும் பஞ்ச ரத வகையாகும். மூன்று பக்கத்திலும் மத்தியில் நீட்டிக் கொண்டிருக்கும் பகுதிகளிலுள்ள மாடங்கள் கூரையுடன் கூடிய மேடை மீதுள்ள, சிறு கோயில்களாக உருப் பெற்றுள்ளன. பிரதான கோயில் புவனேஸ்வரன் ஆன சிவனுக்குரியது. மூன்று பக்கத்திலும் உள்ள சிறிய கோயில்கள் பார்வதி, கார்த்திகேயன், கணேசர் ஆகியவர்களின் சிலைகளை வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டவை. இக் கோயிலின் விசேஷ சிறப்பு பிரமாண்டமான கண்ணைக் கவரும் சிகரமாகும். சுற்று வட்டாரத்தில் பல மைல் தூரத்திலிருந்து இதனைக் காண முடியும். கோபுரத்தின் மேலைப் பகுதிகள் உருட்டி விடப்பட்டுள்ளன. உட்கார்ந்த நிலையிலுள்ள சிங்க உருவங்களை மூலைகளில் கொண்ட பிஸமம், ஆமலக சிலத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. சிகரத்தின் உயரத்தை பாகங்களின் செங்குத்துக் கோடுகள் அதிகப் படுத்திக் காட்டுகின்றன. மேலும், ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள பாகங்களின் மீது சிறிய அளவு சிகரங்கள் உள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள ராக பாகங்களில் யானை மீது

சிங்கம் (கஜ.சிம்ம) நிற்கும் உருவங்கள் இருக்கின்றன. சுமார் 100 அடி உயரமுள்ள ஜகமோகனம் பிரமிட் உருவ மேற்கட்டு அமைந்தது. இரு தட்டடுக்குகளையும், மேலே வட்டமான பேகியும் கொண்டது. பேகியின் மீது மணி உருவப் பகுதியும், கலசத்துடன் கூடிய ஆமலக சீலமும் உள்ளன. பிரமாண்டமான அளவிலும் நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டுள்ள இக்கட்டிடம் பிரதான கோயிலுக்குப் பொருத்தமானதாக இருக்கிறது. மற்ற இரு மண்டபங் களும் பிற்காலத்தில் சேர்த்துக் கட்டப்பட்டவையாயினும் ஜக மோகனத்துக்கு நன்கு பொருந்தியதாகவே உள்ளன. அளவிலும் பல்வேறு கட்டிடங்களின் அருமையான அமைப்பிலும் வேலைப்பாட்டிலும், அலங்கார செதுக்கு வேலைகளிலும் முழுமையான கம்பீரத் தோற்றத்திலும் இக் கோயில் இந்தியக் கட்டிடக்கலையின் சிறந்த கலைப் பொருள்களில் ஒன்ருகத் திகழ்கிறது.

புவனேஸ்வரத்திலுள்ள இதர கோயில்களில் விஷ்ணுவிற்குரிய அனந்த வசுதேவர் கோயில் குறிப்பிடத்தக்கது. பிரமிட் உருவ கூரையின் உயரம் மேல் நோக்கிச் செல்லும் விதத்தில் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கஜுராஹோ ஆலயங்களிலுள்ள மண்டபங்களை இதற்கு இணையாகக் கூறலாம்.

பூரியிலுள்ள ஜகந்நாதர் கோயில், புவனேஸ்வரம் லிங்கராஜ் கோயிலைப் போன்று மற்ருெரு பிரசித்தி பெற்ற கோயிலாகும். இதன் அடிப்படை அங்கங்காளன கர்ப்பக்கிருகமும், ஜகமோகனமும் ஒரு வேளை பின்னதற்கு சம காலத்ததாக இருக்கக்கூடும். மற்ற இரு மண்டபங் களும் கி. பி. 14 ஆம் நூற்ருண்டு வாக்கில் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கலாம். இக் கோயிலின் முன்பு காணப் படும் அருண ஸ்தம்பம் அப்போது கொனரக்கிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம். இந்தக் கோயில் ஒவ்

வொன்றும் நான்கு வாயில்களைக் கொண்ட இரண்டு பிராகாரங்களைக் கொண்டது. இத்துறையில் இது விஷேச் சிறப்பு வாய்ந்ததாகும். ஏனெனில் நாகர பாணியிலமைந்த வேறெந்தக் கோயிலுக்கும் இரண்டு சுற்றுச் சுவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. பல்வேறு பகுதிகளிலும், அளவிலும் லிங்கராஜ் கோயிலைப் போன்று இது இருந்த போதிலும். பல்வேறு காலங்களில் புதுப்பிக்கப்பட்டதன் காரணமாக அதன் மூல அழகை இழந்து விட்டது; ஆனால் லிங்க ராஜ ஆலயம் இன்னும் பழைய அழகுடன் திகழ்கிறது.

ஒரிஸ்ஸா கட்டிடக் கலைஞர்களின் மாபெரும் கடைசிப் படைப்பு கொனாரக்கிலுள்ள சூரியன் கோயிலாகும். துரதிர்ஷ்டவசமாக இன்று அது சிதிலமடைந்து காணப்படுகிறது. கருப்புக் கோயில் எனப்படும் இது, ஒரிஸ்ஸாவின் கங்க வம்சத்தைச் சேர்ந்த முதலாம் நரசிம்மன் (கி. பி, 1238–64) ஆட்சிக் காலத்தில் கட்டப் பட்டதாகும். சிதிலமடைந்த நிலையிலும் அசாதாரணமாக அமைந்த அற்புதக் கோயில் இது என்பதைப் புலப்படுத்தும் தடயங்கள் உள்ளன பிரம்மாண்டமான அமைப்பு, நுண்ணிய சிற்ப வேலைப்பாடு, வானளாவி நிற்கும் உயரம், மனிதர்களையும், விலங்குகளையும் அற்புதமாக சிற்ப உருவில் படைத்திருக்கும் ஆற்றல். எல்லாவற்றுக்கும் மேலாக இக்கோயிலில் செய்யப் பட்டுள்ள புதிய மாறுதல்கள் ஆகியவை உலகத்தின் தலை சிறந்த கலைப்பொருள்களில் ஒன்றாக இதனைச் செய்துள்ளன.

அக் கோயிலில் நம் கவனத்தைக் கவரும் முக்கிய மாறுதல் ஏழு குதிரைகளால் இழுக்கப்படும் மாபெரும் தேர் போன்று இது அமைக்கப் பெற்றுள்ளன. துரதிர்ஷ்ட்வசமாக சிகரம் விழுந்து விட்ட கர்ப்பக்கிரகமும், ஜகமோகனமும் ஓர் உயர்ந்த மேடை மீது கட்டப்பட்டுள்

ளன. பெரிய, அற்புதமாக செதுக்கப் பட்டுள்ள சக்கரங்களுக்கிடையே யானைகள் மற்றும் இதர உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சக்கரங்கள் ஒவ்வொன்றும் 9 அடி 8 அங்குலம் விட்டமும், விளிம்புக்கட்டு 8 அங்குல ஆழமும், அச்சுக்கள் 11 அங்குலம் துருத்திக் கொண்டும் அடுத்தடுத்து பருமனாகவும், ஒல்லியாகவும் உள்ள 16 ஆரக்கால்கள் கொண்டதாகவும் உள்ளன. இந்த இரு பகுதிகளும் பஞ்சரத வகையைச் சேர்ந்தவை. கருவறையின் சுவர்களில் மாடங்கள் உள்ளன. அற்புதமான வேலைப்பாடு அமைந்த சூரிய பகவானின் உருவச்சிலைகள் நின்ற நிலையில் இவற்றுள் இடம் பெற்றுள்ளன. சேதமடையாமல் நல்ல முறையில் இருக்கும் அற்புதமான ஜகமோகனத்தைப் பார்த்தே, இக் கோயிலின் கம்பீரத்தையும் கலையழகையும் கற்பனை செய்ய முடியும். பிரமிட் உருவில் எல்லாப் பகுதிகளையும் கொண்டதாக அது இருக்கிறது. ஆனால் அது மூன்று கட்டங்களாக இருக்கிறது, அப்படி இருப்பதற்கு அழகூட்ட அழகிய சிற்பங்கள் ஒவ்வொன்றைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ளன.

கோயிலின் இந்த அடிப்படை அம்சங்களுக்கப்பால் அவைகளிலிருந்து ஒதுங்கி நதமந்திர் உள்ளது. ஒரிஸ்ஸா கோயில்களில் வழக்கமாக நான்கு பகுதிகளும் பொதுவாக இணைக்கப்பட்டதாக இருக்கும். இதன் விளைவாக கோயில் நீண்டு தோற்றமளிக்கும். இக் கோயிலில் நதமந்திர், போகமந்திர் ஆகியவை ஒதுங்கியிருப்பது கட்டிடக்கலை ரீதியாக சாதகம் வாய்ந்த ஒரு மாறுதலாகும். முழுக்கோயிலுடைய நீண்ட தரையமைப்பை தனித்தனியே பிரிக்க இது உதவுகிறது. நதமந்திர் ஒரு உயரமான மேடை மீது எழுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கத்தில் நீண்ட படிக்கட்டுகள் உள்ளன. கஜ-சிம்பம் போன்ற ஜீவனுள்ள சிற்பங்கள் அவற்றின் மீது உள்ளன. இந்தப் பாழடைந்த கட்டிடங்கள் ஒரு சுற்றுச் சுவருக்குள் காணப்படுகின்றன.

வடக்குப் புறத்தில் ஒன்றும், தெற்குப் புறத்தில் ஒன்றுமாக இரு வாயில்கள் உள்ளன. வடக்கு வாயிலில் இருபுறமும் பிரமாண்டமான வேலைப்பாடமைந்த யானை உருவங்களும், தெற்கு வாயிலில் அற்புதமான செதுக்கு வேலையமைந்த பாயும் குதிரை உருவங்களும் இருக்கின்றன. இக்கோயில் சேதமடையாமல் இருந்த போது நேர்த்தியான கலைப்படைப்பாக இருந்திருக்க வேண்டும்.

ஒரிஸ்ஸா கோயில்களுள். குறிப்பாக புவனேஸ்வரத்திலுள்ள கோயில்களுள் **வைதால் தூல்** பல வகைகளில் விசித்திரமானது. வழக்கமான கர்ப்பக்கிருகமும், ஜகமோகனமும் இதில் உள்ளன. கருவறை நீண்ட சதுர வடிவம். பாதத்தில் துருத்திக் கொண்டிருக்கும் பகுதிகள் எதுவும் இல்லை. ஆனால் கண்டி இரு கட்டங்களாக உள்ளது. இதனைப் பிரித்துக் காட்டுவதாக மூலைகளில் பூமி அம்லாக்கள் இருக்கின்றன. மேலே கவிழ்ந்த ஓடம் போன்ற கூரையும், விளிம்புகளின் உச்சியில் மூன்று ஆமலகங்களும் உள்ளன. மேலும், சுவர்களில் துருத்திக் கொண்டிருக்கும் தூண்களில் அலங்கார வேலைப்பாடுகள் உள்ளன. ஒரு நாகர பாணிக் கோயிலுக்கு முற்றிலும் புதுமையான அம்சமாகும் இது. ஆனால், திராவிட பாணிக் கோயில்களில் இவ்வகை ஆலங்கார தேலைப்பாடு ஏழாம் நூற்றூண்டிலேயே ஓரம்சமாக ஆகி விட்டது. கவிழ்ந்த ஓடம் போல் கூரை அமைப்பதும் மகாபலிபுரத்திலுள்ள ஏழாம் நூற்றூண்டைச் சேர்ந்த கணேச இரதம், பிம இரதம் ஆகிய வற்றில் இடம்பெற்றுள்ளது. அடுக்குகளால் அமைந்த சிகரம் போன்றவை காணப்படாதது, நாகர, திராவிடபாணி கோயில்களின் அம்சங்களைத் தாரளமாகக் கலந்து உருவாக்கப்பட்ட கோயில் இது என்பதைக் காட்டுகின்றன. இதனுடைய ஜக மோகனமும், பரசுராமேஸ்வரர் கோயிலுடையதைப் போல நீண்ட சதுர வடிவில் அமைந்தது. ஆனால், இதன் விசேஷ

அம்சம் இதில் திரிரத ரேகா கோயில் இரு மூலைகளிலும் இடம் பெற்றிருப்பதாகும். இவ்வாறு மண்டபத்தின் மூலை களில் சிறிய கோயில்களை அமைப்பது காங்க்ர மாவட்டத் திலுள்ள வைஜ்நாத் ஆலயத்திலும் காணப்படுகிறது; ஆனால் அங்கு மணடபத்தின் மேற்கட்டு பிரமிட் உருவில் உள்ளது. கோயில் எங்கினும் பரசுராமேஸ்வரர் கோயி லில் (8ஆம் நூற்றுண்டு) உள்ளதைப் போன்று அதே முறை யில் வேலைப்பாடமைந்த அழகிய செதுக்கு சித்திரங்கள் நிறைந்துள்ளன. எனவே, இந்தக் கோயிலும் கி. பி. 8–9 வது நூற்றுண்டைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும்.

இவ்வகைக் கோயில் ஒரிஸ்ஸாவில் காகரா என்ற ழைக்கப்படுகிறது. வட இந்தியாவில் இவ்வகைக் கோயில் கள் சில இடங்களில் உள்ளன என்பதை ஏற்கெனவே பார்த்தோம். புவனேஸ்வரத்திலுள்ள கௌரி ஆலயம், கட்டாக்கிலுள்ள சிறிய துர்க்கைக் கோயில் ஆகியவை இவ்வகைக்கு ஒரிஸ்ஸாவிலுள்ள இதர எடுத்துக் காட்டுக் களாகும். பாட்ளு மாவட்டத்திலுள்ள ராணிப்பூர் ஜாரியா வில் இருக்கும் பாழடைந்த கோயில், குவாலியரிலுள்ள தேலி-கா-மந்திர், அல்மோரா மாவட்ட யாகேஸ்வர்த்தி லுள்ள நவதுர்க்கை ஆலயம், இராஜஸ்தான், ஆஸியனி லுள்ள பாழடைந்த நீண்ட சதுரக் கோயில் ஆகியவை நாகர பாணிக்குள் இவ்வகைக்கு இதர உதாரணங்களா கும். இந்தக் கோயில்கள் யாவும் பார்வதியின் ஒரம்சமான துர்க்கைக்கு உரியதாக இருப்பது கவனிக்க வேண்டிய விஷயமாகும். தமிழ்நாட்டிலும் பெண் தெய்வங்களின் ஆலயங்கள் இவ்வகையில் தான் உள்ளன.

பாத்திலுள்ள. நவீன ராமேஸ்வர ஆலயத்தின் சுற்றுச் சுவறுக்குள் இருக்கும் கோயில்கள் மற்றொரு ரசமான வகையைச் சேர்ந்தவை. இவற்றில் கருவறையும், முகப்பு வாயிலும் மூலை விட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன். தரை

அமைப்பில் இவை இரண்டும் சேர்ந்து எட்டு முனை கொண்ட நட்சத்திரம் போல் காட்சியளிக்கும். இந்த இரு பகுதிகளின் விசேஷ அமைப்பைத் தவிர, இதர அம்சங்கள் யாவும் புவனேஸ்வரக் கோயில்களில் உள்ளது போலவே இருக்கின்றன. சிற்பங்கள் செய்யப்பட்டிருக்கும் பாணியிலிருந்து இவற்றை ஒன்பதாவது நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கூறலாம். இவ்வகைக்கு மற்றொரு உதாரணம் ராணிப்பூர் ஜாரியால் அருகிலுள்ள கௌஸாலியில் இருக்கும் பாழடைந்த செங்கற் கோயிலாகும். நூர்பூர் கோட்டையிலுள்ள கோயிலின் அமைப்பில் மேலும் சில அபிவிருத்திகள் காணப்படுகின்றன. 11-12-ஆம் நூற்றாண்டுகளில் கல்யாணியை யாண்ட சாளுக்கியர் காலத்தில் கட்டப்பட்ட தக்காணக் கோயில்களின் பூரண நட்சத்திர வடிவக் கோயில்களுக்கு இது வழி வகுத்தது.

27

மத்திய இந்தியா

மத்திய இந்தியாவில் நாகர பாணி கோயில் நிர்மாணக் கலையில் ஏற்பட்ட முக்கிய அபிவிருத்திகளைப் பற்றி இப்போது பார்ப்போம். நாகர பாணி இப் பிரதேசத்தில் தான் உருவாகி நீண்ட நெடுந் தூரம் பரவியது என்று முன்பே கூறி இருக்கிறோம். அங்க சிகரங்களைக் கொத்தாகக் கொண்ட மேற் கட்டு அமைப்பும் இங்கு தான் பிரபலமாக இருந்தது. ஒரிஸ்ஸா கோயில்களில் நாம் பார்த்த பூமி அடுக்குகளைக் கொண்ட கோபுரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது இது. இவ்வகை மத்திய இந்தியப் பிராசாதங்கள் வீட தக்காணத்தின் கணிசமான பகுதி உட்பட இதர பிரதேசங்களிலெல்லாம் பரவலாக ஏற்படலாயின. குஜராத், ராஜஸ்தான் முதலிய இடங்களிலும் அங்க சிகரக் கொத்துக்களைத் கொண்ட கோயில்களைக் காணலாம். இவ்வகை சிகரம் உச்சி வரை விசேஷ கவர்ச்சியுடன் விளங்குகிறது.

இங்குள்ள இவ்வகைக் கோயில்களின் ஆரம்ப கால எடுத்துக் காட்டுகளாக ஸிர்பூரிலுள்ள அழகிய லக்ஷ்ணமர் கோயிலும் பித்ரகாமிலுள்ள கோயிலும் ஏற்கெனவே கூறப்பட்டன. செங்கற்களால் கட்டப்பட்ட இரு கோயில்களிலும் அருமையான சிற்ப வேலைப்பாடுகள் பொறிக்கப் பட்டுள்ளன. பஞ்சரத அமைப்பு, சிகரத்தில் கவாக்ஷ வேலைப்பாடு, பாதத்தில் மூன்று பகுதிகள், பாபாகத்திலும், பரக்தத்திலும் சிற்பங்கள் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. ஆனல், இவ்வகைக் கோயிலின் இடத்தில்

விரைவிலேயே மாற்றங்களைக் கொண்ட வேறொன்று இடம்பெற்றது. அது இப் பிரதேசக் கோயில்களின் விசேஷ அம்சங்களாயிற்று. புதிதாக உருவான இவ்வகைக் கோயிலுக்கு காலத்தால் முற்பட்ட எடுத்துக் காட்டாக பதோலியிலுள்ள கோயிலைக் கூறலாம். அதன் வேலைப்பாடுகளின் தன்மையிலிருந்து அதை 9-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தாகக் கருதலாம். பாதம், பரந்தம், கிரண்டி, முன்புறத்தில் மண்டபம் ஆகியவற்றைக் கொண்ட பஞ்சரத வகைக் கோயில் இது என்பதில் சந்தேகமில்லை. கோபுரம் கூரான விளிம்புகளை கொண்டிருக்கிறது. அங்கு மூலை ஆமலகங்கள் காணப்படுகின்றன. இக் கோயிலில் காணப்படும் மாறுதல்கள் உச்சியிலுள்ள இரண்டு ஆமலகங்கள். பேகிக்கு அப்பால் பாகங்கள் முக்கோண வடிவில் துருத்திக் கொண்டு இருப்பது ஆகியவையாகும். இந்த இரு புதிய அம்சங்களும் அதற்குப் பின்னர் இக் கோயில் கட்டிடக் கலையில் இணைந்ததாகி விட்டன. பிற்காலக் கோயில்களில் சகஜமாகி விட்ட மற்றொரு அம்சம் மண்டபத்தில் தூண்கள் இடம் பெற்றதாகும். அதற்கு இந்தக் கோயிலிலுள்ள மண்டபம். மத்திய இந்தியக் கோயில்களின் தூண் அமைந்த மண்டபங்கள் ஒரிஸ்ஸா கோயில்களின் தூண்கள் இல்லாத மண்டபங்களைவிட அழகானவை என்று கூறப்படுகிறது. இது தவிர மேலும் வளர்ச்சியடைந்த கோயில்களின் மண்டங்களில் இரு புறத்திலும் அறைகளும் அரைக் கோள வடிவ மேற்கட்டும், கக்ஷாசனம் எனப்படும் சரிவான படிகளைக் கொண்ட சுற்றுச் சுவரும் உள்ளன. பேகிக்கு அப்பால் பாகங்களை நீட்டுவது பிற் காலக் கோயில்களில் ராக பாகங்களில் மட்டுமே செய்யப்பட்டது என்பதை கவனிக்க வேண்டும். மத்திய இந்தியக் கோயில் வகைக்கு பூரண எடுத்துக் காட்டாக விளங்கும் கோயிலில் காணப்படும் மற்றொரு முக்கிய மாறுதல் பாதத்தை ஏழு பகுதி

களாகப் பிரித்திருப்பதாகும். ஆனால், ஒரிஸ்ஸாவின் பெரும்பாலான கோயில்களில் இது ஐந்து பகுதிகளாக மட்டுமே பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாகுபாடு ஜங்கத்தில் மூன்று பகுதிகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் மற்றொரு சிற்ப வரிசைக்கும் இடம் கிடைத்திருக்கிறது. மாறுதல்களிலெல்லாம் மிகவும் முக்கியமானது கோயிலின் முன் புறத்திலுள்ள மண்டபத்தினுடைய உச்சியின் ஏற்றத்தை அமைத்திருப்பதாகும். மண்டபம் அந்தராலத்தின் மூலம் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த மாறுதல் ஏற்பட்ட காலத்தின் (9 — 10 – ஆம் நூற்றாண்டு) அம்சங்களைக் காட்டும் கோயில்களில் ஒன்று பழைய ரேவா சமஸ்தானத்திலுள்ள மரிபாக்கில் இருக்கும் விஸ்வநாதர் ஆலயமாகும்.

அமரகண்டக்கிலுள்ள கேசவ நாராயணர், மச்சேந்திரநாதர், பாடலீஸ்வரர் கோயில்களும் இதே காலத்தைச் சேர்ந்தவை. இவை ஒவ்வொன்றிலும் பஞ்சரதக் கருவறை. அந்தராலம், மண்டபம் ஆகியவை ஒரே வரிசையில் உள்ளன. இக் கோயில்களின் கண்டியினுடைய பாகங்கள் அதன் உச்சிக்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கின்றன. கண்டியில் கவாக்ஷ வேலைப்பாடுகள் உள்ளன. வெளிப்புறத்தில் உள்ள சிற்ப அலங்காரங்கள் அழகுற அமைந்து உள்ளன. மண்டபங்களில் தூண்கள் இருக்கின்றன, கக்ஷாசனங்களும் இடம் பெற்றுள்ளன. சிகரம் இதற்கு முந்திய கோயில்களில் உள்ள பாணியில் இருந்த போதிலும் கருவறை, அந்தராலம், மண்டபம் ஆகியவற்றின் இணைந்த அமைப்பு, பூரணமான மத்திய இந்தியக் கோயில் உருவாவதற்கு வழி வகுத்தது. இதே இடத்திலுள்ள சப்த இரத அமைப்பிலுள்ள மூன்று சிறு கோயில்களைக் கொண்ட ஏற்பாடு குறிப்பிடத் தக்கது ஏனெனில், இப்போது அவற்றின் பாதத்தில் ஏழு பிரிவு

கள் காணப்படுகின்றன. அடுத்து வந்த காலங்களில் கட்டப்பட்ட கோயில்களில் இது இயல்பாகி விட்டது.

மத்திய இந்தியக் கோயில் கட்டிடக் கலையில் மற்றொரு வளர்ச்சியை பழைய ரேவா சமஸ்தானத்தி லுள்ள சோஹாபூரிலுள்ள விரட்டேஸ்வர சிவன் கோயிலில் காண முடிகிறது. இதில் முதன் முறையாக முந்திய கோயில்களில் வழக்கமாகக் காணப்படும் கருவறை, அந்தராலம், மண்டபம் தவிர அர்த்த மண்டப மும் இருப்பதைக் காண்கிறோம், இந்த நான்காவது பகுதி மத்திய இந்தியக் கோயில் அமைப்பை பூர்த்தி செய்கிறது. இத்தகைய நான்கு கட்டிடங்களைக் கொண்ட ஒரிஸ்ஸா கோயில்களுடன் ஒப்பிடக் கூடியது இது. மேலும், இக் கட்டிடங்கள் தாழ்வான மேடைகள் மீது கட்டப்பட்டுள்ளன. இது மற்றொரு புதிய அம்சம். பிரதான சிகரமான மூல மஞ்சரியைச் சுற்றி படிப்படி யாக உயரமாக உள்ள சிறிய அளவு சிகரங்கள் இடம் பெற்றிருப்பது இங்கு நாம் காணும் மாறுதல்களில் கவனத்தைக் கவர்வதாகும். இதுவரை இந்த அம்சம் மத்திய இந்தியக் கோயில்களில் காணப்படாத ஒன்றாகும் இந்த அபிவிருத்தியேற்பட்ட ஆரம்ப கட்டத்தைச் சேர்ந்த கோயில் இது என்பதால் ஒரே ஒரு அங்க சிகரங் களின் வரிசை மட்டுமே இருக்கிறது. கோபுரத்தின் மேற் புறம் வழக்கம் போல் நுண்ணிய கவாக்ஷ வேலைப்பாடு நிறைந்ததாக உள்ளது. மண்டபத்தின் அமைப்பில் காணும் மற்றொரு சிறப்பான அம்சம் மண்டபத்தினுடைய சிலுவை வடிவிலமைந்த சாளரங்களும், முன்புறம் நீண்டி ருக்கும் அர்த்த மண்டபமும் ஆகும். மேலும் ஒட்டுக் கட்டிடங்களின் மேற்கட்டு பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. இக் கோயிலில் மண்டபத்தினுடைய உட் புறம் எண்கோண கட்டங்களைக் கொண்ட இரு அடுக்கு களைத் தாங்கிக் கொண்டிருக்கும் தூண்கள் உள்ளன.

எண்கோண கூட்டங்கள் அரைக் கோளத்தின் ஒரே மைய வளையங்களைத் தாங்குகின்றன. புகழ் பெற்ற கஜுராஹோ கோயில்களில் நாம் காணும் மத்திய இந்தியக் கோயிலின் உச்ச நிலையை முன் கூட்டி அறிவிப்பது போல் இக்கோயில் இருக்கிறது.

மத்திய இந்தியாவில் நாகர பாணிக் கோயிலின் வளர்ச்சியில் கடைசிக் கட்டத்தின் சிறப்பை கஜுராஹோ விலுள்ள மகோன்னதமான கோயில்களில் தான் காண லாம். வைஷ்ணவம், சைவம், ஜைனம் ஆகிய மதத் தெய் வங்களுக்கு உரிய சிறியதும் பெரியதுமான கோயில்கள் இங்கு உள்ளன. வைஷ்ணவ சதுர்புஜன், சைவ கண்டரீய மகாதேவன், ஜைன பார்ஸ்வ நாதர் கோயில்கள் இவற்றுள் மிகவும் முக்கியமானவை யாகும். இவையனைத் தும் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியை சாந்தல வம்சத்தினரின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தவை என்பர். வாமனர், ஆதிநாதர் ஆகியவர்களுக்கான சிறிய கோயில் களும் உள்ளன. உயர்ந்த மேடை மீது கட்டப்பட்ட இவை நான்கு கட்டிடங்களைக் கொண்டதாக இருந்த போதிலும், கண்டியின் கீழ்ப் புறத்தில் சிறிய அளவு சிகரங்களைக் கொண்ட தொகுதி இவற்றில் இல்லை, ஆதி நாதர் கோயிலில் கோணகம் உள்பட பாகங்கள் பேகிக்கு அப்பாலும் நீட்டிக் கொண்டிருக்கின்றன. பாதத்தில் ஏழு பிரிவுகள் உள்ளன. ஜங்கத்தில் மூன்று சிற்பப் பகுதிகள் இருக்கின்றன. இவ்விடத்திலுள்ள கோயில்களில் இவை காலத்தால் முற்பட்டவை.

இதர கோயில்கள் பெரும்பாலானவற்றில் கண்டியைச் சுற்றி அங்க சிகரங்கள் உள்ளன. சித்திர குப்தர், தேவி ஜகதாம்பா, குன்வார் மடம், சதுர்புஜ ராமச் சந்திரர், பார்ஸ்வநாதர், விஸ்வநாதர், கண்டரீய மகா தேவர் ஆகிய கோயில்கள் இவ்வகையில் உள்ளவை.

இவற்றுள் இரண்டு பிரிவுகளைக் காணலாம். முதல் பிரிவு நிரந்தார வகையிலுள்ள முதலிலுள்ள மூன்று கோயில்கள். இரண்டாவது பிரிவு சாந்தார வகையைச் சேர்ந்த கடைசி நான்கு கோயில்கள். இரு பிரிவுக் கோயில்களுமே அநேகமாக சம காலத்தவை. நிரந்தார வகைக் கோயில் கள் சாந்தார வகையை விட சற்று காலத்தால் முற்பட்ட தாக இருக்கலாம். முதலில் சொன்ன பிரிவுக் கோயில் களில் குன்வார் மடம் குறிப்பிடத் தக்கது. அதன் சிகரத் தில் அடுத்தடுத்து வரிசையாக சிறிய அளவு சிகரங்கள் உள்ளன. ஒன்றன்மேலொன்ருக இதன் முழு உயரத்துக் கும் இவை இருக்கின்றன.

சாந்தார பிரிவில் ராமச்சந்திரர் அல்லது சதுர்புஜர் கோயில் பாதத்தில் ஐந்து அங்கங்களைக் கொண்ட பஞ்சரத வகையைச் சேர்ந்தாகும்; மற்றவை சப்தரத வகை. சதுர்புஜன் கோயிலில் மண்டபத்தின் நீண்டு கொண்டிருக்கும் சிலுவை வடிவ அறைகள் கர்ப்பக் கிருகத்தைச் சுற்றியும் உள்ளன. மண்டபத்திலும் பிரதான விமானத்தின் மூன்று புறத்திலும் சாளரங்கள் உள்ளன. இதுவரை மண்டபத்தில் மட்டுமே இந்த அம்சம் இடம் பெற்று இருந்தது. பிரதான கோயிலிலும் இதனை அமைத்ததானது கட்டிடத்துக்கு எடுப்பான தோற்றத்தை அளித்திருக்கிறது. பிரமிட் உருவ மேற் கட்டு அமைந்த இக்கோயிலிலுள்ள மண்டபம் உச்சியில் இரட்டை ஆமலகங்களுக்குக் கீழே மணி போன்ற பகுதியையும் கொண்டிருப்பது. ஒரிஸ்ஸா கோயில்களில் உள்ளதை ஒத்திருக்கிறது. பார்ஸ்வ நாதர் கோயிலில் பின்புறம் அதிகப்படியாக ஒரு சிறிய கோயில் இருக்கிறது. சாந்தார வகைப் பிரதான கோயிலின் பக்கங்களில் சாளரங்கள் இல்லாதது ஒரு வித்தியாசம்.

இங்குள்ள கண்டரீய மகாதேவர் கோயிலை அற்புதமான படைப்பு என்று கூறலாம்; நாகர பாணிக் கட்டிடக் கலையின் உன்னதத்தை இங்கு காண முடிகிறது. எனவே உலகெங்கிலும் புகழ் பெற்றதாக இது இருப்பதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. இதில் நமது கவனத்தைப் பெரிதும் கவர்வது கோபுரம். பல்வேறு அளவுகளிலுள்ள, உரோ மஞ்சரிகள் ஒன்றன் மேலொன்ருக இதில் அமைந்துள்ளன. எல்லா விதமான செதுக்கு வேலைகளும் நிரம்பிய இக்கோயிலில், ஜங்கத்தின் மூன்று பகுதிகளிலும் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் அழகுக்கும். தேர்ந்த கலைத் திறமைக்கும் புகழ் பெற்றவை. மண்டபம், கோபுரம் போன்ற பகுதிகளின் உட்புற வேலைப்பாடுகள் இக் கோயிலைக் கட்டிய கலைஞர்களின் இணையற்ற திறமையைப் புலப்படுத்துவதாக உள்ளன. பிரதான கோயிலின் செங்குத்து அமைப்பில் அதிக கவனப் செலுத்தி அதன் பல்வேறு பகுதிகளை அமைத்திருப்பது குறிப்பிடத் தக்க விசேஷ அம்சமாகும். எனவே, பின்புறமுள்ள பகுதிகளின் அடித்தளம் அதற்கு முன்புள்ளதைவிட உயரமாக இருக்கிறது. மண்டபம், கர்ப்பக்கிருகம் ஆகியவற்றின் சாளர அமைப்பிலும் இந்த ஏற்பாடு கடைப்பிடிக்கப் பட்டுள்ளது. தேர்ந்த கலையமைப்பிலும், குறை சொல்ல இடமில்லாத பரிணமத்திலும், அற்புதமான வேலைப்பாடுகளிலும், கம்பீரமான தோற்றத்திலும் இக்கோயில் இந்தியக் கட்டிடக் கலையின் மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்ருகத் திகழ்கிறது.

மத்திய இந்தியாவிலுள்ள ஏராளமான கோயில்களில் மிகப் பெரும்பாலானவை நாகர பாணியில் அமைந்தவை, ஆனல் விசித்திரமான அமைப்புக்கும், வேலைப்பாட்டுக்கும் புகழ் பெற்ற சில கோயில்களும் உள்ளன. கஜுராஹோவிலேயே மேலே சொன்ன மகோன்னதமான நாகர பாணிக் கோயில்களைத் தவிர,

நான்கு வாயில்களைக் கொண்ட சர்வதோ பத்ர வகைக் கோயில்கள் இரண்டு உள்ளன. பிரம்மா, மிருத்யஞ்ச மகா தேவ் கோயில்கள் அவை. வளை கோடுகளான சிகரத்துக்குப் பதிலாக இக் கோயில்களில் பிரமிட் உருவ மேற்கட்டு உள்ளது. வட்ட வடிவ அமைப்பிலும் உருவிலும் கட்டப்பட்ட கோயில்களும் இப்பிராந்தியத்தில் உள்ளன. இதற்கு எடுத்துக் காட்டு ரேவா அருகிலுள்ள குர்கி மஸான் கோயிலும், பழைய ரேவா சமஸ்தானத்திலுள்ள சந்த்ரேகாவிலிருக்கும் கோயிலுமாகும். கி. பி. 10-ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை இவை. ஒவ்வொரு கோயிலிலும் உட்புறமும், வெளிப்புறமும் வட்ட வடிவமாகவுள்ள கர்ப்பக்கிருகம், அந்தராலமும், திறந்த மண்டபமும் உள்ளன. இவற்றின் கட்டிட அமைப்பும் அலங்கார வேலைப்பாடும் வழக்கமான மத்திய இந்திய பாணியிலேயே இருக்கின்றன.

வட்ட வடிவக் கோயில் அமைக்கும் கலையில் ஒரு ரசமான போக்கை கான்பூர் மாவட்டம் பராலியிலுள்ள கோயில் போன்றவற்றில் காணமுடிகிறது. இங்கு கர்ப்பகிருகம் வட்ட வடிவமாக உள்ளது. ஆனால், வெளிப்புறம் 16 கோண அமைப்பில் இருக்கிறது. இதன் மூன்று பக்கங்கள் வெட்டப்பட்டுள்ளன. பதேபூர் மாவட்டம் குராரியிலுள்ள கோயில் மேற்சொன்னதைப் போலவே இருந்த போதிலும், சதுர வடிவ கர்ப்பகிருகத்தைக் கொண்டுள்ளது. பதேபூர் மாவட்டம் டிண்டுலியிலுள்ள கோயிலின் கர்ப்பக்கிருகமும் சதுர வடிவம்தான். ஆனால், வெளிப்புறம் வட்ட வடிவமாக உள்ளது. ஆரங்கிலுள்ள பந்த்தேவால் எனப்படும் கோயிலும் மற்றொரு விசேஷ உதாரணமாகும். இதில் கர்ப்பக்கிருகம் சதுரமாகவும், வெளிப்புறம் வட்டமாகவும், ஆனால் நேர் முகங்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. இரு முகங்களுக்கிடையேயுள்ள இடைவெளி மூன்று தடவை கொத்தப்பட்டுள்ளது.

நட்சத்திர வடிவ அமைப்பு என்ற எண்ணத்தை இது ஏற்படுத்துகிறது. இந்த நவீன அமைப்பின் அடுத்த வளர்ச்சியை பிலாஸ்பூர் மாவட்டம், கரோடிலுள்ள கௌரி நாராயணர் கோயிலில் காண்கிறோம். இங்கு முன்புறம் தவிர ஒவ்வொரு பக்கத்திலும் ஐந்து இடங்களில் கொத்தப்பட்டுள்ளது. உதயபுரி நீலகண்டேஸ்வரர் கோயிலில் இந்த அமைப்பு பெரும் வளர்ச்சி பெற்றிருப்பதைக் காண்கிறோம். இந்த விசேஷ அம்சத்தைத் தவிர இதர துறைகளில்—பல்வேறு பகுதிகள், அவற்றின் அமைப்பு, உயரம், அலங்கார வேலைப்பாடு, ஆகியவற்றில் முறையான நாகர பாணியையே பின்பற்றி இக் கோயில்கள் அமைந்துள்ளன. வட்ட வடிவ அமைப்பிலிருந்து நட்சத்திர வடிவ அமைப்பின் அபிவிருத்தி தக்காணத்தில் பரவலாக வழக்கில் இருந்தது. மைசூர் ராஜ்யம் சிருங்கேரியிலுள்ள வித்யாரண்யேஸ்வரர் கோயில் (14-15-ஆம் நூற்றாண்டு) இவ்வகை வளர்ச்சிப் பெற்ற கோயில்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

28


இராஜஸ்தான் கோயில்கள்

இராஜஸ்தானத்தின் நாகர பாணியில் கட்டப்பட்ட கோயில்களில் காலத்தால் முற்பட்டவை கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து உள்ளன. இவை பெரும்பாலும் இந்து, ஜைன மதங்களுக்குரியவை. இராஜஸ்தான் கோயில்கள் அளவில் சிறியதாக இருந்தபோதிலும் பல் வேறு பகுதிகள் அமைந்திருக்கும் விதம், வேலைப்பாடு, சிற்பங்கள் ஆகியவற்றில் பூரணமான எடுத்துக் காட்டு களாக விளங்குகின்றன. இப் பிரதேசத்தின் முக்கிய மான சில கோயில்களை ஜோத்பூர் அருகே ஆஸியானில் காணலாம். இவற்றுள் ஹரிஹரர் ஆலயம் (எண் 1) பஞ்சாயதன வகை. ஐந்து சிறிய கோயில்களும் பஞ்சரத அமைப்புக் கொண்டவை. பாதத்தில் மூன்று பிரிவுகள் மட்டுமே உள்ளன. சிகரங்கள் படிப்படியாக உட்புறம் சாய்ந்த வண்ணம் உச்சியில் ஆமலகத்துடன் அமைந் திருக்கின்றன. வேறு சில கோயில்களில் கலைத்திறன் மிக்க வேலைப்பாட்டுடன் அமைந்த தூண் மண்டபங்கள் உள்ளன. கக்க்ஷாஸனங்கள் போன்றவை இவற்றில் இருக்கின்றன. இவை தவிர அங்கச் சிகரக் கொத்துக் களுடன் கூடிய சிரகங்களைக் கொண்ட பல கோயில்களும் உள்ளன. அநேகமாக எல்லாக் கோயில்களுமே உயர்ந்த மேடைமீது எழுப்பப்பட்டுள்ளன. இந்த மேடைக்கு மகா பிஷ்டம் என்று பெயர். இந்த அம்சங்களில் இராஜஸ்தான் கோயில்கள் மத்திய இந்திய கோயில் களைப் போன்றவையே. இக் கோயில்களின் பாதத்தில்




படம் 33 காஞ்சி கைலாச நாதர் கோயில்

அத்தி 37 பார்க்க




படம் 34　　தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம்

அந்தி 39 பார்க்க




படம் 35 மதுரை மீனாட்சி கோயில் தெற்குக் கோபுரம்

அத்தி 40 பார்க்க




படம் 36 ஸ்ரீரங்கம் குதிரை மண்டபம்

அத்தி 41 பார்க்க




படம் 37 ஹம்பி விட்டலர் கோயில்

அத்தி 40 பார்க்க




படம் 38 வேலூர் கல்யாண மண்டபம்

அத்தி 40 பார்க்க



படம் 39 ராமேஸ்வரம் ராமநாதஸ்வாமி கோயில் பிராகாரம்

அத்தி 40 பார்க்க



படம் 40 திருவனந்தபுரம் அனந்த பத்மநாபஸ்வாமி கோயில்

அத்தி 41 பார்க்க

மூன்று பகுதிகள் இருக்கும். கண்டியின் பேகிக்கு அப்பால் பாகங்கள் நீட்டிக் கொண்டிருப்பது இல்லை. உச்சியில் ஒரு ஆமலகம்தான் உண்டு—இவைதான் வித்தியாசம்.

பிற்காலக் கோயில்களில் பாதத்திலும், மாடங்களிலும் இறப்புச் சுவர்கள் இருப்பது, தோரணம் இடம் பெற்றிருப்பது, அடித்தளத்தின் அலங்கார அமைப்பு, அதிகப்படியான தூண்களைக் கொண்டு பெரியதாக அமைந்த மண்டபம் ஆகிய பதிய அம்சங்களைக் காண்கிறோம். பதினோராவது நூற்றாண்டிலிருந்து கட்டப்பட்ட கோயில்களில் இந்த அபிவிருத்திகள் உள்ளன. இவ்வகை இராஜஸ்தான் கோயில்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக ஆஸியானிலுள்ள மகாவீரர்க்குரிய ஜைனர் கோயில், சாச்சிய மாதா, பிப்லா தேவி ஆலயங்கள், கேகண்டிலுள்ள நீலகண்டேஸ்வரர் கோயில், கிராடுவிலுள்ள சோமேஸ்வரர் கோயில் ஆகியவற்றைக் கூறலாம்.

பிற்காலக் கோயில்களுள் மவுண்ட் அபுவிலுள்ள விமலனால் கட்டப்பட்ட (கி.பி. 1031)—விமலவஸாஹி, கோயிலும், தேஜா பாலனால் கட்டப்பட்ட (கி.பி. 1230) லூனவஸாஹி ஆகிய இரு கோயில்களையும் சிறந்தவை எனக் கூறலாம். இரண்டும் நல்ல நிலையில் உள்ளன. அலங்கார வேலைப்பாடுகளுக்கு இவை புகழ்பெற்றவை. ஆதிநாதருக்குரிய விமல வஸாஹி கோயிலில் கருப்புக் கற்களினால் (மூலகபாரோ) கட்டப்பட்ட கர்ப்பக் கிருகமும், முன்புறம் சலவைக் கற்களினால் கட்டப்பட்ட குத்த மண்டபம், சபா மண்டபம் ஆகிய இரண்டும் உள்ளன இவற்றை உள்ளடக்கி சுற்றுச் சுவரும், பிராகாரமும் இருக்கின்றன. அவற்றின் உட்புறம் சிலைகளுக்கான (தேவகுலிகா) மாடங்கள் வரிசையாக உள்ளன. லூனவஸாஹி எல்லா அம்சங்களிலும் இதைப் போன்றே உள்

ளது. ஆனால், முன்புற சலவைக் கல் மண்டபங்கள் வாஸ்து பாலனுடைய தம்பி தேஜா பாலனால் அமைக்கப் பட்டவை. விதானத்தின் நுண்ணிய சித்திர வேலைப்பாடு, நிறைய செதுக்கு வேலை செய்யப்பட்டுள்ள. தூண்கள், வாயில்களின் அலங்காரம் ஆகியவற்றுக்கு இக் கோயில் குறிப்பிடத்தக்கவை. இக் கோயில்களின் அரைக் கோள வடிவ மேற் கட்டு கொண்ட மண்டபங்களில் கவர்ச்சியான வேலைப்பாடுகள் உள்ளன. விமல வஸா ஹியின் தூண்கள் யாவும் ஒரே வகை; ஆனால், லூன வஸா ஹியின் தூண்கள் பல் வேறு வகையானவை. இக் கோயில்களின் அரைக் கோள வடிவ மேற் கூரையின் உட் புறம் அற்புதமான வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. வித்யா தேவிகளுள் அழகிய உருவங்கள் இடம் பெற் றுள்ள இவை அருமையான கலைப் பொருள்களாகக் கருதப்படுகின்றன.

29

குஜராத் ஆலயங்கள்

குஜராத்திய ஆலய நிர்மாணக் கலை வளர்ச்சிப் பற்றிய தொடர்ச்சியான வரலாறு 6-7-ஆம் நூற்றாண்டிலிருந்தே நமக்கு கிடைக்கிறது இதற்கு முந்திய காலத்தில் மரம் போன்ற அழிந்துவிடக் கூடிய பொருள்களால் கோயில்கள் கட்டப்பட்டதால் அவை மறைந்துவிட்டன. கோப் என்ற இடத்திலிலுள்ள கோயில் இன்றும் நிலைப் பெற்றிருக்கும் கோயில்களில் காலத்தால் முற்பட்டதாகும். இது ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும் என்பர். வெட்ட வெளியில் கற்களைக் கொண்டு கோயில் கட்ட வேண்டும் என்ற ஆர்வத்தின் விளைவே இது. இந்திய வரலாற்றில் குப்தர்கள் காலத்தில் இந்த எண்ணம் மேலோங்கி இருந்தது. இக் காலத்தைச் சேர்ந்த பெரும்பாலான இதர கோயில்களைப் போலவே (நசனகுதாரா, பித்ரகாம், ஐஹொளே) இக் கோயிலும் சாந்தார வகையைச் சேர்ந்தது. இதன் விசேஷ அம்சம் படிப்படியாக அமைந்துள்ள பிரமிட் உருவ மேற் கட்டாகும். ஒவ்வொரு படியிலும் கவாக்ஷ வேலைப்பாடுகள் உள்ளன. உச்சியில் நேர்த்தியான அரைக் கோள வடிவ அமைப்பு இருக்கிறது. இவ்வகைக் கோயில்கள் பல இப்பிரதேசத்தில் உள்ளன. இவற்றுள் மிகவும் வளர்ச்சிப் பெற்றது வில்லீஸ்வரத்திலுள்ள சிவன் கோயிலாகும். இக்கோயிலின் மேற்கட்டு படிப்படியாக அமைந்த பல கட்டங்களை கொண்டது. ஒவ்வொரு கட்டத்தின் மூலையிலும் சிகர அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். பிராகார சுவற்றின் வெளிப் புறத்தில்

வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் சிற்ப வேலைப்பாடுகள் இருக்கின்றன. இது எலிபெண்டா குகையிலுள்ள திரிமூர்த்தி கோயிலைப் போல் உள்ளது. இவ்வகையைச் சேர்ந்த ஆனால் நீண்ட சதுர வடிவ கருவறைகளையும், முகப்பு வாயிலையும் கொண்ட கோயில்கள் கட்வாரிலுள்ள வராஹர் ஆலயமும் கல்ஸாரிலுள்ள கோயிலும் ஆகும்.

மேலே சொன்ன கோயில்கள் தவிர இன்றும் நிலைப் பெற்றிருக்கும் பழங்கால நாகரிக பாணிக் கோயில்கள் குஜராத்தில் அதிகமாக இல்லை. அப்படியிருக்கும் சிலவற்றுள் ரோடாவிலுள்ள கோயில் காலத்தால் முற்பட்டது போல் தோன்றுகிறது. கத்தியவாரிலுள்ள சூத்ரபாதத்தில் இருக்கும் சூரியன் கோயில் இதைப் போன்றதேயாகும். கத்தியவார், பஷ்தாரிலுள்ள சிறிய திரிரத வகைக் கோயிலில் புதுமையான சில அம்சங்கள் காணப்படுகின்றன. ராக பாகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பது, பாகத்திலும், அதன் மூலைகளிலும் ஆமலகம் போன்றவை இடம் பெற்றிருப்பது ஆகியவை புதிய மாறுதல்கள். கர்ப்பக்கிருகச் சுவற்றின் வெளிப்புறம் நீட்டிக் கொண்டிருக்கும் இரதப் பகுதிகள் இல்லாதது குறிப்பிடத்தக்கது.

பிற்கால பஞ்சரத அமைப்புக் கோயில்களில் மிகவும் முக்கியமானவை சந்தேரத்திலுள்ள சிறு கோயிலும் மியானியிலுள்ள இரண்டு கோயில்களுமாகும். கத்தியவார் வாதவானிலுள்ள இராணி தேவியின் பஞ்சரத அமைப்புக் கோயில், சிற்ப வேலை நிரம்பிய உயரமான மேடைமீது எழுப்பப்பட்டிருப்பதும், பாதத்தில் பஞ்ச அங்கம் இருப்பதும் கவனிக்கப்பட வேண்டியவை. ஐந்து அங்கங்கள் இருப்பது இந்தக் கோயிலுக்கே உரிய ஒரு சிறப்பு. இப்பிரதேசத்திலுள்ள இதர கோயில்களிலெல்

லாம் மூன்று அங்கங்கள் தான் உள்ளன. நாகர பாணியில் கட்டப்பட்ட ஆரம்ப காலக் கோயில்களில் எல்லாமே மூன்று அங்கங்கள் தான் இருக்கும். மற்றொரு முக்கிய கோயில் கத்தியவாரில் தான் என்ற என்ற இடத்தின் அருகேயுள்ள முனிபாவா கோயிலாகும். இதன் சுவர் களின் முகப்பில் ஜீவனுள்ள சிங்கங்களின் முழு உருவங் கள் இடம் பெற்றுள்ளன. குஜராத் கோயில்கள் விசேஷ அம்சம் இது.

பிற் காலக் கோயில்கள் அணஹில பாதகத்தை ஆண்ட சோலாங்கி (சாளுக்கியர்) மன்னர்களின் பெய ரால் சோலாங்கிக் கோயில்கள் எனப் பெயர் பெற்றன. இப் பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சி 11-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பூரணமடைந்தது. ஏற்கனவே நாம் பார்த்த இராஜஸ்தான் கோயில்களின் வளர்ச்சியைப் போன்றதே இதுவும் என்பதை நாம் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். சோலாங்கி வகைக் கோயில்களின் சில விசேஷ அம்சங்கள் வருமாறு:

கர்ப்பக்கிருகமும், குத மண்டபமும் ஒரே அச்சில் அமைந்திருக்கும். சுவர்கள் இரதம் போன்ற அடுக்கு களாகச் செய்யப்பட்டு முழு உயரத்துக்கும் அவ்வாறே இருக்கும். இந்த அம்சம் பிற்காலக் கோயில்களில் பல கோண அமைப்பாக வளர்ச்சி பெற்றது. தனித்து ஒரு சபா மண்டபமும், பெரிய கோயில்களில் கீர்த்தித் தோர ணமும் அதிகப்படியாக இருக்கும். கோயில் உயரமான மேடைமீது கட்டப்பட்டிருக்கும். பாதத்தில் மூன்று அங்கங்கள் இருக்கும். ஜங்கத்தின் செங்குத்துப் பகுதி யில் சிற்பங்கள் அமைந்திருக்கும். பரந்தம் சாய்வான விளிம்புகளாக இருக்கும். பிரதான சிகரத்தில் அங்க சிகரங்களின் கொத்துக்கள் இருக்கும். பல தூண்களைக் கொண்ட மண்டபத்தின் கூரை பிரமிட் உருவில் இருக்கும்.

ஒவ்வொரு தூணும் மூன்று அல்லது நான்கு புறங்களைக் காட்டும். மண்டபத்தில் தூண்கள் அமைக்கப்பட்டிருக்கும். பொதுவாக எண்கோண வடிவில் இருக்கும். மண்டபத்தின் மூன்று பக்கங்களிலும் நீட்டிக் கொண்டிருக்கும் பகுதிகள். பக்கவாட்டில் உள்ள இரண்டிலும் சாளரங்களும், கக்ஷாஸனங்களும் இருக்கும். எண்கோண கட்டத்தின் மீது அடுத்தடுத்துள்ள வளையங்கள் மீது அரைக் கோள வடிவ விதானம் இருக்கும்.

குஜராத் ஆலய நிர்மாணக் கலையில் இந்தக் கட்டத்துக்கு அருமையான உதாரணம் சுனக்கிலுள்ள நீல கண்ட மகா தேவர் கோயில். இதன் காலம் கி. பி. 1000, இதன் குறிப்பிடத் தக்க அம்சங்கள், மண்டபக் கூரை மீது சிறிய அளவு கூரை அடுக்குகள் இருப்பதும் அங்க சிகரங்களிலும், பிரதான கோயிலின் சிகரத்திலும் உச்சியில் இரண்டு ஆமலகங்கள் இருப்பதும் ஆகும். மோதேராவிலுள்ள அழகான சூரியன் கோயிலில் (கி. பி, 1026) மேலும் தீர்க்கமானது. இக் கால கட்டத்தின் இதர முக்கிய கோயில்களில் கத்தியவார் மியானியிலுள்ள நீல கண்ட மகா தேவர் கோயில், கந்தோரணாவிலுள்ள ஹிங்கோல்ஜி மாதா கோயில், அசோதாவிலுள்ள ஜய்சால் நாத மகா தேவர் கோயில் ஆகியவை குறிப்பிடத் தக்கவை, கசராவிலுள்ள கோயில் திரி கூடாசல வகைக்கு உதாரணமாகும். இப் பிரதேசத்தில் அருமையாக கணப்படுவது இது. இங்கு சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மூவருக்குமான மூன்று கோயில்கள் ஒரு பொதுவான மண்டபத்தின் மூன்று புறத்திலும் உள்ளன. மைசூர் ராஜ்யம் சோமநாத்பூரிலுள்ள கேசவர் ஆலயத்திலும் இப்படித்தான் இருக்கிறது. இக் கோயில்களில் சோலாங்கி வகைக்குரிய சிகரம் போன்ற பகுதிகள் உள்ளன. கத்தியவாரிலுள்ள பர்பாடினர், கீர் ஆகிய

இடங்களிலும் திரிகூடாசல வகைக் கோயில்கள் உள்ளன. இவையும் வேறு பலவும் சுனக்கிலுள்ள கோயில் போலவே இருப்பதால் இவை 10-ஆம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியைச் சேர்ந்தவை என்று கூறலாம்.

மோதேராவிலுள்ள சூரியன் கோயிலில் நாகரபாணி யின் பிராந்திய வாரி வளர்ச்சி நன்கு பக்குவ மடைந் திருக்கிறது. குண்டம் (குளம்) கீர்த்தி தோரணம், சபா மண்டபம் ஆகிய எல்லாம் இதில் உள்ளன. குளம் அழகான அமைப்புக் கொண்டது. சிறந்த வேலைப்பாடமைந்த சிலுவை வடிவிலுள்ள தூண்களைக் கொண்ட சபா மண்டபத்துக்கு முன் புறம் கீர்த்தி தோரணம் உள்ளது. சந்தார வகை கருவறை, எண் கோண அமைப்பில் உள்ளன. தூண்களைக் கொண்ட மண்டபம் ஆகியவற்றின் மூலை விட்டத்தில் இவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு பகுதியும் அழகிய செதுக்கு வேலைகள் நிரம்பியதாகவுள்ளன.

கத்தியவாரிலுள்ள கும்டியில் இருக்கும் அழகிய செதுக்கு வேலைகளும், அருமையான பரிமாணமும் கொண்ட சாந்தார வகைக் கோயிலான நவலக ஆலயம், சேஜாக்பூரிலுள்ள நவலக ஆலயம் ஆகியவை 11-ஆம் நூற்றுண்டின் கட்டிடக் கலைக்கு ரசமான உதாரணங் களாகும். 12-ஆம் நூற்றுண்டில் சித்தராஜ ஜயசிம்மன், குமாரபாலன் ஆகிய மன்னர்களின் ஆதரவில் சில பெரிய சோலாங்கி வகைக்கோயில்கள் கட்டப்பட்டன. இவற்றுள் சித்தாபூரிலுள்ள ருத்ர மகாலயம் சித்த ராஜ ஜயசிம்மனால் கட்டப்பட்டதென்றும், சோமநாத பட்டணத்திலுள்ள புகழ்பெற்ற சோமநாதர் ஆலயத்தின் ஏற்கெனவே இருந்த கட்டிடங்களுடன் புதிதாகப் பலவற்றை குமார பாலன் கட்டினுன் என்றும் கூறப்படுகிறது. மற்றொரு பெரிய கோயில் வட் நகரில் இருந்ததாகும். ஆயினும் இவை

யெல்லாம் இனம் கண்டு கொண்டு கொள்ள முடியாதபடி பாழைடைந்துள்ள. அவற்றின் மகோன்னதத்தைக் காட்ட ஒவ்வொன்றின் சிறு பகுதிகள் தான் இன்றுள்ளன; அடுத்த நூற்றாண்டில் சத்ருஞ்சய, கிர்னார், தரிங்கா ஆகிய இடங்களிலுள்ளவை போன்ற கோயில்கள் வாஸ்துபாலன் போன்ற வணிகப் பெரு மக்களின் ஆதரவுடன் கட்டப் பட்டன. ஆனால் இவற்றில் விசேஷ அம்சம் எதுவும் இல்லை.

இந்துக் கோயில்களுக்கு பிருந்தாவன், புவனேஸ் வரம், காஞ்சிபுரம் ஆகியவை புகழ் பெற்றிருப்பது போல் சத்ருஞ்சயம், கிர்னார் ஆகிய நகரங்கள் ஜைன கோயில் களுக்குப் பிரசித்தமானவை. இங்குள்ள பல கோயில் களில் சர்வபத்ர அல்லது செளமுக் என்று ஜைனரால் கூறப்படும் கோயில்கள் முக்கியமானவை. நான்கு வாயில் களைக் கொண்ட இவை எடுப்பாகக் கட்டப்பட்டவை என்பதை ஆதி நாதர்க்குரிய செளமுக் ஆலயத்தில் காணலாம். இது கி. பி. 1618-இல் கட்டப்பட்டது. கிழக்குப் புறம் ஒரு மண்டபம் உள்ளது. இதர மூன்று பக்க வாயில்கள் ஒவ்வொன்றிலும் மூன்றடுக்கு முகப்புக் களும், இரண்டாவது அடுக்கில் சாளரமும் உள்ளன. சத்ருஞ்சயத்தின் தென்பகுதியிலுள்ள ஸ்ரீ ஆதீஸ்வரர் கோயில் இவ்வகையில் அமைந்தது. இது 1530-இல், முன்பு 960-இல் கட்டப்பட்ட ஒரு கோயில் இருந்த இடத்தில் எழுப்பப்பட்டது. இதில் மேற் சொன்ன கோயிலைப் போன்றதுதான்; ஆனால் இதுவும் தூண்கள் கொண்ட வாயிலுக்கு மேல் அடுக்கு ஒன்றிருக்கிறது. மண்டபத்தின் மீது தாழ்வான கூரையுள்ளது.

ஜுனாகாத் அருகிலுள்ள கிர்னார் குன்று கோயில் களில் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நேமிநாதர் கோயில் முக்கியமானது. ஒரு சுற்றுச் சுவருக்குள் இது அமைந் துள்ளது. அங்க சிகரக் கொத்துக்களுடன் கூடிய அதன் சிகரம் வழக்கமான குஜராத் வகையில் இருக்கிறது.

30

தக்காணத்தின் நாகர பாணி கோயில்கள்

திராவிட பாணிக் கோயில்கள் வடக்கே எல்லோரா வரை காணப்படுவது போலவே நாகர பாணிக் கோயில்கள் தெற்கே ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கர்நூல் வரை காணப்படுகின்றன என்பதை ஏற்கெனவே கூறினோம். தக்காணத்திலுள்ள நாகரக் கோயில்களில் காலத்தால் முற்பட்டதும் பிற்பட்டதுமான இரு பிரிவுகள் உள்ளன. முற்பட்ட காலக் கோயில்கள் ஐஹொளே, பாதாமி, மகாகூடம், பத்தடக்கல் போன்ற நான்கு இடங்களில் உள்ளன. கி.பி. 5-8 நூற்றாண்டைச் சேர்ந்த பாதாமி சாளுக்கியர் காலத்திய இக் கோயில்களைப் பற்றி ஏற்கெனவே நிறையக் கூறப்பட்டுள்ளது. இப்போது நாம் நாகர பாணிக் கோயில்களைப் பற்றி மட்டும் கவனிப்போம். ஐஹொளேயிலுள்ள 9, 24-எண் கோயில்கள் மிகப் பழமையான. சிகரங்களைக் கொண்டுள்ளன. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்ததாக இவை இருக்கலாம். இக்காலத்தில் கட்டிடக்கலை ரீதியான குறிப்பிடத்தக்க அம்சம் திராவிட பாணிக் கோயில்களுக்கு நாகர பாணி சிகரம் இருப்பதாகும். இது பிற்காலத்தில் அமைக்கப்பட்டதுதான். துர்க்கை, ஹுச்சிமல்லிகுடி கோயில்கள் இதற்கு எடுத்துக்காட்டு. பத்தடக்கல்லில் உள்ள களகநாதன், காசி விஸ்வநாதர் கோயில்கள் ஐஹொளேயில் உள்ளது போன்ற தாழ்வான சிகரங்களைப் பெற்றிருக்கின்றன. இக்கோயில்களின் குறிப்பிடத்தக்க அம்சம்

உச்சியிலுள்ள ஆமலகத்தின் சிறிய உருவமாகும். இங்குள்ள பாபநாதர் கோயில் சற்று வளர்ச்சியடைந்த அம்சங்கள் கொண்டது. இதன் காலம் கி.பி. 700. சாந்தார வகை கர்ப்பக்கிருகத்தின் தட்டையான மேற்கட்டின்மீது நாகர பாணி சிகரம் கொண்டதாக இது இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இதர அம்சங்களில் அருகிலுள்ள திராவிட பாணிக் கோயிலுக்கு அழகிய எடுத்துக்காட்டாக விளங்குகின்ற புகழ்பெற்ற விருபாக்ஷர் கோயில் போலவே இருக்கிறது.

மகாகூடத்திலுள்ள கோயில்களுள் சங்கமேஸ்வரர் ஆலயம் நாகர பாணியில் உள்ளது. திரிரத கருவறையும், மத்திய இரதத்தின் பக்கத்தின் சிறிய அளவுக் கோயிலும் தூண்கள் கொண்ட முகப்பு வாயிலும் அமைந்தது.

ஆந்திரப் பிரதேசம் மஹபூப் நகர் மாவட்டம் ஆலாம்பூரிலுள்ள ஒரே பிராகாரத்துக்குள் காணப்படும் ஆறு கோயில்கள் நாகர பாணியில் உள்ளன.' அமைப்பிலும், வேலைப்பாட்டிலும் இவை பத்தடக்கல்லில் உள்ள பாபநாதர் கோயில் போலவே இருக்கின்றன. காலத்தால் முற்பட்ட இந்த தக்காண நாகர பாணிக் கோயில்களில். திராவிட, நாகர அம்சங்கள் இரண்டும் இருக்கும்; ஆனால், நாகர சிகரம் மட்டும் நிச்சயமாக இடம்பெறும் என்பதை மேலே சொன்ன விவரங்களிலிருந்து தெரிந்து கொண்டு இருக்கலாம். எனவே, இவற்றை வட இந்தியாவின் இதர பகுதிகளிலும் கிழக்கு இந்தியாவிலும் உள்ளது போன்ற பரிபூரணமான நாகர பாணிக் கோயில்களாகக் கருதமுடியாது.

தக்காணத்தின் வட பகுதியில் ஒருவகை நாகரக் கோயில்கள் காணப்படுகின்றன. விசேஷ வகையான சிகரம் அமைந்திருப்பதால் இவை மற்றதிலிருந்து மாறுபட்டுள்ளன. இந்த சிகரத்தில் நான்கு பக்கங்களிலும்

உள்ள ராஹா பாகங்கள் பட்டிபோல் காட்டப்பட்டிருப்ப துடன் தெளிவாகவும் அமைந்துள்ளன. அவற்றின் இரண்டுக்கிடையேயுள்ள இடத்தில் சிகரத்தைப் போன்ற சிறு உருவங்கள் வரிசையாக உச்சிவரை உள்ளன. சிகரத்தின் எல்லைக் கோடுகள் நேராக உள்ளன; தோள் மட்டத்தில் கூட வளைவு இல்லை. இவ்வகை நேரான முனைகளைக் கொண்ட பக்கங்கள் ஒரிஸ்ஸா கோயில்களிலும் காணப்படுகின்றன. ஆனால், அங்கே எல்லைக் கோடுகள் தோள் மட்டத்திலாவது உட்புறமாக வளைந்துள்ளன, இந்த விசேஷ அம்சம் ஒருபுறமிருக்க இந்த வட தக்காண கோயில்களின் அமைப்பும் பல கோணமாக உள்ளது. இக்கோயில்களில் சாதரணமாக கர்ப்பக்கிருகம் முன்புறத்தில் மண்டபம், ஆகியவை இருக்கும். இவை மூலை விட்டத்தில் அமைக்கப்பட்டவை போலவே தோன்றும். இவ்வகைக் கோயிலின் ஆரம்பகால உதாரீணங்கள் இன்று இல்லை. மகாரரீஷ்டிரா தாணு மாவட்டத்திலுள்ளி அம்பரநாதர் கோயில் இப்போது பாழடைந்து காணப்பட்டபோதிலும் இவ்வகைக்கு சிறந்த எடுத்துக்காட்டு, 11–ஆம் நூற்ருண்டின் நடுப் பகுதியைச் சேர்ந்த கோயில் இது. இவ்வகைக் கோயில்கள் கான்தேஷிலுள்ள பலஸ்ஷி, பாட்ணு கைராவிலுள்ள சார்ஞல் போன்ற பல இடங்களில் காணப்படுகின்றன.

நர்ஸிக் மாவட்டம் ஸின்னரிலுள்ள கோண்டேஸ்வரர் கோயில் இவ்வகைக்கு மற்ருெரு அழகிய எடுத்துக்காட்டு அது பஞ்சாயதன வகை இக்கோயிளிலுள்ள உப கோயில்களின் சிகரம் நாகர பாணியில் உள்ளது. நாஸிக் மாவட்டம் ஜோக்தாவிலுள்ள மங்கேஸ்வரர் கோயில், அகமது நகர் மாவட்டத்திலுள்ள அமிர்தேஸ்வரர் கோயில் ஆகியவையும் இதே வகையைச் சேர்ந்

தவை. இவையெல்லாம், மேலே சொன்ன அம்பரநாதர் கோயிலுக்குக் காலத்தால் பிற்பட்டவை.

பழைய குவாலியர் சமஸ்தானம் உதயபுரியிலுள்ள நீலகண்டேஸ்வரர் கோயில் இவ்வகைக்கு சிறந்த எடுத்காட்டாகும். 11-ஆம் நூற்ருண்டில் இதனைக் கட்டிய பரமார மன்னன் உதயாதித்யன் பெயரால் இது உதயரேஸ்வர கோயில் என்றும் அழைக்கப்படுவது உண்டு. தக்காண வகைக் கோயிலுக்கு வடக்குக் கோடியிலுள்ள எடுத்துக்காட்டு இது. கர்ப்பக்கிருகமும், மண்டபமும் உயரமான மேடைமீது உள்ளன. கர்ப்பக்கிருகம் பல கோண அமைப்பில் கட்டப்பட்டது; சிற்பங்கள் பொறித்த உயரமான அதிஸ்தானம் உடையது. ஜங்கத்தில் செதுக்கு சிற்பங்கலுள்ள தூண்கள் உள்ளன. இதன்மீது பரந்தம் இருக்கிறது. இப்பகுதிக்குரிய சிகரம் அமைந்துள்ளது. சிகரத்தில் கவனிக்க வேண்டிய அம்சம், பிஸ்மத்தின் முனைகள் ராஹா பாகங்களுக்கிடையே, ஒவ்வொன்றிலும் நட்சத்திர வடிவ அமைப்புக்கேற்ப ஐந்து முனை கொண்ட நட்சத்திரங்களைப் பெற்றுள்ளன என்பதாகும். முன் புறமுள்ள மண்டமும். கர்ப்பகிருகமும் அந்தராலத்தினல் இணைக்கப்பட்டுள்ளவை. இக்கோயிலின் எல்லாப் பகுதிகளும் நுட்பமாக வேலை செய்யப்பெற்றுள்ளன. முழுக் கட்டமும் பரிபூரணமான இணைந்த அமைப்பபைுலப்படுத்துகிறது. இந்த வட தக்காண பாணி 13-ஆம் நூற்ருண்டிலும், அதற்குப் பின்னரும் கூடத் தொடர்ந்து இருந்தது. இக்காலத்தில் கோயில்களில் ஒன்று அகமது மாவட்டம் பெட்காம் கிராமத்துக்கருகிலுள்ள லக்ஷ்மி நார்ாயணர் கோயிலாகும். இது அழகான பரிமாணங்களைக் கொண்டது. அற்புதமான வேலைப்பாடமைந்த சிற்பங்கள் இக்கோயிலை அலங்கரிக்கின்றன. தூண்களில் கும்பலதா அமைப்பு, மண்டபச் சுவர்களில் துவாரமிட்ட கோலங்கள் அமைந்த கற்பாளங்கள் இருப்பது ஆகியவை இக்

கோயிலின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்: இக்கால கட்டத்தின் இறுதியில் கட்டப்பட்ட கோயில்களை இங் குள்ளவர்கள் ஹேமாத்பன்டி வகை என்றழைக்கிருர்கள். தேவகிரியை• ஆண்ட யாதவ வம்ச மன்னன் இராமச் சந்திரனுடைய (கி.பி. 1272) மந்திரியாக இருந்தவர் என்று கருதப்படும் ஹேமாத் பந்த் என்பவர் பெயரால் ஏற்பட்டது இது. வரலாற்றில் இவர் பெயர் காணப்பட வில்லை. கட்டிடக்கலை ரீதியான விசேஷ அம்சங்கள் எதுவும் இக்கோயில்களில் இல்லை.

வட இந்திய ஆலய நிர்மாணக்கலை பற்றி ஆராய் வதற்கு விசேஷ முக்யத்துவம் வாய்ந்த குவாலியரிலும், பிருந்தாவனத்திலும் உள்ள கோயில்களைப் பற்றி இனி பார்ப்போம். அமைப்பு. உருவம், தோற்றம், வேலைப் பாடு ஆகியவற்றில் பல்வேறு பாணிகளின் அம்சங்களைப் புலப்படுத்துவதாக இவை இருக்கலாம். குவாலியர் கோட் டையில் சில கோயில்கள் உள்ளன. இவற்றுள் ஒன்றுக்கு தேலி—கா—மந்திர் என்று பெயர். வேறு இரு கோயில் கள் சாஸ்பாஹு எனப்படுகின்றன முன்னது, பின்னிரு கோயில்களைவிட காலத்தால் முற்பட்டது. கி.பி. 10-வது நூற்றுண்டாக இருக்கலாம். இதற்கு முன்பே பலமுறை கூறப்பட்டுள்ளதேலி-கா- மந்திர் நீண்ட சதுர வடிவமும், அதே வடிவிலமைந்த முகப்பு வாயிலும் கொண்டது. அதன் வெளிப்புறத்திலுள்ள வேலைப்பாடுகள் நாகர பாணி யில் இருந்தபோதிலும் மேலே கவிழ்ந்த படகு போன்ற கூரையும் அதன் இருபுறமும் உச்சி அலங்காரமும் உள் ளன. ஏற்கெனவே கூறியதுபோல் நீண்ட சதுர வடிவில் ஒரு சில நாகர பாணிக் கோயில்களே கட்டப்பட்டிருக்கின்றன. புவனேஸ்வரத்திலுள்ள வைதல்தூல் இவ் வகையைச் சேர்ந்த மற்ெருரு சிறந்த கோயிலாகும்.

விஷ்ணுவுக்குரிய இரண்டு சஸ்பாஹு கோயில்களுள் சிறியது. பெரிய கோயிலின் மாதிரி வடிவமாகும். பெரிய கோயிலின் கர்ப்பக்கிருகம் இப்போது இல்லை. முன்புற தூண் மண்டபம் மட்டுமே உள்ளது. இந்த மண்டபத்தைக் கொண்டு பிரதான கோயிலின் பரிமாணத்தைக் கணக்கிட முடியும். இந்த மண்டபம் மூன்று அடுக்குகளாக உள்ளது. ஒவ்வொன்றிலும் தாழ்வான கைப்பிடிச் சுவரும் மேலே திறந்த வெளியும் உள்ளன. ஒரு பகுதி பாழடைந்து விட்ட கூரை பிரமிட் உருவில் இருந்தது. ஒவ்வொரு அடுக்கின் உட்புறத்திலும் கலையம்சத்துடன் அமைக்கப்பட்டுள்ள தூண்கள் உள்ளன. இக்கோயில் கி.பி. 1093-இல் கட்டி முடிக்கப் பெற்றது.

கிருஷ்ணனுடைய லீலைகளால் புனித மடைந்த பிருந்தாவனத்தில் உள்ள கோயில்கள் 16-ஆம் நூற்றுண்டின் பிற் பகுதியிலும், 17-ஆம் நூற்றுண்டின் முற் பகுதியிலும் கட்டப்பட்டவை. இவை ஸ்தல பாணியில் அமைந்தவை. சிவப்பு மணற் கற்களால் கட்டப்பட்ட இக் கோயில்கள் மொகலாய மன்னர் அக்பர் காலத்தவை இவற்றுள் 1590-இல் கட்டப்பட்ட கோவிந்த் தேவி கோயில் மிகவும் முக்கியமானது. இதன் கர்ப்பக்கிருகப் பகுதி அவுரங்கசிப் காலத்தில் பாழைடைந்து விட்டது. அடுக்குகளைக் கொண்ட மண்டபம் சிலுவை வடிவில் இருக்கிறது. இதன் மேற்ப் பகுதி ஒரு கோயிலாக மாற்றப் பட்டுள்ளது. இது மரபு வழியில் கட்டப்பட்டதுதான் என்றுலும் வேறு சில அம்சங்களில் இஸ்லாமியக் கட்டிடக் கலையின் செல்வாக்கு புலப்படுத்துகிறது. உருவச் சிற்பங் கள் ஒன்று கூட இல்லாமல் இருப்பதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மற்றபடி நன்கு திட்டமிடப்பட்டு திறமையாகக் கட்டப்பட்டுள்ளது. கோயிலின் கூரை யைடறுக்கும் கூரிய வளைவு கொண்டு அமைந்தது இது

இந்தோ – இஸ்லாமிய கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டான கட்டிடங்களின் அரைக் கோள வடிவ மேற் கூரை போலப் பெரும்பாலும் இது உள்ளது. மற்றொரு முக்கிய கோயில் ஜுகல் கிஷோர், எண் கோண அமைப்பில் கட்டப்பட்ட இக் கோயிலில் கர்ப்பக்கிரு கமும், மண்டமும் உள்ளன புராதன வாயிலைச் சுற்றிலும் இஸ்லாமியக் கலையில் செல்வாக்குப் படர்ந்த செதுக்கு வேலைகள் நிறைய உள்ளன. பிருந்தாவனக் கோயில்களின் குறிப்பிடத் தக்க அம்சம் எண் கோண வடிவிலுள்ள சிகர மாகும். அது பல கட்டங்களாக உயர்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் சிற்பங்களும் உச்சியில் ஆமலக சீலமும் உள்ளன.

31

இமாலயப் பகுதி - நாகரக் கோயில்கள்

இமாலயப் பகுதியிலும் இங்கொன்றும் அங்கொன்று மாக நாகர பாணிக் கோயில்கள் உள்ளன. வடஇந்தியா முழுவதும் தெரிந்திருந்த பாணி இது ஒன்று தான் என் பதையே இது காட்டுகிறது. இந்தியா மற்றும் கீழை நாடுகளின் கட்டிடக்கலை அறிஞரான பெர்குஸன் இதற்கு 'ஆர்யாவர்த்த பாணி' என்று பெயரிட்டது பொருத்தமே யாகும். இவற்றுள் ஏற்கெனவே கூறப்பட்டுள்ள காங்க்ரா, மஸ்ரூரிலுள்ள ஒரே கல்லாலான கோயில் இன்றும் நிலைத் திருப்பணிவற்றில் காலத்தால் முற்பட்டது (8 ஆம் நூற்றாண்டு) எனலாம். காங்க்ரா, பைஜ்நாத்திலுள்ள கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கோயில்கள் 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவற்றுள் ஒரு கோயில் உள்ள ஒவ்வொரு மண்டபத்தின் மூலையிலும் சிறிய அளவு ரேகா கோயில் இடம் பெற்றிருக்கிறது. சம்பாவில் உள்ள கோயில்கள் பஞ்சரத அமைப்பில் உள்ளவை. இவற்றுள் பெரிய கோயில்களில் பாதத்தில் ஐந்து அங்கங்கள் காணப் படுகின்றன. இக்கோயில்களில் ஆமலகத்தின் மீது ஒன்றும் கண்டியின் மீது ஒன்றுமாக சிறு குடைகள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. இந்த மலைப் பிராந்தியத்துக்கே யுரிய விசேஷ அம்சமாக இது காணப் படுகிறது. கேதாரிநாத், பத்ரிநாத் கோயில்களிலும் இதைக் காண முடிகிறது. குலு பள்ளத்தாக்கிலுள்ள பிஜௌராவிலுள்ள மகாதேவர் கோயிலும் நாகர பாணிக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். இதில் ஒரு

விசேஷ அம்சம் பிரதான கோயிலின் மூன்று புறமும், அதனை ஒட்டினாற் போல் இருக்கும் மூன்று சிறு கோயில்களாகும். கணேசர், விஷ்ணு, துர்க்கை ஆகியவர்களின் சிற்ப உருவங்கள் இவற்றில் உள்ளன. இக்கோயில் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

இதர பிரதேசங்களைப் போலவே பீகாரிலும், கிழக்கு, மேற்கு வங்கத்திலும் பழங்காலத்திலிருந்தே நாகர பாணிக் கோயில்கள் கட்டப்பட்டன. ஆனால், காலத்தால் முற்பட்ட கோயில்கள் இன்று இல்லை. பிற்காலக் கோயில்களுள் ஒன்று மேற்கு வங்காளம், பர்த்வான் மாவட்டத்திலுள்ள பராகரில் இருக்கும் எண் 4. கோயிலாகும். இதன் கர்ப்பக்கிருகம் திரிரத அமைப்பு. ஆனால். இருபுறமும் மத்திய அணைச் சுவற்றில் மாடங்கள் இருப்பதால் பஞ்சரத அமைப்பாகவும் இருக்கலாம் என்ற தோற்றத்தை தருகிறது. மாடங்களைத் தவிர சுவர்களில் வேறு அலங்கார வேலைப்பாடுகள் எதுவும் இல்லை. சிகரம் உயரமாக இருக்கிறது. அதன் மத்திய பாகம் நடுவில் ஒரு பள்ளத்தின் மூலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உச்சியிலுள்ள ஆமலகமும், பூமி ஆமலகங்களும் வட்ட வடிவமாக உள்ளன. கண்டியின் பல்வேறு கட்டங்கள் பிரபலமான கவாக்ஷ வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப் படவில்லை. இவை தவிர, கண்டியினுடைய ராஹாபாகங்களின் மேற்பகுதியில் ஆமலக வேலைப்பாடுகள் உள்ளன. இந்த அம்சங்களைக் கொண்டிருப்பதால் இக்கோயில்கள் ஒரிஸ்ஸாவிலோ, மத்திய இந்தியாவிலோ உள்ள கோயில்களை விட. குஜராத் கோயில்களை அதிக அளவுக்கு ஒத்ததாக உள்ளன.

பாலர்கள், சேனர்கள் ஆட்சிக் காலத்தில் இவ்வகையில் கட்டப்பட்ட இதர குறிப்பிடத்தக்க கோயில்களில் பர்த்வான் மாவட்ட சத்துலியாவிலுள்ள செங்கல் கோயி

லும், பங்குரா மாவட்ட பஹுலாராவிலுள்ள செங்கல் கோயிலும் முக்கியமானவை. சத்தூலியாவில் ஐந்து அங் கங்களைக் கொண்ட பாதம் உள்ளது. நீட்டிக் கொண் டிருக்கும் இரதங்களைத் தவிர கர்ப்பக்கிருகத்தின் புறங் களில் வேறு வேலைப்பாடுகளோ மூலை ஆமலகங்களோ இல்லை. இது 10 வது நூற்றுண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். சித்தேஸ்வரர் கோயில் (11 ஆம் நூற் றுண்டு) அஷ்டபரிவாரவகைக்கு உதாரணமாகும். எல்லாக் கோயில்களும் ஒரு பிராகாரத்துக்குள் அடங்கியுள்ளன. பிரதான கோயில் வழக்கமான அமைப்பில் உள்ளது. ஐந்து அங்கங்களைக் கொண்ட பாதம், சுவர்களில் மாடங் கள்—அவற்றின் மீது சிறிய அளவு சிகரங்கள், கண்டியின் மேற்பரப்பில் நுண்ணிய கவாக்ஷ வேலைப்பாடு, ராஹா பாகங்களில் சிறிய அளவு சிகர வடிவங்கள் ஆகியவை உள்ளன. இவற்றுள் கடைசியாகக் குறிப்பிட்டிருப்பது தான் நாகர பாணிக் கோயில்களுக்கு இப்பிரதேசத்தின் காணிக்கை என்று தோன்றுகிறது. ஏனெனில், இந்த வேலைப்பாடு சுந்தரவனத்திலுள்ள ஜாதார் நூல் போன்ற கோயில்களிலும் காணப்படுகிறது.

மேலே சொன்ன மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட பல அழகிய கோயில்கள் முஸ்லீம் படையெடுப்பாளர் களால் தரைமட்டமாக்கப் பட்டு விட்டன. மால்டா அருகில் லக்னௌதியிலுள்ள கருமேக வர்ணக்கல் கட்டி டத்தின் இடிபாடுகள் இதனை ஊர்ஜிதம் செய்கின்றன. இப்பிரதேசத்தில் உள்ள பல மசூதிகள் (உதாரணம்- கௌர், பாந்துவாவில் உள்ளது) இந்துக் கோயில்களின் பொருள்களைக் கொண்டு கட்டப்பட்டது போல் தோன்று கிறது. டில்லி குத்ப் கோயிலைப் போல ஹுக்ளி மாவட்டத்தி லுள்ள சப்த கிராமம் என்ற பழைய பெயர் கொண்ட திருவேணியிலுள்ள கோயிலின் இடிபாடுகள் இப்பிர தேசத்தினுடைய ஆலய, நிர்மாணக்கலையின் பழைய

பெருமைக்குச் சான்று கூறுகின்றன. இங்கு கிடைக்கும் அலங்கார வேலைப்பாடுள்ள உடைந்த பகுதிகள், லக்னௌதியில் உள்ளது போலவே இருக்கின்றன. இது 11-12-ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. இப்போது ஜாபர் கான் காஸி மஸர் என்றழைக்கப்படும் மசூதியாக மாற்றப் பட்டுள்ள இரண்டு கட்டிடங்கள் குறிப்பிடத் தக்கவை. ஏனெனில், அவை முந்திய வைஷ்ணவக் கோயிலின் அந்தரால மண்டபப் பகுதிகள். பெரும்பாலான செதுக்கு வேலைகளும், பகுதிகளும் பாழடைந்து விட்ட போதிலும் முறையாகவும் ஒழுங்காகவும் கட்டப்பட்டுள்ள விதம், அது நன்கு பூர்த்தி செயயப்பட்ட கோயில் என்பதைப் புலப் படுத்துகிறது. மேலும், இக்கட்டிடங்களின் வாயில்களில் செதுக்கு வேலைப்பாடுகள் உள்ளன; சுவர்களிலும் ஓரளவுக்கு அலங்கார வேலைப்பாடுகள் இடம் பெற்றிருக் கின்றன;

இப்பிரதேசத்தின் கட்டிடக்கலை மத்திய காலத்தின் பிற்பகுதியில் மீண்டும் ஆரம்ப நிலைக்கு திரும்பி விட்டது. கருங்கல் உபயோகிக்கப் படுவது நின்று செங்கல் அங்கு இடம் பெற்றது. மர வீடுகளும், மூங்கில் கூரை வேய்ந்த குடிசைகளும், ஆலயங்களுக்கு மாதிரி வடிவங்களாயின. இக்காலத்தில் கட்டப் பட்ட செங்கற் கோயில்களில் சாய்வான கூரையும் வளைந்த இறப்பும் இருப்பதிலிருந்து இதனை அறியலாம். இந்தப் போக்கின் விளைவாக, இக் கோயில்கள் எளிமையாகவும், கலை ரீதியான பெருமை எதுவும் இல்லாத விதத்திலும் இருக்கின்றன. பல செங்குத்துச் சுவர்களைக் கொண்ட சதுர அமைப்பாக இக் கோயில்கள் இருந்த போதிலும் அவற்றின் உச்சியில் சமதூர வளைவுகள் இருப்பதால் கூரை சாய்வாக உள்ளது. கூரை மீது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கோபுரங்கள் கட்டப் படுகின்றன. அவற்றின் எண்ணிக்கைக்கு

ஏற்ப கோயில் பஞ்சரத்னம், அல்லது நவரத்னம் என்றழைக்கப் படுகிறது. இந்த சிகரங்களில் சிற்ப உருவங்களைக் கொண்ட பகுதிகள் உள்ளன. வாயில் வழக்கமாக பெரும் தூண்களால் பிரிக்கப்பட்ட மூன்று வில் வளைவு திறப்புக்களைக் கொண்டதாக இருக்கும். உட்புறம் **தாகுர் பாரி** எனப்படும் ஒரே யொரு மண்டபம் தான் இருக்கும். அதில் சிலைக்கான பீடமும், மண்டப சாலை உருவில் இரண்டு அடுக்குகளும் இருக்கும். இக் கோயில்களின் மற்றொரு அம்சம் வெளிப்புற அலங்காரமாகும். சுட்ட மண்ணைக் கொண்டு பூ வேலைகளும், உருவ வடிவங்களும் செய்யப்பட்டதாக அது இருக்கும்.

பங்குரா மாவட்டம், விஷ்ணு பூரிலுள்ள, மன்பூமை ஆண்ட வைஷ்ணவ மன்னர்களின் ஆதரவில் 16-17-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட கோயில்கள், கட்டிடக் கலையின் இக் கட்டத்தை நன்கு புலப்படுத்துகின்றன இவற்றுள், பஞ்சரத்ன வகையைச் சேர்ந்த ஸ்யாம்ரியா கோயில் சிறந்த எடுத்துக் காட்டாகும். கூரை மீது பல் வேறு அளவுகளில் உள்ள ஐந்து கோபுரங்கள் கவர்ச்சியாகத் தோற்றமளிக்கின்றன. வளைவு வாயில்களும், தூண்களும் நன்கு அமைக்கப்பட்டுள்ளன. கிராமீயக் காட்சிகளை சித்தரிக்கும் சுட்ட மண் உருவங்கள் முகப்பை அலங்கரிக்கின்றன. இதே இடத்திலுள்ள **ஜோர் பங்களா** வேறு விதமாக உள்ளது. இதில் இரு கோயில்களை இணைத்து. மேலே ஒரே கோபுரத்துடன் கூடிய இரு கோயில்களாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக, கிழக்கிந்தியாவில் கட்டிடக் கலையில் ஒரு புரட்சியே ஏற்பட்டிருப்பது போல் தோன்றுகிறது. இதன் விளைவாக, முகமதியர் படையெடுப்பின் செல்வாக்கு இடம் பெற்ற முற்றிலும் புது விதமான ஒரு கட்டிட வகை உருவாயிற்று.

32

காஷ்மீரக் கோயில் நிர்மாணக் கலை

இமாலயப் பகுதியிலுள்ள காஷ்மீரம் அற்புதமான இயற்கைக் காட்சிகளுக்கும், கால காலமாக பல் வேறு கலாசாரங்கள் எதிர்ப்பட்ட இடமாக இருப்பதாலும் பிரசித்தி பெற்றது. ஆயினும், அது எப்போதுமே பாரதத்தின் ஒரு பகுதியாக இருந்து வருவதால், அதன் வரலாற்றில் பல் வேறு கட்டங்களில் பல மாறுதல்களைக் கண்ட போதிலும் அதன் கலாசாரம் இந்தியாவினுடைய தாகவே எப்போதும் இருந்து வருகிறது. இதர் கலாசாரங்களின் லேசான செல்வாக்கு மேலெழுந்த வாரியாக இடம் பெற்றிருந்த போதிலும் காஷ்மீரத்தின் கலாசாரம்தான். கட்டிடக் கலைத் துறையிலும் அதற்கு நீண்ட வரலாறு உண்டு. அவற்றை மூன்று பிரிவாகக் கூறலாம். முதல் கட்டம் கி. மு. 3-ஆம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 200 வரையுள்ளது. இக் காலத்திய பௌத்த கோயில்களின் எஞ்சிய பகுதிகள் தான் இன்றுள்ளன. இவற்றுள் ஸ்தூபம், சைத்ய மண்டபம் ஆகியவை பிரதானமானவை. காஷ்மீர் அருகே ஹர்வானில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஸ்தூபத்தின் எஞ்சிய பகுதிகள், காந்தாரத்தில் சகஜமான அடுக்குகள் கொண்ட வகையைச் சேர்ந்தது என்பதைக் காட்டுகின்றன. இதே இடத்தில் கிடைத்துள்ள சைத்ய மண்டபத்தின் எஞ்சிய பகுதிகள் அது வழக்கமான கஜ பிருஷ்ட அமைப்புக் கொண்டது என்பதைக் காட்டுகின்றன.

கி. பி. மூன்றும் நூற்ருண்டிலிருந்து எட்டாம் நூற்ருண்டு வரையுள்ள இரண்டாவது கால கட்டத்தைச் சேர்ந்த சில கட்டிடங்கள் சுட்ட மண்ணிலான அழகிய சிற்பங்களைக் கொண்டுள்ளன. கட்டிடக் கலை ஆர்வத்தை ஆரம்ப காலக் கட்டிடங்கள் புலப்படுத்திய போதிலும், அவர்கள் கையாண்டிருக்கும் முறை மிகப் பழைமை யானது. ஆனல், 8 முதல் 14 வது நூற்ருண்டு வரையுள்ள மூன்ருவது கட்டத்தில் இக் கலையும் மக்களின் இதர வாழ்க்கைக் அம்சங்களும் புத்துயிர் பெற்றன. இந்த மலர்ச்சியைக் குறிப்பாக இக்கால கட்டத்தைச் சேர்ந்த கோயில்களில் காணலாம். காஷ்மீரத்தை யாண்ட மாபெரும் மன்னனுன லலிதாதித்யனுல் (724 – 760) இது தொடங்கப் பெற்றது என்று தோன்றுகிறது. இந்தக் காலத்திலிருந்து காஷ்மீரத்தில் கட்டப்பட்ட கோயில்கள் எல்லாம் பல கட்டிடங்களைக் கொண்டதாக பெரிய அளவில் அமைக்கப்பட்டன பெருங்கற்களை வியப்பூட்டும் விதத்தில் நுட்பமாக வெட்டிச் செதுக்கிப் பயன் படுத்தி யுள்ளனர். ஆழ்ந்த அனுபவத்தையும், பொறுமையுடன் கூடிய ஆற்றலையும் அதிலே நாம் காண முடிகிறது. இங்குள்ள கோயில்களின் விசேஷ அம்சங்கள், கிரேக்க வகைத் தூண்களமைந்த முகப்பு வாயில்கள், சிமென்ட் அல்லது இரும்பு முளைகளைக் கொண்டு கற்களை ஒட்டி யிருப்பது, வரிசையாகத் தூண்களமைந்த சுற்றுச் சுவர் ஆகியவையாகும்.

இந்த மூன்ருவது கட்டத்தின், காலத்தால் முற்பட்ட எடுத்துக் காட்டுகளுடன் காஷ்மீர் அருகேயுள்ள பரிஹாஸ் புரத்திலும் புராணதிஸ்தானத்திலும் இருக்கும் பெரிய பௌத்த ஆலயங்கள் முக்கியமானவை. இவற்றில் வழக்க மான ஸ்தூபமும். சைத்ய மண்டபமும் உள்ளன. ஸ்தூபம் அடுக்குகள் கொண்ட வகை. ஒரு பெரிய சுற்றுச் தவ ருக்குள் சைத்திய மண்டபம் உள்ளது. இதன் முற்றத்தின்

நடுவிலுள்ள கருவறை கஜ பிருஷ்ட உருவில் இருப்பதற்கு பதிலாக இந்துக் கோயில்களில் உள்ளதைப் போல் சதுர மாக இருக்கிறது. இவை பாழடைந்து இருந்த போதிலும் கட்டப்பட்டுள்ள விதத்தை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. பெரிய கற்கள் இதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன. சைத்ய கருவறையின் அடித்தளம் ஒரே கல்லாலானது. இது 16 அடி நீளம் 14 அகலம் $5\frac{1}{2}$ அடி உயரமும் 64 டன் எடையும் உள்ளது. இவ்வளவு பெரிய கற்களைக் கொண்டு வேலே செய்தவர்கள் உடல் வலுவிலும் அதிலும் அசாதாரண சக்தி படைத்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். இக் கட்டிடத்தில் சுண்ணும்புக் காறை உபயோகப் படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்க தாகும்.

இக் காலத்தில் இப் பகுதியில் கட்டப்பட்ட இந்து கோயில்களும் அவைகளுக்குரிய பல அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. இக் கோயிலில் உட்புறம் வரிசை யாக மாடங்களமைந்த பிராகாரச் சுவற்றுக்குள் நடுவில் கர்ப்பக்கிருகம் இருக்கும். முன் புறத்தில் மண்டபம் எதுவும் இல்லே. கருவறை மீது நாகர பாணி சிகரம் கிடையாது. ஆனல், அடுக்குகளாலான மேற் கட்டு உள்ளது. இது முவிதழ் வளைவுகளும் முக்கோண முகப்பு களும் கொண்டது. தூண்கள் துவாரங்களுடனும், கிரேக்க வகை உச்சியிடனும்உள்ளன. சாய்வான கூரையமைந்த கோயில்களும் இங்கு உள்ளன. மேலே சொன்ன பௌத்த ஆலயங்களில் செய்திருப்பது போலவே இந்துக் கோயில்களிலும் நன்கு செதுக்கப்பட்ட பெரும் கற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. மிகவும் ஒழுங்கான முறையில் அவை பொருத்தப்பட்டுள்ளன.

இந்துக் கோயில்களில் ஸ்ரீ நகர் அருகிலுள்ள ஓடாவில் இருக்கும் ருத்ரேசர் கோயில் காலத்தால் முற்

பட்ட கோயில்களில் ஒன்ருக இருக்கலாம். இது 7-ஆம் நூற்ருண்டைச் சேர்ந்ததாக இருக்கக் கூடும். எளிய சுவர் களைக் கொண்டமைந்த பழைமையான கட்டிடம். தாக்த்-இ- சுலேமானிலுள்ள சங்கராச்சாரியார் கோயில் ஒரு விசேஷமாகும். ஸ்ரீ நகர் அருகே ஒரு குன்றில் உள்ள இக் கோயில் சதுர வடிவில் அமைந்தது. இதன் கர்ப்பக்கிருகம் வட்டமானது. அதில் உயர்ந்த கூரை முகப்பையும், மூவிதழ் வளைவையும் காணலாம். அருகிலுள்ள நரஸ்தானி லுள்ள கோயிலில் இந்த அம்சங்கள் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

பூரணமாக இவ்விவரங்களைப் புலப்படுத்தும் கோயில் ஆனந்த நாத் அருகே மார்த்தாண்டியிலுள்ள சூரியன் கோயி லாகும். இது பாழடைந்துள்ளது. ஆயினும், அடுத்து வந்த காலங்களில் கட்டப்பபட்ட கோயில்களுக்கு இதுதான் முன் மாதிரியாக் அமைந்தது. வழக்கமான முறையில் இதன் கர்ப்பக்கிருகம் மாடங்களைக் கொண்ட பிராகாரத் தின் நடுவில் உள்ளது. சாதரணமாக கருவறையுடன் சேர்ந்த உப கட்டிடங்கள் எதுவும் இருப்பது இல்லை. ஆனல், தனியே ஒரு முகப்பு வாயில் அதன் இரு புறமும் அறைகளைக் கொண்டதாக இருக்கிறது. கருவறை உயர மான அடித்தளத்தின் மீது அமைந்துள்ளது. உயரமான பிரமிட் உருவ மேற் கட்டு இருக்கிறது. துருத்திக் கொண்டிருக்கும் சிற்பங்களும், மூவிதழ் வளைவும். முக்கோண முகப்பும் மேலும், அடித்தளத்தில் பெரிய செதுக்கு உருவங்கள் இருக்கின்றன. வேலைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கோயிலுக்கு பெரிய வாயில் இருந்தது. கருவரையைப் போலவே சில மாறுதல் களுடன் இருந்தது. பிராகாரத்தின் உட்புறச் சுவற்றில் உள்ள மாடங்கள் எளிய அமைப்புக்கள். இந்த அற்புதக் கட்டிடம் லலிதாத்யன் காலத்தைச் சேர்ந்தது.

மகோன்னதமான இந்த சூரியன் கோயில் தவிர, அளவில் சிறிய ஆனால் அழகில் குறையாத வேறு சில கோயில்களும் எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டன. ஸ்ரீநகர் அருகேயுள்ள வாக்நாத்தில் இருக்கும் கோயில்கள் முற்றிலும் காஷ்மீர வகை. பல காலத்தைச் சேர்ந்தவை இவை. லலிதாதித்யன் கட்டிய ஜயேஷ்திசன் கோயிலும் இவற்றுள் ஒன்று.

இப் பிரதேசத்தின் கட்டிடக்கலை வளர்ச்சியின் அடுத்த கட்டம் அவந்திவர்மன் என்ற பிரபல அரசன் காலத்தில் (855 - 883) ஏற்பட்டது. இக்காலத்தைச் சேர்ந்த கோயில்களில் அவந்திபூரிலுள்ள அவந்தீஸ்வர சிவன், அவந்திஸ்வாமி விஷ்ணு கோயில்கள் குறிப்பிடத் தக்கவை. இவைகளும் பாழடைந்துள்ளன. சிவன் கோயிலின் எஞ்சிய பகுதிகள் அது மார்த்தாண்டிலுள்ள சூரியன் கோயிலுக்கு அடுத்தபடியான பெரிய கோயில் என்பதைக் காட்டுகின்றன. விஷ்ணு கோயிலில் பல அதிகப்படியான அம்சங்கள் காணப்படுகின்றன. இது பஞ்சாயதன வகைக் கோயில். ஆனால், உப கோயில்கள் ஒவ்வொன்றும் முற்றத்தின் மூலையில் உள்ளன. கர்ப்பக் கிருகம் அமைக்கப்பட்டிருக்கும் மேடை மீது இல்லை. குளம், கீர்த்தி ஸ்தம்பம், சுவர்களில் சிற்ப அலங்காரம் ஆகியவையும் உள்ளன. மாடங்களைக் கொண்ட பிராகாரமும் மேற்குப் புறம் வாயிலும் இருக்கின்றன. அருமையான வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கும் இக் கோயிலை மார்த்தாண்டிலுள்ள பிரமாண்டமான சூரியன் கோயிலுடன் ஒப்பிட்டால் நயமும் நளினமும் நிரம்பியதாக இது விளங்குகிறது.

சம்காரவர்மன் காலத்தில் கட்டப்பட்ட (883 – 902) படாளிலுள்ள சங்கர கௌரீஸ்வரர், சுகந்தீசர் ஆகிய இரு சிவன் கோயில்கள் இன்று சிதிலமடைந்து விட்ட

போதிலும் அதன் வேலைப்பாடுகள் உயர்தரமானவை. சிற்பங்கள் அருமையாக செதுக்கப்பட்டவை. செதுக்கு வேலைகள் திறமையுடன் செய்யப்பட்டவை என்பதைப் புலப்படுத்துகின்றன.

புராணுதிஸ்தானத்திலுள்ள சிறிய சிவன் கோயில் (12–ஆம் நூற்ருண்டு) காஷ்மீர வகைக் கட்டிடக் கலையை முன்னேற்றும் அம்சங்கள் கொண்டவை. முகப்பின் மேற்புறம் சிற்பங்கள் இல்லாமல் இருப்பது முக்கியமானது. ஏனெனில், இதை வேறு எங்கும் காண முடியவில்லை. மூலை விட்டங்களில் அமைந்த உத்திரங்களைக் கொண்டு விதானம் எழுப்பியிருப்பதும் குறிப்பிடத் தக்கது. பயர், மமல், கோதர், புமாசு, போன்ற இடங்களில் மேலும் சிறிய ஒரே கல்லாலான கோயில்கள் உள்ளன. இவையும் காஷ்மீர வகைக்கு எடுத்துக் காட்டுகளாகும். வடக்கு பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புறம் ஆகிய இடங்களிலும் இத்தகைய கோயில்களைக் காண முடிகிறது. அவை நமது ஆராய்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் இல்லாதவை.

33

ஆரம்ப கால திராவிடக் கோயில்கள்

கர்நூலுக்கு வடக்கே இந்தியாவின் ஐந்தில் நான்கு பகுதி நிலப்பரப்பில் பல்வேறு பிரதேசங்களிலும் குப்தர் காலத்திலிருந்து மத்திய காலம் வரை நாகர பாணி ஆலய நிர்மாணக் கலை பெற்றுள்ள வளர்ச்சி பற்றி சுருக்கமாக இதுவரை பார்த்தோம். முஸ்லீம் படையெடுப்புக்குப் பின்னர், இப்பாணியின் வளர்ச்சி தடுக்கப்பட்டது. வட இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சியின் போது கட்டப் பட்ட கோயில்கள் பெருமளவுக்கு இந்தோ - இஸ்லாமிய கட்டிடக் கலையின் செல்வாக்குக்கு உட்பட்டன என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது.

இதற்கு மாறாக திராவிடக் கோயில்களின் வரலாறு அதன் தொடக்க காலமான கி. பி. ஐந்தாம் நூற்றுண்டி லிருந்தே இடையறுது வந்துள்ளது. கர்நூலுக்கு தெற்கே இந்தியாவின் ஐந்தில் ஒரு பாகம் நிலப்பரப்பு கொண்ட குறுகிய எல்லைக்குள் அடங்கியது இது. தெற்கே கட்டிடக் கலை மரபுகள் இடையறுது தொடர்ந்து இருந்து வந்த தற்கு இரண்டு காரணங்கள். முதலாவதாக, அழிவேற் படுத்திய படையெடுப்புக்கு அது உள்ளாகவில்லை. இரண்டாவதாக இப்பகுதியில் ஆட்சி செய்த மன்னர்கள் இக்கலைக்கு பெரும் ஆதரவாளர்களாக இருந்தனர். இவ் வகைக்கு எடுத்துக் காட்டுகளான பல கோயில்கள் தென் னிந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் இன்றும் நிலைபெற் றுள்ளன. இவற்றுள் முக்கியமான சில பிரிவுகளைக் காண முடியும். இந்த பாணியின் வளர்ச்சியை இனி காண்போம்.

34

சாளுக்கியர் கோயில்கள்

இவ்வகைக் கோயில்களின் காலத்தால் முற்பட்ட எடுத்துக் காட்டுகளும் ஐஹொளே, பாதாமி, மகா கூடம், பத்தடக்கல் ஆகிய இடங்களில் உள்ளன. இப்போது பீஜப்பூர் மாவட்டத்திலுள்ள இந்த இடங்கள்தான் இந்திய ஆலய நிர்மாணக் கலையின் பல்வேறு பாணிகள் வளர்ந்து உருப்பெற்ற இடங்கள் போலும். பாதாமியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த சாளுக்கிய மன்னர்கள் இக்கலைக்கு தீவிர ஆதரவளித்தனர். இவ்வலைகக்கு காலத்தால் முற்பட்ட எடுத்துக் காட்டுக்களில் ஒன்று பாதாமிக்கருகே மகாகூடம் என்ற இடத்திலுள்ள மகா கூடேஸ்வரர் ஆலயமாகும். இதன் காலம் கி. பி. 600 மேற்கட்டு நல்ல நிலையில் உள்ளது. இதன் மேற்கட்டை சுற்றி சிறிய அளவு கோயில்களைக் கொண்ட அலங்கமும், உச்சியில் எண்கோணச் சிகரமும் உள்ளன. பாதாமி குன்றிலுள்ள மாலீ சித்தி சிவாலயம் மற்றொரு உதாரணம். முன்னதைப் போலவே இதிலும் எண்கோண சிகரமும், மேற் கட்டைச் சுற்றி சிறிய அளவு கோயில்களும் உள்ளன. கர்ப்பக்கிருகம், சபா மண்டபம், முகப்பு வாயில் ஆகியவை அடங்கியது இக் கோயில். முதலில் சொன்ன இரண்டும் சதுரமாகவும், பின்னது நீண்ட சதுரமாகவும் இருக்கிறது. பருமனான தூண்களும், பிடிப்புகளும், முகப்பு விளிம்பும் கொண்ட இக் கோயில் குகைக் கோயில் மாதிரியே அமைந்திருக்கிறது என்று தோன்றுகிறது. இதே இடத்தில் உள்ள மற்றொரு கோயில்

பாழடைந்து விட்டபோதிலும் சாந்தார வகையைச் சேர்ந்தது. இதுவும் 6-ஆம் நூற்றூண்டின் இறுதி ஆண்டுகளைச் சேர்ந்ததாக இருக்கலாம். ஐஹொளேயிலுள்ள எண் 53 கோயில், எண் 39 ஜைனர் கோயில், கி, பி. 634-இல் கட்டப்பட்ட மேகுதி கோயில் ஆகியவை திராவிட பாணியில் உள்ளவை.

இந்த ஆரம்பக்காலக் கோயில்கள், பத்தடக்கல்லி லுள்ள மேலும் தீர்க்கமான அழகிய வேலைப்பாடமைந்த கோயில்களுக்கு வழி வகுத்தன. சாளுக்கிய மன்னர்களின் தலைநகராகப் பின்னர் பத்தடக்கல் இருந்தது. சங்கமேஸ்வரர், விருபாக்ஷர், மல்லிகார்ஜுனர், களகநாதர் கோயில்கள் உட்பட ஆறு திராவிட பாணிக் கோயில்கள் உள்ளன. மேலும், தென்பகுதியிலுள்ள கோயில்களின் விசேஷ அம்சங்களாக விளங்கும் பல இக் கோயிலில் உள்ளன. இவற்றுள் சங்கமேஸ்வரர் கோயில் சாளுக்கிய மன்னன் வித்யாதித்யனால் (கி.பி. 697-733) கட்டப்பட்டது. சுக நாஸிகம் இல்லாதது குறிப்பிடத் தக்கது. மேலே சொன்ன கோயில்களிலும் பிற்காலத்தில் கட்டப்பட்ட சாளுக்கியக் கோயில்களிலும் இது சிறப்பான அம்சமாகும். சங்கமேஸ்வரர் கோயிலும் இரண்டாவது சாளுக்கிய விக்கிரமாதித்தனுடைய ராணியால் (733-746) கட்டப்பட்ட விருபாக்ஷர் கோயிலும் அடித்தளத்திலிருந்து சிகரம் வரை சதுர அமைப்பு கொண்டது. மற்றொரு ராணியால் கட்டப்பட்ட மல்லிகார்ஜுனர் கோயிலும் விருபாக்ஷர் கோயிலைப் போன்றதேயாகும்.

சங்கமேஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத்தின் இருபுறத்திலும் துர்க்கை, கணபதி ஆகியவர்களுக்கான இரு சிறு கோயில்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. மூன்று அடுக்குகளைக் கொண்ட சாந்தார வகை விமானம். அர்த்த மண்டபம், ஒவ்வொன்றிலும் ஐந்து தூண்க

ளமைந்த நான்கு வரிசைகளைக் கொண்ட மூடிய மகா மண்டபம் ஆகியவை அடங்கியது இக்கோயில். மகா மண்டபத்தின் வடபகுதியில், நடுவில் ஒட்டினாற்போல் தூண்களமைந்த திறந்த முகப்பு வாயில் உள்ளது. வெளிப்புறத்தில் பல சிலைகளை வைப்பதற்கான மடங்கள் உள்ளன. இரண்டாவது அடுக்கில் திறந்த பிரதட்சிணைப் பாதையும். சிறு கோயில்களடங்கிய சுவற்றில் பஞ்சர, காணகூட, பத்ராசல வகைக் கோயில்கள் உள்ளன. சிறு அளவில் கஜபிருஷ்ட உருவில் அமைந்த பஞ்சர வகைக் கோயில் இங்குதான் முதல் தடவையாகக் காணப்படு கிறது. கிரீவமும் சிகரமும் சதுர வடிவில் இருக்கின்றன. இந்த அம்சங்களுடன் கூடிய இக்கோயில் திராவிட பாணிக்கு நல்ல எடுத்துக்காட்டு என்று கூறலாம்.

ஆயினும், விருபாக்ஷகர் கோயில் இப்பாணிக்கு தீர்க்க மான சிறந்த உதாரணமாகும். சாந்தார வகைப் பிர தான விமானம், மண்டபம், மாடங்கள் வரிசையாக அமைந்த பிராகாரம், முன்புறத்திலும் பின்புறத்திலும் கோபுர வாயில்கள் ஆகியவை கொண்டது இக்கோயில். சாளுக்கியர் ஆண்ட பகுதியில், காணப்படும் கோயில் களில் இது காலத்தால் முற்பட்டதாகும். பிரதான விமானம் அடியிலிருந்து உச்சி வரை சதுரமாகவும், நான்கு அடுக்குகளைக் கொண்டதாகவும் உள்ளது. கர்ப்பக்கிரு கத்தின் வெளிப்புறச் சுவற்றில் சிலை வடிவ சிற்பங்களுக் கான புரைகள் இருக்கின்றன. மேற்கட்டு சுக நாசிகம், சதுர வடிவ கிரீவம், சிகரம் ஆகியவை கொண்டது. அர்த்த மண்டபத்தின் இருபுறத்திலும் கணேசர், துர்க் கைக் கான சிறு கோயில்கள் ஒட்டினாற்போல் இருக்கின் றன. சிறிய அளவில் கூடங்கள், சாலா ஆகியவற்றின் மேற்புறம் பிராகாரச் சுவற்றில் அமைந்திருப்பது குறிப் பிடத் தக்கது; மகாபலிபுரம் கடற்கரைச் கோயிலொன்றை இது நினைவு படுத்துகிறது; மல்லிகார்ஜுனர் கோயில்


அளவில் சிறியது; இதன் கிரீவமும் சிகரமும் வட்ட வடிவில் உள்ளன.

பத்தடக்கல்லுக்கு ஊர்ப் புறத்திலுள்ள ஜைனர் கோயில் ராஷ்டிரகூடர்கள் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். சாளுக்கியர் கால ஆரம்பக் கோயில் களுக்கும், பிற் காலக் கோயில்களுக்கும் முக்கிய இணைப் பாக இது விளங்குகிறது. சாந்தார வகையைச் சேர்ந்த இதுவும் அடி முதல் நுனி வரை சதுரமாகவே உள்ளது. சுவற்றில் வெளிப் புறம் உருவச் சிலைக்களுக்கான புரைகள் இருக்கின்றன. இக் கோயிலில் காணப்படும் மாறுன அம் சங்கள் பல தூண்களைக் கொண்ட திறந்த முக மண்டபமும் இம் மண்டபத்தின் தூண்களுக் கிடையே கக்ஷாஸனங்கள் இருப்பதும், முக்கோண வடிவ கூது வேலைப்பாடும், உருட்டி விடப்பட்டுள்ள தூண்களு மாகும்.

இதே காலத்தை சேர்ந்த இவ்வகைக் கோயில்கள் வேங்கியை யாண்ட கீழைச் சாளுக்கியர்கள் வசமிருந்த கிழக்கு கடலோரமும் காணப்படுகின்றன. இவற்றுள் கிழக்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள பிக்கவோலுவில் இருக்கும் கோயிலும், கஞ்சம் மாவட்டதித்லுள்ள முக லிங்கமும், குண்டூர் மாவட்ட போண்டு கலத்தில் உள்ள கோயிலும் முக்கியமானவை. பிக்கவோலுவில் கன்ஸர குடி, நக்கலகுடி, ஆகிய இரு கோயில்கள் உள்ளன. இவை குணக வித்யாதித்யன் (கி. பி. 843–91) காலத் தைச் சேர்ந்ததாக இருக்கலாம். அடி முதல் நுனி வரை சதுர அமைப்பு, குதிரை லாட வகை, குதூ உச்சியில் அதிகப்படியான மகரத் தலைகள் கொண்ட மகரதோரணங் கள் ஆகியவை இக் கோயில்களின் சிறப்பான அம்சங்கள். பஞ்சரமும், சுக நாசமும் இல்லாமல் இருப்பது கவனிக்க வேண்டிய அம்சம், இக் கிராமத்திலுள்ள கோலிங்கேஸ் வரர், இராஜராஜேஸ்வரர் கோயில்கள் கி. பி. 10–11 வது


நூற்றுண்டைச் சேர்ந்தவை. இவற்றுள் சில விசேஷமான சிற்பங்கள் உள்ளன.

பத்தாவது நூற்றுண்டின் பிற்பகுதியில் தக்காணத்தில் ராஷ்டிர கூடர்களை வென்று மீண்டும் பதவிக்கு வந்த சாளுக்கிய மன்னர்கள் இவ்வகையில் கோயில் கட்டுவதற்குப் பூரண ஆதரவளித்தனர். இந்த பிற்கால சாளுக்கியர்கள் கல்யாணியைத் தலை நகராகக் கொண்டு இரு நூற்றுண்டுகள் ஆட்சி செய்தனர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் பலகோயில்கள் கட்டப்பட்டன. இவற்றுள் மிகவும் முக்கியமான சில கோயில்கள் தாவார் மாவட்ட கடக் அருகிலுள்ள குக்கனூர், லக்குண்டி ஆகிய இடங்களில் உள்ளன. குக்கனூர் நவலிங்க கோயிலில் ஒன்பது சதுர வடிவ சிறு கோயில்கள் உள்ளன. வரிசையாக அமைந்த மூன்று மண்டபங்களைச் சுற்றி இவை கட்டப்பட்டுள்ளன. இக்கோயிலில் சுக நாசம் உள்ளது. இந்த ஒரு வேறுபாடு தவிர இதர அம்சங்களில் இது பிக்கவேரிலுக் கோயிலைப் போலவே யுள்ளது. இங்குள்ள தூண்கள் ஓரளவு கடையப்பட்டவை. இது 10–ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது என்பர் இதே இடத்திலுள்ள காளத்தீஸ்வரர் கோயிலும் இக்காலத்தைச் சேர்ந்தது தான். மூன்றடுக்குக் கொண்ட சதுர வடிவக் கோயிலான இதில் அந்தராலம் முன்புறத்தில் மூடிய மண்டபம், ஓரளவு கடையப்பட்ட தூண்கள் ஆகியவை உள்ளன. சிறு அளவுக் கற்களால் கட்டப்பட்டது இக் கோயில். செங்குத்துப் பகுதி அடக்கமாக உள்ளது. அடுக்குகளை பிரித்துக் காட்டும் பரந்த பகுதி இல்லாததே இதற்குக் காரணம். ஹோய்ஸலர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களின் மேற்கட்டு அமைப்புக்கு இதுவே வழியமைத்தது எனலாம். இக்கோயில்களின் மற்றொரு குடுப்பிடத் தக்க அம்சம் அருமையான செதுக்கு வேலைகளும் அழகிய சிற்பங்களுமாகும்.




படம் 41 திருச்சூர் வடக்குன்னாதர் கோயில்

அத்தி 41 பார்க்க




படம் 42 மூதூர் பித்ரி சந்திரநாதர் கோயில்

அத்தி 41 பார்க்க



படம் 43 அமராவதி சிற்பங்கள்

அத்தி 43 பார்க்க



படம் 14 மதுரா யக்ஷிகள்

அத்தி 43 பார்க்க



படம் 45 கொனரக் சிற்பம்

அத்தி 43 பார்க்க




படம் 46 புவனேஸவரம் பரசுராமேஸ்வரர் கோயில்
முக மண்டபத்தில் உள்ள நடன சிற்பம்

அத்தி 43 பார்க்க



படம் 47 மவுண்ட் அபு தில்வாரா கோயில் வித்யா தேவிகள்

அத்தி 43 பார்க்க



படம் 48 பலம்பேட் கோயில் போதிகை சிற்பம்

'அத்தி 43 பார்க்க

லக்குண்டியிலுள்ள கோயில்களுள் பெரியதான ஜைனர் கோயில் குறிப்பிடத் தக்க பல அம்சங்களைக் கொண்டது. முதலாவதாக, அது நுண்ணிய வேலைப்பாட்டுக்கு ஏற்ற விசேஷ வகைக் கருங் கல்லினால் கட்டப்பட்டது. இக் கோயிலில் காணப்படும் செதுக்கு வேலைகள் மிகவும் நுட்பமாக உள்ளன. ஐந்து அடுக்குகள் கொண்ட விமானத்தில் இரண்டாவது அடுக்கில் ஒரு சிறு கோயில் உள்ளது. தென் கன்னட மாவட்ட வேணூரில் உள்ளது போல் வேறு சில ஜைனக் கோயில்களிலும் இவ்வாறு இருக்கிறது. இதர அடுக்குகள் அலங்காரமாக உள்ளன. நவரங்க மண்டபம், சுதைச் சிற்பங்கள், சுகநாசம் ஆகியவை இக் கோயிலின் விசேஷ அம்சங்கள்.

தக்காணத்தில் 11-12-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப் பட்ட கோயில்களில் நன்கு அபிவிருத்தி செய்யப் பட்டவை லக்குண்டி காசி விஸ்வநாதர் கோயிலும், இத்தகி மகா தேவர் கோயிலுமாகும். பின்னதில், கி. பி. 1112-இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்காலத்தின் ஆலய நிர்மாணக் கலைக்கு சரியான எடுத்துக் காட்டாக விளங்குகிறது. பிரதான கோயிலில் பல கிளைகளும், அடுக்குகளும் உள்ளன. அதனால் அமைப்பு நெளி நெளியாக உள்ளது. ஐந்தடுக்கு கர்ப்பக் கிருகத்தில் கர்ண கூடங்கள், பத்ரசாலா, பஞ்சரங்கள் ஆகிய எல்லாம் உள்ளன. அத்துடன் அந்தராலம், மூன்று வாயில்கள் கொண்ட நவரங்கம், தூண்களமைந்த முகப்பு வாயில் பல தூண்களைக் கொண்ட மண்டபம் ஆகியவை களும் இருக்கின்றன. நவரங்கத்தின் மேற் கூரை உயர மாக அமைக்கப்பட்டுள்ளது; அருமையான செதுக்கு வேலைகள் கொண்டது. விமானத்தின் மற்றொரு குறிப் பிடத்தக்க அம்சம் அந்தராலத்தின் மீது சுகநாசம் மேற்

காட்டாக அமைந்திருப்பதாகும். நுட்பமாகவும். ஏராள மாகவும் செதுக்கு வேலைகள் செய்யப்பட்டுள்ள இக் கோயில்கள் ஹோய்ஸலர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறது.

35

ஹோய்ஸலர் காலக் கோயில்கள்

தக்காணத்தின் தென் பகுதியில் 12-13 நூற்றுண்டு களில் ஹோய்ஸலர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் திராவிட பாணியில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுவனவாகும். நெளியான அமைப்பு, அளவு கடந்த அலங்கார வேலைப்பாடு, ஒரு உயரமான அடுக்கின் மீது பல சிறு கோயில்களைச் சேர்த்து அமைப்பது ஆகிய முறைகளைக் கொண்ட கட்டத்தை ஆலய நிர்மாணக் கலை ஏற்கெனவே அடைந்து விட்டது என்பதை மேலே கூறினேம். இதிலிருந்து ஒவ்வொன்றும் வளர்ச்சிக் கட்டத்தின் இறுதி நிலையை அடைவது எளிதாக இருந்தது. ஹளேபீடு, பேலூர் ஆகிய இடங்களிலுள்ள ஹோய்ஸலர் கோயில்கள் ஆலய நிர்மாணக் கலையின் கடைசிக் கட்டத்துக்கு சரியான எடுத்துக் காட்டு களாகும். இவைகளும் நுட்பமான செதுக்கு வேலைக்கு ஏற்றதான விசேஷ வகை கருங்கற்களால் கட்டப் பட்டவையாகும். பக்கங்களில் கிளைகளும், இடுக்குகளும் இருப்பதால் நட்சத்திர வடிவ அமைப்பை இது பெற்றிருக் கிறது. சுவர்களில் அதிக இடம் இருப்பது மேலும் பல சிற்பங்களை அதிகரிக்க இடமளித்தது. விமானங்களில் பல அடுக்குகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் மேற்கட்டுகள் உள்ளன. அதில் நெருக்கமாக கூத வகை ஹாரங்கள் ஒன்றன் பின்னென்ருக உள்ளன. எல்லாவற்றுக்கும் மேலே உள்ளதில் குட்டையான கிரீவமும், எண்கோண சிகரமும் உள்ளன சிகரங்கள் ஒரு ஸ்தூபியில் முடிகிறது.

சுகநாசங்களும் உள்ளன. நவரங்கத்தில் கடையப்பட்ட தூண்கள் இருக்கின்றன. பொதுவான ஒரு மேடை மீது எல்லாம் எழுப்பப்பட்டுள்ளன. சுற்றிலும் பிரதட்சிணப் பாதை இருக்கிறது. மகாத்வாரம் எனப்படும் ஒரே வாயிலமைந்த பிராகாரத்துக்குள் திறந்த முற்றம் உள்ளது.

ஹோய்சலர் காலக் கோயில்களுள் மிகச் சிறந்ததான ஒன்று ஹஸான் மாவட்ட பேலூரிலுள்ள சென்ன கேசவ ஆலயமாகும். *1117*-இல் விஷ்ணு வர்த்தனனுல் கட்டப் பட்டது இது. பிரதான கோயில் விசாலமான முற்றத்தில் சுற்றிலும் பிராகாரச் சுவற்றுடன் அமைந்துள்ளது. விமான மும் அதிஸ்தானமும் பல கோண அமைப்பு கொண்டவை. அதன் சுவர்களில் ஏராளமான செதுக்கு வேலைப்பாடுகள் கள் உள்ளன. விமானத்தின் முன்புறம் அந்தராலமும், நவரங்கமும் இருக்கின்றன. இவற்றின் அடித்தளத்தில் விலங்குகளும், கதை சிற்பங்களுப் பொறிக்கப்பட் டுள்ளன. சிறிய அளவு விமானம் போன்ற மாடங்கள் பிரதான கோயிலின் புறத்திலும் உள்ளன; மண்டபத்தின் மேல் நீட்டிக் கொண்டிருக்கும் விளிம்புகளை அருமையான வேலைப்பாடமைந்த மதனிகா எனப்படும் கவர்ச்சியான பெண் உருவங்கள் தாங்கிக் கொண்டிருக்கின்றன. மண்ட பத்திலுள்ள தூண்கள் கடையப்பட்டவை. எட்டுத் தட்டுக்களைக் கொண்ட அதன் விதானம் அழகிய வேலைப் பாடமைந்த மதனிகா சிற்பங்களால் தாங்கப்படுகின்றன. அத்துடன் அருமையான செதுக்கு வேலைப்பாடுகளும் அமைந்துள்ளன. நடுவில் உன்னதமான அலங்காரம் செயயப்பட்டுள்ள பதக்கம் உள்ளது. மண்டபத்தின் மூன்று வாயில்களுக்கும் முன்னேயுள்ள படிக்கட்டு களின் இரு புறமும் சிறு கோயில்கள் இருப்பது மற்றொரு குறிப்பிடத் தக்க அம்சமாகும். இக் கோயில் மேற் கட்டை இழந்து விட்ட போதிலும் மிகப் பெரியது; நுட்பமான வேலைப்பாடு நிறைந்தது; முழு உருவில் அது மகோன்னத

மான கோயில்களாக இருந்திருக்க வேண்டும். கிழக்குப் பகுதியில் வாயிலமைந்த சுற்றுச் சுவர் இரண்டாம் பலாலன் காலத்தில் கட்டப்பட்டது.

பேலூரிலுள்ள ஹோய்ஸலேஸ்வரர் கோயில் (கி. பி. 1150) ஹோய்ஸலர்கள் காலத்தில் ஆலய நிர்மாணக் கலையின் உச்ச கட்டத்தைப் புலப்படுத்துகிறது. ஒரே மேடை மீது அருகருகே கட்டப்பட்ட இரு பெரிய பல கோண அமைப்பு கோயில்களைக் கொண்டது இது. இரண்டும் சிலுவை வடிவ அறையினுல் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோயிலும் அந்தராலம், கடையப்பட்ட பல தூண்களைக் கொண்ட நவரங்கம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தூண்களுக்கிடையேயுள்ள இடம் கக்ஷாஸனங்களுக்கு மேல் கருங்கல் ஜன்னல்களால் மூடப்பட்டிருக்கிறது. மண்டபத்தின் விதானம் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்தது. அடிப் பகுதியை சிற்ப உருவங்கள் தாங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோயிலுக்கு முன்பும் ஒரு மண்டபம் உள்ளது. விமானங்கள் போன்றவற்றின் வெளிப்புறம் நுட்பமாக செதுக்கப்பட்டுள்ள தெய்வ உருவங்கள் அலங்கரிக்கின்றன. அடித்தளத்தில் விலங்கு உருவங்கள் இடம் பெற்றுள்ளன. இக்கோயில்களின் மீது மேற்கட்டு இல்லாமல் இருப்பது இது பூர்த்தி செய்யப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. பூரணமடையாத போதிலும் இக் கோயில் அதன் பகுதிகளின் அருமையான அமைப்புக்கும் சிற்பங்களின் கவர்ச்சியான வேலைத் திறமைக்கும் புகழ் பெற்றது.

சோமநாத்பூரிலுள்ள 1263-இல் கட்டப்பட்ட கேசவர் கோயில் இப் பகுதியில் திராவிட பாணியில் ஏற்பட்ட வளர்ச்சியின் கடைசிக் கட்டத்தைப் புலப்படுத்துவதாகும். ஒரே மேடை மீது தெற்கு, மேற்கு, வடக்குப் பகுதிகளில் கட்டப்பட்ட மூன்று கோயில்களைக் கொண்ட

இது திரிகூட வகையைச் சேர்ந்தது. இவற்றின் அந்த ராலங்கள் ஒரு பொதுவான நவரங்கத்தில் விரிகின்றன. இது இன்னெரு பெரிய நவரங்கத்தில் விரிகிறது. பெரிய நவரங்கம் அழகாகக் கடையப்பட்ட தூண் களையும், நுட்பமான வேலையமைந்த மறைப்புகளையும் கொண்டது. விதானத்தில் ஏராளமான செதுக்கு வேலைப்பாடுகள் உள்ளன. படிக்கட்டுகளின் இரு புறமும் இரு சிறிய கோயில்கள் இருக்கின்றன. மூன்று விமானங்களும் நல்ல நிலையில் உள்ளன. அவை பல கோண அமைப்பு, செங்குத்து வாக்கில் அவற்றின் முகப்பில் பெரும் சிற்பங்கள் அலங்காரமாக அமைக்கப் பட்டிருக்கின்றன. அடுக்குகளின் தளத்தில் விலங்கு உருவங்கள் இடம் பெற்றுள்ளன. சுற்றிலும் பிராகாரம் உள்ளது. அதன் உட்புறம் வரிசையாக 64 சிறு கோயில் களும் திறந்த வெளி முற்றமும் உள்ளன. மகாத்வாரம் கிழக்கே இருக்கிறது. மொத்தத்தில் இக்கோயில் அளவில் சிறியதாயினும் இக் கால கட்டத்தின் பர்பூரண மான எடுத்துக் காட்டாகும்.

இதே காலத்தில் (12-13 வது நூற்ருண்டு) விசேஷ அம்சங்களைக் கொண்ட சில கோயில்கள் தெலிங்கான பகுதியில் கட்டப்பட்டன. வாரங்கல் மாவட்டத்திலுள்ள ஹனும் கொண்டா, வாரங்கல், பலம் பேட் ஆகிய இடங் களில் இவை காணப்படுகின்றன. இவற்றுள் காகரீய வம்சத்தைச் சேர்ந்த பிரதாப ருத்ரனல் 1162-இல் கட்டப் பட்ட ஹனம்கொண்டாவிலுள்ள ஆயிரம் தூண்களை மைந்த கோயில் பல அம்சங்களில் குறிப்பிடத் தக்கது. சிவன், விஷ்ணு, சூரியன் ஆகிய மூன்று தெய்வங்களுக் குரிய கோயில்களைக் கொண்டது இது. திரிகூட வகையைச் சேர்ந்தது. ஒரு பொது மண்டபத்தில் கோயில் களின் வாயில்கள் உள்ளன. மண்டபத்துக்கு மூன்று

புறமும் மூன்று வாயில்கள் உள்ளன. எல்லாம் ஒரே மேடையில் கட்டப்பட்டதை. கோயிலின் ஒவ்வொரு பகுதியும் பல இடுக்குகளையும், மடிப்புகளையும் கொண்டது. மத்தியில் துருத்திக் கொண்டிருக்கும், மாடத்தில் மேற் புறம் ஒரு சிறிய விமானம் உள்ளது. கோயில்களின் மேற்கட்டு சிதிலமாகி விட்டதால் அதன் வேலைப்பாடு பற்றியும், முழுத் தோற்றத்தைப் பற்றியும் அறிவது கடினமாக உள்ளது. கோயிலின் முன்புறம் உள்ள மண்டபம் இக்கால கட்டிடக் கலைக்கு குறிப்பிடத் தக்க எடுத்துக் காட்டாகும். அதில் 300 தூண்களுக்கு மேல் உள்ளன. ஒவ்வொன்றும் கடையப்பட்டு வேலைப்பாடுகள் செய்யப் பட்டவை. இவ்வளவு அதிக அளவு தூண்கள் கொண்ட மண்டபம் இருப்பதால் தானோ என்னவோ இக்கோயில் ஆயிரம் தூண்களமைந்த கோயில் எனப்படுகிறது.

பதிமூன்ருவது நூற்ருண்டில் இப்பகுதியில் வழக்கில் இருந்த கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டாக பலம்பேட் கோயில்களை கூறலாம். பிரதான கோயில் சதுர வடிவம் மேடை மீது கட்டப்பட்டது. அதன் பக்கங்களில் ஐந்து முகப்புகள் உள்ளன. மத்திய முகப்பின் மீது மூன்றடுக்கு சிறிய அளவு விமானம் இடம் பெற்றுள்ளது. இதர மாடங்களில் உயரமான சுதைச் சிற்பங்களும் உச்சியில் விமான மேற் கூட்டும் இருக்கின்றன. செங்கற்களால் கட்டப்பட்ட மேற் கட்டும் அதிலுள்ள ஹாரம் முதலியவைகளும் மிகவும் அலங்காரமாக உள்ளன. கோயிலில் வழக்கமான அந்தராலமும் நவரங்கமும் இருக்கின்றன. மேடையில் வரிசையாக 32 தூண்கள் உள்ளன. மேலும் நவரங்கத்தின் நான்கு மூலைகளிலும் ஒவ்வொன்றிலும் இரண்டு சிறு கோயில்கள் உள்ளன. மண்டபம் விசேஷமானது. தூண்களின் மீது உருவங்கள் இருக்கின்றன. இவற்றுள் 12 உருவங்கள் கவர்ச்சியான தோற்றங்களில் உள்ள ஆள் உயரப் பெண் சிற்பங்கள்; இவை மிகவும் ஒல்லியாக

இருப்பது அமராவதியிலும் நாகார்ஜுன கொண்டாலிலும் உள்ள மெல்லிய உருவம் படைத்த யக்ஷிகளை நினைவு படுத்துகிறது. விதானமும் மண்டபத்தின் உட்பகுதியில் இதர இடங்களும் நன்கு அலங்காரமாகச் சிற்ப வேலைப் பாடுகள் செய்யப்பட்டு விளங்குகின்றன, வெளிப்புறத்தில் மிதுனங்கள் உட்பட பல்வேறு செதுக்குச் சித்திரங்கள் உள்ளன. தக்காணத்தில் 13–ஆம் நூற்றாண்டில் திராவிட பாணிக்கு இக் கோயில் அற்புதமான எடுத்துக் காட்டாகும்.

36

தமிழக ஆலய நிர்மாணக் கலை

தமிழகத்துக்கு வடக்கேயுள்ள பகுதிகளில் திராவிட பாணிக் கட்டிடக் கலை எப்படியெல்லாம் வளர்ந்து உருப் பெற்றது என்பதை சுருக்கமாக இதுவரை பார்த்தோம். பல நூற்றாண்டுகளில் அந்தந்தப் பிராந்தியத்துக்கேற்ப மாற்றங்களும் இதில் ஏற்பட்டன என்பதையும் பார்த் தோம். ஆயினும், தமிழ்நாட்டிடில்தான் திராவிட பாணி ஆலய நிர்மாணக் கலையின் பரிணம வளர்ச்சி தொடர்ச்சி யாக இருந்து வந்திருக்கிறது என்பதையும் இங்கு குறிப் பிடுவது அவசியமாகும். ஏழாம் நூற்றாண்டிலிருந்து தொடங்கி அதன் வளர்ச்சியிலும் ஏற்பட்ட ஒவ்வொரு குறிப்பிடத்தக்க கட்டமும் நாட்டின் அரசியல் அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஏற்ப இருந்திருக்கின்றன. கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து சமீப காலம் வரை ஆலய நிர்மாணக் கலையைப் பற்றிக் குறிப்பிடும் இலக்கியச் சான்றுகள் ஏராளமாக உள்ளன · ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பே கோயில்கள் இருந்தனவென்பதை அவை உணர்த்துகின்றன. உண்மையில், அக்காலத்தில் ஏரா ளமான கோயில்கள் இருந்திருக்கத்தான் வேண்டும். ஆனல், காலத்தின் கொடுமையால் அவற்றுள் பல அழிந்து விட்டன அழிந்து விடாமல் நிலைபெற்றுள்ளவற்றுள் குகைக் கோயில்கள், ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கோயில்கள் பற்றி ஏற்கெனவே கூறி இருக்கிறோம். கருங் கற்களை அல்லது செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கோயில்களுக்கான எடுத்துக்காட்டுகள் ஏழாம் நூற்றாண்

டின் மத்திய பகுதியிலிருந்து கிடைக்கின்றன அவை வளர்ந்து வந்துள்ள விதத்தைப்பற்றி ஆராய்வது சுவை யான கதைபோல் இருக்கும். இங்கு இதன் வளர்ச்சியைக் கால கட்ட ரீதியாகப் பார்ப்போம்.

37

பல்லவர் கோயில்கள்

தமிழ்நாட்டிலுள்ள இன்று நிலைபெற்றிருக்கும் காலத்தால் முற்பட்ட கோயில்கள் பல்லவ அரச வம்சத்தினருடைய ஆதரவில் கட்டப்பட்டவையாகும். கி.பி. 600-லிருந்து 250 ஆண்டுகளுக்கு அவர்களது ஆட்சி இங்கு உன்னத நிலையில் இருந்தது. இக்கோயில்களில் குறிப்பிடத் தக்கவை கூரம் என்ற இடத்திலுள்ள கஜபிருஷ்ட அமைப்புக் கோயிலும், திருக்கழுக்குன்றத்தின் மீதுள்ள வேதகிரீஸ்வரர் கோயிலும் ஆகும். இவை இரண்டுமே செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளன. இவை பரமேஸ்வர வர்ம பல்லவனால் கட்டப்பட்டவை. இவற்றின் அமைப்பு எளிமையானது. ஆனால், சோமாஸ் கந்தர் தட்டு உட்பட சில சிற்பங்கள் இங்கு உள்ளன. இவை தவிர இக்காலத்தைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க கோயில் எதுவும் இன்று இல்லை. ஆனால், இரண்டாவது நரசிம்மவர்ம பல்லவன் காலத்திலிருந்து (700-723) தேர்ந்த வேலைப்பாட்டுக்கும், அளவுக்கும் புகழ்பெற்ற பல கோயில்கள் கட்டப்படலாயின. காஞ்சீபுரம் கைலாஸநாதர் கோயில், மகாபலிபுரம் கடற்கரைக் கோயில், பனமலை (தென்னாற்காடு) தானகிரீஸ்வரர் கோயில் போன்ற மகோன்னதமான கோயில்களையும் கட்டியவன் இவன்தான் என்று கூறப்படுகிறது. இம் மன்னனால் தொடங்கி வைக்கப்பட்ட இயக்கம் காலப் போக்கில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தின. இதன் உச்ச கட்டத்தை தஞ்சை பெரிய கோயிலில் காண முடிகிறது. இராஜசிம்மன் கட்டிய கோயில்

களுள் பனமலையிலுள்ள தானகிரீஸ்வரர் கோயில் அழகில் சிறியதானுலும் அமைப்பில் நேர்த்தியானது. இதன் மேற் பகுதி பாழடைந்து விட்டதால் இப்போது அதில் செங்கற் களையும், காறையையும் கொண்டு புதிய கட்டடம் கட்டப் பட்டுள்ளது. உயரமான அடித்தளத்துடன் கூடிய நான்கு அடுக்குகளாக உள்ளது. ஒவ்வொரு சுவற்றின் மத்தி யிலும் ஒன்ருக மூன்று உப கோயில்கள் உள்ளன. நான் காவது புறத்தில் அந்தராலம் உள்ளது. மேற்கட்டு மூன்று அடுக்குகளைக் கொண்டது. ஒவ்வொன்றிலும் சாலா, கூத வகை சிறிய அளவு கோயில்களைக் கொண்ட சுவர் உள்ளது. கர்ப்பக்கிருகத்தின் பின்புறச் சுவற்றில் சோமாஸ்கந்தர் சிற்பமும், மத்தியில் லிங்கமும் உள்ளன. அந்தராலத்தின் பக்கச் சுவர்களில் விஷ்ணு, பிரம்மா சிற் பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் சுற்றுச் சுவர் இல்லாதது மட்டுமல்ல; சிற்ப அலங்காரங்களும் அதிகமாகக் கிடையாது. மேல் பத்தி அல்லது அதிஸ் தானத்தின் சதுர அமைப்பில், அக்காலத்திய அலங்கார மான கிரந்த எழுத்துக்களில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. அதில் அரசனுடைய விருதுகள் நிறையக் கூறப்பட்டுள் ளன. காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் இதுபோல் ஒன்று உள்ளது. ஆனல், இது பல ஆண்டுகள் பிறப்பட்ட தாகும். பனமலை கோயில் ஒரு விதத்தில் முக்கியமானது. அதன் வடபுற உப கோயிலின் சுவற்றில் சிவன், நடராஜர், பார்வதி ஆகியவர்களுடைய வண்ண ஓவியங்கள் உள் ளன. அக்கால ஓவிய மரபை உணர்ந்து கொள்ள இது உதவுகிறது.

காலக் கிரமப்படி அடுத்து இடம் பெறுவது பல்லவர் தலைநகரான காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயில். இக்கோயில் உண்மையில் மன்னருடைய மகத்தான பணி யாகும். ஆரம்பத்திலேயே கோயில் பெரிதாகத் தான் இருந்தது. ஆயினும், இராஜசிம்மனுடைய மகன் மகேந்

திர வர்மன் காலத்தில் மேலும் சில கட்டிடங்கள் சேர்க்கப் பட்டன. நான்கு அடுக்குகளைக் கொண்ட விமானம் சாந்தார வகை. இதில் எட்டு மாடங்கள் உள்ளன. சாலா வகையைச் சேர்ந்த நான்கு திசைகள் நான்கிலும் உள்ளன. கூத வகையைச் சேர்ந்த நான்கு மூலைகள் நான்கில் இருக்கின்றன. எல்லாம் கோயிலின் வெளிச் சுவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, இக்கோயில் அஷ்ட பரிவார வகைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். கர்ப்பக் கிருகம், கிரீவம் வரை சதுரமாகவுள்ளது. சிகரம் எண் கோண வடிவம். கர்ப்பக்கிருகத்துக்கு முன்னால் அந்த ராலமும், தூண் மண்டபமும் உள்ளன. எல்லாவற்றையும் உள்ளடக்கிய சுற்றுச் சுவரும், திறந்தவெளி முற்றமும் இருக்கின்றன. முற்றத்தில் மகேந்திரவர்மனால் கட்டப் பட்ட சாலா வகை கோயில் உள்ளது. இதற்கு அந்தரால மும், கோபுரம் போன்ற மேற்கட்டும் உள்ளன. சுற்றுச் சுவற்றின் உட்புறத்தில் 43 சிறிய கோயில்கள் வரிசையாக அமைந்துள்ளன. இவற்றுள் ஒரு சில சாலா வகை. பெரும் பாலானவை கூத வகை. மேற்புறச் சுவற்றில் மத்தியில் உள்ள ஒன்று சிறு கோபுரம்போல் தோற்றமளிக்கிறது. பின்னர் கட்டப்பட்ட சில கட்டிடங்களும் இதில் உள்ளன. முன்புறம் எட்டு உப கோயில்கள் உள்ளன. எல்லாமே பிரதான விமானத்தின் சிறிய வடிவங்கள். இரண்டு முக்கியக் கோயில்களிலும் இந்த உப கோயில்களிலும் கர்ப்பக் கிருகத்தின் பின்புறச் சுவற்றில் சோமாஸ்கந்தர் சிற்பங்கள் உள்ளன. சுற்றுச் சுவற்றிலுள்ள மாடங்களும் விமானத்தின் வெளிப்புறமும் குறிப்பாக சைவபுராண நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் செதுக்கு வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. இந்த சிற்பங்கள் கவர்ச்சிக்கும் கவினுறு கலைத் திறனுக்கும் புகழ் பெற்றவை. இந்த சிற்ப அலங்காரங்கள் தவிர. கோயிலின் பல்வேறு பகுதிகளிலும் ஓவியம் தீட்டப்பட்ட இடங்கள் காணப்படுகின்றன. இவற்றுள்

சில பல்லவர் காலத்தவை. வேறு சில சோழர் காலத்தையும் அதற்குப் பிற்பட்ட காலத்தையும் சேர்ந்தவை. இக் கோயில் சிறப்புற்றிருந்த காலத்தில் நுண்கலைகளுக்கான கருவூலமக இருந்திருக்க வேண்டும்.

மன்னன் இராஜசிம்மன் அளவு கடந்த ஆர்வமும், அறிவும் உடையவன் அத்துடன் தீவிர சிவபக்தன்; எனவே, தலைநகரில் கைலாசநாதர் கோயிலைக் கட்டியதுடன் நின்று விடாமல் பல்லவர் துறைமுகமான மகாபலிபுரத்திலும் மேலும் இரண்டு கோயில்களைக் கட்ட ஏற்பாடு செய்தான். குன்றின் மீதுள்ள உலகண்ணீஸ்வரர் கோயிலும் கடற்கரைக் கோயிலும் இவன் கட்டியவை. இவற்றுள் உயரமான மேற்கட்டுடன் கூடிய கடற்கரைக் கோயில், இப்பகுயில் வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்திலிருந்த திராவிட பாணிக் கோயிலுக்கு உயர்தரமான எடுத்துக்காட்டு. மூன்று கோயில்களைக் கொண்டது இது. இவற்றுள் பெரியதான க்ஷத்திரிய சிம்மேஸ்வரம் கடலை நோக்கி இருக்கிறது. இதைச் சுற்றிலும் உயரமான சுவரும், அவற்றின்மீது சாலா, கூத வகை கோயில் போன்ற அமைப்புகளும், கிழக்குப் புறத்தில் சாலா வகை மேற்கட்டமைந்த வாயிலும் உள்ளன. நான்கு அடுக்குகளைக் கொண்ட இக்கோயில் சதுர வடிவம். சிகரம் மட்டும் எண் கோண வடிவில் உள்ளது. கர்ப்பக்கிருகத்தின் பின்புறச் சுவற்றில் சோமாஸ்கந்தர் சிற்பமும் மத்திய லிங்கமும் உள்ளன. வெளிப்புறம் பல்வேறு தெய்வங்களின் பெரிய சிற்பங்கள் இருக்கின்றன. ஆயினும், காஞ்சி கைலாசநாதர் சிற்பங்களைப் போன்று இவை அவ்வளவு தரமுடையவை அல்ல. க்ஷத்திரிய சிம்மேஸ்வரத்திற்குப் பின்னல் நீண்ட சதுர வடிவத்தில் ஆடம்பரம் இல்லாத ஒரு கோயில் உள்ளது. இதில் சயன நிலையில் விஷ்ணுவின் சிலை இடம் பெற்றிருக்கிறது. இதற்குப் பின்னல் மேற்கே நோக்கியிருக்கும் லிங்கக் கோயில் உள்ளது.

இது க்ஷத்திரிய சிம்மேஸ்வரத்தின் சிறிய வடிவமேயாகும். எல்லாவற்றையும் சுற்றிச் சுவரும் அதன் மீது படுத்திருக்கும் பல நந்தி உருவங்களும், மேற்குப்புறம் கோபுரமும் உள்ளன. இவை எல்லாமே இப்போது பாழடைந்துள்ளன. உப அங்கங்களின் அமைப்பில் சிறு குறைகள் இருப்பது தவிர, முழுமையான அமைப்பை எடுத்துக்கொண்டு பார்த்தால் இது நன்கு ஆலோசித்து செய்யப்பட்ட அமைப்பு ஆகும். சிற்ப வேலைப்பாடுகள் உன்னதமானவை.

மேலே சொன்ன முக்கியமான கோயில்கள் தவிர, அதிக முக்கியத்துவ மில்லாத காஞ்சீபுரம் இறவாதனீஸ்வரர் கோயில் போன்ற வேறு பல கோயில்களும் இக் காலத்தில் க்ட்டப்பட்டன, கட்டிடக் கலை நுட்பங்களுக்கும் சிற்பச் செல்வத்துக்கும் புகழ் பெற்ற அடுத்த முக்கியமான கோயில் வைகுண்டப் பெருமாள் கோயிலாகும். எட்டாவது நூற்ருண்டின் மத்தியில் மன்னன் நந்திவர்ம பல்லவனுல் கட்டப்பட்டது இது. இராஜ சிம்மன் காலத்துக் கோயில்களை விட வளர்ச்சி பெற்ற பல அம்சங்களை இக் கோயிலில் காணலாம். விசேஷ அம்சம் மூன்று கருவறைகளைக் கொண்ட அடுக்குகள் ஆகும். ஒவ்வொன்றிலும் விஷ்ணுவின் படுத்த நிலை, உட்கார்ந்த நிலை, நின்ற நிலை வடிவங்கள் உள்ளன. மேற்கட்டில் ஹாரம் போன்ற அலங்கார வேலைப்பாடு இடம் பெற்றிருப்பதை இங்கே காண்கிருேம். விமானத்தைச் சுற்றிலும் பிராகாரமும் திறந்த வெளி முற்றமும் உள்ளன. பிராகாரத்தின் உட்புறச் சுவர் நெடுகிலும் நந்திவர்மன் ஆட்சிக்கு வந்தது வரை பல்லவ மன்னர்களின் வரலாற்றைக் கூறும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை தவிர கர்ப்பக்கிருகத்தின் சுவர்களிலும் நிறைய சிற்பங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் பரிசோதனை செய்து

பார்க்கப்பட்டவை என்பதை இவற்றின் அமைப்புகள் நமக்குப் புலப்படுத்துகின்றன. அதனுல் தான் பல விதமான புதிய மாறுதல்களும் ஏராளமான செதுக்கு வேலைகளும் இருப்பதைக் காண்கிறோம்.

38

பல்லவர் - சோழர் ஆலயங்கள்

செங்கற்பட்டு மாவட்டம் உத்திர மேரூரில் உள்ள வைகுண்டப் பெருமாள், சுந்தர வரதர் கோயில்கள், தந்தி வர்ம பல்லவன் காலத்தவை. நார்த்தா மலை குன்றிலுள்ள மேல மலையிலிருக்கும் விஜயாலய சோழீஸ்வரம், சோழ வம்சத்தை ஏற்படுத்திய விஜயாலய சோழன் (கி. பி. 850) காலத்தது. இக் கோயில்கள் யாவும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவை. விஜயாலய சோழீஸ்வரம் மிகவும் முக்கியமானது. இது சோழ வம்சத்தின் முதல் மன்னனுடைய அதிகாரம் தெற்கே எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பதைப் புலப்படுத்துவதுடன் விசேஷமான சில வேலைப்பாடுகளையும் கொண்டுள்ளது. அஷ்ட பரிவார வகைக் கோயில் இது. எட்டு உப கோயில்களும் பிரதான கோயிலைச் சுற்றித் தனித் தனியே உள்ளன. பிரதான கர்ப்பக்கிருகம் வட்ட வடிவமானது. இதைச் சுற்றிலும் சதுர வடிவில் மூடப்பட்ட பிரதட்சிணப் பாதை இருக்கிறது. முதல் அடுக்கு திறந்த வகை. இதைச் சுற்றிலும் சிறிய அளவு விமானங்கள் அமைந்த சுவர் உள்ளது. விமானத்தின் இதர அடுக்குகளில் அலங்காரமாகவுள்ள இதே அமைப்பு உள்ளது. கோயிலின் வெளிப்புறம் சிற்ப அலங்காரங்கள் குறைவாகவே உள்ளன. இவற்றுள் வாயிலின் இரு புறமும் அமைந்துள்ள துவார பாலகர் சிற்பங்கள் அருமையான கலைப் படைப்புக்கள்.

விஜயாலய சோழீஸ்வரம் போன்ற அனேகமாக இதனுடைய காலத்தையே சேர்ந்தவை. திருச்சி

மாவட்டத்திலுள்ள காளியாபட்டி, திருப்பூர், விசாலூர் ஆகிய இடங்களிலுள்ள சிவன் கோயில்களாகும். பாண்டிய மன்னர்களின் ஆதரவில் கட்டப்பட்டவை இவை. பாண்டியர்களது அதிகாரம் அப்போது இன்றைய திருச்சி மாவட்டத்தின் தென் எல்லை வரை பரவி யிருந்தது. இக்கோயில்கள் சதுரமானவை. ஓரடுக்கு விமானம் உடையவை. எட்டு பரிவார தேவதைகளுக் கான எட்டு சிறு கோயில்கள் இவற்றுடன் சேர்ந்து அமைந்திருக்கும். இக் கோயில்களிலுள்ள தெய்வச் சிலை களையும், மேற் கட்டிலுள்ள சில சிற்பங்களையும் தவிர வேறு சிற்ப அலங்காரங்கள் கிடையாது. இவ்வகையில் இவற்றை சிக்கனமாகக் கட்டப்பட்ட கோயில்கள் எனலாம்.

ஒன்பதாவது நூற்றுண்டின் இறுதிக்குள் தமிழ் நாட்டின் கட்டிடக் கலை ஒரு நிர்ணயிக்கப்பட்ட தரத்தைப் படிப்படியாக அடைந்து விட்டது என்பதற்கு எடுத்துக் காட்டாக செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணியிலுள்ள வீராட்டாணேஸ்வரர் கோயில் விளங்குகிறது. இது அபரா ஜிதவர்ம பல்லவன் காலத்தைச் சேர்ந்தது. ஓடுக்கு விமானம், கர்ப்பக்கிருகப் பகுதி சதுர அமைப்பு, கிரீவமும் சிகரமும் கஜபிருஷ்ட வகை. சுவற்றிலுள்ள மாடங் களிலும் சிகரத்தின் முன் புறத்திலும் சில அழகிய சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன.

தமிழ் நாட்டுக் கோயில்களின் தரம் நிர்ணயமான காலத்தின் ஆரம்ப காலக் கோயில்களில் குறிப்பிடத் தக்கவை திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருவாலீஸ் வரம், கொற்கை ஆகிய இடங்களிலுள்ள சிவன் கோயில் களாகும். பாண்டியர் ஆதரவில் இவை கட்டப்பட்டவை. இவற்றுள் முன்னது அழகிய சதுர வடிவக் கோயில்; எண் கோண கிரீவமும் சிகரமும் கொண்டது பிரஸ்தாரத்திலும்,

ஹாரப் பகுதிகளின் முகப்புகளிலும் அருமையான சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தது. இது 10-ஆம் நூற்றுண்டின் முதற் பகுதியைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

இப்பாணியிலமைந்த இக் காலத்தைச் சேர்ந்த சில அருமையான கோயில்கள் மைசூரின் தென் பகுதியிலும் தென் மேற்குப் பகுதியிலும் காணப்படுகின்றன. தலைக் காட்டினைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த கங்கர் களின் ஆட்சிக் காலத்தில் இவை கட்டப்பட்டவை. சிறு விவரங்களில் தவிர மற்றப்படி இவை பெரும்பாலும் பல்லவர் காலக் கோயில்களைப் போலவே உள்ளன. இவற்றுள் ஹாஸன் மாவட்ட சிரவண பெலகோலாவில் சந்திரகிரி குன்றில் இருக்கும் இரு சதுர வடிவ ஜைன ஆலயங்கள் குறிப்பிடத் தக்கவை. இதே இடத்திலுள்ள சௌந்தர்ய பஸ்தி (982 - 85) மிகவும் கவர்ச்சியானது. ஒன்றன் மேலொன்ருக இரண்டு கர்ப்பக்கிருகங்களைக் கொண்ட கோயில் இது. விமானம் கிரீவம் வரை சதுர மாக உள்ளது. கிரீவமும் சிகரமும் எண் கோண வடிவில் இருக்கின்றன. இரண்டாவது அடுக்கைச் சுற்றித் திறந்த பிரதட்சிணப் பாதை உள்ளது. சுவற்றில் சாலா, பஞ்சர, கூத வகை சிறிய அளவு விமானங்கள் உள்ளன. இதர அடுக்குகளும் இவ்வாறே உள்ளன. மண்டபம் நவரங்க வகை. மத்தியில் நான்கு கடையப் பட்ட தூண்கள் உள்ளன. சுற்றிலும் 12 சதுர – எண் கோண வடிவ தூண் கள் இருக்கின்றன.

சிரவணபெலகோலாவுக்கு அருகிலுள்ள கதம்ப ஹல்லியில் இருக்கும் மூன்று சிறு கோயில்களைக் கொண்ட ஜைன ஆலயம் திராவிட பாணிக்கு மற்ரெரு உதாரண மாகும். திரிகூடாசல வகைக்கு நல்ல உதாரணமான இக்கோயிலும் 10-வது நூற்ருண்டைச் சேர்ந்ததாக இருக் கலாம். இக்கோயிலின் விசேஷ அம்சம் உப கோயில்

கள் ஒவ்வொன்றும் முறையே சதுர, எண் கோண, வட்ட வடிவ கிரீவமும் சிகரமும் கொண்டதாக இருப்பதாகும். இருபுறமும் விமானமும் ஒரு மண்டபத்துடன் இணைக்கப் பட்டும் உள்ள தூண்களமைந்த முகப்பு வாயில் இன்னொரு மண்டபத்தின் இருபுறமும் உள்ளன. கோயில் முழுவதையும் சுற்றி முன்புறம் கோபுரத்துடன் கூடிய சுற்றுச் சுவர் உள்ளது.

கோலார் மாவட்டம் நந்தி என்ற கிராமத்தில் இதே நூற்றாண்டைச் சேர்ந்த இதே பாணியிலமைந்த போகநந்தீஸ்வரர், அருணாசலேஸ்வரர் ஆகிய இரு கோயில்கள் உள்ளன. அருகருகே அமைந்துள்ள இக் கோயில்களை அடுத்து பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட மண் டபங்கள், சந்நியாசி மண்டபங்கள், சுற்றுச் சுவர்கள், கோபுரம் ஆகியவை உள்ளன. போக நந்தீஸ்வரர் கோயில் அடித்தளத்திலிருந்து சிகரம் வரை சதுர வடிவம்; மூன்று அடுக்குகள் கொண்டது. மேற்கட்டில் சாலங்கள், கூதங்கள், பஞ்சரங்களைக் கொண்ட ஹாரங்களும் சில அழகான சிற்பங்களும் உள்ளன. இன்னொரு கோயில் இதைப் பின்பற்றிக் கட்டியதாகும். ஒவ்வொன்றும் அழகிய பரிமாண அமைப்புக்கும். அளவோடமைந்த அலங்கார வேலைப்பாட்டுக்கும் குறிப்பிடத்தக்கவை. பத்தாவது நூற்றாண்டுக்குள் ஆலய நிர்மாணக் கலையின் தரம் ஒருவிதமாக நிர்ணயமாகிவிட்டது என்பதையே மேற் சொன்ன எடுத்துக்காட்டுக்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

39

சோழர்கள் காலக் கோயில் கலை

ஆலய நிர்மாணக் கலையின் தன்மைகள் இவ்வாறு பத்தாவது நூற்றுண்டுக்குள் ஒரு நிலைப்பட்டு விடவே, பிரமாண்டமான அளவில் கோயில்களைக் கட்டும் பணியை மேற்கொள்ள முடிந்தது. இத்துறையில் சோழ மன்னர்களான முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன் ஆகியோர் பெருமளவுக்கு ஆதரவளித்தனர். செங்கற்களால் கட்டப்பட்ட பல கோயில்களை அழகிய கருங்கல் கட்டிடங்களாகச் செய்த பெருமைக்குரியவர் ஆதித்தன். இக்காலத்தைச் சேர்ந்த இத்தகைய 50 கோயில்கள் இன்னும் உள்ளன என்று தெரிகிறது. கும்பகோணத்திலுள்ள நாகேஸ்வரன் கோயிலும் இந்தக் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். இந்த அழகிய சிறு கோயில் அடிமுதல் நுனிவரை சதுரமாக உள்ளது. கர்ப்பக்கிருகச் சுவர்களில் மாடங்கள் உள்ளன. இம்மாடங்களில் ஆள் உயர அற்புதமான வேலைப்பாடமைந்த சிற்பங்கள் உள்ளன. அப்ஸரங்கள், பிக்ஷாடனர், துர்க்கை, அர்த்த நாரீஸ்வரர் வடிவங்கள் இவற்றில் இடம் பெற்றுள்ளன. திருச்சி மாவட்டம் திருக்கட்டளையிலுள்ள சுந்தரேஸ்வரர் ஆலயம் மற்றெரு எடுத்துக் காட்டு. இது ஆதித்தன் காலத்தில் 873-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது இது சதுரமான இரண்டடுக்கு விமானம் கொண்டது. சுற்றிலும் எட்டு பரிவாரக் கோயில்கள் உள்ளன. எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக முன் புறம் கோபுரத்துடன் கூடிய பிராகாரம் உள்ளது.

முதலாம் பராந்தக சோழன் காலத்தில் (907 – 955) சில புதிய கட்டிடக் கலை ரீதியான அமைப்புக்கள் கொண்ட பெரிய கோயில்கள் கட்டப் பட்டன. திருச்சி மாவட்டம் சீனிவாச நல்லூரில் உள்ள கொரங்க நாதர் ஆலயம் இக்காலக் கட்டிடக் கலைக்கு நல்லதொரு எடுத்துக் காட்டு. அடி முதல் நுனி வரை சதுர அமைப்புக் கொண்ட இக் கோயிலில் சில அருமையான சிற்பங்கள் உள்ளன. கோயிலின் உயரத்தை அதிகரிப்பதற்காக செங்குத்து அச்சில் இரட்டிப்புச் சுவர் இருப்பது ஒரு விசேஷ அம்சமாகும். இந்த அம்சம் இந்தக் கோயிலில் தான் முதல் முறையாகக் காணப்படுகிறது. பின்னர் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலிலும், கங்கை கொண்ட சோழபுரம் கோயிலிலும் இம் முறை கையாளப் பட்டுள்ளது.

பிரமாண்டமான கோயில்களைக் கட்டும் துறையில் மேற் கொள்ளப்பட்ட முயற்சி முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் (985 - 1014) உச்ச கட்டத்தை யடைந்தது. தஞ்சாவூரிலுள்ள கோயில் 1003-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்று 1010-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப் பட்டது பிரகதீஸ்வரம் என்றும் இதனைக் கட்டிய மாமன்னன் பெயரால் இராஜ ராஜேஸ்வரம் என்றும் இக் கோயில் பொருத்தமாகவே அழைக்கப்படுகிறது. தமிழகக் கோயில் கலையின் ஆர்வ மிக்க முயற்சியாகும் இது. ஆலய நிர்மாணக் கலை மரபில் சிற்பம், ஓவியம் இதர இணைந்த கலையம்சங்களில் பூரணமான சிறந்தது அனைத்தும் சேர்ந்தமைந்த கோயில் இது. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரியதான விமானத்தைக் கொண்டது. அந்த ராலமும், தூண்களமைந்த பெரிய மகா மண்டபமும் உள்ளது. இந்த மண்டபத்தின் முன்பு மிகப் பெரிய ஒரே கல்லிலான நந்தி இருக்கிறது. இரண்டடுக்கு வெளிச் சுவற்றுடன் கூடிய விமானம் சாந்தார வகையைச்

சேர்ந்தது. பீடத்துடன் கூடிய மாபெரும் லிங்கம் அமைந்த கர்ப்பக்கிருகத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது. கர்ப்பக்கிருகத்தின் வெளிச் சுவற்றில் நான்கு புறமும் வாயில் உள்ளது. உள் சுவற்றின் மூன்று புறமும் மாடங்களில் அமைந்துள்ள பெரிய சிற்பங்களையும், கருவறையிலுள்ள லிங்கத்தையும் பக்தர்கள் கண்டு தரிசிக்க இது வழி செய்கிறது. வெளிப் புறச் சுவற்றில் உள்ள மாடங்களில் ஆள் உயர தெய்வச் சிலைகள் உள்ளன. பிரமிட் உருவ மேற் கட்டு 16 அடுக்குகள் கொண்டது. ஒவ்வொரு அடுக்கிலும் சாலா, கூடா, பஞ்சர வகை சிறிய அளவு விமானங்கள் உள்ளன. உச்சியில் மிகப் பெரிய ஒரே கல்லாலான எண்கோண சிகரம் உள்ளது. விமானம், மண்டபம் ஆகியவற்றின் அடித்தளத்திலுள்ள சிற்ப வேலைப்பாடுகள் எளிமையாகவும் தெளிவாகவும் உள்ளன. உள் பிராகாரச் சுவற்றின் இரு புறமும் இரண்டு வரிசையாக அமைந்த ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன, உள் புறம் இருப்பது கோயில் கட்டப் பட்ட காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள். வெளிப்புறம் இருப்பது நாயக்க மன்னர்கள் காலத்தைச் (17–ஆம் நூற்றுண்டு) சேர்ந்தவை. பிராகாரத்தின் மேல் அடுக்கிலுள்ள சுவர்ப் பகுதியில் 86–க்கு மேற்பட்ட சிற்பங்கள் உள்ளன. பரதமுனி இயற்றிய நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள 108 காரணங்களில் 80–க்கு மேற்பட்டதை சிவன் அபிநயித்துக் காட்டுவதாக அமைந்த சிற்பங்கள் இவை. கோயிலை உள்ளடக்கி இரண்டு தட்டு பிராகாரச் சுவர் உள்ளது அதன் உட்புறம் இரண்டடுக்குகள் கொண்ட மூடு மண்டபமும், முன்புறம் அளவில் பெரியதும் ஆனல் உயரக் குறைவானதுமான கோபுரமும் உள்ளன. மூடு மண்டபத்தில் இரண்டடுக்குகளைக் கொண்ட வரிசையாக அமைந்த 36 உப கோயில்கள் உள்ளன. திக்குப்பாலகர்களுக்கும் இதர தெய்வங்களுக்குமென ஏற்பட்ட கோயில்கள்

இவை. கோபுரத்துக்கு முன்புறம் இன்னொரு வெளிப் புறக் கோபுரம் பெரியதாக உள்ளது. பிராகாரத்தின் மூன்று புறமும் மூன்று தோரண வாயில்கள் உள்ளன. இக்கோயிலின் முற்றத்தில் வேறு சில கோயில்களும் உள்ளன. இவற்றுள் சண்டிகேஸ்வரர் கோயில், பிரதான கோயில் கட்டப்பட்ட காலத்தைச் சேர்ந்தது. அம்மன் கோயில் பிற்கால சோழர்கள் காலத்தது. கணேசர், சுப்பிரமணியர் கோயில்கள் மேலும் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. இக்கட்டிடங்கள், சிற்பங்கள், இசையை யும் நடனத்தையும் காட்டும் ஓவியங்கள், தவிர கோயிலின் சில பகுதிகளில் சிலா சாஸனங்கள் பல அழகாகப் பொறிக்கப் பட்டுள்ளன. கட்டிடத்தைக் கட்டியவரும் அவருடைய உறவினர்களும் அளித்துள்ள நன்கொடைகள் போன்றவற்றைப் பற்றி அவை நிறையக் கூறுகின்றன. வெண்கலத்தில் சிலை வார்க்கும் கலைக்கும் அரசன் பெரும் ஆதரவளித்தான் என்பதை கோயிலில் அலங்கார வெண் கலச்சிலைகள் பல இருப்பதிலிருந்து அறிந்து கொள்ள லாம். இவற்றுள் இன்றும் வழிபடப்படும் அற்புதமான ஆனந்த நடராஜர் சிலை ஒன்று மக்கள் நுண் கலைத் துறை யில் பெற்றிருந்த உயர்தர ஆற்றலுக்கு இக் காலத்தால் அழியாத கலைச் சின்னம் சான்று கூறுவதுடன், அக்காலத் திய இந்தியக் கட்டிடக்கலையின் இணையற்ற சாதனையாக வும் விளங்குகிறது.

இக்கோயிலைப் பின்பற்றி இதே பெயரில் ஆனால் உயரத்திலும் அளவிலும் சிறியதாக ஒரு கோயிலை கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் இராஜேந்திரன் (1012–1044) கட்டினான். விமானத்தையும் மண்டபத் தையும் தவிர இக்கோயிலின் இதர பகுதிகள் மோசமாகப் பழுதடைந்து விட்டன. இங்குள்ள சிற்பங்கள், தஞ்சா வூர்க் கோயில் சிற்பங்களைவிட உயர்தரமானவை. இக் கோயிலில் இராஜேந்திரன் காலத்தில் தனியே ஓர்

அம்மன் கோயில் பின்னர் சேர்க்கப் பட்டது. இதற்கு திருக்காமக் கோட்டம் என்று பெயர். இந்தப் புதிய மாறுதல் இதன் பின்னர் கட்டப்பட்ட கோயில்களில் இன்றியமையாத அங்கமாக இடம் பெற்று விட்டது.

சோழர்களின் சாதனைகளில் வேறு சில, கும்ப கோணம் அருகே தாராசுரத்தில் உள்ள இராஜராஜேஸ் வரம் (இப்போது ஐராவதீஸ்வரம் எனப்படுகிறது) திரு புவனத்திலுள்ள கம்பகரேஸ்வரம் ஆகியவையாகும். இராஜராஜேஸ்வரம் 1147–73 ல் ஆண்ட இரண்டாம் இராஜராஜனாலும், கம்பகரேஸ்வரம் மூன்றும் குலோத்துங் கனாலும் (1178–1223) கட்டப்பட்டவை. தஞ்சாவூரிலும் கங்கை கொண்ட சோழபுரத்திலும் உள்ள கோயில்களைப் பின்பற்றியே இவையும் கட்டப்பட்டன. இக்கோயில் களிலும் விமானம் தான் மற்றெல்லாவற்றையும் விட பிர தானமாகவுள்ளது. ஆனால், மகா மண்டபத்தின் அமைப்பு மேலும் விரிவாக உள்ளது. இக்கோயில்களில் மற்றொரு புதிய அம்சம் இவற்றின் விமானம், பிரஸ்தாரப் பகுதி வரை மட்டிலுமே கருங்கல்லால் ஆனதாகவும், அதற்கு மேற்கட்டு செங்கற்களால் அமைந்ததாகவும் இருப்ப தாகும். அடுத்து வந்த காலங்களில் கட்டப்பட்ட கோயில் களில் இது நடைமுறையாக இடம் பெற்று விட்டது. இக்கோயில்களிலும் அருமையான சில சிற்பங்கள், இலக் கியங்களின் காட்சியை சித்தரிக்கும் செதுக்கு வேலைகள் உள்ளன. சேக்கிழார் இயற்றிய 63 நாயன்மார்கள் வரலாறு தாராசுரம் கோயிலில் சிற்பமாகப் பொறிக்கப் பட்டுள்ளது. பிற்காலச் சோழர் கோயில்களின் மற்றொரு அம்சம் அவற்றின் கோபுரங்கள் அளவில் பெரியதாக இருக்கும். தாராசுரம் கோயில் போன்ற சிலவற்றில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராகாரங்கள் உள்ளன. இவை ஒன்றுக்கு மேற்பட்ட கோபுர வாயில் களைக் கொண்டதாக இருக்கும். தாராசுரம் கோயிலின்

இரண்டாவது பிராகாரச் சுவர்கள் இன்று இல்லை. ஆனால், அதன் கிழக்கு கோபுரவாசல் இன்றும் இருக்கிறது. இக்கோயில்களில் பிராகாரங்களுக்கும் கோபுரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பது இப்பகுதியில் திராவிடப்பாணி கோயில் கலை எத்துறையில் சென்று கொண்டிருந்தது என்பதைப் புலப்படுத்துகிறது. இக்காலத்திலிருந்து விமானத்தைவிட கோபுரம் பிரதானமாகி விட்டது. இதன் விளைவாக விமானங்களின் அளவு வரவர சிறியதாகத் தொடங்கியது. கோபுரத்தின் அளவு வானுயர ஓங்க ஆரம்பித்தது. கோயிலுக்கு எடுப்பான தோற்றம் தருவதற்கு அதிகப்படியான கோபுரங்கள் இருப்பது அவசியமாயிற்று. ஒவ்வொன்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கோபுர வாயில்களைக் கொண்ட பிராகாரங்களை அதிகரிப்பதன் மூலம் தான் இது சாத்தியமாகும். இதன் விளைவாக பெரும் பிராகாரங்களையும், கோபுரங்களையும் கொண்ட சிதம்பரம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ளது போன்ற கோயில்கள் கட்டப்படலாயின. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இது தமிழ் நாட்டில் பரவலாகக் காணப்பட்டது. சோழ மன்னர்கள் தவிர, பாண்டியர்களும் இவ்வகைக் கோயில் நிர்மாணத்துக்கு ஆதரவு கொடுத்தனர். திருச்சி மாவட்டம் ஜம்புகேஸ்வரர் கோயிலிலுள்ள சுந்திரபாண்டிய கோபுரம் இப்பெயர் கொண்ட பாண்டிய மன்னனால் கட்டப்பட்டது என்று கூறப்படுவது இதற்கு உதாரணமாகும். தமிழ் நாட்டில் கோயில்கட்டும் கலையில் இடம் பெற்ற இந்த அம்சம், தென்னிந்தியா முழுவதும் விஜய்நகர மன்னர்கள் ஆட்சிக்குட்பட்ட போது மேலும் முக்கியத்துவம் பெற்றதாகி விட்டது. இனி இது குறித்துப் பார்ப்போம்.

40

விஜயநகர மன்னர் கால கோயில் கலை

தக்காணத்தில் ஹோய்ஸலர்களும் இதர வமிசத்தினரும், தமிழ் நாட்டில் சோழர்களும் பாண்டியர்களும் வலி விழந்து நலிவுற்ற போது விஜயநகரப் பேரரசு அமைந்தது. இப்பேரரசின் மன்னர்கள் தீவிர இந்துக்கள். தெற்கே முஸ்லிம்கள் இடம் பெற்று விடாமல் தடுத்து இந்து கலாசாரத்தைப் பாதுபாப்பது அவர்களது முக்கிய வேலைகளுள் ஒன்ருக இருந்தது. சாத்தியமான எல்லா வழிகளிலும் இந்து மதத்தைப் பரப்ப அவர்கள் பெரிதும் பாடு பட்டனர். ஆலயங்களைக் கட்டுவது அவற்றுள் முக்கியமான ஒன்ருக இருந்தது. அவர்கள் தக்காணத்திலும் தமிழ் நாட்டிலும் நிலவிய கட்டிடக் கலை மரபுகளைப் பின்பற்றியதுடன் தங்கள் பாணியில் வளர்ச்சி பெறவும் செய்தனர். அவர்களது ஆரம்பத் தலைநகரான ஹம்பியில் சாளுக்கிய மரபிலும், தமிழக மரபிலும் கட்டப்பட்ட எண்ணற்ற கோயில்கள் உள்ளன. பின்னர், அவர்களுடைய தலைநகராக இருந்த இடங்களிலும் அனந்தப்பூர் மாவட்ட பெனு கொண்டாவிலும், சித்தூர் மாவட்டம் சந்திரகிரியிலும், வடாற்காடு வேலூரிலும், கோதாவரியிலிருந்து கன்யாகுமரிவரை வேறு பல இடங்களிலும் சிறியதும் பெரியதுமான ஏராளமான கோயில்கள் உள்ளன. அவர்களது ஆட்சிக் காலத்தில் ஆலய நிர்மாணப்பணி சோழர்காலத்தில் இருந்ததைவிட அதிகமாக இருந்தது. அவர்களது கோயில்களில் சில புகழுக்குரிய மண்டபங்களையும் கோபுரங்களையும் கொண்டவை. இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களின் சில விசேஷ அம்சங்கள் : **புஷ்ப போதிகைகள்**, விரிவாகவும் நேர்த்தி

யாகவும் செதுக்கப்பட்ட தூண்கள் மீது கும்ப பஞ்சரங்கள் மண்டபங்கள் ஆகியவற்றை அமைத்தது, நுட்பமான வேலைப்பாடமைந்த கல்யாண மண்டபம், உற்சவ மண்டபம் ஆணி யோட்டிக்கால், ராய கோபுரம் எனப்படும் பெரிய கோபுரங்கள், ஆகியவையாகும். ராயகோபுரம் சில சமயங்களில் பதினொரு அடுக்குகள் வரை கொண்டதாக இருக்கும். தென்னிந்தியாவின் திராவிட பாணிக் கோயில் கலைக்கு விஜயநகரப் பேரரசின் காலம் வழங்கிய முக்கிய மான அம்சங்கள் இவை. மண்டபங்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டாக வேலூரிலுள்ள கோயில் கல்யாண மண்டபத்தையும், காஞ்சீபுரம் வரதராஜர் கோயில் மண்டபத்தையும் குறிப்பிடலாம். காஞ்சீ ஏகாம்பர நாதர் கோயில் கோபுரமும், திருவண்ணாமலை கோயில் கோபுரங்களில் சிலவும் காளகஸ்தி கோயில் கோபுரங்களும் அவர்கள் வகையில் சிறந்தவை. ஏற்கெனவே உள்ள கோயில்களில் மேலும் புதியதாகப் பல கட்டிடங்களைச் சேர்ப்பதுவே இக்காலத்தில் பிரதானமாக இருந்த போதிலும், ஹம்பி போன்ற சில இடங்களில் ஒரு சில பெரிய கோயில்களும் புதிதாகக் கட்டப்பட்டன. ஹம்பியிலுள்ள கோயில்களில் பம்பாபதி, விருபாக்ஷர், ஹஸார-ராமர், விட்டலர் கோயில்கள் குறிப்பிடத் தக்கவை. முதலில் சொன்ன இருகோயில்களின் மூல அமைப்பு சாளுக்கியர் காலத்தைச் சேர்ந்தது; பின்னிரண்டும் விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டவை. ஹஸார-ராமர் கோயில் ஒருவேளை முன்பே தொடங்கப் பெற்று புகழ் பெற்ற கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் பூர்த்தியடைந்திருக்கக் கூடும். இதில் கோபுரம் கிடையாது. மண்டபம் நவரங்க வகை. விமானத்தில் சுகநாசிகப் பகுதி உள்ளது. விமானத்தின் சுவர்களில் நிறைய சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன. விட்டலர் கோயில் முற்றிலும் தென் பாணியில் அ..ந்தது. அக்ரமண்டபம் போன்ற எல்லா உபபகுதி

களையும் கொண்டது. சக்கரத்துடன் கூடிய தேர் போல் அமைக்கப் பட்டுள்ள ஒரு **கருட மண்டபம்** இருக்கிறது.

விஜய நகரப் பேரரசின் மத்திய அதிகாரம் குன்றியதும் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை போன்ற இடங்களில் அரசப் பிரதிநிதியாக இருந்து ஆண்டு வந்த நாயக்கர்கள் சுதந்திரமடைந்தனர். இவர்களுள் மதுரை, தஞ்சை நாயக்கர்கள் கோயில் கட்டும் பணியைத் தீவிரமாகத் தொடர்ந்தனர். நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் எனப்படும் மண்டபங்களை அமைத்ததும் அதிகப்படியான சுதை சிற்பங்களைக் கொண்ட பெரிய கோபுரங்களை கட்டியதும் இவர்களது முக்கியப் பணியாகும். இக்காலத்திய அழகிய கோபுரங்களுக்கு எடுத்துக் காட்டு மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில்களில் உள்ளவையாகும். ஒரே கல்லாலான பெரிய தூண்களும் அவற்றில் மிகப் பெரிய சிற்பங்களும் கொண்ட மண்டபங்களை அமைத்ததும் இவர்கள் பணியாகும். அற்புதமான சிற்பங்களமைந்த தூண்களைக் கொண்ட இவ்வகை மண்டபங்கள் மதுரை, ஆவுடையார் கோயில், கிருஷ்ணபுரம், பேரூர் கோயில்களில் உள்ளன. இருபுறமும் பெரிய தூண்களைக் கொண்ட மேடைகளுடன் கூடிய மூடப்பட்ட பிராகாரம் அமைப்பது இக் காலத்திய மிகப் பெரிய காணிக்கையாகும். இராமேஸ்வரத்திலுள்ள இராம நாதர் கோயில் பிராகாரம் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இது குறிப்பிடத் தக்க காணிக்கையாக இருப்பதுடன் இது வரை தனித் தனியாகவே இருந்து வந்த விமானத்தையும் பிராகாரத்தையும் ஒருங்கிணைக்க இது உதவியது.

41

மேலைக் கடலோரக் கோயில்கள்

இந்தியாவின் இதர பகுதிகளில் போலவே மேலைக் கடலோரத்திலும் கோயில் கட்டும் கலை பழங் காலத்தி லிருந்தே இடம் பெற்றுள்ளது. இன்று வரை நிலைத்திருக் கும் நல்ல எடுத்துக் காட்டுக்களைக் கொண்ட முக்கிய இடங் கள் வட, தென் கன்னட மாவட்டங்கள், மலபார், கொச்சி, திருவாங்கூர் ஆகியவையாகும். இங்குள்ள பழங் காலக் கோயில்களில் ஸ்தல கலைஞர்களின் கை வண்ணத்தையும் காண முடிகிறது. உதாரணமாக, வட கன்னட மாவட்டத் திலுள்ள பெரும்பாலான கோயில்கள் சதுர அமைப்பும், பிரமிட் உருவ மேற் கட்டும் அமைந்தவை. கடம்பர்கள் ஆட்சி செய்த பகுதி இது. எனவே, இக் கோயில்கள் கடம்ப பாணியில் இருப்பதாக சில அறிஞர்கள் கருது கிறார்கள். இதற்கு முற்பட்ட காலத்துக் கோயிலின் மேற் கட்டு எளிமையாக இருக்கும். ஆனால், பிற்கால கோயில் களின் மேற்கட்டு அடுக்குகளில் ஒழுங்கான 'இடை வெளியில் மூலை போன்று துருத்திக் கொண்டிருக்கும் பகுதிகள் இருப்பதைக் காண்கிறோம். பின்னர் சொன்ன வகைக் கோயில்கள் விஜய நகரப் பேரரசின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்தவை. ஹம்பியிலும் இது போன்று காண முடிகிறது.

தென் கன்னட மாவட்டத்தில் பல இடங்களில் திரா விட பாணியிலமைந்த பல கோயில்கள் உள்ளன. ஆயினும், பல்வேறு பாணிகளில் அமைந்த கோயில்கள் பார்கூர், உடுப்பி, கார்கல், மூதா பிதரி, வேணூர் போன்ற இடங்


களில் காணப்படுவது. இவை கோயில் கலைக் கேந்திரங்களாக விளங்கின என்பதற்கு சான்றாகும். வைணவ, ஜைன, சைவ மதக் கோயில்கள் இவை. இந்தியாவின் பகுதிகள் போலவே இங்குள்ள பெரும்பாலான கோயில்கள் சதுர அமைப்பில் கட்டப்பட்டவை. உடுப்பிலுள்ள கிருஷ்ணர் கோயில், கார்கல்லிலுள்ள விஷ்ணு கோயில், ஹரியங்காடி ஜைனக் கோயில் ஆகியவை இதற்கு உதாரணம். உடுப்பி அனந்திஸ்வரர் கோயில், பார்கூர் பஞ்சலிங்கேஸ்வரர் கோயில் போன்று கஜ பிருஷ்ட அமைப்பில் கட்டப்பட்ட கோயில்களும் உண்டு. விசித்திரமான அமைப்பிலுள்ள சில கோயில்களும் உள்ளன. உதாரணம்: கார்கல்லிலுள்ள சௌமுக் அல்லது கர்வதோ பத்ர வகைக் கோயில், மூத பித்ரியிலுள்ள பிரமிட் உருவ மேற் கட்டமைந்த கோயில், வேணூரிலுள்ள இரண்டாவது அடுக்கில் மற்றொரு கர்பக்கிருகத்துடன் கூடிய ஜைன பஸ்தி, கோயில்களின் அல்லது அவற்றின் சில பகுதிகளின் கூரை அமைக்கப்படும் விதம் பற்றியும் இங்கு கூற வேண்டும். நீண்ட ஒன்றன் மேலொன்றாக அமைந்த கற் பாளங்களைக் கொண்டது அது. பார்கூரிலுள்ள சௌளிகிரே கோயில் மண்டபத்தின் கூரை, கார்கலிலுள்ள சௌமுக் கோயிலின் கூரை ஆகியவை இதற்கு எடுத்துக் காட்டுகள். மூது பித்ரியிலுள்ள பெரிய கற் கோயிலைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். பெரும் கற்றூண்களால் தாங்கப்படும் தாழ்வாரம் முதலிய அமைப்புக்கள் இதில் உள்ளன. இப் பகுதியின் ஜைன ஆலயக் கலையின் சிறப்பான அம்சம் மானஸ் தம்பம் எனப்படும் ஒரே கல்லாலான தூண்களும், அத் தூண்கள் மீது சிறிய அளவு திறந்த சிறிய கோயில் இருப்பதுமாகும்.

மேலைக் கடலோரத் தென் பகுதியிலுள்ள கோயில்களும் திராவிட பாணியில் உள்ளன. ஆயினும், இவற்றின்


மேற் கட்டில் இதர பகுதிக் கோயில்களில் காண முடியாத சில விசேஷ உருவங்கள் இடம் பெற்றுள்ளன. இப் பகுதியில் மழை அதிகமாகப் பெய்வதற்கேற்ப இவ்வடிவம் கையாளப்பட்டுள்ளது. மேலும், கட்டிட வேலையில் மரம் நிரையப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. இக் கோயில்களின் அதிஸ்தானம் கருங்கல்லைச் செதுக்கி அமைத்தது; ஆனல், சுவர்கள் பெரும்பாலும் சரளைக் கற்களை அடுக்கிக் கட்டப்பட்டவை. முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம் கூரையாகும். ஒன்றன் மேலொன்ருக அடுக்கப்பட்ட கற்பாளங்களைக் கொண்ட சாய்வான கூரை தவிர, பெரும்பாலானவற்றுக்கு ஓடு, செம்பு அல்லது பித்தளை வேயப்பட்டுள்ளது. பெரும்பாலான கோயில்களில் கூரை அல்லது சிகரம், இடையில் பிரஸ்தாரமோ, கிரீவமோ இடம் பெருமல் நேரடியாக சுவர் மீது உள்ளது. விமானம் அடுக்குகளைக் கொண்டதாக இருந்தால் ஒரே மையத்தைச் சுற்றி அந்த உயரத்துக்கு சுவர்கள் அமைக்கும் முறை கையாளப்படுகிறது. பல்வேறு பிரதட்சிணப் பாதைகளையும் சுற்றிச் சாய்வான கூரை இருக்கும் நாசிகங்கள் பொதுவாக முக் கோண வடிவில் தான் உள்ளன. இங்கு கிளி வாசல் எனப்படும் தோரண வளைவுகளுடன் கூடிய வில் வளைவு அமைப்பிலும் சில இருக்கின்றன. சதுரம், நீண்ட சதுரம், கஜ பிருஷ்டம், வட்ட வடிவம் ஆகிய அமைப்பில் கட்டப்பட்டப் கோயில்கள் இப் பகுதியில் உள்ளன.

மிகப் பழமையான கோயில்கள் இன்று இல்லாத போதிலும், திருநந்திக்கரை போன்ற இடங்களில் இருக்கும் பாறையுள் குடைந்த கோயிலின் சுவர் ஓவியங்களின் அமைப்பிலிருந்து இது 8-9 வது நூற்ருண்டைச் சேர்ந்தது என்று யூகிக்க முடிகிறது.

இப் பகுதியிலுள்ள கோயிலில் ஸ்ரீ கோயில் என்றழைக்கப்படும் ஒரு மத்திய கோயில் இருக்கும். ஒரு



படம் 49 எலிபெண்டா திருமூர்த்தி சிவன்




படம் 50 கைலாச நாதர் கோயில் எல்லோரா

அத்தி 43 பார்க்க



படம் 51 சாரநாத் புத்தர்

அத்தி 43 பார்க்க



படம் 52 சாஞ்சி ஸ்தூப தோரண சிற்பம்

அத்தி 43 பார்க்க



படம் 53 அனந்தசாயி விஷ்ணு

அத்தி 43 பார்க்க



படம் 54 மகாபலிபுரம் மகிஷாஸுர மர்த்தனி

அத்தி 43 பார்க்க



படம் 55 பேலூர் சென்னகேசவர் கோயில்
லக்ஷிமி நாராயணர் சிற்பம்

அத்தி 43 பார்க்க



படம் 56 பேலூர் கோயில் போதிகை சிற்பங்கள்

அத்தி 43 பார்க்க

நமஸ்கார மண்டபம், பிராகாரக் சுவர், அதன் வெளிப் புறத்தில் ஏராளமான எண்ணெய் விளக்குகள் வைப்பதற் கான புரைகள் ஆகியவை இருக்கும். சில கோயில்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராகாரங்களும், கோபுரவாயில்களும் உள்ளன. பல கோயில்களில் பிரதான கருவறைக்கு முன்னால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கல்லினாலான ரிக்ஷ தீபங்கள் உள்ளன. திருச்சூரிலுள்ள மத்திய காலத்தைச் சேர்ந்த வடக்குன்னாதர் கோயில் அருமையான எடுத்துக் காட்டாகும். இரண்டு மத்திய கோயில்களைக் கொண்ட இது ஒன்று வட்ட வடிமும், மற்றது சதுர வடிவமும் கொண்டது முறையே சிவனுக் கும் விஷ்ணுவுக்கும் உரிய கோயில்கள் இவை. சுற்றிலும் உயரமான சுவரும், அதில் நான்கு திசைகளிலும் வாயில் களும் உள்ளன. மேலே பெரிய மேற் கட்டுகள் உள்ளன. கோயிலின் பல்வேறு பகுதிகளும் பெரும் பரிமாணமும் உயரமும் உடையவை. உயர்ந்த பூமி மீது இவையனைத்தும் கட்டப்பட்டிருப்பது கம்பீரத்தை அதிகரிக்கிறது.

திருப்ரங்கோடிலுள்ள – சிவன் கோயில் கஜ பிருஷ்ட அமைப்பில் உள்ள அழகிய கோயிலாகும் இதன் மேற் கட்டும் அவ்வடிவிலேயே உள்ளது. மேலே செம்புத் தகடு வேய்ந்த கூரை உள்ளது. திரு நாவாயிலுள்ள முகுந்தன் கோயில் சதுர அமைப்பு; இதனை உள்ளடைக்கி பெரிய– இன்னும் பூர்த்தியடையாத பிரகாரம் உள்ளது; பிரதானக் கோயிலுக்குப் பக்கத்தில் லக்ஷ்மிக்கான சிறிய கோயில் ஒன்றும் உள்ளது; மேலைக் கடலோரமுள்ள கோயில் களில் வழக்கமாக தேவியர்க்கென்று தனியே கோயில் இருப்பதில்லை. எனவே, முகுந்தன் கோயிலில் இது இருப்பது நடை முறை மரபுக்கு மாறானதாகும்.

வட்ட வடிவக் கோயில்கள் இங்கு அதிகமாக இருப்பது வியப்பூட்டுவதாகும். வைக்கம் கோயில்

இவ்வகைக்கு நல்ல உதாரணம். இவ்வகைக் கோயில்களில் சில ஒன்றுக்கு மேற்பட்ட கூரைகளைக் கொண்டவை. இவை குவிந்த வடிவத்திலும், மேற்புறம் உலோகத் தகடுகள் வேய்ந்ததாகவும் உள்ளன. திருநாவாயில் பாரதப் புழா நதியின் மறுகரையில் ஒரு வேய்ந்த கூரையைக் கொண்ட சிறிய வட்ட வடிவக் கோயில் ஒன்று உள்ளது. இது பிரம்மா கோயில் என்பது கவனிக்க வேண்டியதாகும்.

சதுர வடிவ அமைப்பில் கட்டப்பட்ட கோயில்களுள் கள்ளிக் கோட்டையிலுள்ள தாளி கோயிலும், திருவனந்தபுரத்திலுள்ள அனந்த பத்மநாபர் கோயிலும் குறிப்பிடத் தக்கவை. அனந்த பத்மநாபர் கோயிலில் தமிழக பாணியில் கோபுரம் அமைந்த வாயில் உள்ளது. சுசீந்திரத்திலும் கன்யாகுமரியிலும் உள்ள கோயில்கள் இவ்வகைக்கு இதர எடுத்துக் காட்டுகளாகும் சுசீந்திரம் கோயிலில் நுட்பமான வேலைப்பாடமைந்த ஒரே கல்லிலான தூண்கள் தாங்கும் மண்டபமும், மதுரையிலுள்ளது போன்ற கோபுர வாயில்களும் இருக்கின்றன.

மேலைக் கடலோரக் கோயில்களில் பொதுவாக குறிப்பிட்டுச் சொல்லும்படியான சிற்பங்கள் இல்லை; இதற்குக் காரணம் அவை சரளைக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டதாக இருக்கலாம். ஆனால், பெரும்பாலான கோயில்களில் மரத்தில் செதுக்கப்பட்ட அலங்கார வேலைப்பாடுகள் உள்ளன. இக்கோயில்களில் கேரளத்துக்கே உரிய வகை ஓவியங்கள் உள்ளன. திருப்ரங்கோடு சிவன் கோயில் முற்றத்தில் உள்ள உப கோயில் சுவற்றில் 17-ஆம் நூற்றாண்டுக்குரிய ஓவியங்கள் காணப்படும் சில பகுதிகள் உள்ளன.

மேலைக் கடலோரப் பகுதிகளில் ஆலய நிர்மாணக் கலை வளர்ச்சி தென்னிந்தியாவின் இதர பகுதிகளில்

உள்ளதைப் போலவே இருந்த போதிலும், வேறெங்கும் காண முடியாத சில புதிய அம்சங்களை இங்கு காண்கிறோம். அது இப்பகுதிக் கலைஞர்களின் சுயமாகச் சிந்திக்கும் • சக்தியையும், அதனைத் திருப்திகரமாக செயல்படுத்தும் ஆற்றலையும் தெளிவாகக் காட்டுகிறது.

42

கோயில்களில் நுண் கலைகள்

ஆலய நிர்மாணக் கலை நீண்ட வரலாற்றையுடையது என்பதை மேலே பார்த்தோம். எளிய முறையில் தொடங்கி அது 9–10 வது நூற்றாண்டுகளில் புகழின் உச்ச கட்டத்தை அடைந்தது. பின்னர், அது படிப்படியாக வட இந்தியாவிலும் தக்காணத்திலும் தனது முக்கியத்துவத்தை இழந்து விடத் தொடங்கியது தென்னிந்தியாவில் வளர்ச்சிக்குப் புதிய வழியைக் கண்டது. இந்தியாவின் பல்வேறு மதங்களுடைய உள்ளத்தைக் கோட்பாடுகளைப் பரப்ப வேண்டும் என்ற ஆர்வத்தில் பிறந்தது இக்கலை. அதன் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் கட்டிடத்தின் அமைப்பு மட்டும் போதுமானது என்று கருதப்பட்டது. காலப் போக்கில் அவரவர்க்குரிய மத புராணங்களின் நிகழ்ச்சிகள் சுவற்றில் செதுக்கப் பட்டன; அல்லது ஓவியங்களாகத் தீட்டப் பட்டன. ஆலயத்தைக் கட்டுவதிலும், அதனை அலங்கரிப்பதிலும் கலையுணர்வுதான் வழிகாட்டும் கொள்கையாக இருந்தது. எனவே, அவற்றின் மதத் தன்மை எதுவாக இருந்த போதிலும் அவை சிறந்த கலைப் படைப்புகளாகவும் விளங்கின. கோயிலுடன் சம்பந்தப்பட்ட இந்த இரு பிரதம கலைகளைத் தவிர, நடனம், இசை, உலோக வார்ப்பு, மரச் செதுக்கு வேலை போன்ற கலைகளும் ஆலயப் பணிக்குத் தேவைப் பட்டன. எனவே, கோயில்கள் கலைகளுக்கும், கைத் தொழில்களுக்கும் கருவூலங்களாயின. கட்டிடக்கலை போலவே இந்த கலைகளும்

கைத் தொழில்களும் காலப் போக்கில் பல விதமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளன. கோயிலுடன் சம்பந்தப் பட்ட ஒவ்வொரு கலையைப் பற்றியும் சில குறிப்பிடத் தக்க எடுத்துக் காட்டுக்களை சுருக்கமாக இனி பார்ப்போம்.

43

சிற்பக் கலை

இந்தியக் கோயில் கட்டிடக் கலையுடன் இணைந்த பிரதானக் கலை சிற்பக் கலையாகும். பார்ஹுத் ஸ்தூபம் (கி. மு. 2-ஆம் நூற்றாண்டு) சாஞ்சி ஸ்தூபம் (கி. மு. முதல் நூற்றாண்டின் இறுதி) அமராவதி, நாகார்ஜுன கொண்டா ஸ்தூபங்கள் (கி. மு. முதல் நூற்றாண்டு முதல் கி. பி. மூன்றும் நூற்றாண்டு வரை) மதுரா கோயில் (முதல், இரண்டாம் நூற்றாண்டு) பாஜா, பேத்ஸா, பிதல் கோரா, கார்லே (கி. மு. 2 - கி. பி. முதல் நூற்றாண்டு) ஆகிய ஆரம்ப காலக் கோயில்களின் சிற்பங்களைப் பற்றி ஏற்கெனவே பார்த்தோம். இவை தவிர குஷாணர் காலத்தைச் சேர்ந்த பல புத்தர், பலராமர் சிலைகள் வடக்கே பல இடங்களில் குறிப்பாக மதுராவை சுற்றி யுள்ள இடங்களில் காணக் கிடைக்கின்றன. சிலைகள் கோயிலில் இருத்தி வழிபட ஏற்பட்டவை. இவற்றுள் பெரும்பாலானவை அருமையான கலைப்படைப்புகளாகும். இதற்கு எடுத்துக் காட்டுகளாக மதுராவிலுள்ள யக்ஷி களைக் கூறலாம்.

வடக்கே குப்தர்களும், தெற்கே பல்லவர்களும், வேறு சிலரும் உன்னத நிலையில் இருந்த போது கற்களைக் கொண்டு கட்டப்பட்ட ஆரம்ப காலக் கோயில்கள் ஏற்பட்டன. இக் கோயில்களில் கர்ப்பக்கிருகங்களில் தெய்வங்களின் சிலைகள் இடம் பெற்றன. புராண, இதிகாச நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும். சிற்பங்கள் கோயில் களின் இதர பகுதிகளில் இருந்தன. மேலும், இச்

சிற்பங்கள் அக்கலை ரீதியான எடுத்துக் காட்டுகளாக விளங்கக் கூடிய அம்சங்களைக் கொண்டுள்ளன. பிமாரத்தி லுள்ள கணேசர், சாரநாத்திலுள்ள உட்கார்ந்த நிலையி லிருக்கும் புத்தர், தேவ்கரில் உள்ள தசாவதாரக் கோயிலின் மூன்று சுவர்களிலும் காணப்படும் சிற்பங்கள் ஆகியவை இக்காலத்தின் சிற்பக கலைக்கு சிறந்த எடுத்துக் காட்டுக்கள். இக் காலத்தில் சில கோயில் களில் வழிபாட்டுக்குரிய உலோகச் சிலைகள் இடங் பெற்றிருந்தன என்று தோன்றுகிறது. இப்போது பர்மிங் ஹாம் கலைப் பொருட் காட்சிசாலையிலிருக்கும் நின்ற நிலை புத்தர் சிலையும், கராச்சியில் கிடைத்த பிரம்மா சிலையும் இவ்வகைக் கலைக்கு அருமையான எடுத்துக் காட்டுக்கள். பாதாமி குகைக் கோயில் சிற்பங்களும் இதே காலத்தை (கி. பி. 6-ம் நூற்றுண்டு) சேர்ந்தவை தாம்.

ஏழாம் நூற்றுண்டிலிருந்து இந்தியாவில் கோயில் களின் எண்ணிக்கை பெருகியதற்கேற்ப, சிற்பக் கலையும் பரவலாக வழக்கில் இடம் பெற்றது. சிலைகளும் சிற்பங்களும் அமைப்பதற்கான தேவை அதிகரித்தது தான் இதற்குக் காரணம். இக்கால கட்டத்தில் இந்தியா வின் பல்வேறு பகுதிகளிலும் கட்டப்பட்ட கோயில்களின் ஓரம்சமாக விளங்கிய சிற்பக் கலைப் பொருள்கள் உள்ளன. அருமையான சிற்பங்கள் அமைந்த - 7 - 9 வது நூற்றுண்டைச் சேர்ந்த கோயில்களுள் புவனேஸ்வரம், ஸிர்பூர், எல்லோரா, அஜந்தா, எலிபெண்டா, ஐஹொளே, பட்டதக்கல், மகாபலிபுரம் ஆகிய இடங்களில் உள்ளவை குறிப்பிடத் தக்கவை. புவனேஸ்வரம் பரசுராமேஸ்வரர் கோயிலிலுள்ள சிற்பங்கள், எலிபெண்டா திரிமூர்த்தி சிற்பம், எல்லோரா, இராமேஸ்வரக் குகையிலுள்ள நடராஜர் மற்றும் இதர சிற்பங்கள், மகாபலிபுரம் மகிஷ மர்த்தனி, சேஷசாயி சிற்பங்கள், பட்டதக்கல், ஐஹொளே ஆலயச் சிற்பங்கள் ஆகியவற்றை இக்கால கட்டத்தில்

இக்கலையின் சிறந்த எடுத்துக் காட்டுகளாகக் கொள்ள லாம். இந்தக் கற் சிற்பங்கள் தவிர அப்போது வழக்கில் இருந்த வெண்கலச் சிலைகளும் சிறந்து விளங்கின. பீகார் குர்கிஹாரில் கிடைத்த புத்தர் சிலைகளும், தென்னிந்தியா வில் கூரம் என்ற இடத்தில் கிடைத்த நடேசர், சாராபாய் வசம் இருக்கும் திரிபுராந்தகர், கீழ்ப்பூதனூரில் கிடைத்த விஷாபகரணர் சிலைகளும் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டுகள். 6 - 7 - ஆம் நூற்றாண்டில் வார்க்கப்பட்ட வெண்கலச் சிலைகள்தான் இந்தியாவில் செய்யப்பட்ட வெண்கலச் சிலைகளில் உயர்தரமானவை என்று எளிதில் கூறிவிடலாம். 8 - 10 - ஆம் நூற்றாண்டுகளில் கட்டிடக் கலை அதன் வளர்ச்சியின் உச்ச கட்டத்தையடைந்த போது சிற்பக் கலை ஒரு நிர்ணயமான அமைப்பைப் படிப்படி யாகப் பெறத் தொடங்கியது.

எனவே 9 முதல் 11 வது நூற்றாண்டு வரையிலுள்ள காலத்தின் சிற்பங்கள் எண்ணிக்கையில் பெருகி விட்ட போதிலும் தரத்தில் முந்திய கால கட்டத்தினுடையதைப் போன்று சிறந்ததாக இருக்கவில்லை. இக்காலக் கட்ட சிற்பங்களுக்கு எடுத்துக் காட்டாக, கஜுராஹோ, உதயபுரி கோயில்களிலும், புவனேஸ்வரம் லிங்கராஜர், இராஜா-ராணி கோயில்களிலும் தஞ்சை கங்கைகொண்ட சோழபுரம் பிருகதீஸ்வரர் ஆலயங்களிலும், மோதேரா சூரியன் கோயிலிலும் உள்ள சிற்பங்களைக் கூறலாம். இக்கலையின் மகோன்னத சாதனை ஒரே கல்லிலான 57 அடி உயரமுள்ள சிரவண பெலகோல கோமத சிற்ப மாகும். இக்கட்டத்தின் சிற்பங்கள் படிப்படியான வீழ்ச்சிக்கான அறிகுறிகளைப் புலப்படுத்திய போதிலும் அப்போது இருந்த வெண்கல வார்ப்புக்கலை பூரணமான நிலைக்கு உயர்ந்து விட்டது போலத் தோன்றுகிறது. இக் கலை குறிப்பாக தமிழ் நாட்டில் மிகவும் பிரபலமாக இருந்தது. சோழ மன்னர்கள் இதற்கு உற்சாக மிக்க

ஆதரவளித்தனர். இக்கலையின் அசாதாரண வளர்ச்சிக்கு மற்றொரு காரணமும் இருந்தது. ஆலயச் சடங்குகள் உயர்ந்த அளவுக்கு வரை முறைக்குட்படுத்தப்பட்டு விட்டன. ஓராண்டின் குறிப்பிட்ட காலங்களில் விழாக் களை நடத்துவதும் அப்போது தெய்வச் சிலைகளை ஊர்வல மாக எடுத்துச் செல்வதும் இச்சடங்குகளில் அடங்கும். எனவே, பல்வேறு கோயில்களிலும் கர்ப்பக்கிருகத்தில் நிரந்தரமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தெய்வங் களின் கற்சிலைகளைப் போன்றுள்ள தூக்கிச் செல்லக் கூடிய உலோகச் சிலைகள் இருப்பது அவசியமாகப் பட்டது. எனவே, இக்கலை உற்சாகத்துடனும் கற்பனைத் திறனுடனும் பேணப்பட்டது. அதன் காரணமாக ஏராள மான அற்புத வெண்கலச் சிலைகள் இக்காலக் கட்டத்தை சேர்ந்ததாகவுள்ளன. தஞ்சாவூர் மாவட்டம் வடக்குப் பனையூரில் கிடைத்த இராமர் சிலை, மங்களூருக்கருகே கத்ரியில் கிடைத்த புத்தர் சிலைகள், திருவாலங்காடு நடராஜர் சிலை ஆகியவை இக்கால கட்டத்தின் மிகச் சிறந்த எடுத்துக் காட்டுகளில் சில.

11 - 14-வது நூற்றுண்டுக்கு இடைப்பட்ட காலத் தில் ஆலய நிர்மாணக் கலை விரிவான வேலைப்பாடமைந்த கட்டத்தை அடைந்தது. கொனரக் சூரியன் கோயில், தாராசுரம், சிதம்பரம் கோயில்கள் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். இக்காலத்திய கோயில்களிலுள்ள சிற்பங் கள் சாதாரண தரமுடையவை. ஹோய்ஸலர்கள் கோயில் களான ஹளேபீடு, சோமநாத்பூர் போன்ற கோயில் களைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். நுட்பமான வேலைப்பாடமைந்த இச் சிற்பங்கள் தனி வகுப்பைச் சேர்ந்தவை. இங்குள்ள தேவ மாதர்களின் சில சிற்பங்கள் இக்கலையின் அழகிய எடுத்துக் காட்டுகளாகும் இது போலவே மவுண்ட் அபுவிலும், சத்ருஞ்சயத்திலுமுள்ள ஜைனர் கோயில்களில் இடம் பெற்றிருக்கும் ஸுர சுந்தரி


கள் சிற்பங்களும், வாரங்கல் மாவட்ட பாலம்பேட் கோயில் சிற்பங்களும் குறிப்பிடத் தக்க எடுத்துக் காட்டு களாகும். இக் காலத்திலும் தென்னிந்தியாவில் வெண் கலச் சிலை வார்ப்புக் கலை பரவலாக வழக்கில் இருந்தது. அப்போது ஏராளமான வெண்கலச் சிலைகள் தயாரிக்கப் பட்டன. இக்காலத்தைச் சேர்ந்த சிறந்த எடுத்துக் காட்டுகளில் சில தஞ்சை மாவட்டம் கோனேரி ராஜ புரத்தில் கிடைத்த நடராஜர் சிலையும், இப்போது சென்னை மியூசியத்திலுள்ள நன்னிலத்திலிருந்து கிடைத்த இராமர் - சீதை சிலைகளும் ஆகும்.

அடுத்து வந்த காலங்களில் வட இந்தியாவில் சிற்பக் கலை அதிகமாகக் காணப்படவில்லை; ஆனால், அது தென்னிந்தியாவில் தொடர்ந்து இருந்து வந்தது. நாளடை வில் இது ஒரே மாதிரியாகவும் உயிரற்றதாகவும் அமைந்து விட்டது. வட இந்தியாவில் இக் கலையைக் கைவிட்ட தற்குக் காரணம் முஸ்லீம்களுடைய படையெடுப்பும் ஆதிக்கமும் ஆகும். ஆயினும் செங்கற்களைக் கொண்டு கட்டும் கலை மட்டும் நீடித்தது என்பதற்கு வங்காளத் திலுள்ள கோயில்கள் சான்றாக உள்ளன. தெற்கே இக் கலை தன் இறுதிக் கட்டத்தை இதற்குள் அடைந்து விட்டது. பின்னர், வேலைப்பாட்டின் தரம் குறையத் தொடங்கி விட்ட போதிலும் 16 - 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நல்ல வேலைப்பாடமைந்த சிற்பத் தூண்கள் மதுரை, தாடி கொம்பு, பேரூர், கிருஷ்ணபுரம், ஸ்ரீரங்கம் போன்ற இடங்களில் காண முடிகிறது. வெண்கலச் சிலை வார்ப்புக் கலையும் இக் கட்டத்தில் தொடர்ந்து இருந்து வந்தது. ஆனால், அவை தரம் குறைந்தவை களாக இருந்தன. ஆலய நிர்மாணக் கலையுடன் சிற்பக் கலையும் இவ்வாறு பின்னிப் பிணைந்தது. இவை கோயில் களின் தோற்றத்துக்கு அழகும் கம்பீரமும் அளித்தன. இந்தியக் கோயில் கட்டிடக் கலையின் இந்த அம்சம்

மற்றெரு விதத்திலும் முக்கியத்துவம் வாய்ந்தது. தெய்வங்களின் பல்வேறு வடிவங்களையும், விலங்குகளையும் அற்புதமான கலைத் திறமையுடன் வடித்தது மக்களுடைய உள்ளத்தில் கடவுளைப் பற்றிய சிந்தனை நிலை பெற்றதற்குக் காரணமாகும். இந்தியாவின் புனிதமான மதங்களுடைய செல்வாக்கு உயிருடன் திகழவும் இது வழி செய்தது.

44
ஓவியக் கலை

மற்றொரு முக்கிய நுண்கலையான ஓவியம், இந்திய ஆலய நிர்மாணக்கலையில் சிற்பங்களைப்போன்று அவ்வளவு நெருக்கமாக ஒருங்கிணைந்த ஒன்ருக இல்லாத போதிலும் அது பல்வேறு மதங்களை வளர்க்கவும், உயிருடன் நிலை பெற்றிருக்கச் செய்யவும் பெரும் பங்கு வகித்திருக்கிறது. புராணங்கள். இதிகாசங்கள், இதர மதக் கதைகளின் நிகழ்ச்சிகளை ஓவியக்கலை மூலம் கவர்ச்சியாகவும், அருமை யாகவும் தீட்டியிருப்பது மக்களுக்கு எப்போதுமே மத உணர்வுடன் நேர்மையாக வாழ்வதற்கு ஆதரிசமளித்து வந்திருக்கிறது. இக்கலையில் ஒரு விசேஷ அம்சம் உண்டு. கட்டிட அமைப்பில் சிற்பங்கள் குறிப்பிட்ட சில இடங் களில் தான் அமைய முடியும். ஆனால், ஓவியங்களின் மூலம் மத நிகழ்ச்சிகளைக் சித்தரிப்பது கோயில் கட்டிடத் தின் எந்த இடத்தில் வேண்டுமானாலும் இடம் பெற முடியும். எனவே, இக்கலை மத நிகழ்ச்சிகளை ஒரு சிறு கோயிலின் வரையறைக் குட்பட்ட இடங்களில் வண்ண ஓவியங்களாகத் தீட்டுவதற்கு மட்டுமின்றி பல்வேறு பளிச்சிடும் வண்ணப் பூச்சு மூலம் கோயிலை புகழுக்கும் பெருமைக்கும் உரியதாகச் செய்யவும் முடிந்தது. கோயில்கள் என்னதான் அழகாக இருந்த போதிலும் அது வண்ணப் பொலிவுடன் கண்ணுக் கினியதாகக் காட்சியளிக்கச் செய்ய வேறு எந்தக் கலையினாலும் முடி யாது. எனவே. ஓவியக்கலை ஆரம்ப காலத்திலிருந்தே ஆலய நிர்மாணக் கலையுடன் இணைந்த ஒன்ருக இருந்து வருகிறது.




படம் 56-A பேலூர் கோயில் போதிகை சிற்பங்கள்

அத்தி 43 பார்க்க



படம் 57 சரவணபெல்கோலா கோமதேஸ்வரர்

அத்தி 43 பார்க்க



படம் 53 வடக்குப்பனையூர் இராமர் வெண்கலச் சிலை
(சென்னை மியூசியத்தில் உள்ளது)

அத்தி 43 பார்க்க



படம் 59 திருவாலங்காடு நடேசர்
(சென்னை மியூசியத்தில் உள்ளது)

அத்தி 43 பார்க்க




படம் 60 அஜந்தா, பத்மபாணி அவலோகிதீஸ்வரர்

அத்தி 44 பார்க்க



படம் 61 அஜந்தா, கருப்பு ராஜகுமாரி

அத்தி 44 பார்க்க



படம் 62 தாமரைக் குளம் சித்தன்ன வாசல்

அத்தி 44 பார்க்க



படம் 63 நடனப் பெண் - பின் தோற்றம்

அத்தி 44 பார்க்க

அமராவதியிலுள்ளது போன்ற ஆரம்ப கால பௌத்த ஸ்தூபங்களில் சில அருமையான ஓவியங்களைக் கொண்டிருந்தன என்று கூறப்படுகிறது. துரதிருஷ்ட வசமாக காலத்தின் கொடுமையால் அவை நிலைத்திருக்க முடியவில்லை. கி. மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த அஜந்தா குகைகளில் ஓவியங்கள் காணப்படுவது, வெகு ஆரம்ப காலத்திலிருந்தே இக்கலை மரக்கோயில்களில் பயன்படுத்தப் பட்டது என்பதைப் புலப்படுத்துகிறது. அக் காலத்திய நிகழ்ச்சிகளையும் புத்த நூல்களில் வரும் சில நிகழ்ச்சிகளையும் சித்தரிக்கும் ஓவியங்கள் இவை. தேர்ந்த கலைத் திறமையை இவை காட்டுவதுடன் அக்காலத்திய சமூக வாழ்வை உள்ளபடி படம் பிடித்துக் காட்டவும் உதவுகின்றன.

அஜந்தாவில் 1–17–26 எண் குகைகளில் வண்ண ஓவியங்களைக் காண்கிறோம். இக்குகைகளின் உட்புறம் முழுவதும் முன்பு வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்த போதிலும், இன்று அவற்றுள் சில பகுதிகளே இருக்கின்றன. கி. பி. 5–7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை இவை. இன்றுள்ள நிலையிலும் அவற்றின் வேலைத்திறன், இக்கலை அப்போது அடைந்திருந்த உன்னத நிலையை காட்டுகிறது. இதனைப் பார்க்கும் எவருக்கும் மதத்தின் பெருமையை உயர்த்த இக்கலை பெருமளவுக்கு உதவியிருக்க வேண்டும் என்ற எண்ணமே ஏற்படும். இக்கால கட்டத்தின் மிகச் சிறந்த படைப்புக்களுள் முதல் குகையிலுள் பத்மபாணி அவலோகிதீஸ்வரர், கருப்பு ராஜ குமாரி, யசோதா வீட்டு வாயலில் புத்தர் ஆகிய ஓவியங்கள் அடங்கும். இவை 6–7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

மத்தியப் பிரதேசத்தில் பாக் என்ற இடத்திலுள்ள பௌத்த குகைகளில் காணப்படும் ஓவியங்களும் இதே

காலத்தை சேர்ந்தவை. இவற்றுள் ஒரு நடனக்காட்சியை சித்தரிக்கும் ஓவியம் குறிப்பிடத் தக்கது. பாதாமியிலுள்ள இந்து குகைக் கோயிலின் சாளுக்கியர் கால ஓவியங்களும் இதே காலத்தவை. கவர்ச்சியான தோற்றங்களில் காணப்படும் பெண்களும் ஆண்களும் இந்த ஓவியங்களில் இடம் பெற்றுள்ளனர்.

ஆறு முதல் ஒன்பதாவது நூற்றுண்டு வரையுள்ள காலத்தில் இந்தியா முழுவதும் ஓவியக்கலை வழக்கில் இருந்தது. இக்கலை தன் பூரண நிலையையும் அப்போது தான் அடைந்தது இதை மேற்சொன்ன கோயில்களில் காணப்படும் ஓவியங்களும் பனமலை பல்லவர் கோயில் ஓவியங்களின் எஞ்சிய பகுதிகளும் (8 ஆம் நூற்றுண்டு) சித்தன்ன வாசல் ஜைன குகையிலுள்ள பாண்டியர் கால ஓவியங்களும் (9-ஆம் நூற்றுண்டு) உறுதிப் படுத்துகின்றன. பனமலையிலுள்ள பார்வதி ஓவியம் மெலிந்த உருவமும் தேர்ந்தெடுத்த அலங்கார அமைப்பும் கொண்டு விளங்குகிறது. சித்தன்ன வாசலிலுள்ள நடனமாடும் அப்ஸரஸ் ஓவியங்கள் நல்ல உடற்கட்டும், கம்பீரமும், நடனமாதர்க்குரிய ஏராளமான அலங்காரமும் கொண்டதாக அமைந்துள்ளது. இடுப்புத் துண்டு தவிர இதர உடைகளோ, அணிகளோ அணிந்திராத இளந் துறவிகளும், எருமைகள், ஹம்சங்கள் போன்ற உயிரினங்களும் துடிப்புள்ள ஓவியங்களாக சித்தன்ன வாசலில் அமைக்கப் பட்டுள்ளனர். இந்த அருமையான ஓவியங்களைக் காணும் எவரும் அவை எந்த நம்பிக்கையை வலியுறுத்த ஏற்பட்டனவோ அதில் தயக்கமோ தடுமாற்றமோ கொள்ள முடியாது.

ஒன்பதாவது நூற்றுண்டுக்குப் பிற்பட்ட கால ஓவியங்களுக்கான எடுத்துக் காட்டுகள் ஒரு சில இடங்களிலேயே உள்ளன இவற்றுள் மிகவும் கவர்ச்சியானதும் முக்கியமானதும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயி

விலுள்ள ஓவியங்களாகும். ஏற்கெனவே கூறியுள்ளது போல் இந்த ஓவியங்கள் கர்ப்பக்கிருகத்தைச் சுற்றியுள்ள பிராகாரத்தின் உட்புறச் சுவற்றில் இடம் பெற்றுள்ளன. விஜயநகர மன்னர்கள் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்களுக்கு அடியில் இவை மறைந்து கிடக்கின்றன. நாயன்மார்கள், சைவ புராணங்களைப் பற்றிய காட்சிகளை இவை விவரிக்கின்றன. இவற்றுள் சுந்தர மூர்த்தி, சேரமான் பெருமாள் நாயனார்களுடைய கதையை கூறும் ஓவியங்கள் சிறப்பானவை; மிக அழகானவை. சிவன், பார்வதி முன்னிலையில் அப்ஸரஸ்கள் நடனம் செய்கின்றனர். இரு நாயன்மார்களும் அதைக் கண்டு களிக்கின்றனர். இந்த ஓவியம் இக்கால கட்டத்தின் கலைத் திறமைக்கு உயர்தரமான எடுத்துக் காட்டாகும். தேவ மாதர்கள் நடன பாணிகளை அபிநயித்துக்குக் காட்டும் வேறு பல ஓவியங்களும் உள்ளன. ஆயினும், இந்த ஓவியங்களிலெல்லாம் திரிபுராந்தக சிவனுடைய கதையைச் சித்தரிககும் ஓவியம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ரௌத்திரம், வீரம், கருணை போன்ற நவரசங்கள் அற்புதமாக இதில் காட்டப் பட்டிருக்கின்றன. இதற்கு எடுத்தாண்டிருக்கும் வண்ணக் கலவை மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. இன்றுள்ள நிலையிலே இந்த ஓவியங்கள் உயிரும், அழகும் நிரம்பியதாக விளங்குகின்றன எனும்போது அவை புதுமைப் பொலிவுடன் திகழ்ந்த காலத்தில் பக்தர்களிடையே ஏற்படுத்தியிருக்கக் கூடிய விளைவை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். கோயில்களில் இக்கலையைப் பயன்படுத்தியது மக்களது மதவுணர்வு மங்கி விடாமல் செய்யப் பெரிதும் பயனுள்ள வகையில் விளைவேற்படுத்தியது என்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை

இதர கலைகள், கைத் தொழில்கள் போலவே ஓவியக் கலையும் அடுத்த கால கட்டங்களில் தாழ்வடைந்தது. ஏனெனில், இக்காலத்தைச் சேர்ந்த ஓவியம் என்று பெயர்

சொல்லக் கூடிய கலைப்பணியின் எடுத்துக்காட்டு எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும் கோயில்களின் உட்புறங்களை அலங்கரிக்க இக்கலை தொடர்ந்து பயன் படுத்தப்பட்டு வந்தது என்பதை ஹம்பி, சிதம்பரம், ஸ்ரீரங்கம் போன்ற இடங்களிலுள்ள கோயில்களின் மண்டபச் சுவர்களிலும் விதானத்திலும் ஓவியங்கள் இருப்பதிலிருந்து அறிய முடிகிறது. தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் நாயக்க மன்னர்கள் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்களின் எளியதரம், 17 ஆம் நூற்றூண்டில் ஓவியக்கலையடைந்த வீழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. வட இந்தியாவிலும் கோயில்களில் ஓவியக் கலைக்கான இடம் 13 ஆம் நூற்றூண்டில் மிகவும் வரையறைக்குட் பட்டிருந்தது. அதனுல் இக்காலத்தைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க எடுத்துக் காட்டு எதுவும் இப்பகுதியில் இல்லை.

இந்தக் கலைகள் தவிர, நடனம், இசை ஆகிய் கலைகளும் வெகு ஆரம்ப காலத்திலிருந்தே கோயில்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. காஞ்சி,அமராவதி, புவனேஸ்வரம், அஜந்தா, எல்லோரா, சித்தன்ன வாசல் போன்ற் இடங்களிலுள்ள கோயில்களில் சிற்பத்திலும், ஓவியத்திலும் வடிக்கப் பட்டுள்ள சித்திரங்கள் இதற்குச் சான்று கூறுகின்றன. தென்னிந்தியக் கோயில்களில் நடனத்துக்கு முக்கிய இடம் கொடுக்கப் பட்டிருந்தது என்பதற்கான பிரதானமான சான்று தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள சிவ நடனச் சிற்பங்களாகும். இதற்குப் பிற்காலத்தைச் சேர்ந்த நடனச் சிற்பங்கள் தென்னிந்தியாவின் வேறு சில இடங்களில் கிடைக்கின்றன. இவற்றுள் சிதம்பரம் நடராஜர் கோயிலில் கிழக்கு, மேற்கு கோபுரங்களில் உள்ளவை குறிப்பிடத் தக்கவை. இங்கு ஒரு அப்சரஸ் அபிநயம் பிடித்துக் காட்டுகிறுள். நாட்டிய சாஸ்திரப்படி ஒவ்வொரு கரணத்தினுடைய பெயரும் அவற்றில் பொறிக்கப் பட்டுள்ளது.

கோயில் பணிக்குப் பயன்பட்ட எத்தனையோ சிறிய கலைகளில் மரச் செதுக்கு வேலை முதன்மையானது. தக்காணத்திலும், தென் இந்தியாவிலும் உள்ள கோயில்களில் பெரிய மரத் தேர்கள் இருப்பது இதற்கு சான்று கூறுகிறது. கோயிலைப் போலவே தோற்றமளிக்கும் தேர்கள் நுட்பமான வேலைப் பாடமைந்த மரத்தட்டுகள் பொருத்தப் பட்டிருக்கும்.

TEMPLE ART & ARCHITECTURE IN INDIA

By P. R. Srinivasan, M.A.

இமயம் முதல் குமரி வரை, ஆன்மிக உணர்வின் அடித் தளமாய் — கலையியல் பண்பாட்டின் உறைவிடமாய் — திகழும் கோயில்களின் அமைப்பினை, கட்டிடக் கலையின் வரலாற்றை, சிற்பச் செல்வங்களின் சிறப்பினை திறம்பட விளக்கும் அதியற்புத நூல்.



கலைஞன் பதிப்பகம் சென்னை - 17